Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு :13-04-2015 Issued:13-04-2015

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 12, 2014—தொகுதி 73—எண் 2

Tuesday, the 12th August, 2014—Volume 73—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

11-414

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைக் குறிப்புகள்
தொகுதி 73 (எண் 2), நாள் 12-8-2014
பிழைத் திருத்தச் சீட்டு

வ. எண்	பக்க எண்	பிழை	திருத்தம்
1.	உள்ளடக்கம் (iii) தலைப்பு இனம் 6-ன்கீழ்	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 479–480, 483, 485–486–488, 490, 493, 496, 500, 503, 505, 514–519, 521–528, 532–541, 545–547, 549, 551, 553, 555	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 479–480, 483, 485–488, 490, 493, 496–500, 503–505, 514–519, 521–528, 532–539
2.	உள்ளடக்கம் (v) இனம் 11 (அ)	தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 547–590	தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 547–549
3.	உள்ளடக்கம் (v) இனம் 11 (உஉ)	மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 558, 561–562, 564–566	மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 558, 561–562, 564
4.	உள்ளடக்கம் (vii) இனம் 11 (அஅ)	மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 578–582, 584–586	மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 578–579
5.	பக்கம் 444, 445	கேரி ஓவர் பெயர் [முனைவர் செ.கு. தமிழரசன்]	கேரி ஓவர் பெயர் [திரு. உ. தனியரசு]

12–8–2014

உள்ளடக்கம்

		பக்கங்கள்
வினாக்கள்–விடைகள்—		
(அ)	உடுக்குறியிட்ட வினாக்கள்	371-419
(ஆ)	உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 8 மற்றும் 9)	419, 621-1025
விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—		
(அ)	கட்டுமானத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி, சத்துணவு மற்றும் இருப்பிட வசதித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	420-424
(ஆ)	பொன் விழா காணும் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு நிதியுதவி குறித்த முதலமைச்சரின் அறிக்கை	424-425
(இ)	நரசிம்மபுரம் திருக்கோயில் கும்பாபிஷேகங்களைப் புதுப்பித்தல், திருக்கோயில் அன்னதானத் திட்ட விரிவாக்கம், திருப்பணி, குடமுழுக்கு மற்றும் பூஜைகளுக்கு நிதியுதவி, பக்தர்களுக்கு விடுதிகள், பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் பணி வரன்முறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை	425-430
(ஈ)	மேன்மைமிகு தாய்–சேய் நல மையங்கள் அமைத்தல், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகத் திட்டம், மருத்துவமனைகளைத் தரமுயர்த்துதல், கட்டமைப்பு மேம்பாடு, புதிய மருத்துவக் கல்லூரி நிறுவுதல் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு உதவித் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை	431-437

		பக்கங்கள்
3.	கட்டுமானத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு நிதியுதவி, திருக்கோயில் மேம்பாட்டுத் திட்டங்கள், தாய்–சேய் நல சிறப்புத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—	437-469
	முனைவர் செ.கு. தமிழரசன்	437-441
	திரு. உ. தனியரசு	441-445
	*திரு. பி.வி. கதிரவன்	445-447
	*திரு. ரா. சரத்குமார்	447-451
	திரு. ஆ. ராமசாமி	451-452
	முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	452
	திரு. ம. கலை அரசு	453-454
	திருமதி எஸ். விஜயதரணி	454-457
	டாக்டர் திருமதி நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்	457-458
	திரு. எம். ஆறுமுகம்	458-462
	*திரு. அ. சவுந்தரராசன்	462
	திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்	463
	*மாண்புமிகு திரு. ப. மோகன்	463-464
	மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி	464
	*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	465
	மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்	465-466
	மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்	466-467
	மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்	468
4.	தகவல் கோரல்—	
	(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்	469-470
	(ஆ) அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் ஊதிய உயர்வு	470-473
	திரு. அ. சவுந்தரராசன்	470

பக்கங்கள்

4. தகவல் கோரல்—

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் 471

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 470-473

5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்— 473-479

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 473-479

6. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை
(ஆ) கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம்
(இ) கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(ஈ) கோரிக்கை எண் 16– நிதித் துறை
(உ) கோரிக்கை எண் 36 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(ஊ) கோரிக்கை எண் 50 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் 479-539

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 479-480,483, 485-486-488, 490,493,496, 500,503,505 514-519,521- 528 532-541,545-547 549,551,553,555

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் 497-505

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 501-502

*முனைவர் வைகைச்செல்வன் 506-512

*திரு. அ. சவுந்தரராசன் 482,496,512-518

திரு. டி. இராமச்சந்திரன் 518-520

பக்கங்கள்

7. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 (ஆஇ) 539

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், (முதல்), 2014–2015, முன்மொழிதல் (ஆசெ) 540-541

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014 (ஆஇ) 545

(ஈ) தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு, 2014 (ஆஇ) 571

(உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் 590-617

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 539-540

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 540

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014 545-546

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 545-546

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2014–2015, வாக்கெடுப்பு 541-545

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 541

10. அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 546-547

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 617-618

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 547-590

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 547-549

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014 549-551

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 549, 551

(இ) தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு, 2014 551-553

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 551-553

(ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 2014 553-555

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 553, 555

(உ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 555-557

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 555,557

(ஊ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 557, 565

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 558,561-562, 564-566

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

திரு. க. பாலகிருஷ்ணன் 558

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் 559

திரு. சு. குணசேகரன் 559-560

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 560

டாக்டர் க. கிருஷ்ணசாமி 560

(எ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 564-567

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 565-566

(ஏ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 567, 569

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 567-568

(ஐ) தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014 569-571

*மாண்புமிகு திரு. ப. மோகன் 569, 570

(ஒ) தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்கு முறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு, 2014 571-573

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 572, 573

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஓ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 574-575

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 574-575

(ஔ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014 576-577

மாண்புமிகு திரு அச்சி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி 576,577

(அஅ) தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2014 578-580

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 578-582
584-586

(அஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 580-582

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 580-581

(அஇ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014 582-586

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 582,584-586

திரு. க. பாலகிருஷ்ணன் 583

திரு. கு. குணசேகரன் 583

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 584

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*

(அஈ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 586-588

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ் 586, 588

(அஉ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014 588-590

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 588-590

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 618-620

*****

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐய, ஆடி 27, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஆகஸ்ட் 12, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 405, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

405—

நூறிய ஒளி மின் உற்பத்தி

***42384—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் இராம ஊராட்சியிலுள்ள தமிழ்நாடு மின்சார

[2014 ஆகஸ்ட் 12

வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் சூரிய சக்தியின் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், கேத்தனூர் கிராம ஊராட்சியில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் ஏதுமில்லை. ஆனால், அந்த இடம் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-TEDA நிறுவனத்திற்குச் சொந்தமானது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமில்லை. எனவே, கேத்தனூர் கிராம ஊராட்சியில் சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்காகவோ, தன்னுடைய குடும்பத்திற்காகவோ, தன்னுடைய வாரிசுகளுக்காகவோ அல்லாமல், தமிழகத்தில் வாழ்கின்ற 8 கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கணபதிபாளையம் ஊராட்சியில் 239 K.V.A. துணை மின் நிலையம் 19 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. அங்கே மீதமுள்ள இடத்தில் 110 K.V. துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய அப்பகுதிவாழ் தொழிலதிபர்களும், தொழில் முனைவோரும் தயாராகவுள்ளார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவுடன் கேட்டு அமர்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் அங்கேயிருக்கிறது; அங்கே சூரிய சக்திமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமா என்று கேட்டார். ஆனால், அந்த இடம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமானதல்ல. மாறாக, அந்த இடம் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை-Tamil Nadu Energy Development Agency என்று சொல்லக்கூடிய TEDA நிறுவனத்திற்குச் சொந்தமானது. அது ஏறத்தாழ 92.255 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமாகும். மத்திய அரசின் உதவியோடு முதன்முதலாகக் காற்றாலை மின் உற்பத்தியைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தியபோது, அங்கே Demonstration Wind Farm என்று சொல்லக்கூடிய காற்றாலை மாதிரி மின் பண்ணை செயல்பட்டு வந்தது. தற்பொழுது 20 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்தக் காற்றாலை மாதிரி மின் பண்ணையின் செயல்பாடு தற்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த இடம் தற்பொழுது எந்தப் பயன்பாடும் இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார். அந்த இடத்திலே சோலார் எனர்ஜி-சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையோடு சேர்ந்தோ அல்லது ஏதாவது ஓர் அரசு கூட்டு நிறுவனத்தோடு இணைந்தோ, தனியாருடன் இணைந்தோ அந்த இடத்திலே சூரிய சக்திமூலம் மின் உற்பத்தியைச் செய்வதற்கு யாராவது முன்வந்தால், அது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அனுமதி பெற்று, உரிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு சிந்திக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

அடுத்தபடியாக, அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியின் அருகிலே 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கருத்தில் கொண்டு, தேவை ஏற்படின், அந்தப் பகுதியில் 110/11 அல்லது ஒரு 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படும். அப்பகுதியின் மின் பளு தேவைக்கேற்ப

எந்தத் துணை மின் நிலையமாக இருந்தாலும் உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 406, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

406—

வீடுகள்

*35977—**திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் செயற்குழிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் உள்ளிட்ட 4 பேரூராட்சிகள், 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், பல்வேறு அரசு அலுவலகங்கள்

2014 ஆகஸ்ட் 12]

செயல்படுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்திலுடைய கடைசி பகுதிகளுக்குச் செல்லவேண்டுமென்றால், நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால், அந்தப் பகுதியிலுள்ள அரசு அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களுக்கு பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுத்தால், அந்தப் பகுதியில் ' பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு மிகவும் பேருதவியாக இருக்கும். காவல் துறையில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கென அந்தப் பகுதியில் இப்பொழுது இருக்கின்ற குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. எனவே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகள், அந்தப் பகுதியிலுள்ள பணியாளர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜூ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஒன்றிய பேரூராட்சிப் பகுதிதான். மாவட்டத் தலைநகரம் மற்றும் கோட்டத் தலைநகரப் பகுதிகளில் பணியாற்றுகின்ற அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அரசு ஊழியர்களுக்குக்கான வாடகைக் குடியிருப்புகள் வீட்டு வசதி வாரியம்மூலம் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'வத்திராயிருப்பு ஒன்றியத்தில் பள்ளிகள், பேரூராட்சி அலுவலகம், ஒன்றிய அலுவலகம் உள்ளிட்டவை இருக்கின்றன; அரசு ஊழியர்கள் அதிகம் இருக்கிறார்கள்; அவர்கள் குடியிருப்பதற்கு வசதியாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்' என்று கோருகிறார். தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர, மற்ற இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகளில் 3,100 குடியிருப்புகளுக்குமேல் காலியாக இருக்கின்றன. காரணம், இன்றைக்கு வீடு கட்டுவதற்காக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்திக் கொடுக்கப்படுகிறது.

[2014 ஆகஸ்ட் 12

6-வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி வாடகைக் படியும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அரசு ஊழியர்களும் வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு இணையாகத் தனியார் வீடுகளை நாடிச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வத்திராயிருப்பு ஒன்றியத்தில் ஆய்வு செய்து, அவசியம் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டிய சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்புப் பகுதி மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியாகும். அங்குள்ள அரசுப் பணியாளர்கள் அரசுக் குடியிருப்புகளில் வசிப்பதற்கு விரும்புகிறார்கள். அரசே நிலத்தைக் கையகப்படுத்தி அந்தப் பகுதியில் அரசுமூலம் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்கின்றபோது, அரசுப் பணியாளர்கள் குடியிருப்பதற்கும், தங்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்கும் ஏற்றதாக இருக்கும். மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியைப் பொறுத்தவரை அரசுக் குடியிருப்புகள் இல்லை. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தைத் தேர்வு செய்து, அந்தப் பகுதியில் அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 407, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

407—

உயர்மட்டப் பாலம்

*407. திருமதி எஸ். விஜயதரணி:

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், தேங்காய்ப்பட்டணம்-இரையுமன்துறை கடலோரக் கிராமங்களை இணைக்கும் வகையில் தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் பொழிமுகம் அருகே உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு வட்டம், தேங்காய்ப்பட்டணம்-இரையுமன்துறை கடலோரக் கிராமங்களை இணைக்க, தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் பொழிமுகம் அருகே உயர்மட்டப் பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலம் விளவங்கோடு தாலுகாவுக்குட்பட்ட மிக முக்கியமாக அமைக்கப்பட வேண்டிய பாலமாகும். சுழித்துறை, தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் பொழிமுகப் பகுதியில்,

[2014 ஆகஸ்ட் 12

தேங்காய்ப்பட்டணம்-இரையுமன்துறை இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கசிந்திரம், பழையாறு, மணக்குடி பகுதிகளில் கடலில் கலக்கும் இடத்தில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம் போன்று கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியிலிருந்து மேற்கு கடற்கரைச் சாலை வழியாக திருவனந்தபுரம் செல்ல இந்தப் பாலம் மிகவும் அவசியம். இதனால், தேங்காய்ப்பட்டணத்திற்குக் கிழக்குப் பக்கம் உள்ள மீனவக் கிராமங்களான மிடாலம், இனயம் சின்னத்துறை, புத்தன்துறை, ராமன்துறை, முள்ளூர்துறை ஆகிய கிராமங்கள், தேங்காய்ப்பட்டணத்தில் அமைய உள்ள துறைமுகம் மற்றும் இரையுமன்துறை, பூத்துறை, தூத்தூர், இரவி புத்தன்துறை, வள்ளவிளை, மார்த்தாண்டம்துறை, நீரோடித்துறை ஆகிய ஊர்களுக்கு எளிதில் சென்று சேரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, கேள்வியை மட்டும் கேளுங்கள். உங்கள் தொகுதியில் இருக்கிற ஊர் பெயரையெல்லாம் படித்துக் கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவப் பெருங்குடி மக்கள் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதால், இந்தப் பாலம் மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகிறது.

தேங்காய்ப்பட்டணத்தில் இருந்து இரையுமன்துறை கிராமத்திற்குச் செல்ல அம்சி, பைங்குளம், கூட்டாலுமூடு, லைசூண்டி, புதுக்கடை, நித்திரவிளை போன்ற பகுதிகளையெல்லாம் இணைக்கக்கூடிய ஒரு பாலமாக இருக்கும். இதனால் பெரிய அளவில் எரிபொருள் விரையம் மற்றும் கால விரையம் ஏற்படுவதைத் தவிர்க்க வாய்ப்புள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: எனவே, இந்தப் பாலத்தின் முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசிலனையில் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய்ப்பட்டணம்-இரையுமன்துறை சுடலோரக் கிராமங்களை இணைக்கும் வகையில், தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் பொழிமுகம் அருகே உயர்மட்டப் பாலம் அமைக்கக் கோரும் இடமானது, மாவட்ட முக்கியச் சாலையான குழித்துறை-தேங்காய்ப்பட்டணம் சாலை இலோ மீட்டர் 1/5 மற்றும் மாவட்ட இதர சாலையான நீரோடி, இரையுமன்துறை சாலை இலோ மீட்டர் 8/965 ஆகிய இரண்டு சாலைகளை இணைக்கும்விதமாக, தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் பொழிமுகப் பகுதியாகும். தற்போது இவ்விடத்தில் பாலம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியுள்ளார்கள். அங்கே இருக்கின்ற மீனவ மக்கள் எளிதாக அந்தக் கிராமங்களுக்குச் சென்றுவருவதற்காக அங்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இக்கோரிக்கை எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருதங்கோடு முதல் கழுவன்திட்டை வரை உள்ள 0/0-3/0 சாலை தற்போது 3 இலோ மீட்டர் வரை 2.11 கோடி ரூபாய் அளவில் மதிப்பீடு செய்து, தங்கள் பார்வைக்கு நபார்டு திட்டத்தின்கீழ் அனுப்பப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின்கீழ், தெற்றிக்குழி, பரக்குன்று 3/0-4/6 சாலை 1.6 இலோ மீட்டர் போடப்பட்டும், தற்போது மோசமான நிலையில் இருப்பதைச் சீர்செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடையால் பேரூராட்சியில், நெட்டா பாலம் சேதம் அடைந்துள்ளது. அதற்குப் பதிலாக புதிய பாலம் கட்டப்பட வேண்டும்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாலம் கட்டுவது பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற பல்வேறு சாலைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இது எடுத்துச்செல்லப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அரசின் நிதிநிலைக்கேற்ப அந்தச் சாலைகளைப் பராமரிக்கப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம், உத்தப்பநாயக்கனூர் சாலை வழியாகத் திருமங்கலம் பிரதானக் கால்வாய் செல்கிறது. அந்தப் பகுதியில் உள்ள வைபத்தான், மம்பட்டியபட்டி., ஐய்யனார்குளம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல திருமங்கலம் பிரதானக் கால்வாயில் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், P.W.D. சார்பில், N.O.C. கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கால்வாயின் இரண்டு பகுதிகளிலும் நெடுஞ்சாலைத் துறையினுடைய சாலை இருந்தால், அந்தக் கால்வாயின் குறுக்கே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகப் பாலம் கட்டப்படும். ஆனால், அந்த இரண்டு பகுதிகளிலும் உள்ள சாலைகள் உள்ளாட்சி அமைப்பின் மூலமாகப் பராமரிக்கப்படுகின்ற

2014 ஆகஸ்ட் 12]

சாலையாக இருந்தால், பொதுப் பணித் துறையின் மூலமாகத்தான் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டப்பட வேண்டும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி, இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 408, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

408—

அங்கன்வாடி மையக் கட்டடம்

*33529—திரு. ஆ. நாராயணன்:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி ஊராட்சி, ரெட்டார்குளத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-15

மாண்புமிகு திருமதி ப. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், முனைஞ்சிப்பட்டி ஊராட்சியில் 8 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், முனைஞ்சிப்பட்டியில் 2, ரெங்குளத்தில் 1, பிள்ளையார்குளத்தில் 1, மேல்முனைஞ்சிப்பட்டியில் 1, கோடன்குளத்தில் 1, சோமநாதபுரில் 1 என 7 மையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்போது ரெட்டார்குளம் அங்கன்வாடி மையத்திற்கு அரசு புல எண் 572-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு,

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பற்றிய கேள்விக்கு நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். சர்வே எண் 572-ல் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் கட்சியின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 409, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

409—

சொந்தக் கட்டடம்

***34866—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, வேலாயுதபட்டிணம் மற்றும் பெரியவீரை கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதியில் உள்ள எழுவன்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ், 447 குடும்ப அட்டைகளுடன், வேலாயுதபட்டிணம் முழுநேர நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வீரை ஊராட்சி மன்றத்தால் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தேவையான நிதி பெறுவதற்காக மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீட்டுடன் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பெரியவீரை கிராமத்திலுள்ள 65 குடும்ப அட்டைதாரர்களும், வேலாயுதபட்டிணத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். பெரியவீரை கிராமத்தில் நியாய விலைக் கடை இல்லாத நிலையில், அங்கு கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமன் மிது. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோமன் மிது. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரங்கள் அனைத்தும் நிறத்தின் கூட்டல், சேமிப்பு என்றால் பணத்தின் கூட்டல், வித்தை காவியங்கள் பாட்டின் கூட்டல், வெற்றிகள் அனைத்தும் அம்மா புகழின் கூட்டல், (மேசையைத் தட்டும் ஒலி) கவர் தொகுப்பது சுமைக் கூட்டல், தீவேர் விதைப்பது தீமைக் கூட்டல், காலங்கள் முழுதும் கூவுளின் கூட்டல், கடமைகள் முழுதும் அம்மா அறிவுக்கூட்டல், தேர்தல் என்றால் எதிரிக்குத் தோல்விக் கூட்டல், மக்கள் தந்தோ அம்மாவுக்கு வெற்றிக் கூட்டல், இம்மாமன்றத்தில் அம்மா காலடித் தடம் பதித்தது வெள்ளி விழாக் கூட்டல், தமிழன் தவமிருப்பதோ அம்மா ஆட்சியின் பொன் விழாக் கூட்டல். இன்று ஆடிச் செவ்வாய், ஆடிச் செவ்வாயில் ஆலயங்களில் இபசு கூட்டல், அசைந்து வந்த காவேரியையும், அசையாமல் நின்ற முல்லைப் பெரியாறையும் தனித்து நின்று வெற்றி கண்டது அம்மாவின் ஆற்றல் கூட்டல், அரசியலில் எதிரிகள் நினைப்பதோ

எண்ணிக்கைக் கூட்டல்; ஆனால், அம்மா அவர்களோ, தனித்து நின்று வரலாறு படைக்கும் வெற்றி கூட்டல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வேலாயுதபட்டிணம் கிராமத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்டக் கேட்டிருந்தோம். நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கித்தரக் கேட்டிருக்கிறார்கள். அந்த ஒன்றியத்திலே 22 கடைகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆண்டுக்கு ஐந்து கடைகள் வீதம் நாங்கள் கட்டி வருகிறோம். மேலும், கூடுதலான கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 22 கடைகளில் 10 கடைகளை நேரடியாக எடுத்து, சொந்தக் கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த ஆண்டு 10 கடைகளுக்காவது சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கோருகிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், அவருடைய தொகுதியில் மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் இதுவரை, 11 கடைகள் கட்டப்பட்டுள்ளன. அவர் 3 கடைகளுக்குத்தான் நிதியைக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டு 5 கடைகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை வாங்கிக் கொடுக்கும்பட்சத்தில், அவருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

முற்பகல் 10-20

திரு. சோமன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மூன்று கடைகளுக்கு நிதி கொடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியத்திலே இரண்டு கடைகளுக்கும், கண்ணங்குடி ஒன்றியத்திலே ஒரு கடைக்கும், எஸ். புதூர் ஒன்றியத்திலே இரண்டு கடைகளுக்கும் என, மொத்தம் ஐந்து கடைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுத்திருக்கிறேன். ஆகவே, 22 கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இந்த ஆண்டு 10 கடைகளுக்காவது சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கை பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 7,991 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மனது வைத்தால், அனைத்து நியாய விலைக் கடைகளையும் சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்ய முடியும், அதனைச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒரு சட்டம் போடுங்கள், அதுமாதிரி செய்து கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்டு, எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இந்தக் கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமன் சித. பழனிச்சாமி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியத்தில், சோகத்தூர் ஊராட்சியில், சத்தியா நகரில் நியாய விலைக் கடை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டு நிதி ஒதுக்கும்பட்சத்தில், நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 410, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

410—

காகித ஆலை

***36543—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணாமதுரை தொகுதி, மாணாமதுரையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஆகஸ்ட் 12]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலமாக 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் காகித அட்டை தயாரிக்கும் பிரிவு ஒன்று திருச்சி, மணப்பாறை தாலுகா, மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள, மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே! கொள்கைகளையே குறிக்கோளாகக் கொண்டவரே! கண்கண்ட தெய்வமே! பல கோடி மக்கள் போற்றும் கோபுர தீபமே! வஞ்சத்தை வெற்றிகொள்ளும் வீர வரலாறே! தரணி போற்றும் தமிழ்த் தாயே! தங்கத் தாரகையே! மக நட்சத்திரத்தில் பிறந்த மகாத்மாவே! எதிர்ப்புகளைச் சமாளித்து, எதிர்நீச்சல் போட்டவரே! திரமும், மதிநுட்பமும் கொண்ட நியாகத் தீபமே! அகிலம் போற்றும் அன்னையே! வாழும் வரலாறே! மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, முழுக்க, முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அங்கு இதுவரை எந்தத் தொழிற்சாலைகளும் இல்லை. அங்குள்ள படித்த இளைஞர்கள் அனைவரும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, மானாமதுரை தொகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும்பட்சத்தில், அங்கு ஏழை, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து, படித்து, வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்து, இலாபத்தோடு இயங்க வேண்டுமென்று சொன்னால், தினந்தோறும் 400 மெட்ரிக் டன் பேப்பர் தயாரிக்க வேண்டும்; அதற்கு 1,55,000 டன் கூழ் மரம் வேண்டும்; 6,00,000 டன் கரும்புச் சக்கை வேண்டும்; தினந்தோறும் 50,000 கன மீட்டர் தண்ணீர் வேண்டும். ஆனால், அருகில் அறு எதுவும் இல்லை. மேலும், இப்பொழுது திருச்சியில் புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற காரணத்தினால், மானாமதுரை தொகுதியில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மானாமதுரை தொகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே மானாமதுரையில் ஒரு சிப்காட் வளாகம் இருக்கின்றது. அங்கே, பல தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களால் தென் மாவட்டங்களுக்கென்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற சிப்காட் வளாகத்தில், கிராஃபைட் சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

முற்பகல் 10-25

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை பகுதியிலுள்ள சிப்காட் வளாகத்தில், 490 ஏக்கர் நிலம் இன்றைக்கு வெறும் நிலமாக இருக்கின்றது. அதோடு, காகிதம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருளான கரும்புச் சக்கை, சிவகங்கை தொகுதி, படமாத்தூர் அருகில் இயங்கி வருகின்ற சக்தி சுகர்ஸ் தொழிற்சாலையில் கிடைக்கிறது. அங்கு

2014 ஆகஸ்ட் 12]

சரும்புச் சக்கை கிடைப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. மேலும், காகிதம் தயாரிப்பதற்குத் தேவையான யூக்கலிப்டஸ் மரங்களும் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. மேலும், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி மற்றும் போதிய இடவசதியும் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அனைத்து விவரங்களையும் எடுத்துச் சொல்லி, மானாமதுரை தொகுதியில் உள்ள சிப்காட் வளாகத்தில் காகித ஆலையைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் நிதிநிலைமைக்கேற்பதான் ஒரு தொழிற்சாலை அரசுத் துறையின் வாயிலாக திருவகிக்கப்படும். இப்போதுதான் அங்கே புதிய தொழிற்சாலை நிறுவுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி, தொழிற்சாலை தொடங்க அனைத்து வசதிகளும் அங்கே இருந்து, தொழில்முனைவோர்கள் யாரேனும் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் மாலிப்டினம் கண்டறியப்பட்டு, பத்து ஆண்டுகளாக ஆய்வுகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும்கூட நன்கு அறிவார்கள். அரூர் பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. அரூர் தொகுதியில் வேட்டப்பட்டி முதல் சாம்பல்பட்டி வரை சுமார் 24 கிலோமீட்டர் தூரம் வரை மாலிப்டினம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

கோலார் தங்க வயல்- K.G.F. எப்படி கர்நாடக மாநிலத்தில் பெயர் பெற்றதோ, அதைப்போல தமிழகத்திற்கு பல கோடிக்கணக்கான ரூபாயை வருவாயாகப் பெற்று தரக்கூடிய அளவிற்கு வாய்ப்புள்ள ஒரு கனிமம் அது. அதோடு செம்பு, இரும்பு, தங்கம் போன்ற உலோகங்களும் கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, அந்தத் தொழிற்சாலையை விரைவில் அங்கு தொடங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் கேள்வி கேட்டிருக்கின்றார். இருந்தாலுங்கூட, மாவிப்டினம் என்பது, இன்னும் மத்திய அரசின் ஆய்விலே இருக்கின்றது. இன்னும் முழுமையான அறிக்கை வரவில்லை. அதுகுறித்து முழுமையான அறிக்கை வந்தவுடன், அந்தக் கனிமம் எவ்வளவு இருக்கின்றது? அதற்கு நாம் செலவு செய்கின்ற அளவிற்குத் தகுதியாக இருக்கின்றதா என்பதை முழுமையாக ஆய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் கடைசி நாள். (குறுக்கிடு) சட்டமன்றக் கூட்டத் தொடரின் நிறைவு நாள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்தபோது, "தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்ற அடிப்படையில், சிவகங்கை தொகுதியில் கிராஃபைட் தொழிற்சாலை விரைவில் தொடங்கப்படும்" என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை இந்த ஆண்டே தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். எப்போது

2014 ஆகஸ்ட் 12]

தொடங்கப்படும் என்பதையும் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பார் என்றால், கூடியவிரைவில் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவரலாம். ஏனென்றால், சிப்காட் வளாகத்திற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும்போது, ஏதாவது ஒரு பிரச்சினை வந்து விடுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைத்தால், இந்த ஆண்டே சிப்காட் வளாகத்திற்கு இடம் எடுக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் வர்த்தக நகரம். மதுரை மாவட்டம் விவசாயத்தைச் சார்ந்த பகுதி. அங்கே தொழில் வளர்ச்சி போதிய அளவு இல்லாத சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், வேளாண்மைக் கல்லூரி அருகில் இருக்கக்கூடிய காலி இடத்தில், உணவு பதப்படுத்தக்கூடிய தொழிற்சாலை துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அவ்வாறு துவக்கப்பட்டால், விவசாயிகளுக்குப் பலன் அளிப்பதோடு, புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக வாய்ப்பு இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அறிவித்த அறிவிப்பில், மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை தொழில் பெரு வழிச்சாலை அமைக்க இருக்கின்றார்கள். அதிலே உணவுப் பதப்படுத்துவது சார்ந்த தொழிற்சாலையும் அமைய இருக்கின்றது. எனவே, தென் மாவட்டங்களுக்கு அறிவிக்கப்பட்ட சலுகைகள் அடிப்படையில் தொழில்முனைவோர் முன்வந்தால், உடனடியாக அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசிலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 411, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

411—

விரைவுப் பேருந்து

***21069—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, பூதமங்கலத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பிட்ட கரம் விலகும் முன் வரம் தரும் அன்னை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், (மேசையைத் தட்டும் ஒலி) தடம் எண் 122 AA செங்கம்-சென்னை (வழி) காஞ்சி, பூதமங்கலம், அவலூர்பேட்டை, மேல்மலையனூர், செஞ்சி, திண்டிவனம் என்ற

2014 ஆகஸ்ட் 12]

புதிய புறநகர் வழித்தடம் துவக்கி வைக்கப்பட்டு, 11-9-2012 முதல் இணசரி 2 நடைகள் அரசுப் போக்குவரத்துக் கழகம் திருவண்ணாமலை மண்டலம் சார்பில் பூதமங்கலம் வழியே இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆக. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆக. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு என்ற மூன்றெழுத்து, பாசம் என்ற மூன்றெழுத்து, அறிவு என்ற மூன்றெழுத்து, கருணை என்ற மூன்றெழுத்து, நேர்மை என்ற மூன்றெழுத்து, பொறுமை என்ற மூன்றெழுத்து, இவையனைத்தும் சேர்ந்தது அம்மா என்ற மூன்றெழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் வாழும் 10 கோடி தமிழ் மக்களும் அன்றாடம் உச்சரிக்கும் மூன்றெழுத்து மந்திரத்திற்குச் சொந்தக்காரர் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

புதியதாக உருவாக்கப்பட்ட விழுப்புரண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தூரிஞ்சாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சியிலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து ஒன்றை இயக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதமங்கலத்திற்கும் சென்னைக்கும் இடையே உள்ள பயண தூரம் 177 கி.மீ. மட்டுமே ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், "300 கி.மீ. தூரத்திற்குமேல் உள்ள வழித்தடங்களுக்கு மட்டுமே அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்துகளை இயக்க வேண்டும்" என்று உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பூதமங்கலத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்தை இயக்குவதற்கு, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

[2014 ஆகஸ்ட் 12

அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உத்தரவு பெற்று, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆ.க. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதமங்கலம் ஊராட்சி ஒன்றியம் 6,000 வாக்காளர்களையும், 10,000 மக்கள்தொகையையும் கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். அருகிலுள்ள வேடந்தவாடி, மன்சூராபாத் போன்ற ஊராட்சிகள் கிட்டத்தட்ட 20,000 மக்கள்தொகை கொண்ட ஊராட்சிகளாகும். மேற்கண்ட 3 ஊராட்சிகளையும் உள்ளடக்கி இருக்கும் அப்பகுதிகளிலிருந்து சென்னைக்குச் செல்ல வேண்டுமானால், 26 கி.மீ. தூரத்திலுள்ள திருவண்ணாமலைக்குச் சென்று, அங்கிருந்துதான் சென்னைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பூதமங்கலம், வேடந்தவாடி, அவலூர்பேட்டை, சேத்துப்பட்டு, வந்தவாசி, மேல்மருவத்தூர் வழியாக சென்னைக்கு நேரடியாகச் செல்ல புதிதாக அரசு விரைவுப் பேருந்து ஒன்றை இயக்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதமங்கலம் ஊராட்சியிலுள்ள மக்கள், சென்னைக்குச் செல்ல 26 கி.மீ. தூரம் உள்ள திருவண்ணாமலை செல்ல வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்ட, செங்கம்-சென்னை வழித்தடத்தில் இயக்கப்படுகின்ற பேருந்துகள் 11-9-2012 அன்று முதல் பூதமங்கலம் வழியாகத்தான் செல்கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அப்பகுதியில் அரசு விரைவுப் பேருந்து ஒன்றை இயக்க வேண்டும்" என்று

2014 ஆகஸ்ட் 12]

கோரியிருக்கின்றார். பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலிருந்து சாலக்குடிக்கு இன்னும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. தற்போது, வால்பாறையிலிருந்து சாலக்குடிக்குச் செல்லும் பேருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கொச்சி, எர்ணாகுளம், சாலக்குடி போன்ற பகுதிகளில் கேரள மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். எனவே, மீண்டும் சாலக்குடி வரை அந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி மக்களின் நலன் கருதி, 6 புதிய வழித்தடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் வழங்கப்பட்டு, மக்களுடைய சேவைக்காக இன்று பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் இயக்கப்படும் விரைவுப் பேருந்துகள் இரு மாநிலங்களுக்கு இடையே இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்த வழித்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. பயணிகளின் எண்ணிக்கையை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், களப்பாள் பகுதியைச் சுற்றியிருக்கக்கூடிய அக்கரைகொட்டகம், திருக்கள்ளார், குலமாணிக்கம், மருதவனம், மாங்குடி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் சென்னை போன்ற நகரங்களுக்கு, சுமார் 15 கி.மீ. தூரம் உள்ள மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற இடங்களுக்குச் சென்றுதான் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் நலன் கருதி, களப்பாளிலிருந்து அரசு விரைவுப் பேருந்து ஒன்றை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையின் வரலாற்றில் இல்லாத வகையில், இயக்கப்படுகின்ற பேருந்துகளில் சரிபாதி அளவிற்கு, அதாவது 453 புதிய பேருந்துகளை இந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்களுடைய பொற்கரங்களால் கொடியசைத்து, மக்களுடைய பயன்பாட்டிற்காக இயக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெளியூரிலிருந்து சென்னைக்கு வருகின்றவர்கள், நீண்டதூரம் செல்பவர்கள் எல்லாம், இன்னும் சிறப்பான சேவைகளைக் கூடுதலாகப் பெற்று, பயணம் செய்யவேண்டுமென்பதற்காக, 299 பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அப்பேருந்துகளுக்குக் கூண்டுகள் கட்டுவதற்கு உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். அந்தக் கூண்டுகள் கட்டும் பணி முடித்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

2014 ஆகஸ்ட் 12]

அவர்களுடைய திருக்கரங்களால், அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குச் செல்ல இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற அந்த வழித்தடங்களை ஆய்வு செய்து, பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உத்தரவு பெற்று, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், இந்தச் சட்டமன்றத்தில் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே, மேலூரிலிருந்து சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து அளித்து, மாண்புமிகு அம்மா அவர்களது பொற்கரங்களால் தொடங்கி வைத்து, இன்றைக்கு அந்தப் பேருந்தினை, அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறார்கள். அதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலூரிலிருந்து இந்துக்கள், இஸ்லாமியர்கள் மற்றும் இறித்துவ மக்கள் என அனைத்து மத பக்தர்கள் தஞ்சை பெரிய கோயிலுக்கும், வேளாங்கண்ணிக்கும், நாகப்பட்டினம் மாவட்டம் நாகூருக்கும் புனிதப் பயணம் சென்றுவருகிறார்கள். ஆகையால் மேலூரிலிருந்து, தஞ்சாவூர், வேளாங்கண்ணி, நாகப்பட்டினம், நாகூர் வரை செல்ல ஒரு விரைவுப் பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்களில் பயணிகளின் அடர்விற்கு ஏற்ப,

மேலூரிலிருந்து பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், இன்றைக்கு ஏழை எளிய மக்கள், உழைத்து வாழக்கூடிய மக்களெல்லாம் குறைந்த கட்டணத்தில் பல்வேறு ஊர்களுக்கு வந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். எனது தொகுதியான திருமங்கலத்திலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து திருமங்கலத்திற்கும் கூடுதலாக ஒரு பேருந்தினை இயக்கிட வேண்டுமென்று நீண்டநாட்களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமங்கலத்திலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து திருமங்கலத்திற்கும் ஒரு புதிய Ultra Deluxe Bus விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு, ஒரு Ultra Deluxe Bus இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவோடு, அக்கோரிக்கையின்படி திருமங்கலத்திலிருந்து சென்னைக்குப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சென்னையிலிருந்து செல்லும் பயணிகள் மற்றும் சென்னைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆணை பெற்று, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

இந்தியாவிலேயே அதிகமாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்ற மாநிலங்கள் 4. அதில் முதலாவதாக இருப்பது ஆந்திர மாநிலம்-ஒன்றுபட்ட ஆந்திரா அதிகப் பேருந்துகளை இயக்கியது. இரண்டாவதாக இருப்பது கர்நாடக மாநிலம். மூன்றாவது இடத்திலிருப்பது நமது தமிழ்நாடு. மூன்றாவது இடத்தில் தமிழக மக்களுக்குப் பேருந்துச் சேவைகளை வழங்கிக் கொண்டிருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறிய நிட்டங்களினால், சராசரியாக ஒரு பேருந்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகமாகக் கொண்ட மாநிலங்களில் முதல் இடத்தை வகிப்பது தமிழகம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான், தமிழகத்தில் ஒரு பேருந்திற்கு அதிக அளவாக சராசரியாக நாளொன்றுக்கு 74.52 சதவீதம் பயணிகள் பயணிக்கின்றனர். மகத்தான சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், பல்வேறு வழித்தடங்களில் மக்களுடைய பயன்பாட்டிற்காகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு Ultra Deluxe Bus இயக்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, மக்களுடைய நலன் கருதி, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 412, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

412—

கூட்டுறவு பால் பண்ணை

*32362—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் கூட்டுறவு பால் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் பால் பண்ணை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கடந்த இரண்டு வருடங்களாகப் பருவ மழை பொய்த்ததன். காரணமாக ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், கால்நடைகளுக்குப் பசுந்தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கால்நடைகளின் நலன் மற்றும் பால் உற்பத்தியைப் பாதுகாக்கின்ற வகையில், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாகக் கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை பசுந்தீவனம் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கேட்காமலே கொடுக்கின்ற தெய்வம்' மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, தமிழகத்திலே வறட்சி என்று வருகின்றபொழுது யாருடைய கோரிக்கையும் இல்லாமல் விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். வாயில்லா ஜீவன்களாகிய கால்நடைகளின் பசியைப் போக்குவதற்காக, சிறந்த முறையிலே,

2014 ஆகஸ்ட் 12]

இந்தியாவிலேயே தீவனத்திற்கு மானியத் தொகை வழங்கிய ஒரே மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தச் சமயத்தில், எந்த முடிவெடுக்க வேண்டுமோ, அதை உரிய நேரத்தில் எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியிலுள்ள இராமன்னகளில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடமும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக லிட்டருக்கு ரூ4/-ம் வழங்குவதற்கும், நாமக்கல் மாவட்டத்திலே புதிதாகக் கூட்டுறவுப் பால் பண்ணை அமைப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் புதிதாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும். நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, சேலம் மாவட்டத்திலே மாவட்ட ஒன்றியப் பால் பண்ணை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதனால், நாமக்கல் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து, தற்போது கூட்டுறவுப் பால் பண்ணை அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டப் பேரவைத் தொகுதி நான்கு ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கு எந்தவொரு தொழிற்சாலையும் இல்லை. அந்தப் பகுதி மக்கள் முழுக்க, முழுக்க விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையுமே பிரதானத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். விளாத்திகுளம், சட்டப் பேரவைத் தொகுதியினுடைய தலைமை இடமாகும். அந்த இடத்தில் பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விளாத்திகுளம் தொகுதியிலே, பால் கொள்முதல் பெருகுகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

413—

பழங்கள் பதப்படுத்தும் நிலையம்

***17198—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அல்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அன்பு, அறிவு, ஆற்றல், உறுதி, உள்ளத் தூய்மை, மனிதநேயம் ஆகிய அருங்குணங்களோடு அஷ்டாவதானியாக அரசாட்சி புரிய பொன்னகை துறந்த, புன்னகைப் பேரரசியின் நல்லாட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, பாலமேடு பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை துறையின் மூலமாக ஆய்வு செய்ததின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. சருப்பையா அவர்கள்.

முற்பகல் 10-45

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. மு.வீ. சருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சங்கம் கண்ட மதுரையில் தமிழர் தம் உரிமைக்காக நீதிப் போராட்டம் நடத்தி, தமிழர்களுடைய ஜீவாதார உரிமையை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என வீரத் தாயாக, தெய்வமாக வெற்றி கண்ட நம் தமிழர்குல தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த தெய்வம், மழைநீர் சேகரிப்புத் திட்டம் தந்த ஜீவநதி தெய்வம், காவேரி நடுவர் மன்ற ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட பாடுபட்ட தெய்வம், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்கு நீதிப் போராட்டம் நடத்திய தெய்வம், ஏழையெளியோர் ஏற்றம் பெற எந்நாளும் உழைக்கும், இந்தியத்

திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பாலமேடு பகுதியில், கோடையில் இயற்கை கொடுத்த கொடை மாம்பழம்; சர்க்கரை நோய்க்கு அருமருந்து கொய்யா; 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டு, அவ்வைக்கு அறிவுட்டிய நாவல் பழம்; உடல் ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும் பப்பாளி, சப்போட்டா, நெல்லிக்கனி ஆகியவை அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழல் ஊதும் குயிலின் குரலோ பாடகனாக்கும்; வாணியின் வீணையோ வித்தகனாக்கும்; சிங்கத்தின் சிற்றமோ சீர்மிகு வெற்றியாளனாக்கும்; பால் குருதி ஊட்டும் பசுவோ பண்பாளனாக்கும்; ஆழி, ஆம்பல் மலரோ அணிபவரை அழகனாக்கும்; அம்மா! தலைமுறைக்கும் தலைமை ஏற்கும் உங்களின் தலைமை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தலைமுறையையே காக்கும் என தலைதாழ்ந்து வணங்கித் தெரிவித்துக்கொள்கிறேன். 'தாயிருக்க பிள்ளை தளருமோ தரணியில், நீவீர் இருக்க நாம் தளர்தல் நீதியோ' என எம் தாய் நீங்கள் இருக்க, நாங்கள் என்றென்றும் தளராமல் தலைநிமிர்ந்தே நிற்போம் என்று தலைவணங்கித் தெரிவித்து, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழை, மா, கொய்யா போன்ற பழப் பயிர்கள் 4,600 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படுகின்றன. இதில் பதப்படுத்தத்தக்க வகையில் உள்ள கொய்யா மற்றும் மா ஆகிய பயிர்கள் சுமார் 3,300 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 25 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. மத்திய அரசின் உணவுப்

2014 ஆகஸ்ட் 12]

பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாக, தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக வரித் துறை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், விவசாயிகள், விவசாயக் குழுக்கள், பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், தனியார் துறை, தொழில் முனைவோர் குழுக்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்க முன்வந்தால், திட்ட மதிப்பீட்டில் 2.5 சதவிகிதம், அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கிடவும், தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தில், ஊரக முதன்மைப் பதப்படுத்தும் மையம் அமைக்க, திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம், அதிகபட்சமாக 2.50 கோடி ரூபாய் வரை மானியமாக வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு, மாமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச்சென்று, துறையின் மூலமாக உரிய ஆய்வினை மேற்கொண்டு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மாமன்ற உறுப்பினரின் கோரிக்கை ஆவன செய்யப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 414, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பவுன்ராஜ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

414—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***7948—திரு. கு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. கு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுழி இட்ட காவேரிக்கு சோழ நாடு வாழ வழி கண்டான் சோழ மன்னன் அன்று; இன்று நம் அன்னையோ, காவேரியின் உரிமையை அரசிதழில் வெளியிட, உச்ச நீதிமன்றம் நாடி, (மேசையைத் தட்டும் ஒலி) நீதியை நிலைநாட்டியிருக்கிறார். அத்தகைய வெற்றி கண்ட பொன்னியின் செல்வி, காவேரியின் தாய், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-50

பூம்புகார் தொகுதியில் உள்ள செம்பனார்கோவில் ஒன்றியம் 57 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியமாகும். இங்கு 1,60,000 மக்கள் வசிக்கிறார்கள். பரந்த நிலப் பரப்புள்ள ஒன்றியமாக உள்ளதாலும், தரங்கம்பாடி தாலுகாவைக் கொண்டுள்ளதாலும், மக்கள் நலம் கருதி, மக்கள் நலம் காக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மக்கள் வசிக்காக தரங்கம்பாடியினைத் தனி ஒன்றியமாக அறிவித்தால், அப்பகுதி மக்களுக்கு அரசு வழங்குகின்ற நலத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் விரைவாகச் சென்றடைவதற்கு ஏதுவாக இருக்கும். செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பிரித்து, தரங்கம்பாடியைத்

2014 ஆகஸ்ட் 12]

தனி ஒன்றியமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது, தரம் உயர்த்துதல் மற்றும் சேர்த்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். இதுகுறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால் கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்துச் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆகியோரின் கருத்துகளின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்படும் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுப்பப்படும். மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில், கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும். அதன்மீது அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்கக் கோரும் கருத்துரு எதுவும் இதுவரை அரசால் பெறப்படவில்லை. அவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கருத்துரு பெறப்பட்டால், அதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 415, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

415—

கால்நடைக் கிளை நிலையம்

***37515—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பரந்தூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பரந்தூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் விதிகளுக்குட்பட்டு கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், கொடி கட்டிய தொண்டனையும் அரசாங்கக் கொடி போட்ட காரிலே செல்ல வைத்து அழகு பார்க்கின்ற, அகில இந்தியாவின் ஒரே தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்,

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ் இனத்தின் உரிமைக்குக் குரல் கொடுத்து, தமிழர்களின் நலன் காக்கும் தமிழர் குலச் சாமி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும ஒலி)

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட பரந்தூர் கிராமத்தில் வாழும் மக்களும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்களும் விவசாயத் தொழிலையே முதன்மைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். அவர்கள் உப தொழிலாகக் கால்நடைகளை வளர்த்து வருகின்றனர். அவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு மருத்துவம் செய்வதற்கு வசதியாகவும், அவர்களுடைய நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையிலும் பரந்தூர் கிராமத்தில்

2014 ஆகஸ்ட் 12]

கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு 2-ஜியில் கொள்ளையடித்த 1,76,000 கோடி ரூபாய் பணத்தை எப்படிப் பாதுகாப்பது, இந்த ஊழலிலிருந்து கனிமொழியை எப்படிக் காப்பாற்றுவது என்ற எண்ணத்திலே இருந்தார்களே தவிர, மக்களைப் பற்றி கவலைப்படாதவர்கள், கால்நடைகளைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவாட்டிலிருந்துகூட இரத்தம் வருவதைப் பார்த்துவிடலாம். ஆனால், கருணாநிதியிடமிருந்து கருணையை எப்பொழுதுமே எதிர்பார்க்க முடியாது என்பதற்கு இது ஒரு சான்று என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரந்தூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மகிழ்ச்சியான செய்திக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 416, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

416—

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள்

*28549—திரு. கி. சண்முகவேலு:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரப்படும் செயற்குறிப்பு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் கடந்த 8-5-2013 அன்று அறிவித்த பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று ஒரே அறிவிப்பாக அறிவித்து, 2,260 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக இன்றைக்கு நெசவாளர்கள் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் அந்தத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மலையாண்டிபட்டிணம், காந்திஜி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஸ்ரீ காயத்திரி தேவி கூட்டுறவுச் சங்கம், மடத்துக்குளம் ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை கூட்டுறவுச் சங்கம் என மூன்று சங்கங்கள் இயங்கி வருகின்றன. காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வீடுகள் வேண்டும் என விண்ணப்பித்த 6 உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் என அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் 6 வீடுகளை அவர்களுக்கு ஒதுக்கி, 15,60,000/- ரூபாய் நிதியொதுக்கி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மற்றச் சங்கங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அவையும் ஆய்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட அந்த நெசவாளர்களுக்கு வீடுகள்

2014 ஆகஸ்ட் 12]

கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

"அஸ்வினியும் பரணியும்
அழகுமிகு கார்த்திகையும்
இளையவளாம் ரோகிணியும்
இடம்மாறிய சீர்மிகுக
ஆறாவதாம் திருவாதிரையும்
ஆறுணங்கு புனர்பூசமுமே
பூசத்தோடு ஆயில்யமும்
புகழுடைய மகமும் ஆங்கே
நாளிலே பூரம் உத்திரம்
நன்மையாம் ஹஸ்தம் வந்தால்
சித்திரைத் திருநாளோடு
சீர்மிகு ஸ்வாதி சேர்ந்து
விரும்பிய விசாகம் அனுஷம்
வேண்டிய கேட்டை மூலம்
பூப்போன்ற பூராடத்தோடு
புண்ணியமாம் உத்திராடமும்
தெள்ளிய திருவோணமும்
தெவிட்டாத அவிட்டமும் ஆங்கே
வருமின் சதயம் தானே
வந்தபின் பூரட்டாதி தோன்றி
உத்திரட்டாதி தொடர்ந்து
உடனிருக்கும் ரேவதியோடு"

இத்தனை நட்சத்திரமும் இயற்கையிலேயே இருந்தாலும், அத்தனை நட்சத்திரமும் ஆகுமா உமைப்போல் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடத்துக்குளம் தொகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள்.

மடத்துக்குளம், வாளவாடி, உடுக்கம்பாளையம், சின்னபூப்பஞ்சாலை, பாப்பவளம், கொடுங்கியம், மலையாண்டிபட்டிணம் ஆகிய பகுதிகளில் நெசவாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட பசுமை வீடுகள் நிட்டத்தின் மூலமாக நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள். நெசவாளர்கள் அதிகமாக உள்ள அப்பகுதிகளில் அரசு மூலமாக வழங்கக்கூடிய மின் மோட்டார்கள் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம், மானிய விலையில் நூல் போன்றவற்றை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. திரும்பவும் அவர்களுக்கு அரிய வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 417, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

417—

தரம் உயர்த்துதல்

***4036—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையிலுள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, செங்கல்பட்டு நகராட்சி, அண்ணா சாலையில் உள்ள அறிஞர் அண்ணா ஆண்கள் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனவே, வரும் கல்வியாண்டுகளில்

2014 ஆகஸ்ட் 12]

மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் து. முருகேசன் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 418, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

418—

சூரிய மின்வேலி

*20675—**திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகம், ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் சூரிய மின்வேலி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட ஊடேதுர்க்கம் காப்புக் காடு பகுதிகளில் ரூ.40 இலட்சம் செலவில் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டு, தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகம், ஊடேதுர்க்கம் காப்புக் காடு வனப் பகுதிகளிலிருந்து வன விலங்குகளும், காட்டு யானைகளும் குடியிருப்புப் பகுதிகளில் புகுந்து விவசாயிகளுடைய நெல், வாழை, கரும்பு, தக்காளி என இந்த ஆண்டில் மட்டும் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. யானைகள் தாக்கி எட்டு பேர் உயிரிழந்திருக்கிறார்கள்; நான்கு பேர் கை, கால் இழந்திருக்கிறார்கள். அங்கு சூரிய மின்வேலி என்பது முழுமையாக அமைக்கப்படவில்லை. ஆகவே, முழுமையாக சூரிய மின்வேலி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மனித, வன உயிரினங்கள் மோதல்களைத் தடுக்கவும், வனத்தையொட்டி வாழும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுக்கும் வகையிலும் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் கிருஷ்ணகிரி மாவட்டம் உட்பட 16 மாவட்டங்களில் ரூ.23.18 கோடி ரூபாய் செலவில் 1,422 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலிகள் அமைத்தும், 52 கோடி ரூபாய் செலவில் 1,611 கிலோ மீட்டர் தூரத்திற்கு யானைகள் புகா அகழிகள் வெட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மேலும், வன உயிரினங்கள் உணவு மற்றும் குடிநீர்த் தேவைகளுக்காகக் காடுகளைவிட்டு வெளியே வராவண்ணம் தடுக்க, கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள், ஆழ்குழாய்க் கிணறுகள், சூரிய மின்சக்தி மோட்டார்மூலம் நீர்நிலைத் தொட்டிகள் அமைத்தல்,

2014 ஆகஸ்ட் 12]

நிவனப் பயிர்கள் வளர்ப்பு போன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்காக 20.87 கோடி ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டு இட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்காரணமாக மனித, வன உயிரின மோதல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் கூறிய திருச்செங்கோடு மாவட்டம், இராயக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட மாடேஸ்வர்கம் காப்புக் காடு பகுதியில் சூரிய மின்வேலி அமைக்கும் திட்டம், வன உயிரினங்கள் காட்டைவிட்டு முற்றிலும் வெளியேறுவதைத் தடுக்க இயலாத நிலையில் கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ரூபாய் ஒரு கோடியே 58 இலட்சம் செலவிலே யானைகள் புகா அகழிகள், நிவனத் தோட்டங்கள் சூரிய மின்சக்தி மோட்டார் பொருத்திய ஆழ்குழாய்க் கிணறுகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் தடுப்பணைகள் அமைத்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மேற்கொள்ளப்பட்டு, சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 419, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. வாசர், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

419—

மாசுபடுதலைத் தடுத்தல்

*32378—திரு. ஏ. வாசர்:

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதியிலுள்ள ராஜ்ஜி சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் புகையினால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு

முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன்.

தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதியில் அமைந்துள்ள ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் முறையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலை வளாகத்திற்குள் விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும், முறையான காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்.

கடந்த 8 ஆம் தேதியன்று விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதில் ஒன்று என்னுடைய பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் ஒன்றியப் பகுதிக்கும் வடுகப்பட்டி பேரூராட்சிக்கும் உட்பட்ட பகுதிகளில் 72,000 மக்கள் பயன்பெறத் தகுந்தவிதத்தில் 20 கோடியே 80 இலட்சத்திற்கான ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அறிவிப்பை வெளியிட்டார்கள். இது அந்த மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. என்னாலும் சட்டமன்றப் பேரவையில் எழுப்பப்பட்ட பிரச்சினையாகும். அங்கிருக்கக்கூடிய மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தெரிந்துகொண்டு, அந்தப் பகுதி மக்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கியதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆலையினால் ஏற்படுகிற சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து நான் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்திருக்கிறார். அந்தச் சர்க்கரை

2014 ஆகஸ்ட் 12]

ஆலையில் கரும்புச் சக்கைகளை எரிக்கிறபோது ஏற்படுகிற புகை மற்றும் அதோடு கிளம்புகிற தூசி அந்த வட்டாரத்தில் 7, 8 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பரவி, அந்தப் பகுதியிலுள்ள குடியிருப்புகளையும், விவசாயத்தையும் பாதித்து வருகிறது. இது குறித்து அந்தப் பகுதி மக்களிடமிருந்து எனக்குப் புகார் வந்திருக்கிறது. மேலும், மின் உற்பத்திக்காக தென்னை மட்டைகளை இயந்திரங்களில் திறந்தவெளியிலே வெட்டுகிறபோது அதிலிருந்து எழும்புகிற தூசியும் அந்த வட்டாரத்தில் பரவுகிறது. அந்தத் தூசு சாலையோரங்களில் செல்கிற two wheeler பயன்படுத்துகிற பயணிகளின் கண்களில் விழுந்து பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கரும்புக் கழிவிலிருந்து வெளியேறக்கூடிய molasses-ன் துர்நாற்றமும் அந்த வட்டாரத்தைப் பாதித்து, மொத்தத்தில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற புகாரின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்றேன். அதன்மீது நடவடிக்கை எடுத்திருந்தால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அந்த மக்களிடமிருந்து புகார் வந்திருக்கிறது. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, தங்கள் மூலமாக மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த ஆலையிலிருந்து வெளியேறக்கூடிய spent wash என்று சொல்லத்தக்கூடிய கழிவுநீரை மூலப்பொருளாகவும், அங்கிருந்து வெளிவருகிற press mud என்று சொல்லக்கூடிய இடக் கழிவை மூலப்பொருளாகவும் கொண்டு composting முறையிலே அவர்கள் உரம் தயாரித்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்கள். ஆகவே, அங்கு வெளிவருகிற கழிவுநீரைக் கொண்டு, கழிவுநீரையே அவர்கள் மூலப்பொருளாகப் பயன்படுத்துகிற

காரணத்தினாலே கழிவு நீர் வெளியேற்றப்படுகிற சூழ்நிலை அங்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மேலும், தொழிற்சாலைகளின்மூலம் புகை மாசு ஏற்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் புகைப்போக்கியிலே புகையைக் கண்காணிக்கக்கூடிய மாசுக் கட்டுப்பாட்டு மானி அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலே இருக்கிற மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய தலைமை அலுவலகத்தில் இணையதளத்தின் மூலமாக நேரடியாக இணைக்கப்பட்டு, 15 நிமிடங்களுக்கு ஒரு முறை காற்று மாசின் அளவு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. விதிமுறைகளை மீறி மாசுகள் வருகிறபொழுது எஸ்.எம்.எஸ். மூலமாகவும், குறுந்தகவல் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் உடனடியாக அந்த ஆலைக்கு அவ்வப்பொழுது அறிவுறுத்தப்பட்டு, அந்த மாசுகள், காற்று மாசாக இருந்தாலும், புகை மாசாக இருந்தாலும் உடனுக்குடன் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா, கேட்டதெல்லாம் செய்து கொடுக்கும் வரம் தரும் வரலட்சுமியே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளில் உள்ள மக்களும் என்னுடைய மக்கள்தான் என்று பாரபட்சமில்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சேந்தமங்கலம் தொகுதியிலும் புரட்சியைப் படைத்த அதிசய சரித்திரமே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த பொக்கிஷம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வாழ்வே நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் வாழ்வும் நீங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நானும் உங்கள் வாழ்வுதான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, எனது தொகுதிக்காக நான் உங்களிடம் வைத்த அனைத்துக்

2014 ஆகஸ்ட் 12]

கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, ஏற்கெனவே மலைவாழ் மக்களுக்காகக் கொல்லிமலையைத் தனி வட்டமாக அமைத்துக் கொடுத்தீர்கள், அம்மா. அம்மா, மீண்டும் சேந்தமங்கலத்தைத் தனி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தொடரிலேதான் கடிதம் கொடுத்தேன். உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கருணையோடு சேந்தமங்கலம் மக்களின் வாழ்விற்காக நாமக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்து சேந்தமங்கலத்தைத் தனி வட்டமாக, நேற்று விதி 110-ன்கீழ் அறிவித்த மகராசியே! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தானம்மா தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வர்! இனிமேல் தமிழகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு வேலையே இல்லை, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நவக் கிரகங்களின் பார்வையும் உடனிருக்க புண்ணிய பூமியில் புகழின் உச்சிக்கே சென்று நலமும், வளமும் மக்களுக்குப் போய்ச் சேர்ந்திட, (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தால் அமைதிப் பூங்காவாகத் தமிழகத்தை வழி நடத்திச் செல்லும் தாயுள்ளம் கொண்ட தமிழக நிரந்தர முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வராக நீங்கள் என்றும் வர வேண்டும், வர வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே நான் மனதார கூறிக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகக் கோடானுகோடி நன்றியினை உங்கள் மலர்ப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன் அம்மா. நன்றி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்@

(பட்டியல்கள் 8 மற்றும் 9 இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

@ 621 முதல் 1026 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கட்டுமானத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி, சத்துணவு மற்றும் இருப்பிட வசதித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 4 அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

முற்பகல் 11-10

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உழைத்து வாழ்பவனே வணங்கத் தக்கவன். வாழ்த்துக்கு உரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்" என்றார் பேரறிஞர் அண்ணா.*

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயற்றினார். இத்தச் சட்டத்தின்படி கட்டுமானத் தொழில்களில் பணிபுரியும் அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 1994 ஆம் ஆண்டு என்னால் உருவாக்கப்பட்டது.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தனி நபர் அல்லது நிறுவனம், தான் மேற்கொள்ள உள்ள கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியின் உத்தேச மொத்த மதிப்பீட்டில் 1 விழுக்காடு தொகையை பங்களிப்புத் தொகையாக வாரிய நிதிக்குச் செலுத்த வேண்டும். இந்த நிதியிலிருந்து பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பெற்று வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டு காலத்தில் மட்டும் 112 கோடியே 96 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய நலத் திட்ட உதவிகள், 3 இலட்சத்து

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

85 ஆயிரத்து 244 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் சமூகப் பாதுகாப்பினை மேலும் மேம்படுத்தும் வகையில், 127 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

1. தற்போது பணியிடத்தில் பணியின்போது நிகழும் விபத்தின் காரணமாக அல்லது பிற இடங்களில் நிகழும் விபத்துகளின் காரணமாகப் பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் இறக்கும் நேர்வில், அவர்தம் நியமனதாரருக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இதில் பணியில் ஈடுபட்டு இருக்கும்போது, பணியிடங்களில் விபத்து ஏற்பட்டு இறக்கும் தொழிலாளர்களுக்கான நிதி உதவி ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. தமிழ்நாட்டைச் சார்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே தற்போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்கிறார்கள். வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்வதற்கான நடைமுறைகளை வெளி மாநிலத் தொழிலாளர்கள் பூர்த்தி செய்ய இயலாத நிலை உள்ளதால், அவர்களால் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள முடியவில்லை. இன்றைய சூழலில், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்துவரும் தொழிலாளர்கள் கட்டுமானத் தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டுள்ளதைக் கருத்தில்கொண்டும், வாரியத்தின் நலத் திட்ட உதவிகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், வெளி மாநிலத் தொழிலாளர்களால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் வேலை அளிப்போரின் சான்றிதழ் ஆகியவற்றை மட்டும் பரிசீலித்து, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் அவர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. கட்டுமானப் பணியிடங்களில் கனம் தூக்கிப் பொறி, போக்குவரத்துச் சாதனங்கள் அல்லது வாகனங்கள் ஆகியவற்றை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

இயக்குவதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை அளிப்போரால் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வசதி இல்லை. எனவே, பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் கட்டும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதாரச் சேவைகள் வழங்கும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ஆய்வக வசதி மற்றும் பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன்கூடிய 15 நகரும் மருத்துவமனைகள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பிற மாவட்டங்களில் 35 நகரும் மருத்துவமனைகள் என மொத்தம் 50 நகரும் மருத்துவமனைகள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 19 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு நகரும் மருத்துவமனையிலும் ஓர் ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர், செவிலியர், மருத்தாளுநர், ஆய்வக நுட்புநர், உதவியாளர் போன்றவர்கள் அடங்கிய ஒரு மருத்துவக் குழு இருக்கும்.

4. தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் அவர்கள் பணிபுரியும் இடங்களில் கல்வி வசதி அளிக்க இயலாத நிலை உள்ளது. பெரும்பாலான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் அவர்களின் குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளதுதான் இதற்குக் காரணம். எனவே, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக, உரிய வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-15

5. கட்டுமானப் பணியிடத்தில் 50 அல்லது அதற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்தால், வேலை அளிப்பவரால் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட வேண்டும். குறைவான எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் இவ்வசதி இடைப்பதில்லை. மேலும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலைக்காக அடிக்கடி இடம் பெயர்ந்து செல்வதால் அவர்களது சொந்த இருப்பிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள அங்கன்வாடி வசதிகளையும் அவர்களால் பெற

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இயலவில்லை. எனவே, கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டுமானப் பணிகள் அதிக அளவில் நடைபெறும் 50 இடங்களில் அங்கன்வாடி மையங்கள் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வோர் அங்கன்வாடி மையமும் சுமார் 400 சதுர அடியில், 20 குழந்தைகளைப் பேணும் வகையில் பொதுப் பணித் துறையினரால் அமைக்கப்படும். இந்த அங்கன்வாடி மையங்களில் 6 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய், காய்கறிகள் அடங்கிய சூடான, சத்தான, சமைத்த மதிய உணவு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) உணவுடன் திங்கள், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் ஒரு முட்டையும், செவ்வாய்க்கிழமையன்று கடலைப் பருப்பு அல்லது பச்சைப் பயிறு உணவும், வெள்ளிக்கிழமையன்று உருளைக்கிழங்கு சேர்த்த உணவும் வழங்கப்படும். அவர்களைப் பள்ளிக்குச் செல்ல தயார்படுத்த 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பாலர் பள்ளி வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக, மருத்துவப் பரிசோதனை, தடுப்பூசி, வைட்டமின் 'A' மாத்திரை, மருத்துவ மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவை குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வழங்கப்படும். மேலும், தாய்-குழந்தை இணைப்பு மருத்துவ அட்டை பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. பொதுவாக, கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பவரால் பணி இடத்திற்கு அருகில் தற்காலிக இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் தங்குமிட வசதிகள் பாதுகாப்பற்றதாக உள்ளன. மேலும், சிறிய கட்டுமான நிறுவனங்கள் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதே இல்லை. இந்தச் சிரமங்களைப் போக்கிடும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், 5 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் வகையிலும், என மொத்தம் 7,000 தொழிலாளர்கள் தங்கும் வகையில், 9 இடங்களில் 105 கோடி

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

ரூபாய் செலவில் தூங்கும் அறைகள் (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது Dormitories தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் பொதுப் பணித் துறைமூலம் கட்டப்படும். இவை கட்டப்படும் வளாகங்களில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவை செய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கித் தொடர்புச் சேவை, படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகியவை ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள்மூலம், கட்டுமானத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன், அவர்கள் கூடுதல் வசதியினைப் பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

(ஆ) பொன் விழா காணும் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு நிதியுதவி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைய சிற்பங்களுக்கும், பழமை வாய்ந்த கோயில்களுக்கும் பெயர் பெற்றதும், பெயரிலேயே வளத்தைப் பிரதிபலிப்பதும், தஞ்சாவூர் மாவட்டத்தின் தன்னிகரற்ற நகரமாக விளங்குவதும், காவேரி ஆற்றில் இருந்து பிரியும் கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ளதுமான பட்டுக்கோட்டை நகரம், 1-4-1965 அன்று நகராட்சியாக உருவாக்கப்பட்டு, பின்னர் தேர்வு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டு பொன் விழாவினைக் கொண்டாட இருக்கிறது.

வரலாற்றுப் பாரம்பரியமும், சிறப்பும் கொண்ட இந்தப் பட்டுக்கோட்டை நகரம் 21.83 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த நகராட்சியில் 33 வார்டுகள், 73 கிலோ மீட்டர் சாலைகள், 2,883 தெரு விளக்குகள், 5 பூங்காக்கள், 21 ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், பாலிடெக்னிக் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவை உள்ளன.

பட்டுக்கோட்டை நகராட்சி தொடங்கப்பெற்று 49 ஆண்டுகள் முடிவடைந்து, பொன்விழா ஆண்டான 50 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. பட்டுக்கோட்டை நகராட்சி

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொன்விழா காணும் இத்தருணத்தில், அதன் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி கோரி பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும் இதுகுறித்து என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பட்டுக்கோட்டை நகராட்சி தனது பொன் விழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது என்பது பெருமைக்குரிய அம்சமாகும். இந்தப் பெருமைக்குரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில், பட்டுக்கோட்டை நகராட்சியின் குடிநீர் அபிவிருத்தி, சாலை மற்றும் வடிகால் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, குளங்களைச் சீரமைத்தல், பேருந்து நிலைய மேம்பாடு, அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, பட்டுக்கோட்டை நகராட்சிக்குச் சிறப்பு உதவித் தொகையாக 25 கோடி ரூபாயினை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், பட்டுக்கோட்டை நகராட்சியைச் சார்ந்த மக்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஐ) நாறும்பூநாதர் திருக்கோயில் கலசாரோவியங்களைப் புதுப்பித்தல், திருக்கோயில் அன்னதானத் திட்ட விரிவாக்கம், திருப்பணி, குடமுழுக்கு மற்றும் பூஜைகளுக்கு நிதியுதவி, பக்தர்களுக்கு விடுதிகள், பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் பணி வரன்முறை குறித்த முதல்வரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத் திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துகளைப் பாதுகாத்துப் பராமரிப்பதிலும், வழிபாடுகளை நடத்துவதிலும், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

இறையன்பர்களின் வசதிகளை மேலும், மேம்படுத்தும்பொருட்டு கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் உள்ள தொன்மையான ஓவியங்களைப் பழமை மாறாது புதுப்பிக்கும் வகையில், தொல்லியல் வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று என்று தலைமையிலான அரசால் அமைக்கப்பட்டது. இந்தக் குழு அளித்த மதிப்பீட்டின்படி, திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாத சுவாமி திருக்கோயில் 5 நிலை இராஜகோபுரத்தில் உள்ள பழமையான சுவரோவியங்களை 1 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்துப் பராமரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 2002 ஆம் ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது 518 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், ஆன்றோர்கள், சான்றோர்கள், இறையன்பர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதைபடுத்து, ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 13-9-2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்குப் பெரும் பயனளிக்கும் இத்திட்டம், நடப்பு ஆண்டில் 3 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 106 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

3. இந்து சமய திருக்கோயில்களை ஆகம விதியின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதன்படி, இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில், 5,351 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்தப்பட்டது. நடப்பாண்டில் மேலும் 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென அரசு மானியமாக 6 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

4. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அமைவப் பெற்றுள்ள திருக்கோயில்கள் சரியான பராமரிப்பின்றி சிதிலம் அடைந்திருப்பதை அறிந்த எனது தலைமையிலான அரசு, கடந்த 3 ஆண்டுகளில், ஆதி திராவிடர் வாழும் பகுதிகளிலுள்ள 1,630 திருக்கோயில்களைச் சீரமைக்க, ஒரு திருக்கோயிலுக்கு 50,000/- ரூபாய் வீதம் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் அத்திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/- ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள, கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்கள் நிதி வசதியின்மையால் திருப்பணிகள் மேற்கொள்ளப்படாது சிதிலம் அடைந்துள்ளதை அறிந்த எனது தலைமையிலான அரசு, திருப்பணிக்கான உதவியை 25,000/- ரூபாயிலிருந்து 50,000/- ரூபாயாக உயர்த்தியதோடு, கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் 1,262 திருக்கோயில்களுக்கு 6 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தத் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/- ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அன்னதானம் அருந்தும் பக்தர்கள் வசதிக்கென அன்னதானக் கூடம் இல்லாத திருக்கோயில்களில் சமையலுடன்கூடிய அன்னதானக் கூடம் அமைத்தல், அங்கு பக்தர்கள் வசதியுடன் அமர்ந்து உணவருந்தத் தேவையான மேஜை நாற்காலிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருதல் ஆகியவற்றை நிறைவேற்றும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் 23 அன்னதானக் கூடங்கள் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 29 அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 16 திருக்கோயில்களில் 3 கோடியே

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

46 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அன்னதானக் கூடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. திருக்கோயில்களில் ஒரு கால பூஜையேனும் நடைபெற வேண்டும் என்ற நோக்கில் ஒரு கால பூஜைத் திட்டத்தைச் சீரமைத்து இன்று 11,931 கிராமப்புறத் திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு, சிறு திருக்கோயில்கள் உட்பட சிறு, சிறு கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்குத் தேவையான பூஜை உபகரணங்கள் இல்லை என்பது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட 10,000 சிறு, சிறுத் திருக்கோயில்களுக்கு முறையான பூஜை செய்திட ஏதுவாக, பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகியவை 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

8. வரலாற்றுச் சிறப்புமிக்க தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்துப் புதுப்பிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்து, கடந்த மூன்று ஆண்டுகளில் 186 திருக்கோயில்களுக்கு 67 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. இவ்வாண்டு மேலும் 68 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புனரமைத்துப் புதுப்பிக்க 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. பஞ்சபூதத் தலங்களில் அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகைபுரியும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் பக்தர்கள் தங்கும் விடுதி 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. பழம் பெருமை வாய்ந்ததும், 12 ஜோதிர்லிங்கத் தலங்களில் ஒன்றாக விளங்குவதுமான இராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் தங்கி வழிபடுவதற்கும், சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்லவும் போதுமான தங்கும் வசதி இத்தலத்தில் இல்லை என்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி சுமார் 500 பக்தர்கள் தங்கும் வகையில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பகோணம் நகரில் அமைந்துள்ள மகாமகத் திருக்குளத்தில் மகாமகப் பெருவிழா நடைபெறுவது வழக்கம். இப்பெருவிழா 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் நாள் கொடியேற்றத்துடன் தொடங்கி, பிப்ரவரி 22 ஆம் நாள் நிறைவு பெறும். இம்மகாமகப் பெருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகர் பகுதியில் அமைந்துள்ள 86 திருக்கோயில்களில் நல்ல நிலையில் உள்ள 17 திருக்கோயில்கள் தவிர, எஞ்சிய 69 திருக்கோயில்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செப்பனிட்டுப் பாதுகாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் இட்டம் என்னால் துவக்கி வைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதானம் வழங்கும் பணிகளில் சமையல் செய்பவர், உதவியாளர், துப்புரவாளர் என்ற நிலைகளில் 673 நபர்கள் நேரக் கூலி அடிப்படையிலும், 147 நபர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலும் மொத்தம் 820 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில், அந்தந்தத் திருக்கோயில்களுக்குரிய சம்பள விதித்தில் ஊதிய நிர்ணயம் செய்து அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 7 கோடியே 89 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

13. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் திருவாகத்தில் 490 இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் உள்ளன. இத்திருக்கோயில்களில் மொத்தம் 869 பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்களில் 65 பணியிடங்களுக்கு முதல்நிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கான சம்பள விதிதம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. எஞ்சிய 804 பணியிடங்கள் சில்லரைச் செல்வினப் பணியிடங்கள் என வரையறை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

செய்யப்பட்டுள்ளது. இச்சில்லரைச் செலவினப் பணியிடங்களில் 356 பணியாளர்கள் மட்டும் சாந்தி அதாவது அர்ச்சகர், காவலர், தவில், வாத்தியம், கொத்தன், சுருதி, மாலைக்கட்டு போன்ற அத்தியாவசியப் பணியிடங்களில் சம்பள விகிதத்தில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 294 சில்லரைச் செலவினப் பணியிடங்களில் மேற்கண்ட பதவிகளில் தினக் கூலி 40/- ரூபாய் என்ற அடிப்படையில் பணிபுரிகின்றனர். இவர்களது பணித் தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில், ஊதிய விகித முறையில் வரன்முறை செய்யப்படும். இதனால், ஆண்டு ஒன்றுக்கு 46 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், காலியாகவுள்ள 154 பணியிடங்கள் தகுதி உடையோரைக் கொண்டு ஊதிய விகித அடிப்படையில் உடனடியாக நிரப்பப்படும்.

முற்பகல் 11-35

14. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் ஆண்டு வருமான அடிப்படையில் பல்வேறு நிலைகளில் உள்ள திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட காலிப் பணியிடங்களில் தினக் கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக 8,184 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் நீண்ட காலமாகத் தங்களுடைய வாழ்வாதாரத்தை சீரமைத்திட தங்கள் பணியினை ஊதிய விகித அடிப்படையில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்களது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 8,184 பணியாளர்களுக்கு தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களது பணி வரன்முறை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 44 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகளினால், திருக்கோயில்களுக்கு வருகைபுரியும் பக்தர்கள் கூடுதல் வசதியைப் பெறவும், திருக்கோயில் பணியாளர்கள் கூடுதல் சலுகைகளைப் பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12]

(iv) மேன்மைமிகு தாய்-சேய் நல மையங்கள் அமைத்தல், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகத் திட்டம், மருத்துவமனைகளைத் தரமுயர்த்துதல், கட்டமைப்பு மேம்பாடு, புதிய மருத்துவக் கல்லூரி திறவுதல் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு உதவித் தொகை உயர்வு குறித்த முதல்வரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்குத் தரமான மருத்துவச் சேவை, தங்கு தடையின்றி கிடைத்திடவும், அனைத்து மக்களும் நோயற்ற வாழ்க்கை வாழவும் தேவையான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் கீழ்க்காணும் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்:

1. தாய்-சேய் நலப் பிரிவுகளை மேம்படுத்தும்வகையில், மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய்-சேய் நலப் பிரிவுகள் 50 கோடி ரூபாய் செலவில், மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என என்னால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் திருச்சி மற்றும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசு ராணியார் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று மேன்மைமிகு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், மேற்படி மருத்துவமனைகளின் மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பிரிவுகள் வலுப்படுத்தப்படுவதோடு, 200 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு, நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும். மேலும், கூடுதலாக சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

2. திருத்தி அமைக்கப்பட்ட முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாதவிடாய் சுகாதாரத் திட்டம்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

சீரமைக்கப்பட்ட மற்றும் உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், நடமாடும் மருத்துவமனைத் திட்டம் என்ற வரிசையில், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும், 1,000 ரூபாய் மதிப்புடைய "அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்", அதாவது Amma Baby Care Kit வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

இந்தப் பெட்டகம், குழந்தையை பாதுகாப்பாகப் பராமரிப்பதற்குத் தேவையான பராமரிப்புத் துண்டு, குழந்தை உடை, குழந்தை படுக்கை, குழந்தை பாதுகாப்பு வலை, குழந்தை நாப்கின், 100 மில்லி லிட்டர் அளவு கொண்ட எண்ணெய் டப்பா, பிளாஸ்டிக் குப்பியில் 60 மில்லி லிட்டர் ஷாம்பு, சோப்புப் பெட்டி., (மேசையைத் தட்டும் ஒலி) சோப்பு, நக வெட்டி., இலுஇலுப்பை, (மேசையைத் தட்டும் ஒலி) பொம்மை, சுத்தமான கைகளுடன் குழந்தையைப் பராமரிக்க பிளாஸ்டிக் டப்பாவில் 250 மில்லி லிட்டர் அளவு கை கழுவும் திரவம், பிரசவித்த தாய்க்கு 100 இராம் எலுடையுள்ள சோப்பு, பிரசவித்த தாயின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தாய்ப்பாலை அதிகரிக்கவும் 'சௌபாக்கியா' சுண்டிலேகியம், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தாய் மற்றும் பச்சிளம் குழந்தையைப் பராமரிக்கத் தேவையான பொருட்களை வைத்துக்கொள்ள ஒரு பெட்டகம் என 16 பொருட்களை உள்ளடக்கியதாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு 67 கோடி ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 6.7 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைக்கு இணையான சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில், தனியார் அமைப்புகளுடன் இணைந்து டயாலிசிஸ் (Dialysis), டயாக்னோசிஸ் (Diagnosis), டயாபிடிஸ் (Diabetes) மையங்கள்

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மையங்களில் கூடுதலாக M.R.I. மற்றும் C.T. ஸ்கேன்கள் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்துதரும் பொருட்டு, புற நோயாளி பிரிவு, முடக்கியியல் பிரிவு, சிறுநீரகவியல் அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறுநீரகவியல் மருத்துவப் பிரிவு ஆகியவற்றிற்கு 50 கோடி ரூபாய் செலவில் அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. நிருவாக வசதிக்காகவும், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கவும் ஏற்கெனவே உள்ள பெரிய வட்டங்களைப் பிரித்து, புதிய வட்டங்களை அரசு உருவாக்கி வருகிறது. பல புதிய வட்டங்களில் தற்போது அரசு வட்ட மருத்துவமனை இல்லை. அரசு வட்ட மருத்துவமனை இல்லாத புதிய வட்டங்களில், புதிய அரசு மருத்துவமனைகளைப் படிப்படியாக ஏற்படுத்தும் வகையில், முதற்கட்டமாக நடப்பாண்டில் 10 வட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 25 கோடி ரூபாய் செலவில் வட்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

6. அரசு மருத்துவக் கல்லூரி இல்லாத 15 மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற இலக்கை எய்தும்வகையில், மருத்துவர்கள், பணியாளர்களை நியமிக்கவும்; உபகரணங்களை வாங்கவும் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கெனவும் 97 கோடியே 40 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மாவட்டத் தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும்வகையில், 32 கோடியே 81 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதுவன்றி, மேலும் 12 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 31 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

முற்பகல் 11-45

7. தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்டங்களில், 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் எந்த ஓர் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரியும் இல்லாததைக் கருத்தில் கொண்டு, கரூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களும், மாணவ, மாணவியரும் பயன்பெறும்வகையில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கும், அவர்களுடன் வரும் உடனாளர்களுக்கும் நல்ல குடி தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக, நடப்பாண்டில் 45 மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள், 30 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 240 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் என மொத்தம் 315 அரசு மருத்துவமனைகளுக்கு 40 கோடி ரூபாய் செலவில் எதிர் சவ்வூடு பரவல் தண்ணீர் உபகரணம், அதாவது Reverse Osmosis Water Plant நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

9. ஏழை நோயாளிகள், அரசு மருத்துவமனைகளில் உயரிய மருத்துவ சேவை பெற வேண்டும் என்பதற்காக, அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி, நடப்பாண்டில் மணப்பாறை, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி, (மேசையைத் தட்டும் ஒலி) மயிலாடுதுறை, வாலாஜா, திருப்பத்தூர், காரைக்குடி, அருப்புக்கோட்டை, பரமக்குடி, மேட்டுப்பாளையம், ஆத்தூர் மற்றும் செய்யாறு ஆகிய 12 அரசு மருத்துவமனைகளுக்கு எக்ஸ்-ரே படத்தைப் பாதுகாத்து அனுப்பும் வசதியுடன்கூடிய டிஜிட்டல் எக்ஸ்-ரே கருவிகள் 12 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, பொள்ளாச்சி, கடலூர், பெண்ணாகரம், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், பத்மநாபபுரம், கரூர், கிருஷ்ணகிரி, உசிலம்பட்டி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், மேட்டூர் அணை, காரைக்குடி, கும்பகோணம், உதகமண்டலம், பெரியகுளம், திருவள்ளூர், தென்காசி, திருப்பூர், செய்யாறு, மன்னார்குடி, மணப்பாறை,

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கோவில்பட்டி, கள்ளக்குறிச்சி, விருதுநகர், வேலூர் மற்றும் அரியலூர் ஆகிய 31 அரசு மருத்துவமனைகளுக்கு C-Arm எக்ஸ்ரே கருவி மற்றும் முடநீக்கியல் அறுவை சிகிச்சைக்கான கருவிகள் 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிலும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

10. ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஓர் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில், 131 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், 122 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 18 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

11. கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பதன் அடிப்படையில், கடந்த மூன்று ஆண்டுகளில், 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 134 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 21 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

12. மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் செவிலிய மாணவியர்கள், அவர்கள் தங்கிப் படிக்க வசதியாக, சென்னை மருத்துவக் கல்லூரியில் 6 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் புதிய விடுதிகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13. அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்குத் துல்லியமான பரிசோதனை முடிவுகள் அறிந்து சிகிச்சை தர வேண்டும் என்பதற்காக, M.R.I. ஸ்கேன், C.T. ஸ்கேன் போன்ற

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஆகஸ்ட் 12

நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் புதியதாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

14. அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் பயிற்சி மருத்துவர்கள், முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்கள், முதுநிலைப் பட்டயம் பயிலும் மருத்துவர்கள், உயர்தர சிறப்புப் படிப்பு பயிலும் மருத்துவர்கள், நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்கள் என 4,088 பயிற்சி மருத்துவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கால உதவித் தொகை உயர்த்தித் தரப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் கோரிக்கையினை ஏற்று, பயிற்சி மருத்துவர்களுக்கான உதவித் தொகை 8,500 ரூபாயிலிருந்து 13,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் ஆண்டிற்கு 20,000 ரூபாயிலிருந்து 27,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) முதுநிலைப் பட்டயம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 18,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் ஆண்டிற்கு 19,000 ரூபாயிலிருந்து 26,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர்தர சிறப்புப் படிப்புப் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை முதல் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் ஆண்டிற்கு 23,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) நரம்பு அறுவை சிகிச்சை முதுநிலைப் பட்டம் பயிலும் மருத்துவர்களுக்கான உதவித் தொகை நான்காம் ஆண்டிற்கு 21,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாம் ஆண்டிற்கு 22,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாம் ஆண்டிற்கு 30,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, பயிற்சி மருத்துவர்களுக்கு ஆண்டு உதவித் தொகை

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உயர்வு 400 ரூபாய் எனவும், முதுநிலை மருத்துவர்களுக்கு 700 ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்படும். இதன்மூலம் அரசுக்கு 28 கோடியே 74 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மேலும் சிறந்து விளங்கவும், பொதுமக்கள் குறிப்பாக, ஏழையெளிய மக்கள் சிறப்பான உயர்தர மருத்துவச் சேவையை அரசு மருத்துவமனைகளில் பெறவும், பயிற்சி மருத்துவர்கள் கூடுதல் உதவித் தொகை பெறவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. கட்டுமானத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், பட்டுக்கோட்டை நகராட்சிக்கு சிறப்பு நிதியுதவி, திருக்கோயில் மேம்பாட்டுத் திட்டங்கள், தாய்–சேய் நல சிறப்புத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முற்பகல் 11-55

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மையைப் போற்றுகிற வகையிலும், புதிய நன்மைகளைப் பெருக்கெடுத்து, வார்த்தெடுத்து, வளர்க்கிற வகையிலும், ஒவ்வொரு நாளும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதுப் புது, புதுப் புதுத் திட்டங்களைத் தமிழகத்திற்கு தந்துகொண்டேயிருக்கிறார்கள். இல்லாமையும், இயலாமையும், வறுமையும், வாட்டமும் தெருவிலே இருக்கிறவர்களுக்குத் தலைவிதி என்று இருந்த காலமெல்லாம் போய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் சிறப்பான திட்டங்களைத் தமிழகத்திற்கு தந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய, புதிய விதிகளையெல்லாம், மூட நம்பிக்கையாய் இருந்த அந்தத் தலைவிதிகளையெல்லாம் தவிடுபொடியாக்கி, (மேசையைத்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 ஆகஸ்ட் 12

தட்டும் ஒலி) தமிழர்கள் தலைநிமிர்ந்தவர்கள், தடை உடைத்தவர்கள், எதிலேயும் முன்னணியில் இருப்பவர்கள் என்று நாளைய உலகம் பாராட்டுகின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு விதி 110-ன்கீழ் புதிய, புதிய திட்டங்களையெல்லாம் தமிழகத்துக்கு தந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியாவின் தலைநகரம் டெல்லியாக இருக்கலாம். உலக நாடுகளுடைய அமைப்புக்குத் தலைநகரம் அமெரிக்காவாக இருக்கலாம். ஆனால், ஜனநாயகம் என்ற சொல்லுக்கு எது பொருள் என்றால், நலத் திட்டம். ஏழை, எளிய மக்களைக் கைதூக்கிவிடுகிற நலத் திட்டம். இன்றைக்கு உலகத்திலே இந்த நலத் திட்டங்களுக்கு, ஒரு தலைநகரம் உண்டு என்றால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழகம்தான். உலக நலத் திட்டங்களுடைய தலைநகரம் என்கின்ற வகையில், பிற மாநிலங்களும், பிற நாடுகளும் பார்த்து, பின்பற்றுகிற வகையிலே, நலத் திட்ட அறிவிப்புகளை நான்தோறும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் திருமணம் செய்கின்றபோது, திருமணத் தம்பதியர்களை, பெரியவர்கள் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்துவார்கள். இந்தப் பதினாறு எண்ணிக்கைக்குப் பலருக்குப் பொருள் தெரிகிறதோ, இல்லையோ அந்தப் பழமொழி இன்றைக்கு மாறி, புதுமொழி வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளுக்குத் தரப்போகிற அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் 16 பொருட்களைக் கொண்டது. இந்தப் பதினாறையும் பெற்று நீங்கள் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று வாழ்த்துவதைப்போல, பெரியவர்களுடைய அந்தப் பதினாறு என்கிற அந்த மொழிக்கு இன்றைக்கு இலக்கணம் தெரிவிக்கின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு மருத்துவமனையில் பிறக்கின்ற பல இலட்சக்கணக்கான குழந்தைகள் கொஞ்சி விளையாடுவதற்கு கிலுகிலுப்பை உட்பட பதினாறு பொருட்களை வழங்குகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறங்களில் இருக்கும் கருவுற்ற தாய்மார்கள், பழம் புடவை இருந்தால் மட்டும் போதும். அந்தப் பழம் புடவையை

எடுத்துக்கொண்டு அரசு மருத்துவமனைக்குப் பிரசவம் பார்த்துக்கொள்ளப் புறப்படுவார்கள். இனி அந்த நிலை இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ் மண்ணிலே ஏழை, எளியோர்கள் பெற்றெடுக்கின்ற ஒவ்வொரு குழந்தையையும் தாங்கிக்கொள்வதற்கு இந்தத் தாயின் மடி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள் என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) புத்தொளி ஏற்றுகின்றவகையில், இன்றைக்குத் தமிழர்களின் நெஞ்சமெல்லாம் குளிர்விக்கின்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஒப்புயர்வற்ற ஒரு நலத் திட்டத்தைத் தமிழகத்தில் அறிவித்திருக்கின்றார்கள்.

உலக வரலாற்றில் வேறு எந்த நாட்டிலும் இப்படியொரு திட்டம் இருப்பதாகச் சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள். நேற்றுகூட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பேசாத குழந்தை பேசத் தொடங்கியபோது, அது 'அ-ம்-மா' என்று ஆரம்பித்து, 'அம்மா' என்று சொன்னது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குழந்தை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்வதற்காகத்தான் அந்த வார்த்தை வெளிப்பட்டது என்று இந்த அவையிலே குறிப்பிட்டார். பேசாத குழந்தை அல்ல, பேசும் குழந்தைகூட, இந்த மண்ணில் வந்தவுடனே 'அம்மா' என்று சொல்வது, அம்மா எனக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) என் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்த, என் வாழ்க்கையில் ஒளியேற்றிய, என் வாழ்க்கைக்கு வழிகாட்டிய, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு நன்றி 'அம்மா' என்று சொல்வதற்கான வார்த்தையாகத்தான் 'அம்மா' என்று அந்த வார்த்தை தொடங்கும்.

ஊனோடும், உயிரோடும், மக்கள் வாழ்வோடும் இணைந்து போகின்ற ஒரு நலத் திட்டத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள் என்கிறபோது, அதைப் பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை.

தொழிலாளர்கள் மருத்துவமனையைத் தேடிப் போக வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் இருக்கும் இடத்திற்கே நகரும் மருத்துவமனையை இன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து தந்திருக்கின்றார்கள். தொழிலாளர்கள்

[முனைவர் செகு. தமிழரசன்] [2014 ஆகஸ்ட் 12

இறந்தால், அவர்களின் இறப்புக்கு நிகராக, ஓர் அரசு ஊழியருக்கு வழங்கப்படுவதைவிட, ரூ.5 இலட்சம் அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டில், தமிழகத் தொழிலாளிகள் மட்டுமல்லாமல், ஆந்திரா, பீஹார் மற்றும் ஒடிசா மாநிலங்களிலிருந்து இங்கு வந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களாக இருந்தாலும்கூட, 'உங்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருவேன்' என்கின்ற வகையிலே, இன்றைக்கு 'தொழிலாளர் மறுமலர்ச்சித் திட்டமாய்' ஓர் அற்புதமான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள்.

ஓய்ந்து, காய்ந்து, தீய்ந்து, வார்த்தைகளால் வசை பாடி, ஆகா, ஆகா என்று மௌனிவாக்க விபத்தை அரியலாக்க முடியாதா என்று நினைத்தவர்களெல்லாம், இன்றைக்குத் தீய்ந்து போகின்ற வகையிலே, காய்ந்து போகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சம்பவமோ, ஒரு குற்றமோ நிகழ்வது மட்டும் அரசின் பெரும் பொறுப்பாகாது. அந்தச் சம்பவத்திற்கும், குற்றத்திற்கும் தீர்வு சொல்கிற பேராண்மைதான் ஓர் அரசாட்சியுடைய, ஓர் அரசின் இலக்கணம். (மேசையைத் தட்டும் ஒலி) கட்டடத் தொழிலாளியின் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பது வருங்காலம் வாயார வாழ்த்தக்கூடிய ஒரு திட்டம்.

நண்பகல் 12-00

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'என் அரசியல் உயர்வுக்கு, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற அளவிலான மக்கள் செல்வாக்குக்கு, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடல்கள் பெருமளவுக்குப் பயன்பட்டிருக்கின்றன என்று ஒரு முறை சொன்னார், அந்தப் பட்டுக்கோட்டையின், பாட்டுக்கோட்டையின் நினைவைப் போற்றுகிற வகையிலே, பட்டுக்கோட்டைக்குக்கூட இன்று ஒரு புதுவாழ்வு கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பாராட்டு என்பது பலவகை. அதிலே பழிக்கு அஞ்சியாவது பாராட்டுகின்ற தன்மையிருக்கவேண்டும். இந்த நலத் திட்டங்களை, இப்படிப்பட்ட நலத் திட்டங்களை, இந்த நாளிலும் போற்றும்

2014 ஆகஸ்ட் 12] [முனைவர் செகு. தமிழரசன்]

நலத் திட்டங்களை வாயார வாழ்த்துவதற்கு மனமில்லாதவர்கள், பாராட்டாதவர்கள் மனமில்லாத பாதகர்கள். பழிக்கஞ்சியும் பாராட்டாதவர்கள் பாதகர்கள். இந்த நலத் திட்டங்களை நாம் பாராட்டாவிட்டால், நாளைய தமிழகம், நாளைய தலைமுறை, நாளைய சமூகம் நம்மை மன்னிக்காது. நம்மைப் பாராட்டாது. இந்தத் திட்டங்களைப் பாராட்டினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டுகளைப் பதிவு செய்தால்தான் நாளைய தலைமுறை, தமிழர்கள் நன்றியுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள இயலும். அந்தவகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற நலத் திட்டங்களை வாயார, சொல்லார, மொழியார, ஏன்? என் எண்ணமெல்லாம் சேர்ந்து எனது நெஞ்சார்ந்த நன்றி வணக்கங்களை, வாழ்த்துகளைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைத்து வாழ்பவன் வணங்கத்தக்கவன் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுக்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். தாய்த் திருநாட்டில் உழவுத் தொழிலும், நெசவுத் தொழிலும் ஒரு மரபு வழி சார்ந்த உடல் உழைப்புத் தொழிலாக மதிக்கப்பட்டு வருகிறது. அதுபோல வளர்ந்து வருகிற நாகரிக உலகத்தில், சுட்டுமானத் தொழில் என்பது மிகவும் வளர்ந்து வருகிற தொழில். இத்தொழிலில், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் உடல் உழைப்பைத் தந்து, எதிர்கால உலகத்தைப் பாதுகாப்பாக உருவாக்குவதற்கு தன்னலமில்லாமல் உழைக்கிறார்கள். அவ்வாறு உழைக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, உலகத்து உழைப்பாளிகளின் உழைப்புக்கு மதிப்பு தருகிற ஒப்பற்ற ஒரே ஆட்சித் தலைவர் கருணையின் வடிவமாய் விளங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றில் வேறெந்த மாநிலத்திலும் செய்துவிட முடியாத சாதனையாக அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தை 1994-லே உருவாக்கி, அது உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தொழிலாளர்களுக்கு எண்ணற்ற நலத் திட்டங்களைத் தொடர்ந்து தந்து, அந்தத் தொழிலாளர்களைத் தாயுள்ளத்தோடு பாதுகாத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

[திரு. உ தனியரசு] [2014 ஆகஸ்ட் 12

அவர்கள் இப்போது 127 கோடி ரூபாய் அளவுக்குப் புதிய திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, வெளிமாநிலத் தொழிலாளர்களும் சேர்ந்து பயனடைகிற வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். ஆய்வகங்களோடு கூடிய 50 நகரும் மருத்துவக் குழுக்கள் வாயிலாக, தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற இடங்களுக்குச் சென்று, தொழிலாளர்களுடைய தேக ஆரோக்கியத்தையும், நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் அதிலிருந்து குணமடைகின்ற வாய்ப்பையும் இந்தியாவிலேயே, ஏன், உலகத்திலேயே எந்த நாடும், எந்த அரசும் செய்திராத சாதனையை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருப்பதற்காகப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் கல்வி கற்று, ஏனைய சமூகப் பிரிவினரோடு சேர்ந்து, ஒரு தகுதி பெற்ற குழந்தைகளாக வரவேண்டுமென்ற அடிப்படையில் அங்கன்வாடியைத் தந்தது மட்டுமல்லாமல், அங்கே சத்துள்ள சூடான உணவையும் வழங்குகிறார்கள். குழந்தைகளுக்குத் தரமான கல்வியைத் தருவதற்காக, பாடசாலைகளைத் தந்துள்ளார்கள். இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த உடலுழைப்பு கட்டுமானத் தொழிலாளர்களுடைய வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியை, புரட்சியை ஏற்படுத்தியிருப்பதை மனமாரப் பாராட்டி வரவேற்கிறேன். 7,000 தொழிலாளர்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு உறங்கும் வசதியோடு கூடிய அறைகள் கட்டுவதற்கு 105 கோடியை ஒதுக்கியிருப்பது இன்னும் கூடுதலாக வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 12-05

புகழ்பெற்ற தஞ்சை, பட்டுக்கோட்டை நகரத்தின் 50-வது ஆண்டு பொன்விழாவிற்கு 2.5 கோடி ரூபாய் தந்து, புகழ்பெற்ற பட்டுக்கோட்டை நகரத்திற்குப் பெருமை சேர்த்ததையும் பாராட்டி, வரவேற்கின்றேன்.

இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் இதுவரை எந்த அரசும் செய்திராத அளவுக்கு, உயர்ந்த, தொன்மைவாய்ந்த பெரிய கோயில்களிலிருந்து, ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும், குடியிருப்புகளிலுள்ள கோயில்களுக்குப் பூஜை சாமான்கள், அன்னதானக் கூடம் அமைப்பது உட்பட பல திட்டங்களுக்குக் (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி, பண்டைய தமிழர்களுடைய பண்பாட்டைப்

பாதுகாக்கிற திருக்கோயில்களைப் பாதுகாத்துள்ளார்கள். கோடிக்கணக்கான மக்கள் வணங்குகின்ற தெய்வத்திற்கு இணையாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தமிழ்ச் சமூகமே வணங்குவதற்கான திட்டங்களைத் தந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கு மண்டலத்தின் மையப் பகுதியிலே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, கரூர் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைத் தந்ததற்காக, கொங்கு மண்டலத்தின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பயிற்சி மருத்துவர்களின் நீண்டநாள் கோரிக்கையான ஊதிய உயர்வுக் கோரிக்கையை ஏற்று, இன்றைக்கு 30 விழுக்காடு அளவுக்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். சுதந்திரம் பெற்ற காலம் முதல் 67 ஆண்டுக்காலமாக ரூ.20,000, ரூ.21,000 என்று பெற்றுவந்த ஊதியத்தை, ஒரே உத்தரவால் இன்று 30,000 ரூபாயாக உயர்த்தித் தந்து, பயிற்சி மருத்துவர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய்-சேய் நலப் பிரிவுகளை மேம்படுத்துவதற்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் குறித்து நேற்றுகூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அலையிலே இருக்கும்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாக எடுத்துச்சொன்னார்கள். தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக தமிழ்நாட்டிலேதான் அரசு மருத்துவமனைகள் பராமரிக்கப்படுகின்றன என்ற செய்தியை கம்யூனிஸ்டு கட்சியினரே நேற்று வாயாரப் புகழ்ந்து பாராட்டினார்கள். அவர்களோடு இணைந்து நானும் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களிலெல்லாம் மிக மிகச் சிறப்பானத் திட்டமாக ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான குழந்தைகள் பிறந்தவுடனே,

அந்தக் குழந்தைக்கும் தாய்க்கும், உரிய பொருள்களை வழங்கக்கூடிய 'Amma Baby Care Kit' என்கின்ற திட்டத்தை, இப்பொழுது அறிவித்திருக்கின்ற திட்டங்களிலெல்லாம் மிகவும் நெஞ்சை அள்ளுகிற, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல், தாய் மாமன் வருவார், சித்தப்பா, பெரியப்பா ஒரு பொருளை வாங்கி வருவார் என்று யாரும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்த குழந்தைக்கு எல்லா வகையான, உறவுகளுக்கெல்லாம் உறவாக விளங்குகிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்னும் சொல்லப்போனால், ஒருசில நேரங்களிலே கட்டிய கணவர் பிரசவத்தின்போது கூடவே இருப்பதில்லை. வாகனம் ஓட்டுபவராகவோ அல்லது பல்வேறு தொழில்களிலே ஈடுபடுபவர்களாவோ அந்தக் கணவன்மார்கள் பணியிலே இருக்கலாம். அதனால், மனைவிக்குப் பிரசவம் நடக்கின்றபோது உடனிருக்கமாட்டார்கள். அந்தச் சூழ்நிலையிலேகூட, கணவன் இருக்கிறாரோ இல்லையோ, உற்றார் உறவினர்கள் இருக்கிறார்களோ இல்லையோ அத்தனை உறவுகளுக்கும் தாய் உறவாக இருக்கிறார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா வகையிலும் பாசத்தோடு baby towel, baby soap, baby soap box, baby shampoo, baby oil, baby napkin, baby dress, baby bed, baby nail cutter போன்றவற்றையெல்லாம் கொடுக்கிறார்கள். ரிலையன்ஸ் அம்பானி, டாட்டா போன்ற நிறுவன முதலாளிகள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன வாங்குவார்களோ; (மேசையைத் தட்டும் ஒலி) செல்வச் செழிப்போடு இருக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு என்னென்ன பொருட்கள் வாங்குவார்களோ; பெரிய நாட்டாமை, பெரிய அமைச்சர் போன்றவர்களுடைய குழந்தைகள், அரண்மனையிலே, வாயில் வெள்ளிக் கரண்டியோடு, தங்கக் கரண்டியோடு பிறக்கின்ற குழந்தைகளுக்குக் கிடைக்கின்ற வசதிகளையெல்லாம் என் அன்புத் தாய், தமிழகத்தில் ஒப்பற்ற ஆட்சி நடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைக் குழந்தைகளுக்கும் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Baby bed, baby toy, liquid hand wash, bath soap, soap box மட்டுமல்லாமல், அந்தக் குழந்தையை கொசு அல்லது வேறு எதுவும் தாக்கிவிடக்கூடாது என்பதற்காக baby protective net-ம் கொடுத்து, இவை

எல்லாவற்றையும் போட்டுக்கொள்வதற்கு ஒரு kit bag-ம் கொடுக்கிறார்கள்.

எப்படி, பள்ளிக் குழந்தைகளுக்கு 15 வகையான பொருட்களைத் தந்து, தமிழ்நாட்டிலிருக்கிற இலட்சக்கணக்கான குழந்தைகள் கிட்டாகப் பறந்து, பள்ளிக்குச் சென்று, பல்வேறு வகையான அறிவுசார்ந்த கல்வி வளங்களையெல்லாம் மகிழ்ந்து பெறுகிறார்களோ, அதைப்போன்று, பிறக்கின்ற குழந்தைகளுக்குக்கூட தேவையானவற்றையெல்லாம் அன்புத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனைய தாழ்வு நிலையும் இல்லாமல், பிறக்கின்ற குழந்தையின் உயர்ந்த, வளமான, ஆரோக்கியமான, சுகாதாரமான வாழ்வுக்கு வளம் சேர்த்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் மீண்டும் வணங்குகின்றேன்.

உலகத்தில் எத்தனை கோடி இன்பங்கள் உண்டோ, அத்தனை கோடி இன்பங்களையும் தாய்த் தமிழ் நாட்டிலுள்ள சமூகத்தினுடைய ஒட்டுமொத்த மக்களும் பெற வேண்டும் என்பதற்காக எண்ணற்றத் திட்டங்களை அனுதினமும் 110 விதியின்கீழ் அறிவித்து வருகின்ற, தமிழர்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் கருத்துக்கு, சமூகக் கருத்துக்கு, சமூகப் புரட்சிக்கு, அரசியல் புரட்சிக்கு, நிருவாகப் புரட்சிக்கு வித்திட்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா வளமும் பெறுவதோடு, தமிழ்ச் சமூகம் இருக்கின்றவரையில், தமிழர்களுடைய ஒரே தலைவி, தமிழ்நாட்டினுடைய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் கூறி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைய தினம் விதி 110-ன்கீழ் நான்கு அறிக்கைகளைச்

சமர்ப்பித்துள்ளார்கள். தமிழக மக்கள் என்ன நினைப்பார்களோ, தமிழக மக்கள் என்ன விரும்புவார்களோ, அவற்றையெல்லாம் நான் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை ஒவ்வொரு நாளும், இந்தச் சட்டமன்றத்திலே, தன்னுடைய அறிவிப்புகளாக அறிவித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, எங்களுடைய அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி மனதாரப் பாராட்டுகிறது.

இன்றையதினம் நான்கு அறிக்கைகளைச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றார்கள்: தமிழக மக்களின் அடிப்படை வசதிகளையெல்லாம் எப்படி மேம்படுத்தவேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைநோக்குத் திட்டம்-2023 கொண்டுவந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவற்றையெல்லாம் அறிவிப்பதற்குக் காரணம், தமிழக மக்கள், தமிழர்கள் எங்கெங்கு இருக்கின்றார்களோ, அவர்களெல்லாம் பாராட்டுகின்ற வகையிலே, இத்தத் தமிழக மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காகத்தான். இந்தியாவிலேயே தமிழகம்தான் முதல் மாநிலமாக இருக்கவேண்டும் என்பதற்காக, தொலைநோக்குத் திட்டம்-2023-ஐக் கொண்டுவந்து, ஒவ்வொரு துறையிலும், தன்னுடைய முத்தான பதிப்புகளை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதித்துக்கொண்டு வருகிறார்கள்.

'என்னுடைய வாழ்க்கையில், இந்தத் தமிழர்கள் யாரும், யாரிடமும் இலவசத்திற்காகக் கை நீட்டக்கூடாது' என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தன்னுடைய வாழ்க்கையில் முக்கியமான ஒரு காரியமாக நினைத்து, அதைப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், ஒவ்வொரு முறையும், தொழிலாளியாக இருந்தாலும் சரி, இந்தத் தமிழக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே, தமிழகத்திலேதான் தாய்-சேய் இறப்பு விகிதம் மிகவும் குறைந்து இருக்கிறது என்று நேற்றையதினம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று தொழிலாளியாக இருந்தாலும் சரி, தெய்வ வழிபாடாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு நிகழ்விலும், மனித நேயத்தோடு செயல்படுகின்ற மாண்புமிகு

2014 ஆகஸ்ட் 12] [திரு. பி.வி. கதிரவன்]

தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் திட்டங்களையெல்லாம் தமிழக மக்களுக்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக மக்களுடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்து வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழகத்தை ஆளுகின்ற தகுதி பெற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீடூழி வாழ்ந்து, தொடர்ந்து தமிழக மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் எட்டாம் தேதியன்று பல திட்டங்களை விதி 110-ன்கீழ் அறிவித்திருந்தார்கள். அதேபோல, இன்றும் நான்கு துறைகளைச் சார்ந்த திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை அறிவித்திருக்கின்றார்கள்.

அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கும், கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இதுவரை யாரும் செய்திடாத, சிந்தித்துக்கூட பார்க்க முடியாத திட்டங்களை, இவர்களுக்கு எதைச் செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்று உணர்ந்து செய்திருக்கிறார்கள். ஓர் அரசு எப்படி இருக்கவேண்டும் என்றால், தம் மக்களுக்கு என்ன தேவைப்படுகிறது? அந்தத் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்வது என்று அறிந்து அரசாள்வதுதான் உண்மையான அரசு. அந்த அரசுக்குத் தகுதிவாய்ந்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி என்பதைத் தெள்ளத் தெளிவாக விதி 110-ன் கீழ் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள் தெரிவிக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டுமானப் பணியாளர்களைப் பற்றிச் சிந்திக்கும்போது, அவர்களுக்கென சிறப்புத் திட்டங்களை அறிவித்துவிட்டு அவர் சென்றிருக்கலாம். குறைந்த வாடகையில் தங்கும் வசதி, படிக்கும் வசதி, உணவு வசதி என்று அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு என்ன தேவைப்படுமோ, அவை அனைத்தையும் வழங்கியிருக்கக்கூடிய ஒரே முதலமைச்சர், மாண்புமிகு

[திரு. ரா. சரத்குமார்] [2014 ஆகஸ்ட் 12

முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு 24 மணி நேரம் போதாது. 24 மணி நேரமும் உறங்காமல் இருந்தால்தான், ஒரு தலைவியால் மக்களைப் பற்றிச் சிந்திக்க முடியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உறங்காமல் சிந்தித்துச் செயலாற்றியிருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

இந்த மாமன்றத்தில் இருக்கும் பல சட்டமன்ற உறுப்பினர்களும், இன்று சட்டமன்றத்திற்கு வருகை தராத உறுப்பினர்களும்கூட, தொலைநோக்குத் திட்டம், 2023-ஐ பற்றிக் கூறியபோது, "இதிலுள்ள திட்டங்களை எப்படி நிறைவேற்ற முடியும்? 15 இலட்சம் கோடி ரூபாய் நிதியை எவ்வாறு ஒதுக்கீடு செய்ய முடியும்?" என்று ஏளனம் செய்தார்கள். அவர்கள், "மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் எதையும் சாதிக்க முடியும்" என்பதை இந்த அறிவிப்புகளைப் பார்த்துத் தெரிந்துகொள்வார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துக் கோயில் ஸ்தலங்களும் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும், கோயில்களில் நிட்டப்பட்டுள்ள ஓவியங்கள் சிறப்பாக இருக்க வேண்டும், புதுப்பிக்கப்பட வேண்டும், தொன்மைவாய்ந்த அனைத்தையும் மக்கள் அனைவரும் சிறப்பாகக் கண்டுகளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கோயில் திருப்பணிகளுக்காகப் பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். திருப்பணிகளுக்கு மட்டுமல்லாமல், குடமுழுக்கு, 2,000-க்கும் மேற்பட்ட கோயில்களில் அன்னதானத் திட்டம் போன்ற பல வகையான திட்டங்களை அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். ஒரு பக்தர் கோயிலுக்குச் செல்லும்போது, எதையெல்லாம் எதிர்பார்த்துச் செல்வாரோ, அவை அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். நல்ல உணவு கிடைக்குமா, நல்ல குடிநீர் வசதி இருக்குமா, தங்கும் வசதி இருக்குமா, அங்கு சுத்தமாக இருக்குமா, சிறப்பாகத் தரிசனம் செய்ய இயலுமா என்று நினைக்கும், அனைத்தையும் எடுத்துச் செல்ல முடியாத பக்தர்களுக்கு, "சிறப்பாக திருக்கோயில்களுக்குச் சென்று வாருங்கள்; இறைவனை தரிசித்து வாருங்கள், இறைவனின் அருளை நீங்கள் பெறுங்கள்" என்று கூறிடும் வகையில் கோயில் திருப்பணிகளுக்காக

2014 ஆகஸ்ட் 12] [திரு. ரா. சரத்குமார்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்று அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

தாயும், குழந்தையும் எப்படி இருக்க வேண்டும், தாய்-சேய் நலப் பிரிவு எப்படி இருக்க வேண்டும் என்று சிந்தித்து பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மகுடத்தில் வைரத்தைப் பதித்தது போன்று Baby Care Kit வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இது யாராலும் சிந்திக்க முடியாத ஒரு திட்டம்; நிச்சயமாக யாரும் சிந்தித்துக்கூட்டப் பார்க்க முடியாத ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புச் சகோதரர் திரு. தனியரசு அவர்கள் பேசியபோது, "டாட்டா, பிர்லா, ரிலையன்ஸ் போன்ற பெரிய பணக்கார வீட்டுக் குழந்தைகள்தான் golden spoon உடன் பிறப்பார்கள். அவர்களுக்குக் கிடைப்பதையெல்லாம், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகக் குழந்தைகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்" என்று கூறினார். தாயைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலத்தில், Mother's Day என்று ஒரு நாளை கொண்டாடுகிறார்கள். இந்த நாள், 12-8-2014 ஆம் நாள் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய நாள். (மேசையைத் தட்டும் ஒலி) Mother's Day என்று ஆங்கிலத்தில் கொண்டாடுவது போன்று, இந்நாளை 'அம்மா தினம்' என்று கொண்டாடப்படும் அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் குழந்தைகளைப் பற்றிச் சிந்தித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் சரிநிகர் சமமாக வாழ வேண்டும்; தமிழக மக்கள் சிறப்பாக இருக்க வேண்டும்; யாரும் எந்தவித சூழ்நிலையிலும், எதற்காகவும் யாரிடமும் கையேந்தக் கூடாது என்ற சூழ்நிலையை உருவாக்க, ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகளைக் களைய சின்னச் சின்ன விஷயத்தைக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தனியரசு அவர்கள், nail cutter கொடுப்பது பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபற்றி எப்படிதான் நினைத்தார்கள் என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், சிறு குழந்தைகளின் நகங்களை கத்திரிகோல் வைத்தா வெட்ட முடியும்? ஏனெனில், சிறு குழந்தைகளின் நகங்கள் மிகவும்

மென்மையாக இருக்கும். அவர்களின் நகங்களை மிகவும் கஷ்டப்பட்டு, ரொம்ப நிதானமாக வெட்டுவார்கள். அவர்களின் நகங்களை, ஒரு nail cutter இருந்தால்தான் சுலபமாக வெட்டமுடியும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் nail cutter வழங்கியிருக்கிறார்கள். பணக்காரக் குடும்பத்தில் இருக்கும் nail cutter-ஐ ஏழையெளிய மக்களும் பார்த்துப் பரவசம் அடைந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்திக் கொண்டேயிருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் மேலாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இலுஇலுப்பை வழங்குகிறார்கள். குழந்தை அழும், அப்போது அம்மா, பக்கத்தில் இருப்பார்களோ, இல்லையோ, குழந்தைக்கு உடனே விளையாட்டு காட்டுவதற்கு ஏதாவது ஒரு பொருள் வேண்டும். அதற்காக இலுஇலுப்பை வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரண விஷயம் அல்ல. உண்மையான தலைவி, மக்களைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு தலைவியால்தான் இவ்வாறு செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களால்தான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சுகாதாரத்தைப் பற்றி எண்ணி, ஒரு தாய், தன்னுடைய கையைக் கழுவிவிட்டு குழந்தையைத் தொட வேண்டும் என்பதற்காகத் தாய்க்கும் சோப்பு வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தாய் சுத்தமாகத்தான் குழந்தையைத் தொடுவார்கள். எனினும், அவர்களும் தங்கள் கைகளைச் சுத்தப்படுத்துவதற்காக ஒரு சோப்பு வழங்குகிறார்கள்; Rubber Mat, Rubber Sheet வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தனியரசு அவர்கள், "தாய் மாமன் செய்ய வேண்டிய சீர் பொருட்களை, தாயாக இருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் தருகிறார்கள்" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 8 ஆம் தேதி அன்று 110-விதியின்கீழ் பல துறைகளுக்குத் தேவையான திட்டங்களை அறிவித்தார்கள். தமிழகத்திலுள்ள அனைத்துத் துறைகளுக்கும் என்னென்ன தேவைப்படுகின்றன, எந்தத் தொழிலாளிக்கு என்ன தேவைப்படுகிறது, யாருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயல்படுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக பாரதப் பிரதமராக வரும் சூழ்நிலை கண்டிப்பாக வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நாளை நாம் பார்க்கப் போகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். தென்காசி

மருத்துவமனைக்கு C-Arm X-Ray Machine தேவை என்ற கோரிக்கை வெகுநாட்களாக வைக்கப்பட்டிருந்தது. தென்காசி மருத்துவமனைக்கு C-Arm X-Ray Machine வழங்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தென்காசி தொகுதி மக்கள் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தனியரசு அவர்கள் நான் சொல்ல நினைப்பதை அவரே சொல்லிவிடுகிறார். பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என்பதைப் போல, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பதினாறு பொருட்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயர் மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும், தமிழ் வாழும் வரை நிலைத்திருக்கும்; தமிழ் உள்ளளவும், அவரது பெயரை சொல்லிக்கொண்டேயிருக்கும் இந்த பூமி என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பல்லாண்டு, பல்லாண்டு காலம், பல பேறு பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

பிற்பகல் 12-20

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110-விதியின்கீழ் அறிவித்த அறிவிப்புகளை வரவேற்கிறேன். அம்மா, நான் பிறக்கையில் கந்தலாடையில் பிறந்தேன். இப்போது பிறந்தால், 16 வகையான பொருட்களோடு பட்டு மெத்தையில் பிறந்திருப்பேன் என்று நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருவிளையாடல் படத்தில் வருகின்ற சூழ்நிலையைப் போன்று, "நீ கேட்கிறாய்யா அல்லது, நான் கேட்கட்டுமா?" என்று கேட்பதைப்போன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் "இன்று மக்களைப் பார்த்து நீங்கள் கேட்க வேண்டாம், நான் இருக்கிறேன்,

தாயாக, உங்களுக்குச் செய்கிறேன் உங்களுக்காக நான் இருக்கிறேன்" என்று கூறி மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்பினை அறிவித்திருக்கிறார்கள். ஒரு கோயில் கட்டவேண்டுமென்று சொன்னால் அது கட்டுமானத் தொழிலாளியால்தான் கட்ட முடியும். இன்றைக்கு அந்தக் கட்டுமானத்தை முடித்துவிட்டு, அக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம், குடமுழுக்கு ஆகியவை நடத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் இறந்தால் அவர்களது நியமனதாருக்கு 5 இலட்சம் ரூபாயையும் கொடுத்துள்ளார்கள். ஏழையெளிய தாய் சேய் நலத்திற்கு 16 வகை பொருட்கள் கொடுத்து, உதவிகளைச் செய்து, அவற்றில் இலுஇலுப்பையையும் கொடுத்துள்ளார்கள். குழந்தைகளுக்குத் தாய்மார்கள் பாலூட்டினாலும், குழந்தைகள் அழுதுகொண்டுதான் இருக்கும். ஆனால், இலுஇலுப்பையை ஊட்டினால், குழந்தைகள் உடனே அழுகையை நிறுத்திவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு விதி 110-ன்கீழ் அறிவித்த திட்டங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை தொடர்பாக, இன்று அறிவித்த அறிவிப்புகளை நான் வரவேற்கின்றேன். இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் மானியக் கோரிக்கையின்போது, எனது இராமேஸ்வரம் தொகுதியைச் சார்ந்த இராமநாதஸ்வாமி கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் தங்குவதற்கு இடவசதி செய்ய வேண்டுமென்று ஒரு வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்திருந்தேன். இன்றைக்கு 500 பக்தர்கள் தங்கக்கூடிய ஒரு தங்கும் விடுதி இராமேஸ்வரத்தில் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பையும், இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் ஒரு C-Arm X-Ray Unit-க்கு ஏற்பாடு செய்தமைக்காகவும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் முழுமையான ஈடுபாட்டோடு செய்தால், வெற்றி நிச்சயம். அதை, ஒரு சமூக அர்ப்பணிப்போடு, உணர்வோடு செய்தால், அதுதான் தேசச் சேவை என்றார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை, முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்கின்ற இலக்கோடு, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்களாட்சித் தத்துவம் என்பது ஒரு நாட்டிலுள்ள மிக அதிகமானவர்கள், மிக அதிக நன்மைகள் அடைவதுதான். அதுதான் உண்மையான மக்கள் ஆட்சி. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏரோடும் சிறப்போடும் செய்கிறார்கள் என்பதற்கு அவர்களுடைய அறிவிப்புகளே சாட்சியென்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, அன்புப் புரட்சி, பண்புப் புரட்சி, பாசப் புரட்சி, அமைதிப் புரட்சி, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, கல்விப் புரட்சி, எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் தமிழக மக்கள் மனதிலே ஆனந்தப் புரட்சி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

"Go to the people, live among them, learn from them, love them and serve them" என்று நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய பெருந்தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த அடிச்சுவட்டில் தடம் பதித்து, வெற்றிகளைக் குவித்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், "மக்களால் நான், மக்களுக்காக நான்", என்ற குறிக்கோளுடன், தமிழக மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்து நிறைவேற்றிக்கொண்டிருப்பதை, நாங்கள் வேண்டுமானால் எதிரிலே பாராட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் இருக்கக் கூடிய சாமானிய, சாதாரண, ஏழை எளிய மக்களெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிப் பாராட்டுகிறார்கள் என்று

[திரு. ம. கலை அரசு] [2014 ஆகஸ்ட் 12

சொன்னால், தேர்தலின் வாயிலாக 37 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இனிவரும் காலங்களில், மாண்புமிகு அம்மா நினைப்பதுபோல், 234 தொகுதிகளிலும் பாராட்ட இருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம், ஒரு சாதாரண மனிதனால் உணர்ந்து செய்ய முடியாது. ஒரு தெய்வத் தாயால்தான் அதை உணர்ந்து செய்ய முடியும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் இந்தியாவில் தமிழகம்தான் முதன்மை மாநிலம் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பணியாளர்களின் அனைத்துத் தேவைகளையும் உணர்ந்து, அவர்களுக்குத் தங்குமிடம் போன்ற அனைத்து வசதிகளையும் செய்து தந்து, அவர்களுடைய குழந்தைகளுக்குத் தேவையானவற்றை நுணுக்கமாக ஆய்வு செய்து, ஆராய்ந்து பார்த்து, என்னவெல்லாம் தேவை என்பதை அறிந்து அவற்றையெல்லாம் வழங்கி, இன்றைக்கு அந்தத் துறையில் எந்தவொரு குறைபாடும் இல்லாமல், அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்து வந்து பணிபுரிபவர்களுக்கும் அங்கீகாரம் அளித்து, அவர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள் என்ற ஒரு சிறப்பான அறிவிப்பை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12] [திருமதி எஸ். விஜயதரணி]

எங்களுடைய கட்சியைச் சார்ந்த பட்டுக்கோட்டை தொகுதி உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள் வைத்த கோரிக்கையையும் ஏற்று, துறையின் பரிந்துரையையும் ஏற்று, பட்டுக்கோட்டை நகராட்சி பொன்விழா காணும் இந்த நேரத்தில் அதற்கென்று சிறப்பு நிதியை ஒதுக்கி, இந்த அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மாண்பை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த விஷயத்திலிருந்து நான் புரிந்துகொள்வது என்னவென்றால், நாங்கள் வைக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை மட்டுமல்ல; மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் நாங்கள் பேசுகின்ற பேச்சுகள் மற்றும் எல்லா விஷயங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, துறையின் பரிந்துரைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி, ஒவ்வொன்றையும் நுணுக்கமாக ஆய்வு செய்து, அறிவிக்கக்கூடிய ஒவ்வோர் அறிவிப்பையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான அறிவிப்புகளாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் மாற்று கருத்து இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பாகப் பெரிய இருக்கோயில்கள் முதல் சிறிய இருக்கோயில்கள் என அனைத்துக் கோயில்களுக்கும் திருப்பணிகள், மராமத்துப் பணிகள், ஓவியப் பணிகள் மற்றும் அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு நுணுக்கமாக ஆய்வு செய்து, அதற்கென்று நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள திருக்கோயில்களில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையும், அவர்களுக்குச் சம்பள விகிதங்கள் நிர்ணயிப்பது குறித்து, தெளிவான பார்வையோடு அவற்றை உயர்த்துவதற்காக எடுத்திருக்கிற நடவடிக்கையையும் நான் பாராட்டுகிறேன்.

மேலும், எங்களுடைய கோரிக்கைக்குச் செவி சாய்த்து, பத்மநாபபுரம் அரசு மருத்துவமனையில் C-Arm X-Ray கருவி மற்றும் அனைத்து மருத்துவ உபகரணங்களையும் வழங்கியுள்ளதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாய்-சேய் நலன் மற்றும் பராமரிப்பினைக் கருத்தில்கொண்டு, இன்றைக்குச் சமூக வளைகாப்பு என்ற ஒன்றை நடத்தும்போது,

[திருமதி எஸ். விஜயதரணி] [2014 ஆகஸ்ட் 12

பெண்களெல்லாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறார்கள் என்பதை என்னால் நேரில் பார்க்க முடிந்தது. நான் அந்த வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது, அதை உணர்ந்தேன். அதன் தொடர்ச்சியாக இலவசமாகப் பிரசவம், அதனைத் தொடர்ந்து 16 பொருட்களை உள்ளடக்கிய Baby Care Kit-ஐ அவர்களுடைய கையில் கொடுப்பதற்கு, குறிப்பாக அந்த sanitizer-ஐயும் சேர்த்துக் கொடுப்பதற்கு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்கு நுணுக்கமாக ஒவ்வொரு விஷயத்தையும் கருத்தில் கொண்டு, இவற்றையெல்லாம் நிர்மாணிக்கிறார் என்பதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது.

ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்திலே எவையான கலவை சாதங்களைக் கொடுப்பதற்கு அறிவித்தபோது, இவ்வளவு நுணுக்கமாக ஒவ்வொரு விஷயத்தையும் கருத்தில்கொண்டு, குழந்தைகளின் தேவைகளை, அவர்களுடைய ஆரோக்கியத்தை எல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு சிறப்பான ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று நான் அன்றைக்கே பாராட்டியிருந்தேன்.

இன்றைக்கு இந்த Baby Care Kit வழங்குவதைப் பார்க்கும்போது, அதிலே உள்ள அனைத்துப் பொருட்களும், ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும். அவை ஒவ்வொன்றும் குழந்தைக்குத் தேவையானது. தாய் என்ற முறையில் ஒவ்வொருவருக்கும் அது தெரிந்த விஷயம். அந்தத் தாய்க்கு என்ன தேவை, சுகாதாரம் எப்படி இருக்கவேண்டும் என்பதையெல்லாம் இந்த Baby Care Kit விளக்கிவிடும் என்பது என்னுடைய ஆழமான கருத்தாக இருக்கிறது. ஒரு Johnson Baby Care Kit வெளியில் விலைக்கு வாங்கவேண்டுமென்றால், குறைந்தது ரூ.500/-, ரூ.600/- செலவழித்துத்தான் வாங்க வேண்டும். ஆனால், அதில் ஐந்து பொருட்கள்தான் இருக்கும்; இதுபோன்று 16 பொருட்கள் இருக்காது. ஆகையால், இந்த 16 பொருட்கள் மட்டுமல்ல; அதிலே லேகியம் போன்றவற்றையெல்லாம் வைத்து, தாய்மார்களின் உடம்புக்கு என்ன தேவையோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நுணுக்கமாகப் பார்த்து, வழங்கியிருக்கிறார்கள் என்றால், உண்மையாகவே, அது பெண்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெறக்கூடிய ஒரு திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

எனவே, நிச்சயமாக பெண்கள் குறித்த ஒரு பெரிய பார்வை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அந்தப் பார்வையை ஒட்டுமொத்த தமிழ்நாட்டுப் பெண்களும் ஏற்றுக்கொண்டதன் ஓர் அடையாளமாகத்தான் 37 பாராளுமன்றத் தொகுதிகளில் அவர் வென்றிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த முறை அதிகமான பெண்கள் முன்வந்து வாக்களித்திருக்கிறார்கள். அதையும் நாம் பார்க்கவேண்டும். எனவே, பெண்களுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வைக்கக்கூடிய ஒவ்வொரு திட்டத்திற்கும், பெண்கள் மத்தியில் வரவேற்பு இருக்கிறது என்பதற்கு இந்தத் திட்டத்தை நான் உதாரணமாக இந்த நேரத்தில் எடுத்துக்கூற விழைகிறேன். அந்தவிதத்தில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த ஒவ்வொரு திட்டமும் மணியான திட்டங்கள். அவையெல்லாம் மக்களைச் சென்றடையும்போது, மென்மேலும் மக்கள் மனதாரப் பாராட்டுவார்கள். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எங்களைப் போன்றவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று அறிவித்தமைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த, நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு போலவத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker and my beloved Amma, in the last three years you have changed our lives in Tamil Nadu. To mention specially about the Health Care Department, this type of health care was not available to the poor. The cost was exorbitant in private hospitals, but you Amma, have now brought the state of the art equipment in all the Government hospitals and Medical College Hospitals thus providing the best medical care even to the poorest of the poor, treatment on par with all the private hospitals in the city as well as in the whole State. The only difference being when we go to the private hospitals, for the same care and treatment we need to pay the bill, but here Amma pays the bill for all of us. (Thumping of desks)

[Dr. (Tmt.) Nancy Ann Cynthia Francis] [2014 ஆகஸ்ட் 12

The sanctioning of the reverse osmosis water plant, sanctioning of the new medical College in Karur, the digital X-ray units, raising the stipend of the medical students who are pursuing their higher studies, the new hostels for the medical students and the nursing students and what was really the best of today's announcements was the "Amma Baby Care Kit". (Thumping of desks) Every little aspect that every mother would desire to provide for her baby but at some times not possible because of financial constraints, you, Amma have fulfilled this and completed their dreams. Only you, Amma could think of it because (Thumping of desks) when you think of the people of Tamil Nadu you always think of a holistic approach and that is why you are special, you are special Amma, (Thumping of desks) and god bless you. Thank you for this opportunity.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்புகள் முழுவதும், உழைக்கின்ற வர்க்கத்தின் அடிப்படையான கோரிக்கைகளை உள்ளடக்கி, அதிலும் குறிப்பாகக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையில், பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, 127 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-35

தொழிலாளர்கள் பணியின்போது நிகழும் விபத்தில் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு இதுவரை வழங்கி வந்த உதவித் தொகையை 1 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக 5 இலட்சம் ரூபாயாக

2014 ஆகஸ்ட் 12] [திரு. எம். ஆறுமுகம்]

உயர்த்தப்பட்டுள்ளதாக நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களின் அடிப்படையான நலன் ஆகும், அப்படி யாரும் இறக்கக் கூடாது, அது மாண்புமிகு முதலமைச்சருடைய நோக்கம் அல்ல. ஆனால், அப்படிப்பட்ட விபத்து ஏற்பட்டால் அந்தக் குடும்பத்தினரைக் காலம் முழுவதும் பாதுகாக்கின்ற வகையில், உதவித் தொகையை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், வந்தோரை வாழ வைக்கும் தமிழகம் என்று சொல்லக்கூடிய தமிழகத்தில்-Migration of Labourers to Tamil Nadu-வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வரக்கூடிய தொழிலாளர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களையும் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்களுடைய குழந்தைகளையும், குடும்பத்தினரையும் பாதுகாக்கக்கூடிய வகையில், அவர்களுக்கு அனைத்து நலன்களும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அறிவித்திருக்கின்ற திட்டங்கள் பாராட்டுக்குரியன. வட மாநிலங்களில் இருக்கக்கூடிய மக்கள் அந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய அரசைச் சிந்திக்க வைக்கும் நடவடிக்கையாக இந்த அறிவிப்புகள் இருப்பதை உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பாலங்கள் கட்டுவது, சாலைகளை அமைப்பது, பெரிய, பெரிய கோபுரங்களைக் கட்டுவது போன்ற கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுவருவது கட்டுமானத் தொழிலாளர்கள்தான். அந்தப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சிறப்பான முறையில், அவர்களது குழந்தைகளைப் பாதுகாக்கக் கூடியவகையில், தொழிற் தகராறு சட்டம் (Industrial Disputes Act), Factories Act, இன்னும் இருக்கக்கூடிய பல்வேறு சட்டங்களின்கீழ் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க இடவசதி இல்லாதசூழ்நிலையில், Creche-ன்மூலம் அந்தக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு என்ன உணவு வழங்க வேண்டும் என்ற முறையையும்கூட இதில் சொல்லியிருப்பதை நாங்கள் இந்த நேரத்தில் பாராட்டுகிறோம்.

முட்டை, கடலைப் பருப்பு, பச்சைப் பயறு, பால் போன்றவை அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பதைப் பாராட்டுகிறோம். அந்தக் குழந்தைகளுக்கு அடிப்படையில் கிடைக்க வேண்டிய வசதியைச் செய்திருப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதற்காகச் செய்திருக்கும் அறிவிப்புகளையும் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தற்போது இங்கு வரவில்லை. அவர் இங்கு இருக்கிறாரா, இல்லையா என்பது முக்கியமல்ல. இருந்தாலும்கூட, பட்டுக்கோட்டை நகராட்சியின் பொன்விழாவிற்கென்று சிறப்பு நிதியாக 25 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த நகராட்சியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் அறிவித்திருப்பது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியது.

இந்து சமய அறநிலையத் துறை சார்பான அறிவிப்பில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வளமான கோயில்களைப் பற்றிப் பிரச்சினையில்லை. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், tribals பெரும்பான்மையாக இருக்கக்கூடிய பகுதியிலுள்ள கோயில்கள் இன்றைக்கும் சீர்படுத்தப்படாமல் இருப்பதைப் புரிந்துகொண்டு, அறிந்துகொண்டு, அந்தக் கோயில்களில் பூஜைகள் நடத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்புச் செய்வதற்குமான திட்டங்களை அறிவித்திருப்பது. கிராமங்களில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின (tribals) மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலுள்ள கோயில்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாகவே நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 50,000 ரூபாய் ஒதுக்கி, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது பாராட்டுதலுக்குரியது. அதே நேரத்தில் இந்தக் கோயில்களில் பணிபுரியக்கூடிய பணியாளர்களின் கோரிக்கைகளை முன்வைத்து நாங்கள் அடிக்கடி போராடியிருக்கிறோம். 820 நபர்கள் இந்தக் கோயில்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களின் பணிகள் வரன்முறைப்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பதும், 8,184 பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டு, பணி வரன்முறை செய்யப்படும் என்ற அறிவிப்பும், அந்த ஆலயங்களில்

2014 ஆகஸ்ட் 12] [திரு. எம். அறுமுகம்]

பணியாற்றக்கூடிய நிரந்தரமற்ற அல்லது தொகுப்பூதியத்தில் பணியாற்றக்கூடிய அந்தப் பணியாளர்களின் வயிற்றில் பால் வார்த்ததுபோல் ஆகும் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, கரூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். மருத்துவமனைகளில் வசதியாக இருப்பவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். Tata, Birla போன்றவர்களின் குடும்பத்தினர் பணம் கட்டி பெரிய மருத்துவமனைகளில் பிரசவத்திற்காகச் சேர்த்து மருத்துவம் செய்துகொள்பவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருப்பது தரும ஆஸ்பத்திரி பற்றியது. தரும ஆஸ்பத்திரி என்பது ஏழைகள் போய் வைத்தியம் பார்க்கக்கூடிய அரசு மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) டாட்டாவும் போக முடியாது, பிர்லாவும் போக முடியாது, வசதி படைத்தவர்கள் யாரும் போக முடியாது. அரசு மருத்துவமனைகளில் பிரசவத்திற்காகச் செல்லக் கூடியவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள், ஏழை, எளிய மக்கள், சாதாரணத் தொழிலாளி வர்க்கத்தினருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் தரும ஆஸ்பத்திரிகளுக்கே செல்கிறார்கள். அத்தகைய தரும ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரசவம் முடிந்து, குழந்தை பிறந்ததற்குப் பிறகு அவர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற 16 வகையான பொருட்களை உள்ளடக்கிய Baby Care Kit தங்களுக்குக் கிடைக்கும் என்று அவர்கள் கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். இன்றைக்கு குழந்தைகள் பராமரிப்பிற்கான 16 வகையான பொருட்கள் உள்ளடங்கிய பெட்டகம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மருத்துவமனைக்கு வசதியில்லாதவர்கள்தான் போகமுடியும். தமிழகத்தில் வறுமைகோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், உழைக்கும் வர்க்கம் ஆகியோர் பெரிய, பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வழியில்லாதவர்கள் அரசு மருத்துவமனைக்குச் சென்று குழந்தைகள் பெறுவோருக்கு இந்த திட்டத்தை அறிவித்திருப்பது பாராட்டுதலுக்குரியது, வரவேற்கக்கூடிய ஒன்று. இது இராமபுரங்களில் இருக்கக்கூடிய

[திரு. எம். ஆறுமுகம்] [2014 ஆகஸ்ட் 12

ஏழையெளிய மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பை பெறும் என்பதை மட்டும் சொல்லி நான் வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலாளர்கள், ஆலய ஊழியர்கள் ஆகியோர்களுக்கு நாங்கள் கேட்டு வந்த கோரிக்கைகள் இன்று அறிவிப்பாகத் தீர்வு பெற்றிருக்கின்றது. கட்டுமானத் தொழிலில் ஈடுபடுவது மிகவும் சிரமமானது, உடலுக்குப் பாதகமானது என்று கருதுகிற அந்த நிலையைக் கணக்கில்கொண்டு, மரணம் போன்ற துயரச் சம்பவம் நடக்கக்கூடாது, அப்படி ஒருவேளை நடந்துவிட்டால் அவர்களுடைய குடும்பம் நிர்க்கதியாகும் என்ற நிலை இருந்தது. எனவே, கட்டுமானத் தொழிலாளர்கள் இறந்து விட்டால் 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. கட்டுமானத்தில் ஈடுபடக்கூடிய தொழிலாளர்கள் அந்தத் கட்டடத்திலேயே படுத்துத் தூங்கும் நிலை இருக்கின்றது. அப்படிக் கட்டடத்திலே படுத்து உறங்கும் நிலை இருப்பதால்தான், பல்வேறு நேரங்களில் விபத்துகள் ஏற்பட்டு உயிர் இழப்பும் ஏற்படுகின்றது. அதற்காக ரூ105 கோடி செலவில் தங்கும் இடமும், பெரிய தொழிற்சாலைகளில் இருப்பதைப்போன்று creche போன்ற பல வசதிகளையும், குழந்தைகளின் படிப்புக்கு என மற்ற வசதிகளையும் செய்து கொடுத்திருப்பது அதில் இருக்கும் ஒரு சிறப்பு அம்சமாகும். தமிழகத்தை வாழ வைக்க வெளி மாநிலங்களிலிருந்து வருகிற அந்தத் தொழிலாளிகள் கட்டுமானத் தொழிலில் பெருமளவிற்கு வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையில் அவர்களை நல வாரிய உறுப்பினர்களாக்குவது சிறப்பான முடிவு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல அரசு மருத்துவமனைகளிலே சேயின் நலமும், தாயின் உடல் வளமும், மருத்துவமனைகளின் மேம்பாடும், கோயில்களில் பக்தர்களுக்கான வசதி என எல்லா வகைகளிலும் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மகிழ்ச்சிக்குரியவை. இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பில் அனைத்தையும் வரவேற்கிறேன். நன்றி.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 110-விதியின்கீழ் நான்கு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரிய கோயில்கள் முதல் சிறிய கோயில்கள் வரை புனரமைப்பு செய்வதற்கும், தொழிலாளிகள் குடும்பத்திற்கு வழங்கப்படுகின்ற நிதி உதவியை உயர்த்தியதற்கும், வெளி மாநிலங்களிலிருந்து புலம் பெயர்ந்த தொழிலாளர்களையும் நல வாரியத்தில் பதிவு செய்வதற்கும், கரூரிலே மருத்துவக் கல்லூரி அமைப்பதாக அறிவித்த அறிவிப்பிற்கும், பொன் விழா காணுகின்ற பட்டுக்கோட்டை நகராட்சிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கியதற்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியின் சார்பில் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய ஒளி விளக்கு மாண்புமிகு அம்மா தங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அன்றாடம் காத்து வருகிறது தொழிலாளர்களுடைய நலன்கள். அதனால் தொழிலாளர்கள் அடைகின்றார்கள் பல்வேறு பலன்கள்! தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகின்றது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு! மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்தி ஒலிக்கிறது தொழிலாளிகளின் சுவாச மூச்சு! கூட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்க்கை வளம்பெற தூங்கும் அறைகள்! நடமாடும் மருத்துவமனைகள்! அங்கன்வாடிகள் என 127 கோடி ரூபாய்க்கு மிகையான சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களை அறிவித்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு! இதுவே, தொழிலாளர்களுக்குக் கிடைத்த தூய பரிசு! தொழில்களை வளப்படுத்துவது தொழிலாளர்களின் உழைப்பு! தொழிலாளர்களை வளப்படுத்துவது மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பு! மாண்புமிகு அம்மா அவர்கள் தொழிலாளர்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள்.

[திரு. ப. மோகன்] [2014 ஆகஸ்ட் 12

தொழிலாளர்களுடைய கலங்கரை விளக்காக மாண்புமிகு அம்மா நீங்கள் விளங்குகிறீர்கள் என்பதை அனைத்துத் தரப்பினரும் இன்றைக்குப் பாராட்டுகின்ற வகையில் தொழிலாளர் நலத் துறைக்குப் பெருமை சேர்த்த தாயே! கட்டுமானத் தொழிலாளர்கள் சார்பாகவும், தொழிலாளர்கள் சார்பாகவும், தங்கள் திருவடிகளைப் பணிந்து வணங்கி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒங்கு புகழ் தமிழ் மண்ணை உய்விக்கும் உயிர்மூச்சே! ஒப்பிட்டுச் சொல்ல முடியா உலகத்து அதிசயமே! நித்தமெல்லாம் தமிழகத்தைச் சிந்தையிலே சுமக்கின்ற செந்தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி) வீணர்கள் பிதற்றலையும், வீண்பழி சுமத்தலையும் தூள்தூளாக்கி நேர்த்தில் விளைந்திட்ட நியாயத் திருவுளமே! (மேசையைத் தட்டும் ஒலி) எல்லார்க்கும் அல்லல் போக்க, இல்லார்க்கு இன்னல் தீர்க்க, அல்லும் பகலும் நில்லாது சுழல்கிற அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையின் பிடியில் கிடந்த தமிழ் மண்ணைச் செழுமையின் மடியில் இடத்திய ஆற்றல்மிகு பேரரசே! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா உங்களின் ஒவ்வொரு கையெழுத்தும் தமிழ் மண்ணின் தலையெழுத்தை மாற்றுகின்ற ஆயுத எழுத்து! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் இதயத்து குரல் ஒலியில் ஒலிக்கின்ற விதி எண் 110, வாடுகின்ற ஏழைகளுக்கும், வருங்காலத் தலைமுறைக்கும் பூரண ஒளியேற்றும் புரட்சித் தலைவியின் திருமந்திரம்! (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ, மாணவியர், பொதுமக்கள் நலன் காக்க கரூர் அரசு மருத்துவக் கல்லூரி, உழைப்பாளர், நெசவாளர், விவசாயப் பெருமக்கள் துயர் துடைக்க மாசு இல்லாத, சுற்றுச்சூழலை உருவாக்க 700 கோடியில் திட்டம் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத் திருமகளே! தேமதுரக் காவியமே! நற்றமிழர் பூமிக்கு நாங்கள் பெற்று வந்த பெருவரமே! (மேசையைத் தட்டும் ஒலி) இப்பூமி உள்ள காலம் வரை, கரூர் மாவட்ட மக்கள் நாவாற நன்றி உரைப்பார்கள், என் உடல் கூட்டில் உயிர் உள்ள காலம் வரை, என் உடலில் ஓடுகின்ற உதிரத்தில் ஊடு உள்ள காலம் வரை, மாண்புமிகு அம்மா தங்கள் திருவடித் தொழுது நன்றி உரைப்பேன் தாயே! நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுயுகம் படைத்திடும் புதுமைத் தாய்! புதுமைகள் புகுத்திடும் புரட்சித் தாய்! நல்லார்க்கும் இல்லார்க்கும் நன்மையே செய்திடும் புண்ணியத் தாய்! சதிகளைச் சதிராடும் சங்கத் தாய்! விதிகளை வீழ்த்திடும் வீரத் தாய்! துணிவுமிக்க நெஞ்சுரத் தாய்! துயர் துடைக்கும் உள்ளத் தாய்! தாய்மையிலே தாய்மை கொண்ட நோக்கத் தாய்! தமிழகத்தை காத்து நிற்கும் தன்னிகரில்லா தங்கத் தாய் எங்கள் அன்புத் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்குகின்றேன்.

விதி 110 தமிழக மக்களுக்கு வரப்பிரசாதம், எதிர்கட்சிகளுக்கோ சிம்ம சொப்பனம். மக்களின் எதிர்பார்ப்புகளை எல்லாம் சுடுசெய்யும் வகையில் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒவ்வொரு நாளும் விதி 110-ன்கீழ் அற்புதத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பட்டுக்கோட்டை நகராட்சியின் பொன் விழா ஆண்டை முன்னிட்டு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி இருக்கிறார்கள். சிறப்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். இத்தகைய அதி அற்புதத் திட்டங்களை தினந்தோறும் அள்ளித் தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மக்கள் மனதார வாழ்த்துகிறார்கள், பாராட்டுகிறார்கள். துறை சார்பான நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே பணிந்து, சமர்ப்பிக்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கும், இங்கும், எங்கும் தமிழகம் உச்சரிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களே, தங்கள் பாதம்

[திரு. பூ செந்தூர் பாண்டியன்] [2014 ஆகஸ்ட் 12

பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்துக்களின் புனித இடம் காசி. இஸ்லாமியர்களின் புனித இடம் மெக்கா. கிறிஸ்தவர்களின் புனித இடம் ஜெருசலம். தமிழர்களின் புனித இடம் தாயே நீங்கள் குடியிருக்கும் வேதா நிலையம். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதையே நினை, நல்லதே நடக்கும், தொண்டு செய், மேலான நிலையை அடைவாய் என்ற வார்த்தைகளுக்கு ஆதாரமாய் இள்ளிக் கொடுப்பவர்கள் மத்தியில் இந்து சமய அறநிலையத் துறைக்கென்று அள்ளிக் கொடுத்த அட்சய பாத்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழ்மையும் இல்லாமையும், கல்லாமையும் நீக்கி தமிழகத்தைத் தன்னுடைய மதிநுட்பத்தால் இன்று ஏற்றம் பெறச் செய்த மாதரசியே! தாங்கள் வழங்கிய அறிவிப்புகளில் எதற்கு நன்றி சொல்வது என்று தெரியாமல் நா தடுமாறுகிறது. அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளீர்கள். குட முழுக்கு திருப்பணிக்கு ஆணையிட்டுள்ளீர்கள். கோயில்களில் நித்திய பூஜை நடைபெற உபகரணங்கள் வழங்கியுள்ளீர்கள். பக்தர்களுக்குப் பல்வேறு வசதிகளை வழங்கியுள்ளீர்கள். திருக்கோயில் பணியாளர்களின் பாதுகாவலராக உள்ளீர்கள். இப்படிச் சகலருக்கும் சகலமுமாய் மனிதநேயத்தின் மறுவடிவாய் இருக்கும் தாயே! தமிழகத்தைப் புண்ணியபூமியாக மாற்றிய தங்களுக்கு இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் சார்பாக கோடானுகோடி நன்றியினைத் தங்கள் பாதங்களில் பணிந்து, சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன். "ஆராரோ ஆரிரரோ, யார் அடித்தார் சொல்லி அழு, மாமன் அடித்தாரோ மல்லிகைப்பூச் செண்டாலே, அத்தை அடித்தாரோ அரளிப்பூச் செண்டாலே, யார் அடித்தார் சொல்லி அழு", பொதுவாக இப்படித்தான் இருக்கும் வழக்கமான தமிழகத்தின் தாலாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு 110 விதியின்கீழே அறிவித்ததற்குப் பின்னாலே, இனி தமிழ் மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு

2014 ஆகஸ்ட் 12] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

குழந்தைக்கும் தாலாட்டு எப்படி இருக்கும் என்றால், "ஆராரோ ஆரிரரோ யார் கொடுத்தார் இத்தனையும், ஆராரோ ஆரிரரோ யார் கொடுத்தார் இத்தனையும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆராரோ ஆரிரரோ அம்மா கொடுத்தார் அத்தனையும் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா கொடுத்தாரோ அன்புப் பரிசாக, ஆசையாய்த் தந்தாரோ அத்தனையும் உனக்காக, அம்மா கொடுத்தாரோ அன்புப் பரிசாக, ஆசையாய்த் தந்தாரோ அத்தனையும் உனக்காக, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா துணை இருக்க அழாதே கண்ணுறங்கு, ஆராரோ, ஆரிரரோ" என்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாக் குடும்பங்களிலும் மகிழ்ச்சித் தாலாட்டு ஒலிக்கும் அளவிற்கு அரசு மருத்துவமனைகளில் பிறக்கக்கூடிய அத்துணை குழந்தைகளுக்கும் Amma Baby Care Kit என்று சொல்லக்கூடிய அற்புதமான "அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்" வழங்கப்படும் என்று அறிவித்த எங்கள் பாசப் பெட்டகமே! மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில் இன்றைக்கு முறையாக, முழுமையாக உயர்ந்த நோக்கிலே தனியாருடன் இணைந்து Dialysis, Diabetes, Diagnosis மையங்கள், C.T., M.R.I. உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்படும் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை அறிவித்துள்ளீர்கள். கரூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் அறிவித்து, தாயுள்ளத்தோடு, கருணையோடு பயிற்சி மருத்துவ மாணவ, மாணவிகளின் நலன் கருதி ரூ.28 கோடியே 74 இலட்சம் செலவில் பயிற்சி உதவித் தொகையை உயர்த்தியுள்ளீர்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் டவர் 1, டவர் 2 என்ற அடுக்குமாடிக் கட்டடங்களும் எழிலார்ந்து இன்றைக்கு சேவை புரிகின்றன. மீண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய வரலாற்றுச் சாதனையில் இன்னொரு மைல் கல்லாக 50 கோடி ரூபாய் செலவில் டவர் 3 என்ற இன்னொரு அடுக்குமாடிக் கட்டடத்தை கட்ட அறிவிப்புச் செய்துள்ளீர்கள். மொத்தம் 380 கோடி ரூபாய் அளவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையில் திட்டங்களை அறிவித்த மருத்துவத்தின் மகத்துவமே! தாயே! தங்களுடைய பொற்பாதங்களில் பணிந்து வணங்கி மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்றின் குரலும், கன்னித் தமிழும், சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கருணை தேடி அலையும் உயிர்கள் உருகும் வார்த்தை அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒட்டுமொத்த தமிழர்களுக்கு அம்மாவாக, தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் பட்டுக்கோட்டை நகராட்சி பொன் விழாவிற்கு 25 கோடி ரூபாயும், கும்பகோணம் மகா மகத் திருவிழாவையொட்டி சுற்றி இருக்கின்ற சிறு கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்வதற்கு நிதி ஒதுக்கியும் ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றிகளைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜப்பானிய மொழியிலே ஓய்வு என்ற சொல்லே கிடையாது என்பர். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஓய்வொரு நாளும் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து உழைத்துக்கொண்டிருப்பவர். (மேசையைத் தட்டும் ஒலி) சிரிக்கும் ஏழை முகம் காண, அவர்தம் சிந்தும் கண்ணீர் நிலை மாற, வறுமை போக்கும் திட்டங்கள் பல தந்து, உழைப்போரின் களைப்பை நீக்கி, கவலையைப் போக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், கட்டுமானத் தொழிலாளர் மேம்பாட 127 கோடி ரூபாய் மதிப்பிலான அறிவிப்புகளை இன்றைக்குச் செய்துள்ளார்கள்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற பாடலை எழுதிய பட்டுக்கோட்டையார் விவசாயம், மாடு மேய்த்தல், இட்லி வியாபாரம், அரசியல்வாதி, பாடகர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவராக இருந்தாலும், நம் நினைவிலே நிற்பது பாட்டுக்கோட்டையாராகத்தான். பட்டுக்கோட்டைக்குச் சிறப்பு உதவித் தொகையாக 25 கோடி ரூபாய் அறிவிப்புச் செய்துள்ளார்கள் பட்டினத்துக் கோட்டையார், செயிண்ட் ஜார்ஜ் கோட்டையார், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-55

மாண்புமிகு அம்மா, தமிழக மக்கள் உயர வேண்டும் என்று நோன்பிருந்து, செல்வத்தைத் தரும் தலைக்கமியாக, உணவுப்

பொருட்களை அள்ளித் தரும் தான்யலட்சுமியாக, துணிவைத் தரும் தைரியலட்சுமியாக, தேர்மையைத் தரும் விஜயலட்சுமியாக, கருணை காட்டும் கஜலட்சுமியாக, செழிப்பைத் தரும் சந்தானலட்சுமியாக, கல்வி தரும் வித்யா லட்சுமியாக, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியைத் தரும் ஜெயலட்சுமியாக, அனைத்து வசதிகளையும் திருக்கோயில்கள் பெற அறிவிப்புகள், இலுஇலுப்பை பொம்மைகள் உட்பட "அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம்" வழங்குதல் என சுகாதாரத் துறையில் பல்வேறு அறிவிப்புகளைச் செய்து அனைத்தையும் வாரி வாரி வழங்கும் ஐஸ்வர்யலட்சுமியாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவையின் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 2 மணியோடு மானியக் கோரிக்கையை முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் இன்று எடுத்துக்கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இன்றைக்கு நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். சத்துணவுதானே? உட்காருங்கள் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இனமும் எடுத்துக்கொண்டேன் அல்லவா? (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு நிறைய அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறோம். அதுகுறித்து. . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். சத்துணவுத் துறை குறித்த பிரச்சினைதானே, உட்காருங்கள் அதனை நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, முனைவர் ஜவாஹிருல்லா? சொல்லுங்கள்.

[2014 ஆகஸ்ட் 12

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து ரம்ஜான் விடுமுறைக்குப் பிறகு கேரளாவிலிருந்து சென்னை வருவதற்கு . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்ன, டாக்டர் கிருஷ்ணசாமி? சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* அதெல்லாம் இல்லை. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்ன, கிருஷ்ணசாமி?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75-க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இல்லை. சத்துணவுத் துறை குறித்து சொல்லுங்கள். இல்லை என்றால் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

(ஆ) அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் ஊதிய உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, திரு. சவுந்தரராசன்? சொல்லுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மற்றும். . . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள், விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் செல்லிவிட்டீர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நேரம் இல்லை. 2 மணிக்குள் மானியக் கோரிக்கையை முடித்தாக வேண்டும். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள் நேற்றைய தினம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்துதான் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) திரு. மோகன்ராஜ், சத்துணவுப் பணியாளர் பிரச்சினைக் குறித்து எழுப்பியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதுதான் பதிவாகிவிட்டதே! (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள். 2 மணிக்குள் மானியக் கோரிக்கை விவாதத்தை முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் ஒன்றும் சொல்ல முடியாது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேரம் இல்லை; அதெல்லாம் எதுவும் இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்)

(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. அ. அல்லம் பாஷா அவையிலிருந்து வெளியேறினர்)

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தொடர்ந்து இந்தக் கோரிக்கைகளை மன்றத்திலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியிலும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். சத்துணவு அங்கன்வாடி துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு சங்கங்கள்

[திருமதி பா. வளர்மதி] [2014 ஆகஸ்ட் 12

இருக்கின்றன. அதிலே குறிப்பிட்ட சில சங்கங்களைச் சேர்ந்தவர்கள் சட்டசபை கூட்டத்தொடர் நடக்கும்போது தொடர்ந்து இதுபோன்ற போராட்டத்தில் ஈடுபடுவது என்பதை ஒரு சம்பவமாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 54,439 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. 42,619 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அவர்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கை பென்ஷன் வழங்க வேண்டும் என்பதுதான். இதற்கு முன்பு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரூ.700/-, ரூ.600/-, ரூ.500/- என்றுதான் ஓய்வூதியம் இருந்தது. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள், பல்வேறு சங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்துச் சொல்கின்றபோது, முதியோர் உதவித் தொகை ரூ.1,000/-மாக இருக்கின்றது. எனவே, இவர்களுக்கு ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்டமாத்திரத்திலேயே ஓய்வூதியத் தொகையாக ரூ.1000/- வழங்குவதற்கு உடனடியாக உத்தரவிட்டார்கள். அடுத்து, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வேண்டும் என்று கேட்டார்கள். அந்த விடுமுறையைக்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் மறுப்பேதும் சொல்லாமல் வழங்கியுள்ளார்கள். ஞாயிற்றுக்கிழமை பயன்படுத்தக்கூடிய பொருட்களை சனிக்கிழமையே தந்துவிட வேண்டும் என்று சொல்லி, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளித்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1-00

ஊதிய உயர்வு என்பதுதான் இவர்கள் கேட்கக்கூடிய முக்கியமான கோரிக்கை. இந்த ஊதிய உயர்வு என்பது இப்போது உடனடியாகச் செய்து தர வாய்ப்பு இல்லாத சூழ்நிலை. காரணம் என்னவென்றால், சத்துணவு ஊழியர்களும், அங்கன்வாடி ஊழியர்களும் பகுதி நேரப் பணியாளர்கள்தான். இவர்களைப் பகுதி நேரப் பணியாளர்களாகத்தான் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கமே வழிகாட்டுதல் முறையில் சொல்லியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக உச்ச நீதிமன்றமும் அறிவுறுத்தியிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது; இதுபோன்ற கோரிக்கையைச் சொல்வதற்கு

2014 ஆகஸ்ட் 12] [திருமதி பா. வளர்மதி]

உங்களுக்கு உரிமையிருக்கிறது. எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதை நிறைவேற்றுவதற்கு, நிச்சயமாக துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாராது வந்த மாமணியாய், சோராது உழைக்கும் திருமகளாய், தமிழகம் பெற்றிட்ட தவமகளாய், இமைப்பொழுதும் துஞ்சாத இறைமகளாய், புண்ணிய பாரதத்தின் பூமகளாய், ஏரோட்டும் உழவர்தம் போராளியாய், காலம் கருதாது பணி செய்யும் ஞானச் சுடராய், முறைசெய்து காப்பாற்றும் மன்னவராய், முத்தமிழ் ஞானம் கொண்ட வித்தகராய், எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் தீர்க்கமாய், பன்மொழிப் புலமை சார்ந்த பரிமாணமாய், தமிழினத்தின் இனமானம் பேணும் அரணாய் விளங்கும் அன்னையே, ஏற்றத்தாழ்வை இட்டு நிரப்பும் தெளிவு, அன்னை தேசத்தை கலவரமில்லா பூமியாக்கி அமைதிப் பூங்கா ஆக்கிடும் துணிவு, கல்லாமை, இல்லாமை மாய்க்கின்ற விசாலமான அறிவு, வல்லரசும் வந்து வாழ்த்திப்போகிற வணக்கத்திற்குரிய செறிவு, வாடி நிற்கும் மக்களின் வாட்டம் போக்கும் பரிவுகொண்டு, தமிழகத்தை காத்து நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது வணக்க மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக்

@ 476 முதல் 479 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 11,336.92 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இதில், 9,748.33 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 1,588.59 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. மத்திய அரசின் உதவிபெறும் திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதால் அத்திட்டங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்குச் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும். இத்துடன், 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

3. மத்திய அரசின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய அரசின் உதவிபெறும் 66 திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதியை இதுவரை சிறப்புச் செயலாக்க முகமைகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டதற்குப் பதிலாக மாநில அரசின் தொகுநிதி மூலமாக வழங்குவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே மத்திய அரசின் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதால், இத்திட்டங்களுக்காகப் போதுமான 2,873.48 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதி இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் திட்டச் செயலாக்க முகமைகளுக்கு முறையாக விடுவிக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

4. மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவியாக 350 கோடி ரூபாய் மற்றும் மாணவ, மாணவியருக்குப் பேருந்துப் பயணக் கட்டணச் சலுகைகள் வழங்குவதால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையாக 125 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உத்தேசித்துள்ளது. மேலும், அறு மாநில போக்குவரத்துக் கழகங்களுக்குக் குறைந்த காலக் கடனாக

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 45.40 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் 520.40 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-05

5. ஐவதூர்வால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கம்-நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ், கட்டமைப்பு வசதிகளுடன் குடியிருப்புகள் கட்டுவதற்கு, பெரும்பாக்கம் நிலை-1 மற்றும் நிலை-2 திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதலாக 170.72 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இக்கூடுதல் தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. ராஜீவ் காந்தி சாலையையும், பழைய கடற்கரைச் சாலையையும் இணைக்கும் வகையில் 204.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீலாங்கரை அருகே சாலை அமைக்கவும், அதற்காக பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் ரூ.1000/- சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

7. செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகள் சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகள் மற்றும் இதர நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்க வழிவகை முன்பணமாக 62.99 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. பெரும்பாக்கம், திருமங்கலம், திருவேற்காடு ஆகிய இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கவும், மாம்பலத்தில் அமைந்துள்ள துணை மின் நிலையத்தை மேம்படுத்தவும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 84.65 கோடி ரூபாய்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில், 6 முதல் 36 மாத கால வயதுடைய குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குக் கூடுதல் ஊட்டச்சத்து உணவு வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதலாக 133.85 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இக்கூடுதல் தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. கரும்புக்கான நிலுவைத் தொகையை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 113.79 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2014-2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	3	..	..
3	நீதி நிருவாகம்	29,57	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	5	1	..
5	வேளாண்மைத் துறை	409,11,64	3	..
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	21,00,33	1	..

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1,77,02	1	..
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1	..	43,36,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	14,65	..	..
14	எரிசக்தித் துறை	..	84,65,28	..
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2	..	..
16	நிதித் துறை	11,44	..	..
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1	..	68,54,53
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,024,16,83	..	..
20	உயர் கல்வித் துறை	4	2	..
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	..	1,97,06	..
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	20,50,81	1	..
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	1	..
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	2	45,07,82	..
27	தொழில் துறை	1	37,50,00	113,79,01
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1,33,02	3	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	10,36,15	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	6,42,07	1	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	180,97,07	37,16,19	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2	..	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	1	..	..
38	பொதுத் துறை	12	..	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	12,61	13	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	12,29	12	..
41	வருவாய்த் துறை	58,44	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	5,699,03,66	622,95,73	..
43	பள்ளிக் கல்வித் துறை	1,902,48,72	1	..
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	1	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	149,76,01	47,36,02	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	..	..
47	இந்து சமயம் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1	..	..
48	போக்குவரத்துத் துறை	125,00,00	350,00,00	45,40,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	1,81,39	..	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	189,26,65	..	..
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	..	3,63,00	..
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	99,83	8,00,03	..
	பெருமொத்தம்	9,746,39,59	1,236,31,53	271,03,54

6. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை
(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்
(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் துணைச்சாரவை
(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை
(உ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(ஊ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.456,18,88,000/-, மூலதனக்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

கணக்கில் ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2327, திரு. பிவி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2970, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3309, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3461, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3643, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 462, திரு. கு. நல்லதம்பி.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாக்காளர் அடையாள அட்டையில் பெயர் மற்றும் முகவரி மாற்றம் போன்ற விவரங்களைப் பதிவு செய்ய பொது மக்கள் நீண்ட நாட்கள் அலைய வேண்டிய சூழல் நிலவுவதால், இதனை முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1056, திரு. சி.எச். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்களில் முன்னுரிமை புரோட்டக்கால் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர் இடம்பெறுவதோடு சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1869, திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2796, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு விழாக்களில் அமைச்சர் பெயர் மட்டும் போட்டு, சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடாமல் இருப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3197, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3704, திரு. அ. சவுந்தரராசன்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களிடம் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு ஒய்வு பெற்ற அதிகாரிகள் செலுத்தும் அதே தொகையைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.456,18,88,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,00,01,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

பிற்பகல் 1-10

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2328, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2638, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3383, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3615, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1706, திரு. எஸ். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினரின் உதவியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1865, திரு. அ. அல்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2587, திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றக் கூட்டங்களை நேரடியாக மக்கள் பார்க்கும் வண்ணம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2719, திரு. எம். ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2798, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கேபிளை சட்டமன்ற விடுதி வளாகத்தில் செயல்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2947, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமையில் வாடும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3221, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3462, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலக்கியப் பேராசான் தோழர் ஜீவானந்தம் அவர்களின் திருவுருவப் படத்தை மாநிலச் சட்டமன்ற மாடத்தில் இடம் பெறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,10,21,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2329, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2639, திரு. ர.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3495, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 339, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டங்களில் அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள், ஆய்வுப் பணிகளை ஆய்வு செய்ய வரும் இடங்களிலும், ஆய்வுக் கூட்டங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1057, திரு. சி.எச். சேகர்.

2014 ஆகஸ்ட் 12]

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் அளிக்கும் விழாவில் பட்டம் பெறும் அனைவருக்கும் தமிழக ஆளுநர் கையால் 155-வது பட்டமளிக்கும் விழாவில் பட்டம் வழங்கப்படவில்லை. ஆகையால், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் அனைவருக்கும் ஆளுநர் கையால் பட்டம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3195, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3640, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசின் நடவடிக்கைகளை உடனுக்குடன் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,10,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.90,80,24,000/-

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2330, திரு. பிவி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3065, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3310, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3468, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3592, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2014 ஆகஸ்ட் 12] [திரு. ப. டில்லி பாபு]

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1867, திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1980, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அரசு ஊழியர்களுக்குப் புதிய ஓய்வூதியத் திட்டத்தை மாற்றி பழைய ஓய்வூதியம் (அரசு வழங்கும் ஓய்வூதியம்) வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2792, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் அரசு பொது மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அளவில் அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கட்டடம் விரைவில் கட்ட போதிய நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2858, திரு. சி.எச். சேகர்.

[2014 ஆகஸ்ட் 12

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமைச் செயலகத்தில் நிதித் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.878,97,98,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,80,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3199, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

(உ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2331, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2590, திரு. க. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2014 ஆகஸ்ட் 12] [திரு. சு. குணசேகரன்]

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3191, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3542, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2637, திரு. ரா.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3308, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3589, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 285, திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 463, திரு. கு. நல்லதம்பி.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில், அரசுப் பள்ளிகளுக்கு வழங்கும் சலுகைகளைப்போல் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் அதன் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக்கொள்ள அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1123, திரு. சி.எச். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பசுமை வீடுகள் திட்டத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்யும் குழுவில் சட்டமன்ற உறுப்பினரையும் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2800, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2014-2015 ஆம் ஆண்டிற்கான பிரிவு பகுதி II திட்டத்தின்கீழ் விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட நல்லூர்-இலங்கியனூர் இடையே செல்லும் மணிமுத்தாற்றில் பாலம் கட்டுவது, விருத்தாசலம் அரசு மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய அதிநவீன மருத்துவமனையாகக் கட்டுவது ஆகிய பணிகளை எடுத்துக்கொள்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2014 ஆகஸ்ட் 12] [திரு. வி. முத்துக்குமார்]

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3835, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சியையும், திற்பரப்பு பேரூராட்சியையும் இணைக்கும் தெற்பக்கடவு ஊரில் கோதையாற்றின் குறுக்கே பெரிய உயர்மட்டப் பாலம் கட்ட திட்டம் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் சேர்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,541,06,25,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2332, திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2591, திரு. க. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2946, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3612, திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1866, திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2644, திரு. ரா.ம. பாபு முருகவேல், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2791, திரு. வி. முத்துக்குமார்.

2014 ஆகஸ்ட் 12]

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் குறை தீர்வு மனுக்களின்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3188, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3407, செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள தமிழ்மொழி அறிஞர்கள் பெறும் ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3529, திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் ரூ.3,000/- ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3705, திரு. அ. சவுந்தரராசன்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அங்கன்வாடி உள்ளிட்டவற்றில் பணியாற்றி ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அமலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3935, திருமதி எஸ். விஜயதரணி.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களின் ஒப்படைப்பு ஓய்வூதியத்தை (Commutation) திரும்ப வழங்கும் காலம், 15 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,541,06,25,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல்

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். இன்று 6 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 6 மானியக் கோரிக்கைகள்மீது சேர்த்தே பேசலாம். இன்றைக்குப் பிற்பகல் 2 மணிக்குள் விவாதம் முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு விடப்படவேண்டும். பேசுகிற உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாகத் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

பிற்பகல் 1-15

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையில் 2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மானியக் கோரிக்கைகளின்மீது விவாதிப்பதற்காக எனக்கு வாய்ப்புக் கொடுத்த, எங்கள் குடும்பத்தின் குல விளக்கே, இளைஞர்களின் எழுச்சி நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களை நன்றியோடும், விசுவாசத்தோடும் வணங்கி என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் பல பிரிவுகள் செயல்படுகின்றன. இப்பிரிவுகளில் மொத்தம் 546 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அதிலும் நிருபர் பிரிவில் 50 பேர் தவிர, மீதமுள்ள 496 பணியாளர்களுக்குச்

@ 1027 முதல் 1182 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II, III, IV மற்றும் V ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2014 ஆகஸ்ட் 12

சிறப்புச் செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர், சார்புச் செயலாளர் என்று 9 பணியிடங்களை நிரப்புவதற்குக் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். அது தொடர்பான கோரிக்கையை உங்களிடம் கொடுத்து விடுகிறேன். அதை அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது நன்றி தெரிவிக்கும் அதேவேளையிலே முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தை 25,000/- ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதி கட்டப்படும் என்று அறிவித்து, மேதகு குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை அழைத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கால்கோள் விழா நடத்தினார்கள். அந்த விடுதியை இந்த நிதியாண்டிலேயே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி கட்டப்பட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேலான ஆணையிட்டு, 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்கின்ற தருவாயில் இருக்கின்றது. ஒப்பந்தப்புள்ளி முடிவு பெற்றவுடன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலேயே கட்டப்பட வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தேன். வேறு ஒன்றும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் 2 கோடியிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், அரசு அறிவிக்கின்ற பல நலத் திட்டங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செயல்படுத்துவதால் இந்த நிதியை 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்குத் தீர்வு காண்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பி வைக்கும்போது அந்த மனுக்களைக் கணினியில் பதிவு செய்து, அதற்கான ஒப்புகைச் சான்று சட்டமன்ற உறுப்பினர்களிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் எலித் தொல்லை இருப்பதாகக் கடந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் சொன்னார்கள். நீங்களும் நடவடிக்கை எடுத்தீர்கள். ஆனாலும், இன்னும் அந்த எலித் தொல்லை, கொசுத் தொல்லை, கரப்பான் பூச்சித் தொல்லை அங்கு ஒழியவில்லை. அதை உடனடியாக ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனுப்புகின்ற மனுக்களுக்குப் பதிலறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உடனடியாக அனுப்பப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் எலித் தொல்லை, கொசுத் தொல்லை, கரப்பான் பூச்சித் தொல்லை போன்ற தொல்லைகள் எல்லாம் இருப்பதாக இங்கே கூறியிருக்கிறார். அந்தமாதிரித் தொல்லைகள் எதுவும் அங்கே இல்லை என்பதை நான் இங்கே ஆணித்தரமாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே ஒழுங்காக, முறைப்படி, முன்னேற்பாடாகக் கொசு மருந்துகள், எலிகள் வராமல் தடுப்பதற்கு

எலி இடுக்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எலி இடுக்கிகளை மீறி எலிகள் அங்கே நுழைய முடியாது என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், தெரு நாய்கள் உள்ளே நுழைய முடியாத அளவிற்கு அங்கே தெரு நாய் வண்டிகளும் அவற்றைப் பிடிப்பதற்கு முன்னேற்பாடாக வைக்கப்பட்டிருக்கின்றன, நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர், அவை முன்னவர் அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இரண்டு பூனைகளை அங்கு கொண்டு வந்து வைத்திருந்தார். பூனை எலியைப் பார்த்து ஓடிவிட்டது. அதுதான் உண்மை நிலை. முழுவதுமாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியும். உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் சொல்லமுடியாது. நாங்கள் எல்லோரும் சொல்கிறோம், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி என்பது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு மட்டும்தான். பூனைகளை அங்கே கொண்டு வந்து வைக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், நேரம் இல்லை. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன், எங்கெங்கெல்லாம் எலித் துவாரம்

2014 ஆகஸ்ட் 12] [திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்]

இருக்கிறதோ அதையெல்லாம் அடைத்துவிட்ட பின்தான் தூங்க முடியும். இல்லையென்றால் இரவில் தூங்கும்போது கடித்துவிடும். அதனால்தான் சொல்கிறேன்.

தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஓய்வூதியம் 3,050/- ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சத்துணவு ஊழியர்களுக்கு மாதம் ரூபாய் 1,000/- என்றும், ஊராட்சிப் பணியாளர்களுக்கு ரூபாய் 700/- ஓய்வூதியம் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முதியோர்களுக்கு ஓய்வூதியத்தை இரு மடங்காக உயர்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தன் பணிக்காலம் முழுவதும் அனைவிலே பணியாற்றும் சத்துணவு ஊழியர்களுக்கும், கிராமப்புறத்தில் பணியாற்றும் கிராம சேவாதாரர்களுக்கும் இருமடங்காக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அங்கன்வாடி ஊழியர்கள் நீண்டகாலத்திற்குப் பின்பு பதவி உயர்வு பெறுகிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடங்களுக்கு முன்னால்தான் நான் தெளிவான விளக்கங்களைத் தந்திருக்கிறேன். 500/- ரூபாய், 600/- ரூபாய், 700/- ரூபாய் என்று இருந்த ஓய்வூதியத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துதான் 1,000/- ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை யாருமே செய்ய முன்வராததை, சங்க ஊழியர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஐந்து நிமிடங்களுக்கு முன்னால்தான் இங்கே இதுகுறித்து பதிலளித்திருக்கிறேன் · என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், அந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு, வேறு சப்ஜெக்ட்டைப் பேசுங்கள்.

[2014 ஆகஸ்ட் 12

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருமடங்காக உயர்த்தித் தர வேண்டும் என்றுதான் கோரிக்கை வைத்தேன், வேறு ஒன்றும் சொல்லவில்லை.

அதேபோல, அங்கன்வாடி ஊழியர்கள் பதவி உயர்வு பெறும்போது மீதமுள்ள பணிக் காலம் ஓய்வூதியம் பெறுவதற்குண்டான காலமாகக் கணக்கிடப்படுவதில்லை. ஆகையினாலே அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அங்கன்வாடி ஊழியர்களுக்கென்று பதவி உயர்வே இல்லை. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆளக்கூடிய தமிழ்நாட்டில்தான் அங்கன்வாடி ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மேற்பார்வையாளர் நிலை-2 என்கிற தகுதி தரப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் பதவி உயர்வு பெற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இன்றைக்குக் கொஞ்சம் ஒத்துழையுங்கள். மீதமுள்ள கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: 10 வருடங்களாகக் கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பதவி உயர்வு தரப்படவில்லையென்று சொல்லவில்லை. பதவி உயர்வுக்கு வந்த பின்னாலே மீதமுள்ள பணிக் காலம் ஓய்வூதியம் கிடைப்பதற்குண்டான பணிக் காலமாக இருப்பதில்லை. ஆகையால், பதவி உயர்வுக்கு வருவதற்கு முன் செய்த பணிக் காலத்தில் 50 சதவீதம் கணக்கில் எடுத்து ஓய்வூதியத்தைக் கணக்கிட வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, போதும் உட்காருங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: முக்கியமான கோரிக்கை ஒன்று சொல்லிவிடுகிறேன். 1-4-2003-க்குப் பிறகு அரசுப் பணியிலே சேர்ந்தவர்களுக்குப் புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட முறையைக் கொண்டுவந்தார்கள். தேர்தல் அறிக்கையில் புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்துச் செய்துவிட்டு 1-4-2003-க்கு முன்பாக உள்ள பழைய முறையிலான ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லப்பட்டது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியத்தைத் தொகுத்துப் பெறுதல் (Commutation system) மூலமாக ஒரு குறிப்பிட்ட தொகை 15 ஆண்டுகள் பிடித்தம் செய்யப்படுகிறது. அந்தத் தொகைக்கு மிகக் குறைந்தளவான 4 சதவிகிதம் வட்டி என்றாலும்கூட 12 வருடங்கள் பிடித்தாலே போதுமானது. 15 ஆண்டுகள் பிடித்தம் செய்யப்படுகிற தொகையை ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி 12 ஆண்டுகளாகக் குறைத்து பிடித்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியதார்களுக்கான மருத்துவப் படியை மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு ரூபாய் 150 பிடித்தம் செய்யப்பட்டு, நான்கு வருடத்திற்கு ரூ.4 இலட்சம் வரையில் சிகிச்சை மேற்கொள்ளலாம் என்று இருப்பதைப்போல, ஓய்வூதியதாரர்களுக்கும் ரூ.150 பிடித்தம் செய்யப்பட்டு, நான்கு வருடத்திற்கு ரூ.2 இலட்சம் என்றிருப்பதை, அவர்களின் வயதைக் கருத்தில்கொண்டு, ரூ.4 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியதாரர்களுக்கு வாழ்நாள் முழுவதிற்கும் ஒரு இலட்சம் ரூபாய் என்றுதான் இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ரூ.2.00 இலட்சம் என்று தற்போது அதை மாற்றி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

திருத்தியமைத்திருக்கின்றார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மோகன்ராஜ், உரையைச் சிக்கிரம் முடியுங்கள் இப்போது நேரம் 1 மணி 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. இரண்டு மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: 5 நிமிடங்கள் பேசச் சொல்லியிருக்கிறீர்கள். 3 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் உரையை முடியுங்கள். முதலில் உங்களுக்கு வாய்ப்பு கொடுத்துள்ளேன். வேறு எதிலும் பேச வேண்டாம்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: அதேபோல மின்னணு ஓய்வூதியம் (e-pension) திட்டம் வலைதளம் மூலமாக மையப்படுத்தும் சோதனை முயற்சி ஏழு மாவட்டங்களில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகங்களில் நடைபெற்று வருவதாக 2013-2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ள அதே வரிகள் 2014-2015 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. தமிழக அரசின் e-pension திட்டத்தின் சோதனை முயற்சி முடிவு பெற்றதா? எப்போது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அதேபோல, சார்நிலைக் கருவூலங்களில் Automatic Electronic Billing System நடைமுறைப்படுத்தினாலும்கூட மற்ற அரசுத் துறைகள் முழுமையாகக் கணினிமயமாக்கப்படாததால் Automatic Electronic Billing System முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. ஆகையினால், அனைத்துத் துறைகளும் முழுவதுமாகக் கணினிமயமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருவூல ஊழியர்களுக்குப் பணிச்சுமை அதிகமாக இருப்பதால், கருவூலங்களில் காலியாகவுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்களை அரசு நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்குக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவில் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மோகன்ராஜ், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்நிலைக் கருவூலப் பணியாளர்களுக்கு அரசாணை எண் 10-ன்படி பணியிட மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல சீரிய திட்டங்களை விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளார்கள். கடந்த மூன்றாண்டுகளில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு அடையாள நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொஞ்சம் ஒத்துழையுங்கள், உட்காருங்கள். (குறுக்கிடு) போதும், உட்காருங்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: அரசின் திட்டங்களை எதிர்க்கட்சி என்ற முறையில் வரவேற்பது மட்டுமல்லாமல், அத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலுள்ள குறைகளைத் தமிழக அரசின் கவனத்திற்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றோம். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, தமிழக அரசின் பல நல்ல திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த விவாதத்தில் பங்கேற்று, கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பை வழங்கிய என்னுடைய அரசியல் ஆசான், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விவாதத்தை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள். ஐந்து நிமிடங்களில் உரையை முடித்து, ஒத்துழைப்புக் கொடுங்கள்.

பிற்பகல் 1-25

***முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் குறித்து நடைபெறுகிற மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கூடுமையாற்றுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தையும், வாய்ப்பையும் உருவாக்கித் தந்திருக்கின்ற, வாய் வேதம், கை நீதி, விழி அன்பு, மொழி கருணை வடிவாகத் திகழ்ந்து, முடிவற்ற முதலான இறைவனாகத் திகழ்கின்ற மாண்பமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர், தலைதாழாச் சிங்கம், தன்மானத்தின் தங்கம், ஏழைகளுக்கு அங்கம், எங்கள் ஸ்ரீரங்கம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தோளில் விழுந்த தோகையின் மயிலாய், கோளில் சிறந்த குளிர்சாய் திங்களாய், முறுக்கு உடைந்து மலைக்கும் மலராய், சிறகினில் தத்தும் செங்கான் அன்னமாய், அமுதமொழி பகர் அழகின் பிம்பமாய், குமுத மலர்விழி சுமலம் சுருங்குமுல் வாழும் எழிலாய், வசந்தப் பொழிலாய்த் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலைப் பணிவுடனும் அடக்கத்துடனும் வெளிப்படுத்துகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்குக்கூட கைரேகைகள் வெவ்வேறாக இருக்கும் என்று விஞ்ஞானம் சொல்லும். அந்தக் கைரேகைகளுக்குப் பல பெயர்கள் உண்டு. புத்தி ரேகை என்றும், இதய ரேகை என்றும், ஆயுள் ரேகை என்றும் ஒவ்வொரு ரேகைக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. எந்த ரேகை இருந்தாலும், ஒரு முக்கிய ரேகை இருந்தால்தான் வாழ்க்கையை இயக்க முடியும், நடத்த முடியும். அந்த விதி ரேகையை எங்களுக்குத் தந்தவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12] [முனைவர் வைகைச்செல்வன்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது நடப்பது ஆடி மாதம். பெரும்பாலும் ஆடி மாதம் வந்தால், அம்மனை தரிசிப்பது நல்லது என்பார்கள். அனைத்து மாதத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களை தரிசித்தால், நல்லது நடக்கும் என்பது தமிழர்களுடைய நம்பிக்கையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆடி மாதம் வந்தால் தள்ளுபடி உண்டு; நிச்சயமாக எல்லோருக்கும் கிடைக்கும். குறைந்தபட்சம் 10 சதவிகிதம் முதல் அதிகபட்சம் 50 சதவிகிதம் வரை தள்ளுபடி எல்லோருக்கும் கிடைக்கும். ஆனால் தமிழ்நாடு இதுவரை 100 சதவிகித தள்ளுபடியைப் பார்த்ததாக வரலாறு இல்லை. ஆனால், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இ.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு 100 சதவிகித தள்ளுபடியைத் தமிழ்நாட்டு மக்கள் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் களத்திலிருந்து தள்ளி வைத்திருக்கின்றார்கள் என்பதைப் பதிவு செய்கிறேன். இவையெல்லாம் எப்படி நடந்தன, இவையெல்லாம் எப்படிச் சாத்தியம் என்று யோசித்துப் பார்த்தால், தமிழ்நாட்டு மக்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110-ஐ தந்துகொண்டே இருக்கின்றார்கள். தன்மைகள் பல கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. நாளும் பொழுதும் அவர்களுக்குத் திட்டங்கள், திட்டங்கள்; சலுகைகள், சலுகைகளாகப் பெருகிக்கொண்டே இருக்கின்றன. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததைப்போல் என்று சொல்வார்கள் அல்லவா? அதைப்போல நாளும் பொழுதும் அந்தத் திட்டங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இன்றுகூட தமிழகத்தினுடைய ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "Amma Baby Care Kit" என்று 16 பொருட்களைத் தருகின்ற வகையில் திட்டத்தை அறிவித்திருப்பது, தாயுள்ளம் கொண்டவர் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு 110-ஐ தந்தார். தமிழ்நாட்டு மக்கள், இ.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு 111-ஐத் தந்தார்கள்; பட்டை நாமம். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் வைகைச்செல்வன்] [2014 ஆகஸ்ட் 12

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தச் சட்டமன்றத்திலே வரலாற்றுச் சிறப்புமிக்க வைர விழாவைக் கண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தச் சட்டமன்றத்தில்தான் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, ஒரு வரலாற்று திருப்புமுனையைத் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கின்றார்கள்.

கச்சத் தீவு ஒரு துயரக் கனவு, மிச்சத் தீவாய் மாறிவிடுமோ என்று எண்ணிய வேளையில், கச்சத் தீவு நம் கடற்கரையின் மிச்சத் தீவுதான், தமிழக மீனவர் வாழ்வில் மெச்சும் தீவுதான் என்று அழுத்தமாய் வரலாற்றுப் பிழையைத் திருத்தி, இந்த மன்றத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முள்ளிவாய்க்கால், இரத்தமும், சதையுமாக இருந்த தமிழர்களை உயிர் குடித்த இடம். அது முள்ளிவாய்க்கால் அல்ல, தமிழர்களின் இறுதி மூச்சை நிறுத்திய கொள்ளிவாய்க்கால் ஆகும். அந்த இனப்படுகொலையை எதிர்த்து மாண்புமிகு அம்மா அவர்கள் இயற்றிய தீர்மானம் ஐ.நா. மன்றம் வரை தீப்பற்றியது என்று சொன்னால், இந்த மன்றத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

69 சதவிகித இட ஒதுக்கீடு கொள்கைக்கு ஒரு தீர்மானம்; முல்லைப் பெரியாற்றின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத் தீர்மானம்; ஒரு சமூகம் முனியசாமி, பெரியசாமி, ராமசாமி என்று பெயர் வைத்துக்கொண்டிருந்த வேளையில், தன்னுடைய பேரக் குழந்தைகளுக்கு பெண்ணிகுயிக் என்ற பெயரை இடுகின்றார்கள் என்று சொன்னால், அது நன்றிப்பெருக்கின் வெளிப்பாடு. ஆக, அணையைக் கட்டியவருடைய பெயரை வைக்கின்றார்கள் என்று சொன்னால், அந்த அணையைப் பாதுகாக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் காலம் உள்ளவரை, கடல் நீர் உள்ளவரை எப்போதும் தமிழக மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்ப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12] [முனைவர் வைகைச்செல்வன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்மட்டம் உயர்ந்தது ஆறடி, தமிழனின் மானம் மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களால் உயர்ந்தது 100 அடி என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு அம்மா, இதுவெல்லாம் உங்களால்தான் சாத்தியம். மாண்புமிகு அம்மா, நீங்கள் சந்திரனின் அம்சம், ஸ்ரீராமச்சந்திரனின் அம்சம், அன்னை சந்தியாவின் வம்சம் என்ற காரணத்தினால்தான் இந்த மகத்தான வாய்ப்புகளைக் கண்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

எத்தனையோ, எத்தனையோ நீர்மானங்களைக் கண்ட இடம் இந்தச் சட்டமன்றம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்ததால்தான் அந்தத் தீர்மானங்களுக்கே பெருமை கிடைத்தது. பாடுபவர்களுடைய சிறப்பே, பாடப்படுபவர்களைப் பொறுத்துத்தான் அமையும் என்று சொல்வார்கள். இராமனைப் பாடியதால்தான் கம்பனுக்குப் பெருமை. கண்ணனைப் பாடியதால்தான்-இலம்பைப் பாடியதால்தான் இளங்கோவடிகளுக்குப் பெருமை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடலான, நான் ஆணையிட்டாலோ அல்லது எங்கள் வீட்டுப் பிள்ளை பாடலை, வேறு ஒரு நடிகர் பாடினால் அந்தப் பாட்டு எடுபடாது. அதைப்போலத்தான், யார் வேண்டுமானாலும் தீர்மானம் கொண்டுவரலாம். ஆனால், தீர்மானத்தைக் கொண்டுவருகிற இடத்திலே இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருகிறபோதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) மகத்தான உலகம் முழுவதும் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைஎளியவர்களுக்கு மின் விசிறி தருகிறார்கள். இந்தத் தேசமே மாண்புமிகு அம்மா அவர்களுக்கு விசிறியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெருமைகளை இந்த மன்றத்திலே பதிவுசெய்ய விரும்புகின்றேன். வைர விழாவைக் கண்டு, மகத்தான வாய்ப்பை இந்தச் சட்டமன்றத்திற்குப் பெற்றுத் தந்தார்கள். இந்தியக் குடியரசுத் தலைவரை அழைத்து— அழுத்தத்தைக் கொடுத்து வரவிடாமல் தடுத்தார் கருணாநிதி. தி.மு.க. இன்று எங்கே இருக்கிறது? காணாமல் போனவர்கள்

பட்டியலிலே இருக்கிறது. தி.மு.க. இருக்கிற இடமே தெரியவில்லை. கருணாநிதிக்கு பிறகு ஸ்டாலின் வந்துவிட்டார், ஏதோ நடந்துவிடும் என்று நினைத்தார்கள். கருணாநிதி கை முறுக்கு சுட்டால், ஸ்டாலின் நெய் முறுக்கு கடுவார் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு பொய் முறுக்காய்ப் போய்விட்டதுதான் மிச்சமாக இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் அவர்களுக்கு நடந்தபாடில்லை.

தந்தை ஒரு மகனைப் பார்த்து, மகனே! எனக்கு வயதாகிவிட்டது, கை நடுக்கமாக இருக்கிறது, ஒரு கடிதம் எழுது என்று சொன்னார். மகன், பேப்பரையும், பேனாவையும் எடுத்து எழுதத் தொடங்கினார். எல்லாம் எழுதி முடித்துவிட்டபிறகு, மகன் தந்தையிடத்திலே சொன்னான், எழுதுவதற்கு இன்னும் கொஞ்சம் இடம் இருக்கிறது, ஒரு வரி எழுதினால் நன்றாக இருக்கும், ஏதாவது சொல்லுங்கள் என்று சொன்னபோது; தந்தை மகனைப் பார்த்துச் சொன்னார், கையெழுத்து மோசமாக இருப்பதற்கு மன்னித்துக் கொள் என்று எழுதிக் கொள் என்று சொன்னாராம். அப்படித்தான் தி.மு.க.-வினுடைய நிலைமை ஆகிவிட்டது. இன்றையச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட நிலைமையைத் தமிழ்நாட்டு மக்கள் அவர்களுக்கு தந்திருக்கிறார்கள்.

பட்டத்து ராஜாவுக்கு மகுடம் சூட்டுகிற யானை, சில வேளை பாகனுக்குக் கட்டுப்பட்டு, கடைக்குக் கடை கையேந்துகிற நிலைமையை, அவலத்தை தி.மு.க. சந்தித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மகத்தான ஆட்சியிலே பல்வேறுபட்ட சாதனைகள், ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் சாதனைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். இந்தச் சாதனைகளெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் கொடுத்ததுதான். 37 இடங்களில் மகத்தான வெற்றி வாய்ப்பைப் பெற்றுத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இதுவரை எவரும் பெற முடியாத உயரத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். 65 மாவட்டங்களாகப் பிரித்துவிட்டு, கட்சியைப் பலப்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். பலப்படுத்தலாம், கல்லறைக்கு வருடம் ஒரு முறை வெள்ளையடிக்கலாம். ஆனால், உள்ளேயிருப்பவர்கள் வெளியே வரப் போவதில்லை. புதுப்பித்தாலும் வெற்றி பெறப் போவதில்லை என்பதுதான் உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) மூட்டைப்பூச்சிகள் ஒரு போதும் இரத்த தானம் செய்யாது

(மணியடிக்கப்பெற்றது) என்பதை இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடைத்துபோன கல்யாண மண்டபம்கூட, சில நேரத்திலே கூட்டணி வைக்கப் பார்த்தது. மஞ்சள் கிழங்கைக் கண்டெடுத்த சுண்டெலி மனிதக் கடை வைக்க ஆசைப்பட்டதைப்போல, ஏதோ நம்மால்தான் வெற்றி கிடைத்தது என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மகா சக்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்த வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் காலம் தந்த கொடை; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் கேள்விக்கு கடவுள் தந்த விடை; (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்வில் கடந்து வந்த ஆயிரம் நடை; இன்று நடை உடைத்து நடக்கிறது இந்தச் சிங்க நடை; தலைவியின் விழி அசைவிற்கு எப்பொழுதும் காத்திருக்கிறது தொண்டர் படை; தொட முடியாத வானம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஒரு வீட்டிலே நெருப்பு எரிந்தால் வீடு முழுவதும் எரியாகும். ஆனால், வானத்தை ஒருபோதும் எட்ட முடியாது. தொட்டுவிட முடியாத தூரத்திலே வானமாக நிற்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழுக்குகள் நெருப்பிடத்திலே அண்டாது. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு நெருப்பு. சுத்தமான தண்ணீர், சுவாசிக்கும் காற்று, பொறுமை காக்கும் பூமித் தாயாக விளங்குகிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாய் என்றால் பெருமை, தாய் என்றால் பாதுகாப்பு, தாய் என்றால் பேரன்பு, கடல் அன்னை, நிலம் அன்னை, வானம் அன்னை எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்னையாக வாழ்ந்து, தமிழ்நாட்டு மக்களுக்குப் பல்வேறு நன்மைகளை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். பொதுத் துறையிலே அரசு விழாக்கள் என்று சொன்னால், இந்தியாவே தமிழ்நாட்டைத்தான் பார்க்கிறது. அரசு விழாக்களினுடைய

[முனைவர் வைகைச்செல்வன்] [2014 ஆகஸ்ட் 12

கட்டமைப்பு, அந்த அரசு விழாக்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்கிற மகத்தான அந்த மாண்பை தமிழ்நாட்டிலிருந்துதான் இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலங்களும் கற்றுக்கொள்கின்றன என்று சொன்னால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிருவாகத்திற்குக் கிடைத்திருக்கிற மகத்தான பேறு. ஆகவேதான், இந்தியாவினுடைய தலைநகரம் டெல்லி என்று சொன்னால், இந்த அனைத்துத் துறைகளும், மருத்துவத் துறையாகட்டும், அனைத்துத் துறைகளாகட்டும், அரசு விழாக்களினுடைய தலைநகரம் சென்னையாக இருப்பதற்குக் காரணம் தமிழ்நாட்டினுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன், உட்காருங்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். ஐந்து நிமிடத்தில் உரையை நிறைவு செய்து, ஒத்துழைப்புத் தாருங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-2003-க்குப் பிறகு பணியில் சேர்ந்தோருக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிற புதிய ஓய்வூதியத் திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும். அங்கன்வாடி, சத்துணவு, வருவாய் கிராம ஊழியர், பஞ்சாயத்து எழுத்தர் போன்றோருக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.3,050/- வழங்கப்படவேண்டும். மாநில பொதுத் துறையான மின் துறை, போக்குவரத்து நிறுவனங்களிலிருந்து ஓய்வுபெற்றோருக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

'60 வயது ஆணவர்களுக்கு கட்டணமில்லா Bus pass வழங்கப்படும், என்ற வாக்குறுதியை அமல்படுத்தவேண்டும். அரசாணை எண் 363-ன்படி அகவிலைப் படியை அகவிலை

ஊதியமாக்கி உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி அரசு ஊழியர்களுக்குப் பென்ஷனை முழு நிலுவைத் தொகையோடு வழங்கவேண்டும்.

மறுமணம் செய்தால் பென்ஷன் இல்லை என்பது பென்ஷன் விதிகளில் இருக்கிறது. அது இயற்கை நீதி ஆகாது. குறிப்பாக பெண்ணுக்கு இது அநீதியாகும். ஓய்வூதியத்தில் பெறுகிற ஒப்படைப்புத் தொகைக்கான அசலும் வட்டியும் 12-வது ஆண்டிலேயே நிறைவடைந்துவிடுவதால், 15 வருடங்கள் பணம் பிடிப்பதை 12 வருடங்களாகக் குறைக்கவேண்டும். அங்கன்வாடி ஊழியர்கள் பதவி உயர்வுமூலம் மேற்பார்வையாளர்களாக ஆகும்போது, அங்கன்வாடி பணிக் காலத்தையும் ஓய்வூதியம் கணக்கிடும்போது கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஓய்வு பெற்ற அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை வாழ்வுச் சான்று வழங்கவேண்டுமென்ற முறையை மாற்றி, மற்றவர்கள்போல ஆண்டுக்கு ஒருமுறை வாழ்வுச் சான்றிதழ் வழங்குகிற நிலையைக் கொண்டுவரவேண்டும்.

போக்குவரத்தை departmental industry ஆக அரசே நேரடியாக நடத்திக்கொண்டிருந்தது. 1972-க்குப் பிறகு இது கழகங்களாக மாற்றியமைக்கப்பட்டது. அரசு ஊழியர்களாக அவர்கள் இருந்த காலத்தில் பென்ஷன் உரிமையைப் பெற்றிருந்தார்கள். கழகங்களான பிறகு, கழகங்களுக்கு மாறி வந்தவர்களுக்கு அரசாணை எண் 378-ன்படி பென்ஷன் உரிமை வழங்கப்பட்டது. அதில் விருப்புரிமை தரவில்லை என்று விடுபட்டுப்போன OSSR Scheme-ன்கீழ் ஒரு சிறு பிரிவினர், ஒரு ஆயிரம் பேர்கூட இருக்கமாட்டார்கள், எந்த பென்ஷனும் இல்லாமல் அவதிப்படுகின்றனர். அவர்களுக்குக் குறைந்தபட்ச கருணைத் தொகையாக ரூ.3,000/- வழங்கப்படவேண்டும்.

1-9-1998 முதல் அமலிலுள்ள போக்குவரத்துக் கழக ஓய்வூதியத் திட்டத்தைச் சீரமைக்க 2008-ல் அரசாணை 36-ன்மூலம் சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்தச் சீரமைப்புக் குழு போக்குவரத்துக் கழகப் பென்ஷன் திட்டத்தை அரசே நன் கூட்டுப்பாட்டில் எடுத்து நடத்தவேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. போக்குவரத்துக் கழக பென்ஷன் திட்டத்தை அரசு ஏற்று அந்தத் தொழிலாளர்களுக்கும் நியாயம் வழங்கவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவுக்கு மனுக்கள் கொடுக்கப்படுகிறபோது, அது சம்பந்தப்பட்ட துறைக்கு

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 ஆகஸ்ட் 12

நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட விவரம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அது மிகவும் சரியானது. ஆனால், தீர்வு குறித்து பதில்கள் முறைப்படியாகக் கிடைப்பதில்லை.

மாவட்ட ஆட்சியர், தாசில்தார் மட்டத்தில் பல நேர்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே மனுக்களுக்கு பதில் கிடைப்பதில்லை. தலைமைச் செயலக நூலக நூல்கள் மின்னணுமயப்படுத்தப்படவேண்டும். E-books உருவாக்கப்பட்டு அவற்றைத் தேவைக்கேற்ப பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி வேண்டும். நூலகத்தில் நகலி இயந்திரம் (xerox machine) இல்லாதது பெரும் குறையாகும். 1970-க்கு முந்தைய பேரவை நடவடிக்கை வெளியீடுகள் இப்பொழுது கிடைக்காத குறை இருக்கிறது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி உடனே கட்டப்படவேண்டும். அது கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவரை அவர்கள் சென்னையில் தங்க வீடுதியில் ஒரு வீடு ஒதுக்கவேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் மருத்துவ உதவித் தொகை போதுமானதல்ல. அது மாதம் ரூ.2,000/- என்ற அளவிற்கு உயர்த்தவேண்டும். அவர்களின் ஒய்வூதியம் அண்டை மாநிலங்களில் இருப்பதுபோல் ரூ.25,000/- ஆக உயர்த்தப்படவேண்டும். அவர்களின் இரயில் பயணத்திற்கு ஒரு தொகை வழங்கப்படவேண்டும்.

அனுபவத்தில் பார்க்கிறபோது சட்டமன்றத்தைக் குறைந்தது 100 நாட்களாவது நடத்தவேண்டும். ஒவ்வொரு மானியத்திற்கும் ஒரு நாள் ஒதுக்கவேண்டும். எதிர்க் கட்சிகளுக்குக் கூடுதல் நேரம் அப்பொழுது தரமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவு பற்றி இங்கே சில கருத்துகளை எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினை ஏற்று, பொதுத் துறையின்கீழ் இயங்கும் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவு

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஏழையெளிய மற்றும் அனைத்து தரப்பட்ட பொதுமக்கள் அனுப்பும் மனுக்கள் மீதான குறைகளைக் களைவதை உறுதிசெய்யும்பொருட்டு, ஒரு முன்னோடி குறைதீர் மையமாகத் திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு மனுவின்மீதும் எடுக்கப்படும் நடவடிக்கையை ஆய்வு செய்து, வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் அவற்றை விரைந்து முடிப்பதற்கு ஏதுவாக, ஒவ்வொரு துறையிலும் ஒருங்கிணைப்பு அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, அம்மனுக்கள்மீது உடனுக்குடன் தீர்வு காணும்பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் தனிப் பிரிவில் அஞ்சல் மூலமாகவும், நேரிலும் மற்றும் இணையதளம் வழியாகவும் மொத்தம் 10,22,848 மனுக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பெறப்பட்டு, அவற்றில் 9,55,507 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரணமாகப் பெறப்பட்ட மனுக்களில் 99.93%-ம், இணையதளம் வழியாக பெறப்பட்ட மனுக்களில் 88.38%-ம் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தராசன், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. அ. சவுந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மட., மடவென்று பேசி, எனது உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் அவையில் நிறைய பேசியிருக்கிறீர்கள். இன்று ஒத்துழைப்புத் தாருங்கள்.

திரு. அ. சவுந்தராசன்: கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கூடுதலாக விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் உதவியாக இருக்கும். கவன ஈர்ப்பிற்கு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு 7 நாட்கள் ஆன பிறகும், பதில் வரவில்லை, எனவே, எடுக்க முடியாது என்பதும் வருத்தமளிக்கிறது.

சட்டமன்ற விடுதியில் பல நேரங்களில் கைப்பேசி சிக்னல் இல்லாததால் கைப்பேசிகள்மூலம் பேச முடியவில்லை அல்லது

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 ஆகஸ்ட் 12

கைப்பேசியில் பேசும்போது பாதியில் லைன் அறுந்துபோகிறது. ஆகவே, அங்கே நல்லமுறையில் சிக்னல் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவற்றினுடைய அறிக்கை நமது அவையில் வைக்கப்படுவதில்லை.

பிற்பகல் 1-40

சிறுசேமிப்புக்கு இப்பொழுது இலக்கு நிர்ணயிக்கப்படுவது இல்லை. இதற்கு இலக்கு நிர்ணயித்து, அதை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 12,455 கோடி ரூபாயிலிருந்து, கடந்த 8 ஆண்டுகளில் 9,624 கோடி ரூபாயாக வருமானம் குறைந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பில் வழங்கப்படுகின்ற வட்டி 9.5 சதவிகிதமாக இருக்கின்றது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அதைவிடக் கூடுதலாக வட்டி விகிதம் தரப்படுகின்ற காரணத்தினால், சிறுசேமிப்புகளில் சேமிக்கின்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கின்றது. அதனால்தான், அங்கே செலுத்தப்படுகின்ற தொகையும் குறைவாக இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோளும் அதுதான். நாம் அதற்கு வட்டியையும் உயர்த்த வேண்டும். முகவர்களையும் அதிகப்படுத்த வேண்டும். முகவர்களின் ஊக்கத் தொகையையும் அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

தொழிலாளர் நல வாரியங்களின் தணிக்கை அறிக்கை சபையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. ஆகவே, மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டுமென்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: தொழிலாளர் நல வாரியங்களுடைய தணிக்கை அறிக்கை சபையில் வைக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் பணியாற்றுபவர்களுக்கு வழங்கப்படும் allowance போல, பேரவைச் செயலக ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ரூ.72,000/-க்கும் மேல் வருமானம் இருப்பதால், அரசு ஊழியரைப்போன்று பணம் பிடித்துக்கொண்டு, இந்தக் காப்பீட்டுத் திட்டத்தைக் குடும்பத்தினருக்கும் சேர்த்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு இல்லத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும்போது, முன்னாள் அமைச்சர்களுக்கு 150 ரூபாய் வாடகையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 450 ரூபாய் வாடகையும் பிடித்தம் செய்யப்படுகிறது. இதைச் சமமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு இல்லத்தில் wi-fi வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். சட்டமன்ற விடுதியில் wi-fi வசதி செய்ய வேண்டும். சட்டமன்ற விடுதியில் ஏ.டி.எம். வசதி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்ற விடுதியில் வங்கி இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பக்கத்தில் ஏ.டி.எம். இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைத்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஏடிஎம். வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சவுந்தரராசன்: மெட்ரோ இரயில் திட்டத்தைத் திருவொற்றியூரிலிருந்து தொடங்க வேண்டும். மோனோ இரயில் திட்டத்தை வடசென்னைக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள், தங்களுடைய உரையை இரண்டு, மூன்று நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட தியாகிகள், இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளின் குழந்தைகளுக்கு அரசு ஏற்கெனவே மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கீடு செய்வதைப்போல, மருத்துவ பட்ட மேற்படிப்புகளுக்கு, P.G. போன்ற படிப்புகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் ரூ.25,000/- வழங்கப்படுகிறது. அந்த அளவுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப் படி ரூ.10,000/-ஐ உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்தைய மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய பென்ஷன் திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப்போல, ஓய்வுபெற்ற அங்கன்வாடி, சத்துணவுப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12] [திரு. டி. இராமச்சந்திரன்]

சட்டமன்றத் தேர்தலின்போது மூத்த குடிமக்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

முதியோர் உதவித்தொகை 5, 6 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கின்றது. அவர்களுக்கு அந்த உதவித்தொகையை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயிலிருந்து 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் உதவியாளரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கும் நாட்களை 120 நாட்களாக நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடுநிலைமையோடு நேரம் ஒதுக்கித் தருகிறார்கள். வருங்காலங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இன்னும் அதிகமான நேரத்தை ஒதுக்கீடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டமன்ற நிகழ்ச்சிகளை, நேரடியாக தொலைக்காட்சிகளில் மக்கள் அறியும் வகையிலே ஒளிபரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள், சட்டமன்ற நிகழ்ச்சிகள் நேரடியாகத் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி இங்கே பேசினார்கள். அந்தப் பிரச்சினை சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி தொடர்பான கோரிக்கைக் கடிதங்கள், துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்போது, பொதுவாக, முறையான பதில் இடைப்பதில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கும் அனுப்பப்படும்போது, மனுக்கள்மீது உரிய பதில் இடைக்கிறது. வருங்காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களால் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் மனுக்கள்மீது, அவர்கள் நடவடிக்கை எடுத்து, அதுகுறித்து விரைந்து பதிலளிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்து, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை அனுப்பப்பட வேண்டும்.

தமிழகத்தில் இன்றைக்கு 7½ இலட்சம் பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றார்கள். சார்நிலைக் கருவூலம் மற்றும் கருவூலங்களில் காலிப் பணியிடங்கள் இருப்பதனால், ஓய்வூதியம் பெறுவதிலே சிக்கல் இருக்கின்றது. ஆகவே, அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில், ஒட்டுமொத்தப் பணியாளர்கள் நிலை கூலி அடிப்படையிலே, உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் எனப் பல்வேறு நிலைகளில் மொத்தம் 50-க்கும் மேற்பட்டோர் நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் இங்கு பணிபுரியும் நாட்கள் தவிர தனியார் மற்றும் அரசுப் பணியிலோ, வேறெங்கும் பணி புரிவதில்லை. ஆனால், இவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகவும் குறைவாக உள்ளது. (மணியடிக்கப்பெற்றது) அந்த ஊதியத்தை வைத்துக்கொண்டு அவர்கள் குடும்பம் நடத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். இவர்கள்மீது கருணை கொண்டு, அரசுப் பணிகளில் காலியான பணியிடங்களில் அவர்களுக்குப் பணி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவைக் காவலர்களுக்கு நாளொன்றுக்குப் படியாக ரூபாய் ஐம்பதும், காவல் உதவி ஆய்வாளருக்கு ரூபாய் ஐம்பத்தைந்தும் வழங்கப்படுகிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரம் தனக்காகப் பழுப்பதில்லை, ஆறு தனக்காக ஓடுவதில்லை, சான்றோர்கள் தமக்காக வாழ்வதில்லை, அப்படி தனக்காக வாழாமல், தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் சேர்த்தே சுவாசிப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் சேர்த்தே சுவாசிப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முத்தமிழ் மொழிகின்ற முதல் வார்த்தை அம்மா! முரசங்கம் ஒலிக்கின்ற புகழ் வார்த்தை அம்மா! மூவேந்தர் நாட்டின் மூச்சாக அம்மா! மூத்தோர் இளையோர் பேச்சாக அம்மா! கோடித் தொண்டர் வணங்குகின்ற குலசாமி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கோட்டை கட்டி ஆளுகின்ற பலசாலி அம்மா! 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனும் வள்ளலாரின் வருத்தத்தைத் தீர்த்து, 'உண்ணும்போதொரு கைப்பிடி' எனும் திருமூலர் மந்திரத்தைத் தெளிவோடு ஏற்று

> "ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
> மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்னும் பொதுமறைப் புலவனின் குறளுக்கு இலக்கணமாகி, "வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்று பாடிய பாட்டுக்கொரு புலவனின் பரிந்துரைக்கேற்ப, தாய் ஆளும் தமிழ்மண்ணில் பசிப் பிணிக்கு இடமில்லை என்பதை உறுதி செய்த நம் அன்னலட்சுமி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நிலவுகாட்டி சோறூட்டும் தெறஞ்ச மனசு அம்மா! ஆக்குறோம் சோற்றுக்கு அரிசி தருவது அம்மா! சோலை வளம் மறைந்தால், பாலைவனம் தோன்றிவிடும் என்பதாலே, பாமரர்க்கும் பூ மரத்தோடு பசுமை வீடு தருகின்ற புரட்சித் தாய் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களது திட்டங்களால், இல்லாமை தீருது, கல்லாமை மாயுது, கருணாநிதி என்னும் ஆமையும் ஓயுது, எல்லோர்க்கும் கல்வி வசதி, இடரில்லா மின் வசதி, இப்படி சகலத்தையும் திட்டமிட்டுச் சாதிக்கும் சகலகலா வல்லவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) கடலில் கலந்திடும் மழைத் துளியே, இனி கவலை எதற்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

உனக்கு, அலையுடன் கலந்து பேரின்பத்தைக் கொண்டாடு! கனவுகள் சுமந்திடும் மனமே, இனி உறக்கம் எதற்கு உனக்கு, நம்பிக்கையுடன் நடை போடத் தொடங்கு; வலிகளைத் தாங்கிடும் கல்லில்தான் பல சிற்பங்கள் இருக்கு! எண்ணித் துணிந்த பிறகு இனி தயக்கங்கள் எதற்கு? படிக்க வச்சு ஆளாக்க கனா காண்பது பெத்த அம்மா! அந்தக் கனவு நனவாக, கணினி முதல் காலணி வரை கனிவாய் தருவது நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, காலமெல்லாம் சிறந்து விளங்க கல்வியில் சிறப்புற்று சிகரம் தொடு! 'ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதாண்டா வளர்ச்சி, உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி' என்று புத்தி புகட்டிய புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு உயிர் கொடுப்பது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அன்பு ஒன்றே ஒன்றிணைக்கும் பாலமாகும்; ஆற்றல் ஒன்றே தொழிலுக்கு நல்லுரமாகும்; இன்முகம் ஒன்றே மனிதனைப் புனிதமாக்கும்; சகை ஒன்றே இல்லாமையைப் போக்கும், உண்மை ஒன்றே உயர்வினைத் தரும், ஊக்கம் ஒன்றே உற்சாகம் தரும், எளிமை ஒன்றே நல்வழிப்படுத்தும், ஏற்றம் ஒன்றே மாற்றம் தரும், ஐயம் ஒன்றே அறிவுக்குத் துணை, ஒழுக்கம் ஒன்றே புகழ் சேர்க்கும், ஓயா உழைப்பே மேன்மை தரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் வாழ்வதே இவை அனைத்தையும் பெற்றிட வழிவகையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் கழகத்தின் தலைவி செயலாக்கும் வறுமை ஒழிப்புத் திட்டம், ஆடு, மாடு, அன்புருகி ஒலிப்பதுவோ அம்மா, அம்மா, அதனை, வீடு வீடாய் விலையின்றி கொடுப்பதுவோ நமது மாண்புமிகு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமக்கென வாழாத தாயுள்ளம் அம்மா! தடை தாண்டி படைவென்ற தாயுருவப் போராளி அம்மா! சட்டத்தின் துணை கொண்டு சாதிப்பவர் அம்மா! சதிகளை மதி கொண்டு சாய்ப்பவர் அம்மா! துஷ்டர்களைத் துரத்திடும் துர்க்கை அம்மா! துறவு மன தொண்டாற்றும் தூய சக்தி அம்மா! ஓடோடி உழைப்பவர்க்கு உயர்வு தரும் அம்மா! ஒப்பிட்டுச் சொல்ல முடியாத உயர் இலக்கணம் அம்மா! சாதி மதம் துறந்த சமத்துவம் அம்மா! சத்தியமேவ ஜெயதே என ஜெயிப்பதும் நம் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பிற்பகல் 1-50

எளியதொரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை நகர கழகச் செயலாளராக, நகர்மன்றத் தலைவராக, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக, மாவட்டக் கழகச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, கழக தேர்தல் பிரிவுச் செயலாளராக, கழகப் பொருளாளராக, நிதித் துறை, பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்புகள் பல தந்து, பண்பாட்டுச் சிறப்பும், பாரம்பரியப் பெருமையும் மிக்க இந்த மாமன்றத்தில் நான்காம் முறையாக பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்து, அதன் தொடர்ச்சியாக விவாதங்களுக்குப் பதிலளிக்கின்ற அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று ஒருங்கமைப்பாட்டு இலக்கணத்தை உலகுக்கு உரைத்தவன் தமிழன்; குடியாட்சி இலக்கணத்தை குடவோலை வழியே முடியாட்சிக் காலத்தே முன்மொழிந்தவன் தமிழன்; உயிர் நூலும், பயிர் நூலும் அறிந்து, விண்ணியலும் மண்ணியலும் தெரிந்து, கடலியலும் உலகியலும் உணர்ந்தவன் தமிழன்; ஓளவை முதல் ஆதிமந்தி வரை பெண்பாற் புலவர் பலர் பண்பாடித் திளைத்து பார் வியக்க வாழ்ந்தவன் தமிழன்; வடமலையில் விளைந்த பொன்னும், மணியும், குடமலையில் தோன்றிய ஆரமும், அகிலும், தென்கடலில் விளைந்த முத்தும், உப்பும் யாவும் திரட்டி உலகுக்கு ஈந்தவன் தமிழன்; காற்றின் வலியறிந்து, திசையறிந்து கலம் செலுத்தி, வீரத்தால் தூர நாடுகளை வென்றெடுத்து, விசாலமாக்கி ஜொலித்தவன் தமிழன்; ஆண்டவனை 'அம்மை அப்பன்' என்றும், இறையவனை 'தாயுமானவன்' என்றும், பிறந்த மண்ணைத் 'தாய் நாடு' என்றும் தாய்க் குலத்திற்குத் தலைவணக்கம் செய்தவன் தமிழன்; பேரறிவால், பெருந்திறத்தால், போர்முறையால், போதிக்கும் நல்லறிவால், வீரத்தால், விவேகத்தால், வெற்றிக்கொடி நாட்டி, பார் போற்ற வாழ்ந்த இனம் தமிழினம்!

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

இத்தகு சீர்மிகுந்த, சிறப்பு மிகுந்த தமிழினத்தின் தனித் தலைவி, தமிழ் மொழியின் தவப் புதல்வி, தமிழ்க் குலத்தின் தங்கத் தலைவி எங்கள் உயிரினும் உயிரான எங்கள் குலசாமி! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களைக் கொச்சைப்படுத்தி எழுதினான் ஒரு சிங்களத்துச் சிறுமதியாளன். "எரிதழல் கொண்டு வா" என்று நெருப்பு வரி உண்டு பாரதியின் பாட்டில்! அந்த "எரிதழல் கொண்டு வா! மாண்புமிகு அம்மா அவர்களை ஏளனம் செய்து எழுதிய அந்தச் சிங்களர்களின் ஆணவம் அழிப்போம்" என்றே துடித்தெழுந்தார்கள் தமிழக மக்கள்! ஆனால், அமைதி காக்க ஆணையிட்டார் எங்கள் அம்மா! சட்டத்தைக் கையில் எடுக்கும் தருக்கராய் எங்களை வளர்க்கவில்லை எங்கள் அம்மா! அராஜகம் இழைத்திடும் அறிவிலிகளாய் உருவாக்கவில்லை எங்கள் அம்மா! மாண்புமிகு அம்மா அவர்கள் தனக்கேயுரிய ராஜதந்திரத்தால், மண்டை கனத்த ராஜபக்சேவை மண்டியிடச் செய்து, மன்னிப்புக் கேட்கச் செய்து, துடித்தெழுந்த தொண்டர்களை அமைதி கொள்ளச் செய்தார்! (மேசையைத் தட்டும் ஒலி)

"பகைவனுக்கு அருள்வாய், நன்நெஞ்சே பகைவனுக்கு அருள்வாய்" என்று மகாகவி பாரதி பாடியதுபோல் பகைவர்களையும் பொறுத்தருளும் கருணை மனம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எங்களின் கைகள் கட்டப்பட்டுள்ளன என்பதை மட்டும் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டிலே, கோயிலிலே, கல்விக்கூடத்திலே, கற்றவர் சபையிலே, எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு சம்பிரதாயம் இருக்கிறது, சட்டமும் இருக்கிறது. அதேபோல, இந்தப் பெருமைக்குரிய சட்டமன்றத்திற்கு ஒரு மரபு இருக்கிறது, மாண்பு இருக்கிறது. மக்களை மதிக்காத சிலர், அந்த மரபையும் மதிப்பதில்லை, மாண்பையும் போற்றுவது இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகளைப்பற்றிப் பேசினாலே அவர்களுக்கு ஜன்னி வந்து விடுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிகளைப்பற்றிப் புகழ்ந்தால், அவர்களுக்கு வெறியே வந்துவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கையிலே வேப்பிலை வைத்து ஆடவில்லை, அவ்வளவுதான்! "இடக்கிறது ஓட்டுத் திண்ணை, கனவு காண்பது மச்ச வீடு" என்ற

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பழமொழியைப்போல, பாராளுமன்றத் தேர்தலில் மூக்குடைபட்டவர்கள் எல்லாம் 2016 சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்போம் என்று வீரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவேண்டிய சட்டமன்றத்தைச் சொந்தப் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்ற இடமாக மாற்ற நினைத்தவர்கள், இப்போது விதி வீதியாகப் போய் புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எதிராக, புதிதாக ஒரு புளுகுக் கூட்டணி அமைக்க முடியாதா என்று ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்கள். என்னதான் உருண்டு, புரண்டாலும் அவர்களின் நிலைமை, 'கொள்ளையடிக்கப் போகிறவன் குருடனைத் துணைக்குக் கூட்டிட்டுப் போனானாம்' என்கிற பழமொழியைப்போல பரிதாபமாகத்தான் முடியப்போகிறது. அவர்களின் சூதும், வாதும் நிறைந்த சூழ்ச்சிகளையெல்லாம், தமிழக மக்களின் துணையோடு மாண்புமிகு அம்மா அவர்கள் தூள் தூளாக்கிவிடுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் என்பது இந்திய அரசமைப்புச் சட்டம் வகுத்து அளித்துள்ள வரையறைகளின்படி, மக்கள் நல ஆட்சிக்கு அடித்தளமாக விளங்கும் சட்டங்களை இயற்றும் மாமன்றம் ஆகும். சமுதாயக் கட்டமைப்புக்குப் பெரிதும் உதவும் அந்தச் சட்டங்கள் மற்றும் குறிக்கோள்களை, மக்களிடம் நேரடியாகக் கொண்டு சேர்த்திட வகைசெய்யும் அரசின் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்ற உரிய நிதியினை ஒவ்வோர் ஆண்டும், அந்தந்த மானியக் கோரிக்கைகளின்கீழ் அரசாங்கத்திற்கு வழங்கி, அதன் பயன்பாட்டைக் கண்காணிக்கும் தலையாய பொறுப்பை மக்கள் மன்றமாகிய இச்சட்டமன்றம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதை உணர்ந்தே, மாண்புமிகு அம்மா அவர்கள், தாம் தீட்டும் ஒவ்வொரு அற்புதத் திட்டத்தையும், சமுதாய மாற்றத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்தளிக்கும் ஒவ்வொரு கொள்கைப் பிரகடனத்தையும், சட்டமன்றத்தில் அறிவித்து, சட்டமன்றத்தின்மூலம் மக்கள் மன்றத்திற்கு அத்திட்டங்களையும்,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

தீர்வுகளையும் எடுத்துச் செல்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சட்டமன்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளிக்கும் உயர் தனி மதிப்பின் அடையாளம்தான், சட்டமன்றம் நடக்கும் நாட்களில் நாம் தினந்தோறும் கேட்டு, உவந்து, மகிழ்ந்து வரவேற்கும் விதி 110-ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்படும் உன்னதத் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு மகிழ்ச்சியையும், எதிர்க்கட்சிகளுக்கு எரிச்சலையும் தருகிற ஒரு எண் இருக்கிறது என்றால், அந்த எண் 110 தான். விதி எண் 110-ன்படி. இந்த அவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிடும் அறிவிப்புகள் எல்லாமே தமிழக மக்களுக்கு ஆனந்தத்தை அள்ளித் தருகின்ற அறிக்கைகளாக இருக்கின்றன. தீபாவளியும், கிறிஸ்துமசும், ரம்ஜானும் அண்டுக்கொருமுறை வருவதற்குப் பதிலாக அடிக்கடி வந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்குமோ அப்படி ஓர் ஆனந்தம் மக்களுக்கு. ஜனநாயகப் பயிர் விளைகின்ற இந்தச் சட்டமன்றத்திலே, இடையிடையே சில களைகளும் முளைத்துவிடுகின்றன. அந்தக் களைகளைக் களைந்தால்தான் சட்டமன்றத்தின் மாண்பும் கூடும், மரியாதையும் கூடும் என்பதை அடக்கத்தோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை மீதான கருத்துகள். கருணாநிதியின் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்தது எல்லாமே ஏறுக்கு மாறுதான். பேசியது எல்லாமே எடக்கு மடக்குதான். செய்தது எல்லாமே ஏட்டிக்குப் போட்டிதான். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சமாதிக்குப் போனது. சாமான்யர்களின் மகிழ்ச்சி சரிந்து போனது. கல்வி எழுச்சி காணாமல் போனது. விவசாய வளர்ச்சி வீணாகப் போனது. மின் உற்பத்தியோ குறைந்து போனது. தொழில் முயற்சியோ துவண்டு போனது. மொத்தத்தில் நாட்டை நாசப்படுத்தி, நிதி நிலையை மோசப்படுத்தினார் கருணாநிதி.

திருவாசகச் சிர்கேட்டினால் தமிழ்நாட்டை இருளில் மூழ்கடித்து மின்வாரியத்தைக் கடலில் மூழ்க வைத்தார் கருணாநிதி. மாடு கறக்கவும், பூனை குடிக்கவும் சரியாக இருந்தது என்ற பழமொழியைப் போல, அரசுக்கு வரவேண்டிய நிதியைக் கருணாநிதி குடும்பத்தினரும், கட்சியினரும் குடித்துத்

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தீர்த்துவிட்டதால், அந்த நிதி மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. அப்படிச் சீர்கெட்ட நிதிநிலையைச் சீர்படுத்தி, நேர்படுத்தி, நிலைப்படுத்தி, நீதியின் ஆட்சி மட்டுமல்ல, நிதியின் ஆட்சியும் இதுதான் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழின் அழகாக, முக்கனியின் சுவையாக, முழு மதியின் பொலிவாக, மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்து முழுமையான வளர்ச்சி கண்டு, நானிலம் போற்றிட நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதன் முன்னோட்டமாகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2014-2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இம்மாமன்றத்தில் சமர்ப்பித்தது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொங்கு மா கடல்போல் புறப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்கள், புயல் எனச் சுழன்று மக்களைச் சந்தித்து, கழகத்தின் வெற்றியை உறுதியாக்கி, புயல் எழுப்பிய எதிர்கட்சிகளை இறுதியாக்கி வரலாற்று வெற்றியாகத் தனித்து நின்று 39 தொகுதிகளில் 37 இடங்களில் வெற்றி கொண்டு வாகை சூடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தலைத் தொடர்ந்து, 10-7-2014 முதல் இன்று வரை பல்வேறு துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கைகள் சார்ந்த விவாதங்கள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு, அதன் நிறைவாக இன்று பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் எனப் பல்வேறு துறை சார்ந்த கேட்புத் தொகைக்கான விவாதங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காலத்தின் அருமை கருதி நான் என்னுடைய பேச்சை நிறைவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கோரிக்கைகளையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நேரடிப் பார்வைக்கு அனுப்பி, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சுமன்றும்ஏர்ப் பின்னது உலகம்', என்னும் வள்ளுவன் குறளுக்கு வடிவம் கொடுத்து, 22 வருட காவேரிப் பிரச்சினைக்கும், 37 வருட முல்லைப் பெரியாற்று முட்டுக்கட்டைக்கும் முடிவு கண்டு, விடியல் தந்த வெற்றித் திருமகள், அலைமீது வலை கொண்டு வாழும் மீனவர் தம் வாழ்வை இலை கொண்ட இயக்கமே இமையாகக் காக்கும் என்பதை உலகிற்கே உணர்த்திடும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்பதற்குக் களமாடும் காவியம், வீதிக்குள் நுழைந்து, வீடுவரை வந்து, சொந்தக் காரில் வந்து இறங்கியதைப்போல, ஏழையெளியோர்க்கு இன்பம் தந்த. . .

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 38-பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.456,38,88,000/-, மூலதனக் கணக்கில் ரூ.3,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(அ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.40,28,82,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,10,21,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.878,27,98,000/-, மூலதனக் கணக்கில் ரூ.2,000,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.90,80,24,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்படுகின்றன.

(உ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.95,75,28,000/-, மூலதனக் கணக்கில் ரூ.83,28,32,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்படுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,541,06,25,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தற்போது அறிவிப்புகளை வெளியிடலாம்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினை ஏற்று அறிவிப்புகளை நான் வெளியிடுகின்றேன்.

பொதுத் துறை

1. மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் அரியலூர் மாவட்டத்தில் புதியதாகத் தோற்றுவித்தல்

முன்னாள் படைவீரர்கள்/சார்ந்தோர்கள் அவர்களுக்கான பல்வேறு உதவிகளை எளிதில் பெற்றுப் பயன்பெறும்பொருட்டு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் அரியலூர் மாவட்டத்தில் புதியதாகத் தோற்றுவிக்கப்படும். இந்தப் புதிய அலுவலகத்தையும் சேர்த்து தமிழகத்தில் உள்ள மொத்த மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களின் எண்ணிக்கை 29-லிருந்து 30-ஆக உயரும்.

இதற்கு மாநில அரசின் ஆண்டு செலவுத் தொகை ரூ.15 இலட்சம் ஆகும்.

2. படைப் பணிக்குத் தனது ஒரே மகன்/மகளை மற்றும் தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியம் உயர்த்தி வழங்குதல்

படைப் பணிக்குத் தனது ஒரே மகன்/மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.750/-லிருந்து உயர்த்தப்பட்டு, ஒரே தடவையாக ரூ.20,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும், மேலும் தனது ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளை அனுப்பும் பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.1,000/-லிருந்து உயர்த்தப்பட்டு, ஒரே தடவையாக ரூ.25,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படும்.

இதற்கு மாநில அரசின் செலவுத் தொகை ரூ.3.65 கோடி ஆகும்.

3. நாட்டைப் பாதுகாக்கும் இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்குத் தொகுப்பு மானியம் வழங்குதல்

முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர்களாகப் (Permanent Commissioned Officers) பயிற்சியில் (NDA/IME/Naval/Air Force Academy) சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

முப்படையில் குறுகிய கால படைத் துறை அலுவலர்களாகப் (Short Commissioned Officers) பயிற்சியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.50,000/- வழங்கப்படும்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளில் (Junior Commissioned Officers and Other Ranks) சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ25,000/- வழங்கப்படும்.

இதற்கு மாநில அரசின் ஆண்டு செலவுத் தொகை ரூ.1 கோடி. ஆகும்.

4. தொழிற்கல்வி மற்றும் கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் பொது நேரக் கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்குத் தற்போது வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, மாலை நேரக் கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கும் வழங்குதல்

தற்போது தொழிற்கல்வி மற்றும் கலை மற்றும் அறிவியல் படிப்புகளில் பொது (Regular) நேர கல்லூரிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தொழிற்கல்வியில் இளநிலை/ முதுநிலை படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.10,000/-, பட்டயப் படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.7,500/- மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.2,500/- வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு விடுதிக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ.4,000/- வழங்கப்படுகிறது.

கலை மற்றும் அறிவியல் கல்வி பயிலும் முன்னாள் படை வீரர்களின் பிள்ளைகளுக்கு இளநிலை படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ.2,000/-, முதுநிலை படிப்பிற்கு ஆண்டுக்கு, ரூ.2,500/- கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இவ்வுதவித் தொகை மாலை நேரக் கல்லூரிகளில் சேர்க்கப் பெற்று கல்வி பயிலும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கும் வழங்கப்படும்.

இச்செலவினம் தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதியின்மூலம் செலவிடப்படும்.

5. சுயதொழில் புரியும் முன்னாள் படைவீரர்கள்/கைம்பெண்கள்/ முன்னாள் படைவீரர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வட்டி மானியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன் தொகை உச்சவரம்பினை உயர்த்தி வழங்குதல்

தற்போது முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வங்கிக் கடன் வட்டி மானியத் திட்டத்தின்கீழ்

ரூ.5 இலட்சம் வரை பெறப்படும் கடன்களுக்கு 75 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.5 இலட்சம் உச்சவரம்பு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்படும்.

அதுபோலவே, கடனைத் திரும்பச் செலுத்தும் காலம் 60 மாதங்களிலிருந்து 96 மாதங்களாக நீட்டித்து வழங்கப்படும்.

தற்போது முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வட்டி மானியத் திட்டத்தின்கீழ் ரூ.7.50 இலட்சம் வரை பெறப்படும் கடன்களுக்கு 100 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.7.50 இலட்சம் உச்சவரம்பு ரூ.15 இலட்சமாக உயர்த்தப்படும்.

அதுபோலவே, கடனைத் திரும்பச் செலுத்தும் காலம் 60 மாதங்களிலிருந்து 96 மாதங்களாக நீட்டித்து வழங்கப்படும்.

இச்செலவினம் தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதிமூலம் செலவிடப்படும்.

பிற்பகல் 2-10

6. போர் கைம்பெண்கள் மற்றும் போரில் 50 விழுக்காடு மற்றும் அதற்குமேல் ஊனமுற்ற படை வீரர்களின் மகள்களுக்கு வழங்கப்படும் திருமண மானியம் ரூ.25,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்குதல்

தற்போது போர் கைம்பெண்கள் மற்றும் போரில் 50 விழுக்காடு மற்றும் அதற்குமேல் ஊனமுற்ற படை வீரர்களின் மகள்களுக்கு ரூ.25,000/- திருமண மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இச்செலவினம் தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் தொகுப்பு நிதிமூலம் செலவிடப்படும்.

7. போரில் மரணமடைந்த படை வீரர்களின் வாரிசுதாரர்கள், போர் கைம்பெண்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படும் வருடாந்திர பராமரிப்பு மானியம் ரூ.12,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்குதல்

போரில் மரணமடைந்த படை வீரர்களின் வாரிசுதாரர்கள், போர் கைம்பெண்கள் மற்றும் போரில் ஊனமுற்றோர்களுக்குத்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

தற்போது வருடாந்திரப் பராமரிப்பு மானியமாக ரூ.12,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூ.12,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இதற்கு மாநில அரசின் கூடுதல் செலவுத் தொகை ஆண்டுக்கு ரூ.55 இலட்சம் ஆகும்.

8. வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு சென்னையில் "இடம் பெயர்ந்தோர் வள மையம்" ஒன்று புதியதாக அமைத்தல்

வெளிநாடுகளில் பணிபுரிந்துவரும் தமிழகத்தைச் சார்ந்த வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு, "இடம்பெயர்ந்தோர் வள மையம்" ஒன்று சென்னையில் புதியதாக அமைக்கப்படும்.

இதற்கு மாநில அரசின் ஆண்டு செலவுத் தொகை ரூ.15 இலட்சமாகும்.

9. வெளிநாடுவாழ் தமிழர்கள் இறப்பின்போது அவர்களின் உடலைக் கொண்டுவருவதற்கும், வறிய நிலை/மருத்துவ இயலாமையில் உள்ள தமிழர்களை ஆணையர் (மறுவாழ்வு) மூலமாகத் தாய்நாட்டிற்குத் திரும்ப அழைத்துவருவதற்கும் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ள ரூ.1 கோடி சுழற்சி நிதியாக ஒதுக்கீடு செய்தல்

வெளிநாடுவாழ் தமிழர்கள் இறப்பின்போது அவர்களின் உடலைக் கொண்டுவருவதற்கும், வறிய நிலை/மருத்துவ இயலாமையில் உள்ள தமிழர்களை ஆணையர் (மறுவாழ்வு) மூலமாகத் தாய்நாட்டிற்குத் திரும்ப அழைத்து வருவதற்கும் ஏற்படும் செலவினத்தினை மேற்கொள்ள ரூ.1 கோடி சுழற்சி நிதியாக ஒதுக்கீடு செய்யப்படும்.

இதற்கு மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ரூ.1 கோடியாகும்.

நிதித் துறை

1. சொந்தக் கட்டடங்கள் இல்லாத சார் கருவூலங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 229 சார் கருவூலங்களில், தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவந்த 69 அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அம்மா அவர்கள் ஆணையிட்டவாறு, 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் நிதியாண்டுகளில் 41 இடங்களில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது. தற்பொழுது தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மீதமுள்ள 28 சார் கருவூலங்களில், 17 அலுவலகங்களுக்கு இந்த நிதியாண்டில் 11.31 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையை வலுப்படுத்தும்வகையில், சேலத்தில் ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்குதல்

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலமாகத் தணிக்கைப் பணிகளைச் சிறப்பாகச் சீராய்வு செய்யும் வகையில், 23.51 இலட்சம் ரூபாய் தொடர் செலவில், சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு இணை இயக்குநர் பணியிடத்துடன்கூடிய ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் உருவாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் துணைத்து நிலை தணிக்கையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைத் தரத்தை மாநில கணக்காயர் அலுவலகத் தணிக்கைத் தரத்திற்கு மேம்படுத்தும்வகையில், அண்ணா மேலாண்மைப் பயிற்சி மையம் அல்லது நடேசன் கூட்டுறவுப் பயிற்சி மையத்தின்மூலம் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அனைத்து நிலை தணிக்கையாளர்களுக்கும் 15.68 இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் தொடக்க நிலை மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

4. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் மின்—ஆளுமை நிருவாகத்தை நடைமுறைப்படுத்துதல்

அரசு ஓய்வுதியதாரர்களுக்கு மின்னணு தீர்வு/மண்டல மின்னணு தீர்வுமூலம் (ECS/RECS) ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்கள் வழங்கப்படுவதைப்போலவே, உள்ளாட்சி அமைப்புகளின்

ஓய்வூதியதாரர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்களை மின்னணு முறையில் வழங்க, மென்பொருள் மற்றும் இதர தொடர்புடைய செலவினங்களுக்கென முதற்கட்டமாக, 30.00 இலட்சம் ரூபாய் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

1. சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்துதல்

சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு, அயோத்தியாபட்டினம், பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை ஆகிய பின்தங்கிய வட்டாரங்களில் விவசாயிகள் குழுக்கள்மூலம் சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்கவும், சிறுதானியங்கள் அடிப்படையிலான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கவும் 1.47 கோடி ரூபாய் நிதி உதவியில் உபகரணங்கள் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2. ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் அமைத்தல்

சிவகங்கை மாவட்டத்திலுள்ள கண்ணன்குடி மற்றும் எஸ். புதூர், கரூர் மாவட்டத்திலுள்ள அரவக்குறிச்சி, மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி, சேடப்பட்டி மற்றும் தி. கல்லுப்பட்டி ஆகிய வட்டாரங்களில் மகளிர் சுயதொழிலை மேம்படுத்தும் நோக்கத்தோடு அப்பகுதியில் வாழும் 5,000 பெண்கள் பயன்பெறும் வகையில், 6 ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் 3.13 கோடி ரூபாய் செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 2-15

3. பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு ஷேர் ஆட்டோக்கள் வழங்குதல்

போக்குவரத்து வசதிகள் குறைவாக உள்ள பின்தங்கிய வட்டாரங்களான, விருதுநகர் மாவட்டத்திலுள்ள நரிக்குடி

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மற்றும் வெம்பக்கோட்டை, சேலம் மாவட்டத்திலுள்ள அயோத்தியாபட்டினம், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை ஆகிய வட்டாரங்களில் அமைந்துள்ள 100 கிராமங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில், பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு 1.27 கோடி ரூபாய் செலவில் 25 ஷேர் ஆட்டோக்கள் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், பரமக்குடி, போகலூர் வட்டாரங்களில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் நிறைமதிக்க 500 மாணவர்களுக்கு, மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு ஏதுவாக, 25 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சி அளித்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 (ஆங்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

(எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2014–2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து இற்கானும் செய்தி வரப்பெற்றுள்ளது:

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the Demands for further grants for the year 2014-2015."

9. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2014–2015, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014-2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 12-8-2014 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2014-2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2014–2015 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	3	..	..
3	நீதி நிருவாகம்	29,57	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	5	1	..
5	வேளாண்மைத் துறை	409,11,64	3	..
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	21,00,33	1	..
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1,77,02	1	..
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	1	..	43,36,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	14,65	..	..
14	எரிசக்தித் துறை	..	84,65,28	..
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	2	..	..
16	நிதித் துறை	11,44	..	..

2014 ஆகஸ்ட் 12]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1	..	68,54,53
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,024,16,83	..	..
20	உயர் கல்வித் துறை	4	2	..
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	..	1,97,06	..
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	20,50,81	1	..
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1	1	..
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	2	45,07,82	..
27	தொழில் துறை	1	37,50,00	113,79,01
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1,33,02	3	..
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	10,36,15	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	6,42,07	1	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	180,97,07	37,16,19	..

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2	..	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	1	..	..
38	பொதுத் துறை	12	..	..
39	கூட்டுறவுகள் (பொதுப் பணித் துறை)	12,61	13	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	12,29	12	..
41	வருவாய்த் துறை	58,44	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	5,699,03,66	622,95,73	..
43	பள்ளிக் கல்வித் துறை	1,902,48,72	1	..
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	1	..	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	149,75,01	47,36,02	..
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	..	..
47	இந்து சமயம் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	1	..	..
48	போக்குவரத்துத் துறை	125,00,00	350,00,00	45,40,00

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூதனம்	கடன்
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	1,81,39	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	189,26,65	..	..
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	..	3,63,00	..
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	99,83	8,00,03	..
	பெருமொத்தம்	9,745,39,59	1,238,31,53	271,09,54

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014 (ஒ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

10. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு

2014 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எண் 24/2014) மற்றும் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2014) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 12-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் திர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் திர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 12-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு இறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(@) தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2014), மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 6-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடைமீதான தடையை நீக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஒருமனதாக ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-25

(ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 5-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2014), மாண்புமிகு பின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-30

(ஊ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2014), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன சொல்லப் போகிறீர்கள்?

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சொல்லப்பட்டிருக்கிற இந்தக் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமென்பதிலே யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அதேசமயம் அவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, குற்றங்கள் நிருபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே, இருக்கிற சட்டத்தில் 'வழக்கமாக' என்கிற வார்த்தையை விடுவதன்மூலம், ஒருமுறை இந்தக் குற்றத்தைச் செய்தாலே, அந்தக் குற்றவாளிகள் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்படலாம் என்கிற நிலைமை ஏற்படுகிறது. இச்சட்டத்தைப் பல இடங்களிலே தவறாகப் பயன்படுத்தி, பலரும் கைது செய்யப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிற காரணத்தினால், பழைய முறையிலேயே இந்தச் சட்டம் 'வழக்கமாகக் குற்றம் செய்கிற' என்கிற அந்த வார்த்தையோடு இருக்கலாம் என்கிற அந்தத் திருத்தத்தை நான் முன்மொழிகின்றேன் அல்லது பொறுக்குக் குழுவுக்காவது இந்தச் சட்டத் திருத்தத்தை அனுப்பி, பரிசிலனைக்குப் பிறகு, மீண்டும் சட்டமன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற 'ஒருமுறை குற்றம் செய்தாலே' என்கிற அந்த வரிகள் தவறாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகையினாலே, ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தில் இருப்பதுபோல 'வழக்கமாக' என்ற வார்த்தையோடு இருக்கலாம். இந்தச் சட்டத்தை இப்படியே நிறைவேற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி வைக்கலாம். ஒரு முறை என்று சொன்னாலே, வேண்டுமென்றே complaint கொடுத்து விடுவார்கள். அதை அப்படியே எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு உருவாகும். எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் 'ஒருசெயலாக இருந்தாலும்' என்ற சொல் என்பது சிலநேரங்களில் பாகுபாடாகச் செயல்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கும். எனவே, அதை எடுத்து 'வழக்கமாக' என்ற முறையிலே உருவாக்க வேண்டும். எனவே, இந்தக் குற்றங்கள் என்பது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், அதே பாயிண்ட் தானே, பதிவு செய்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. நான் பதிவு செய்து விட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவனிப்பில் இருக்கக்கூடிய காணொலி சம்பந்தமாக, 'அரசின் செயல்பாடுகள் பாதிக்கப்படக்கூடியதாக, ஸ்தம்பிக்கக்கூடியதாக' என்ற வார்த்தைகள் எடுக்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், ஜனநாயக அடிப்படையில் அரசின் செயல்பாடுகள் எதுவாக இருந்தாலும் அதை விமர்சிக்கிற உரிமை என்பது ஜனநாயகத்தில் எல்லோருக்கும் இருக்கிறது. எனவே, அதைத் திருத்தி, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

[திரு. க. குணசேகரன்] [2014 ஆகஸ்ட் 12

இல்லையென்று சொன்னால், நிலைக் குழுவுக்காவது அனுப்பப்பட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Prevention of Dangerous Activities Act-அதாவது, குண்டர் சட்டம் ஒரு தடுப்புக் காவல் சட்டம். இந்தத் தடுப்புக் காவல் சட்டம் பற்றிய வரைமுறைகளை அரசியல் சாசனச் சட்டத்தினுடைய 22-வது பிரிவு கூறுகிறது. 'வழக்கமாக' என்ற அந்தப் பதத்தை நீக்குவது அரசியல் சாசனச் சட்டத்திற்கு முரணானதாக இருக்கின்றது. எனவே, பழைய முறையிலே அந்தச் சட்டம் இருக்க வேண்டுமென்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக முன்வைக்கின்றேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, போதும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கிடு) எனக்கு நேரம் இல்லை. நிறைய சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பேசுங்கள். ** பேசுங்கள்.

DR. K. KRISHNASAMY: **

பிற்பகல் 2-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும் நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

பேசவில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும் நீங்கள் பேசவில்லை. (குறுக்கீடு) நான் உங்களை அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். வாய்ப்புக் கொடுத்தும் நீங்கள் பேசவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அவைத் தலைவரை நீங்கள் கேள்விக் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு இல்லை. உங்களுக்கு நான் வாய்ப்பு தரவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் பேசுவது எதுவும் பதிவாகாது. மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் பதிவு ஆகாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையில்லை. உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன், நீங்கள் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ** அது சரியில்லை. நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கின்ற ஒரு நல்ல சட்டம். ஏனென்று சொன்னால் நாட்டிலே குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், குற்றவாளிகளை. . . (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்புத் தரவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: இந்தச் சட்டம் கொண்டு வந்திருப்பதற்கான நோக்கமே சமுதாயத்தில் குற்றவாளிகள், குற்றங்கள் குறைய வேண்டும், குற்றங்கள் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க வேண்டும். அப்படி தண்டனைகள் கொடுத்தால்தான் இந்தத் தவறுகள் வருங்காலத்தில் நடைபெறாமல் தடுக்க முடியும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தை, ஓர் அமைதியான சூழ்நிலையை, குற்றமற்ற சமுதாயமாக இங்கே இந்தச் சமுதாயத்தை வடிவமைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை தாங்கள் அத்தனைபேரும் மனமுவந்து வரவேற்றிருக்க வேண்டும். மாறாக இதில் சந்தேகத்தின்பெயரில் இதைத் தவறாக பயன்படுத்தக்கூடுமோ என்று அச்சப்படுவது என்பது தவறு. ஒரு நல்ல எண்ணத்தில், கொண்டுவரப்படுகின்ற இந்தச் சட்டத்தை எந்தவொரு விதத்திலும், ஒரு சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது. அனுமானத்தின் அடிப்படையில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது. இதனைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும் என்று ஏதோ ஓர் அனுமானத்தின் பெயரில், கற்பனையின் பெயரில், நீங்கள் இந்தச் சட்டத்தினைப் புரிந்துகொண்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. ஆகவே, நல்ல நோக்கத்திற்காக, நல்ல சமுதாயத்தினை அமைப்பதற்காக, குற்றங்களைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தினை தாங்கள் அத்தனைபேரும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத்தினை நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-40

(எ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள்,

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

காணொலித் திருடர்கள் ஆபியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆபியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்தும் குற்றவாளிகள், குடிசை நில அபகரிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2014), மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(iii) தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2014), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

•மாண்புமிகு திரு. டி. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2014)@ அறிவுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 8-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர், 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு, 2014 (அ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2014) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 2-45

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2014), மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 12

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் நிர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், நிர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 27 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 27 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் நிர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், நிர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 8-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2014 ஆகஸ்ட் 12

(ஏ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2014), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 40 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 40 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 8-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2014 ஆகஸ்ட் 12

(ஒள) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2014), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ *25-7-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2014 ஆகஸ்ட் 12

பிற்பகல் 2-50

(அ.அ) தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2014), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

@ 30-7-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2014), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, தெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 11-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அனுமதியின்றி கிணறு தோண்டக்கூடாது என்று தடுக்கிறோம். ஆனால், அனுமதியின்றி கிணறு தோண்டுபவர்களுக்கு 3 வருடத்திலிருந்து 7 வருடங்கள் வரை சிறைத் தண்டனை என்பது மிகவும் அதிகம். எனவே, அத்தண்டனைக் கால அளவைக் குறைத்து, சட்டத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன், என்ன, இதுதானா?

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகள் என்பது பொதுவாக 4 inch, 6 inch, 8 inch என்று போடப்படுவதில் எந்தவிதமான ஆபத்தும் இடையாது. ஆனால், 12 inch, 24 inch என்று போடும்போதான் ஆபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, ஆழ்குழாய்க் கிணறுகள் என்று ஒட்டுமொத்தமாக பொத்தாம் பொதுவாக குறிப்பிட்டு, அனைத்திற்கும் அனுமதி பெற வேண்டும் என்று வகுத்திருக்கிற விதிகள் என்பது, சாதாரணமாக சிறு விவசாயிகள் அல்லது தோட்டம் வைத்திருப்பவர்கள், தனி வீடுகள் வைத்திருப்பவர்கள் போர் போடுவதில் பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, இதை பொத்தாம் பொதுவாகப் போடாமல் ஆபத்துகளை விளைவிக்கக்கூடிய 12 inch-லிருந்து 24 inch வரையிலான பெரிய ஆழ்குழாய்க் கிணறுகளுக்கான தடையைக் கொண்டு வந்தால் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், சுருக்கமாகப்பேசி முடியுங்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதோடு இந்த சிறந்தவெளிக் கிணறுகள் என்பதற்கான ஒரு வரையறையையும் ஏற்படுத்தி இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவது சிறப்பாக இருக்கும். எனவே, இந்தச் சட்டத்தை நிலைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டங்களை இயற்றுவது மக்களுக்காகத்தான். இராமங்கணிலே இணறுகளைத் தோண்டுவதற்கும் உரிமம் பெற்றுத் தோண்ட வேண்டும். ஆனால், சிறிய கிணறுகளை அதாவது அவசியத்திற்குத் தோண்டுவதற்கு இந்தச் சட்டம் செல்லுமா என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, தண்டனையைக் குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சிறு குழந்தைகளின் பாதுகாப்பிற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களிலெல்லாம் அதிகமான விபத்துகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நம்முடைய மாநிலத்தில் விபத்துகள் குறைவாக இருந்தாலும், அவை நடைபெறுவதற்கு முன்பாகவே காக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்காகத்தான் இந்தச் சட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல விவசாயிகளுக்கோ, தனி வீட்டில் இருப்பவர்களுக்கோ இந்தச் சட்டத்தினால் எந்தப் பாதிப்பும் கிடையாது. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். குழாய் அமைக்கும்பொழுது கண்டிப்பாக அதற்கு ஒரு தடுப்புச் சுவர், மூடி வைத்து விபத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதாவது, குழந்தைகளின் பாதுகாப்பிற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2014 ஆகஸ்ட் 12

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2014), மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 4-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு டாக்டர் க. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 3-00

(அஉ) தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2014), மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஆகஸ்ட் 12] [திரு. கே.ஏ. ஜெயபால்]

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 7-8-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள். வெற்றி என்பதைத் தனது

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

திருநாமத்திலேயே சுமந்து, எடுக்கும் முயற்சி ஒவ்வொன்றிலும் வாகை சூடி, வெற்றித் திருமகளின் மறு உருவமாக விளங்கி, பேரறிஞரும், மக்கள் திலகமும் அமர்ந்து பணியாற்றிய (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவையில், புதுமைகள் பல படைத்து, புரட்சிகள் பல விதைத்து, புனித ஜார்ஜ் கோட்டையையும் சேர்த்தே காத்து, தமிழ் மக்களை முன்னேற்றும், நூறறிவு கொண்ட பேரறிவுத் தாய், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கண் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதினான்காவது சட்டமன்றப் பேரவை அமையப்பெற்று மூன்று ஆண்டுகள் முடிந்து, நான்காம் ஆண்டு நடைபெறுகையில், எட்டாவது கூட்டத் தொடரின் மூடிவில் நாம் தற்போது உள்ளோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில், எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி, சாதனை படைத்துள்ளார்கள். இந்த மூன்றாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களினால் பயனுற்ற மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களை இணந்தோறும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

விலையில்லா அரிசி கொண்டு உலை கொதிக்கும் இல்லங்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மூன்றாண்டுச் சாதனையை வாழ்த்துகின்றன.

ஏழை எளியோர் பெற்ற ஆடும் மாடும் "அம்மா" என எழுப்பும் ஒலி வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டதால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் மூன்றாண்டுச் சாதனையை வாழ்த்துகிறது.

சிரிக்கும் ஏழை முகம் காண, அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற, வறுமை போக்கும் திட்டங்கள் பல தந்து, வாழ்விக்கும் அரசாட்சியைத் தந்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை, வாழும் மனித இனம் வாயார வாழ்த்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நலமன்றி, தமக்கெனத் தனிவாழ்வு எப்போதும், ஏதுமில்லை என வாழும், மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்றாண்டுச் சாதனைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

முழுமதியாம் நம் தாயின், முக்கால உழைப்பில், மூன்றாண்டு ஆட்சி, முத்தமிழர் பூமியை, முதலிடத்தில் நிறுத்தி, முன்னேற்றம் கண்டது.

தாய் ஆளும் தமிழகம் தலைநிமிர்ந்து நடக்கிறது, தன்மானத்தோடு செழிக்கிறது.

அன்னைத் தமிழகம் பெற்றதோ முழு வளர்ச்சி, மக்களவைத் தேர்தலில் அன்னைக்குக் கிடைத்த வெற்றியே அதற்குச் சாட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

உப்பிட்டோரை உயிர் உள்ளவரை நினைக்கின்ற ஒப்பில்லாத் தமிழரினம், வாழ்வு தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பெரு வெற்றி தந்து, நாவார நன்றி சொல்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கலந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த எட்டாவது கூட்டத் தொடரின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்களை அறிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 30-1-2014 அன்று தொடங்கி 3-2-2014 வரையிலும், இரண்டாவது கூட்டம் 13-2-2014 முதல் 20-2-2014 வரையிலும் நடைபெற்று, நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல்கள் நிறைவடைந்த பின்னர், மூன்றாவது கூட்டம் 10-7-2014 அன்று தொடங்கி இன்று (12-8-2014) வரை நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

பேரவை கூடிய மொத்த நாட்கள் — 31 (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)

பேரவை மாலையிலும் கூடிய நாட்கள் — 3

அலுவல் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்— 158 மணி 44 நிமிடம்

30-1-2014 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற மொத்த நாட்கள் — 3

உரையாற்றிய உறுப்பினர்கள் — 15 பேர்

உரையாற்றிய நேரம் — 5 மணி 38 நிமிடம்

அதில் ஆளுங்கட்சியினர் — 4 பேர் பேசிய நேரம் 1 மணி 06 நிமிடம்

இதர கட்சியினர் — 11 பேர் பேசிய நேரம் 4 மணி 32 நிமிடம்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 3 மணி 26 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்

பதிலுரை ஆற்றிய நேரம் —2 மணி 4 நிமிடம்

(மேசையைத் தட்டும் ஒலி)

நிதி அலுவல்கள்—

2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 13-2-2014 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற நாட்கள்	— 4
பங்கேற்ற உறுப்பினர்கள்	— 26
உரையாற்றிய நேரம்	— 9 மணி 30 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	— 7 பேர் பேசிய நேரம் 1 மணி 40 நிமிடம்
இதர கட்சியினர்	— 19 பேர் பேசிய நேரம் 7 மணி 50 நிமிடம்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 6 மணி 10 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	— 53 நிமிடம்

மானியக் கோரிக்கைகள்

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	— 22
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 148
உரையாற்றிய நேரம்	— 49 மணி 11 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	— 39 பேர் பேசிய நேரம் 9 மணி 32 நிமிடம்
இதர கட்சியினர்	— 104 பேர் பேசிய நேரம் 39 மணி 39 நிமிடம்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 30 மணி 7 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தனது பொறுப்பில் உள்ள காவல் துறை சம்பந்தமாக 1 மணி 37 நிமிடங்கள் பதிலளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், விவாதத்தின் இடையில் 27 முறை, 53 நிமிட நேரம் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தனது பொறுப்பிலுள்ள துறைகள் மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்த நேர்வுகள்	— 8 முறை 7 நிமிடம்
	(மேசையைத் தட்டும் ஒலி)
மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	— 28 மணி 9 நிமிடம்

இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அவையில் உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படுவதில்லை என்று பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளியே உண்மைக்கு மாறான கருத்துகளைத் தெரிவித்து வந்துள்ளனர். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளியே பொதுக் கூட்டங்களை நடத்தி சட்டமன்ற நடவடிக்கைகளை உண்மைக்குப் புறம்பாக விமர்சிப்பதோடு, அவர்களும், அவர்களது கட்சியின் தலைவரும், பேரவையின் நடவடிக்கைகளை முறையாகவும், இடையூறுகள் இன்றியும் நடத்தவேண்டிய பொறுப்பிலும், கடப்பாட்டிலும் உள்ள பேரவைத் தலைவரைப் பற்றி உண்மைக்கு மாறாக விமர்சித்து பேரவைக்கு வெளியே பேசி வருகின்றார்கள். பேரவையில் ஜனநாயகம் இல்லையென்றும் தங்களுக்குப் பேசும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் பேசியுள்ளனர்.

பொதுவாகவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், முந்தைய ஆட்சியாளர்கள் என்ற முறையில் அவை நடவடிக்கைகளில் பங்குகொண்டு அவ்வப்போது எழும் விவாதங்களில் முறையாக பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று பதிலளிக்கும் முறையினைக் கைவிட்டு, முந்தைய அரசின்

செயல்பாடுகள் குறித்து விமர்சனம் எழும்போதெல்லாம் அவையில் இருந்து பதிலளிக்கவேண்டிய கட்டாயத்திலிருந்து தப்பிப்பதற்காக, "பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்" என்று நான் பல முறை தெரிவித்தாலும், திட்டமிட்டு ஏதேனும் ஒரு காரணத்தைத் தேடி அல்லது வார்த்தையைப் பிடித்துக்கொண்டு, தொடர்ந்து அவையை நடத்தவிடாமல் நின்றுகொண்டு அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டு, பின்னர் வெளியேறுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர் அல்லது வேண்டுமென்றே, திட்டமிட்டு, பேரவை விதிகளைத் துச்சமென நினைத்து உதாசீனப்படுத்தி, பேரவைத் தலைவரின் அனுமதியும் மீறி, பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து, குழுவாக அமர்ந்துகொண்டு கூழப்பம் விளைவித்து, மறியல் நடத்தி, பேரவைத் தலைவருக்கு எதிராக கோஷமிட்டதுடன் பேரவையின் அலுவல்கள் தொடர்ந்து நடைபெறாத வண்ணம் இடையூறு செய்து வந்தனர்.

பிற்பகல் 3-10

அரசியல் இலாபத்திற்காகவும், மலிவான விளம்பரத்திற்காகவும் தினமும் கேள்வி நேரம் முடிந்த பின்னர் அவைக்கு வந்து, இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை அக்கட்சியினர் வாடிக்கையாகக் கொண்டு செயல்பட்டனர். இருந்தாலும், தங்களைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய மக்களின் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் முன்வைக்க வாய்ப்பளிக்கும் வகையில் அவையின் நடவடிக்கைகளை ஜனநாயக முறைப்படியும், விதிகளின்படியும், பெருந்தன்மையுடனும் நடத்தவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நான் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்பதற்கு முன்னரே வழங்கிய சிரிய வழிகாட்டுதலின்படியும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இந்த கூட்டத் தொடரில் இரண்டு முறை வெளியேற்றப்பட்டுவிட்டதால், அவர்களை கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு அவையிலிருந்து நீக்கிவைக்கும் நடவடிக்கையை எடுக்காமல், அவர்களது ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்கள் தொகுதி மக்களுக்காக ஜனநாயகக் கடமையை ஆற்றவேண்டி அமைதியாக இருந்தேன்.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

இப்பேரவையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற நான் பட்டபாடு எல்லோரும் அறிந்தவைதான். என்றாலும், ஒன்றிரண்டை மட்டும் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

21-7-2014 அன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. இ. பெரியசாமி அவர்கள், எரிசக்தித் துறை மானியத்தின்மீது ஒரு மணி நேரம் பேசினார்கள். அவர் பேச வேண்டியவற்றையெல்லாம் பேசிவிட்டு, பின்னர் திட்டமிட்டு, குழப்பம் விளைவிக்க முற்பட்டார்கள். பேசுவதற்குக் கூடுதல் நேரம் வேண்டுமென்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மிகுந்த பெருந்தன்மையோடு இரண்டு நிமிடங்கள் வாய்ப்பளிக்கப் பரிந்துரை செய்து, அதற்கு மேலும் அவர் பேசி, குழப்பம் செய்து, வெளியேற்றப்பட்டார்கள். அது மூன்றாவது முறை. அப்போதும் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவில்லை.

எனினும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு தொடர்ந்து இத்தக் கூட்டத் தொடரில் என் இருக்கையருகே வந்து கூச்சலிட்டு, அவையை நடத்தவிடாமல் செய்ததால் நான்காவது முறையும் வெளியேற்றப்பட்டார்கள். தொடர்ந்து பேரவையை நடத்தவேண்டிய நிலையிலும், இதர கட்சி உறுப்பினர்களின் பேச்சுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டியுள்ள நிலையிலும் நான் இருப்பதால், 22-7-2014 அன்று வேறு வழியின்றி அவர்களைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது எனத் தீர்ப்பளிக்கும் கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன்.

இதனை ஓர் அரசியல் பிரச்சினையாக்கி, சுய இலாபத்திற்காக, பொதுக் கூட்டங்களை நடத்தி, பேட்டிகள் அளித்து, சட்டமன்றத்திற்குள்ள நன்மதிப்பைக் குறைக்கும்வகையில் உண்மைக்கு மாறான பிரசாரத்தை அக்கட்சியினர் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இருப்பினும் ஒருவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, இந்தக் கூட்டத் தொடரின்போது விவாதங்களில் உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதன்மூலம், நாட்டு மக்களுக்கும், ஊடகத் துறையினருக்கும் உண்மை நிலையை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

இவ்வாண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலும், தற்போது ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களிலும் நடைபெற்றுள்ள இந்த எட்டாவது கூட்டத் தொடர் மொத்தம் 31 நாட்கள் நடைபெற்றுள்ளது. இதில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம், வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் ஆகியவற்றில் உறுப்பினர்கள் உரையாற்றுவதற்கு கட்சி அடிப்படையில் அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் நீங்கலாக உள்ள மற்ற உறுப்பினர்கள் தங்களது கட்சிகளின் சார்பில் இவ்விவாதங்களில் பங்கேற்கின்றனர்.

நியாயமாகப் பார்க்கப்போனால், இவ்வாறு உரையாற்றக்கூடிய உறுப்பினர்களில் சுமார் 57 சதவிகிதமுள்ள ஆளும்கூட்சிக்கு 57 சதவிகித வாய்ப்புகளும், நேரமும் வழங்கப்பட வேண்டும். ஆளும்கட்சி உறுப்பினர்களும் மக்களின் வாக்குகளைப் பெருமளவில் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக இங்கே வீற்றிருப்பவர்கள்தான். சட்டமன்றத்தில் தொகுதி மக்களின் நலனுக்காக உரையாற்றவும், கோரிக்கைகளை வைக்கவும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எந்தளவுக்கு கடமையும், உரிமையும் உள்ளதோ, அதே அளவுக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் உள்ளது. எனினும், 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழியின்படி, செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தனது கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் குறைந்தாலும் பரவாயில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு விமர்சனங்களையும், குற்றச்சாட்டுகளையும் எதிர்கொள்ள நேரிட்டாலும் கவலையில்லை, ஜனநாயகத்தின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கூடுதல் நேரம் வழங்கவேண்டும் எனத் தொடர்ந்து பரிந்துரைத்து வந்துள்ளார்கள். அதன்படி, உரையாற்றக்கூடிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 57 சதவிகிதம் இருந்தாலும், சுமார் 73 சதவிகித வாய்ப்புகள் எதிர்க்கட்சியினருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன.

தங்களுக்கு வேண்டிய நேரத்தில் மட்டும், எண்ணிக்கை அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறை, அதாவது proportional representation வேண்டுமென்று சிலர் கோரிக்கை விடுப்பதை நாமும்

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

பின்பற்றி, அவையில் கட்சிகளுக்குள்ள உறுப்பினர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் வாய்ப்பு மற்றும் நேரத்தை ஒதுக்குவதானால், பல எதிர்க்கட்சிகளுக்கு விவாதங்களில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பு ஒன்றிரண்டு முறைகள்தான் வரும். ஆனால், எண்ணிக்கையைப் புறந்தள்ளிவிட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் எண்ணத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடாது என முடிவெடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தினமும் பேச அதிகமான வாய்ப்புகளையும், 25 நிமிடங்கள், 30 நிமிடங்கள் என அதிகபட்ச நேரத்தையும் அளித்து வந்துள்ளேன். அந்த நேரத்தில் பேச வேண்டியதையெல்லாம் முழுவதும் பேசிவிட்டு, முன்னரே ஆதாரத்தை என்னிடம் தராமல் பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர்கள் அவற்றிற்கு உரிய விளக்கங்கள் அளித்த பிறகு, வெளியே சென்று தங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கூறுவது மிகவும் வருந்தத்தக்கது.

பிற்பகல் 3-15

தற்போது நடைபெற்றுள்ள எட்டாவது கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் உரை தொடர்பான விவாதம், வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் 11-8-2014 வரை ஆற்றப்பட்ட மொத்த உரைகள் 180, எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் 63 மணி 48 நிமிடங்கள்.

இதில் 57 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கப்பட்ட வாய்ப்புகள் 49 மட்டுமே, அதாவது 27.22 சதவிகிதம். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 12 மணி 8 நிமிடங்கள். அதாவது 19.02 சதவிகித நேரம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, மொத்தத்தில், எதிர்க்கட்சிகளுக்கு சுமார் 73 சதவிகித வாய்ப்புகளும், சுமார் 81 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

13.86 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு 13.89 சதவிகித வாய்ப்புகளும்,

21.94 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்தில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் அக்கட்சியினர் பங்குகொள்ளவில்லை. 10-7-2014 அன்று வெளிநடப்பு செய்த பின்னர், மானியக் கோரிக்கை விவாதத்தில் அவர்கள் பங்கேற்கவில்லை. அந்த வாய்ப்புகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் எனில், அவர்களுக்கான வாய்ப்பு மற்றும் நேரம் மேலும் உயர்ந்திருக்கும்.

11.38 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 2.78 சதவிகித வாய்ப்புகளும், 4.65 சதவிகித நேரமும் மட்டுமே கிட்டியுள்ளது. காரணம், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவர்கள் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதத்திலும் பங்குகொள்ளவில்லை, வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்திலும் பங்குகொள்ளவில்லை. மானியக் கோரிக்கை விவாதத்தில் முதல் 9 நாட்களில் 5 நாட்கள் மட்டுமே பங்குகொண்டனர். 2 நாட்கள் அவர்கள் விவாதத்தில் பங்கேற்கும் வாய்ப்பிருந்தும் பங்கேற்கவில்லை. 2 நாட்கள் "அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்து கோஷமிட்டதால் வெளியேற்றவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி, வெளியேற்றப்பட்டனர்.

அவர்களும் மற்ற கட்சியினரைப் போல அவை நடவடிக்கைகளில் முறையாகப் பங்குகொண்டு உரையாற்றியிருப்பார்களானால், அவர்களது வாய்ப்புகளும் பெருமளவுக்கு உயர்ந்திருக்கும்.

அடுத்து 4.95 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு 14.44 சதவிகித வாய்ப்புகளும், 17.97 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

3.96 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கு 14.44 சதவிகித வாய்ப்புகளும், 14.71 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

2.47 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு 8.89 சதவிகித வாய்ப்புகளும், 6.82 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

1.48 சதவிகிதம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சிக்கு 1.11 சதவிகித வாய்ப்புகளும், 0.86 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

1 சதவிகிதத்திற்கும் குறைவான எண்ணிக்கையைக் கொண்டுள்ள மனிதநேய மக்கள் கட்சிக்கு 3.89 சதவிகித வாய்ப்புகளும், 3.47 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புதிய தமிழகம் கட்சிக்கு 2.32 சதவிகித வாய்ப்புகளும், 2.30 சதவிகித நேரமும் வழங்கப்பட்டுள்ளது.

மிகப் பெரும்பான்மையாக உள்ள ஆளுங்கட்சிக்குத் தரப்பட வேண்டிய வாய்ப்புகளைப் பெருமளவுக்கு குறைத்துக்கொண்டு, மிகக் குறைந்தளவு உறுப்பினர்களைக் கொண்டுள்ள எதிர்க்கட்சிகளுக்கே முக்கால் பங்கு வாய்ப்புகளை அளிக்கும் வகையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது ஆட்சிக் காலத்தில் ஜனநாயக முறைப்படி (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிகபட்ச வாய்ப்பளிக்கும் மன்றமாக இச்சட்டமன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த உண்மையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்பதற்காகத்தான் இவ்வளவு விரிவாக நான் புள்ளிவிவரங்களை இந்த மன்றத்தின்முன் வைத்தேன் என்பதைத் தெரிவித்து, நான் மற்ற அலுவல்கள் குறித்த புள்ளிவிவரங்களை அறிவிக்கிறேன்.

மாணியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள்

வரப்பெற்றவை	—	3,951
அனுமதிக்கப்பெற்றவை	—	3,676
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	682

வினாக்கள்–விடைகள்—

16-5-2013 முதல் 12-8-2014 வரை
உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு

ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	14,712
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	—	97
அனுமதிக்கப்பெற்றவை	—	14,712
உடுக்குறியிட்டவை	—	1,951
உடுக்குறியிடாதவை	—	6,967
குறுகிய கால வினா	—	20

பிற்பகல் 3-20

அனுமதிக்கப்பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்–

வ. எண்	உறுப்பினர் பெயர்	வினாக்களின் எண்ணிக்கை
1	திரு. ஆ நாராயணன்	2,445
2	திரு. ரா. சரத்குமார்	2,244
3	திரு. ம. குணசேகரன்	1,104
4	திரு. ரா.ம. பாபு முருகவேல்	923
5	திரு. எஸ்.ஆர். பார்த்திபன்	906

உடுக்குறியிட்ட வினாக்கள்—

எட்டாவது கூட்டத் தொடரின்போது அவையில் வினாயளிக்கப்பட்டவை	—	387
மொத்த தனை வினாக்கள்	—	865

இங்கே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதுர்யமாகக் கேள்விகள் கேட்க வேண்டும் என்பதற்காக ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். நீண்ட நாட்களாகக் கடுந்தவம் செய்து கொண்டிருந்தான் ஒருவன். ஒருவழியாய் கடவுள் அவன்முன் தோன்றினார். "என்ன வரம் வேண்டும், கேள்" என்றார். "ஆனால், சாகாமல் இருக்க மட்டும் என்னிடம் வரம் கேட்காதே" என்றார் கடவுள். "அப்படியானால், எனக்கு இரண்டு வரங்களைத் தருவீர்களா" என்றான், அவன். "சரி, தருகிறேன். கேள்" என்றார் கடவுள். "நான் தூங்கும்போது சாக இருக்க வேண்டும்" என்றான். "அப்படியே ஆகட்டும்" என்றவர், "இன்னொரு வரம் என்ன வேண்டும்?" என்று கேட்டார். "நான் எப்போதும் தூங்காமல் இருக்க வேண்டும்" என்றானே பார்க்கலாம். இதுதான் சாதுர்யம். இதுமாதிரி இங்கே நிறைய உறுப்பினர்கள் சாதுர்யமாக கேள்வி, துணைக் கேள்விகளைக் கேட்டு அரசிடமிருந்து பதில்களைப் பெற்றார்கள். தமிழக மக்களை நினைத்தே வாழும் நம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நல்ல பதில்களைத் தந்துள்ளார்கள்.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

எட்டாவது கூட்டத் தொடரில் அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் மூன்று நிலைகளில் இருப்பவர்கள்-

வ. எண்	உறுப்பினர் பெயர்		வினாக்களின் எண்ணிக்கை
1	திரு. ம. குணசேகரன்		9
2	திரு. மு.வீ. கருப்பையா திரு. ரா. சரத்குமார் திரு. சோழன் சே. பழனிச்சாமி திரு. கே.பி. பரமசிவம் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி	தலா	7
3	திரு. கார்த்திக் தொண்டைமான் திருமதி ம. சக்தி திரு. சி. கண்முகவேலு திரு. ப. டில்லி பாபு திரு. மு. முருகன் திரு. எஸ். முருகுமாறன் திரு. கு. ரவி	தலா	6

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	அமைச்சர்	வினாக்களின் எண்ணிக்கை
1	மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்	தலா 27
2	மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	26
3	மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்	25

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

4 மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் 24

5 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் 19

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் — 29

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் — 24

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் — 8 மணி 21 நிமிடம்

உடுக்குறியிடாத வினாக்கள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை — 700

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் — 675

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை — 4

உரையாற்றிய உறுப்பினர்கள் — 20
(அனைவரும் எதிர்க்கட்சியினர்)

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் —45 நிமிடங்கள்

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்ட நேர்வுகள் — 4

உரையாற்றிய உறுப்பினர்கள் — 16
(அனைவரும் எதிர்க்கட்சியினர்)

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் —28 நிமிடங்கள்

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை	—	523
கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை	—	335
அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை	—	13
உரையாற்றிய உறுப்பினர்கள் (ஒருவர் தவிர மற்ற அனைவரும் எதிர்க்கட்சியினர்)	—	26
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	—	2 மணி 25 நிமிடம்

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை	—	25
நிறைவேற்றப்பெற்றவை	—	25

இந்த மூன்றாவது கூட்டத் தொடரில், 16-7-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்த அறிவிப்பிற்கிணங்க, தமிழர்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடையான வேட்டி அல்லது இந்திய பாரம்பரிய உடைகளை அணிந்து வருவோருக்குத் தடை விதிப்பதைத் தடுப்பதற்கென, சிறப்பான ஒரு சட்டமுன்வடிவு இக்கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு, இன்று நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் கலாசாரப் பெருமைக்கும், பண்பாட்டிற்கும், தன்மானத்திற்கும் பங்கம் வராமல் மாண்புமிகு அம்மா அவர்கள் பாதுகாத்தார்கள்.

மேலும், முக்கியமான சட்டமுன்வடிவுகளும் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—

"பேரவை விதி 110" என்றால் என்ன என்பதற்கு அறிமுகமே தேவையில்லை என்கின்ற அளவிற்கு, பேரவை விதி 110 என்றாலே தமிழ்நாட்டுக்கு வளத்தைத் தரும் உன்னதத் திட்டங்களுக்கான வழி என்று தமிழ்நாட்டு மக்கள் வியந்து (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுமளவுக்கு, பேரவையில் இன்றைக்கு என்ன அறிவிக்கப்போகிறார்கள் என்று பாமர மக்கள் எதிர்பார்க்கும்

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

அளவிற்கு, விதி 110-ன்கீழான அறிவிப்பினால் தன் விதி மாறாதா என்ற ஏக்கத்திலுள்ள நெஞ்சங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில் விதி 110-ன்கீழ் அறிவிப்புகள் அமைந்துள்ளன.

1967 ஆம் ஆண்டில், ஹைதராபாத், உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர். சி.வி. ராமன் வைரங்கள் குறித்து ஒரு பேருரை வழங்கினார். அவரது உரைக்குப் பிறகு ஒரு மாணவன் எழுந்து, ஐயா, வைரங்களின் தன்மை, குணம், ஒளிச்சிதறல் பற்றியெல்லாம் தெளிவாகச் சொன்னீர்கள், இந்த வைரங்களைச் செய்வது எப்படி என்று சொல்லவில்லையே என்று கேட்டான். சுவரில் அடித்த பந்துபோல ராமனிடமிருந்து பதில் வந்தது, அது மிகச் சுலபம், ஒரு கரித்துண்டை எடுத்துக்கொள், பூமியில் ஆயிரம் அடி ஆழத்தில் புதைத்து வைத்துவிட்டு, ஆயிரம் ஆண்டுகள் காத்திரு என்றார். கரவொலியில் அரங்கமே பல நிமிடங்கள் அதிர்ந்தது. குறைந்த காலத்தில் கூழாங் கற்களையும், வைரக் கற்களாக மாற்றும் வல்லமை பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பூனையையும் புலியாக மாற்றக்கூடிய திண்மை கொண்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறண்ட தமிழகத்தை வளர்ந்த தமிழகமாக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருண்ட தமிழகத்தை ஒளிரும் தமிழகமாக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் எத்தனை எத்தனைத் திட்டங்கள், ஒவ்வொன்றும் வைரங்கள்!

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை உள்ளடக்கிய 109 அறிக்கைகளைக் கடந்த மூன்று ஆண்டுகளில் பேரவை விதி 110-ன்கீழ் அளித்து சாதனை படைத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான்காம் ஆண்டில் எட்டாவது கூட்டத் தொடரில் மட்டும் 41 அறிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்துள்ளார்கள். இதுவரை 150 அறிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த திரு. இராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடையவர்களுக்கு

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

அளிக்கப்பட்ட தண்டனையை, மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் விடுதலை செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பு 'மூளையால் சிந்திப்பவர் பாதி மனிதன், இதயத்தாலும் சிந்திப்பவர்தான் முழு மனிதன்' என்கிற டகோபேர்ட் கருத்தினை நினைவுபடுத்தியது.

காக்கைக்கும், குருவிக்கும் சொந்தக் கூடு உள்ளபோது, என் மக்களுக்கு 855 கோடி ரூபாய்க்குச் சொந்த வீடு என வீட்டு வசதி குறித்த அறிவிப்பு.

37 ஆண்டுகளாக நடந்து வந்த போராட்டத்தில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவது குறித்தும், (மேசையைத் தட்டும் ஒலி) அணையின் ஷட்டர்கள் இறக்கப்பட்டது குறித்தும் மகிழ்ச்சிதெரிவித்தும் உள்ளதைச் செய்தியினை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வெற்றியையும், நீதியையும் பெற்றுக்கொடுத்த இச்சாதனை தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்வாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

22 ஆண்டு கால காவேரி உரிமைப் போரில் கம்பீர வெற்றி, 37 ஆண்டு கால முல்லைப் பெரியாறு மீட்புப் போராட்டத்தில் முடிசூடிய வெற்றி பெற்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-25

இதுவரை சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஒரே நாளில் விதி 110-ன்கீழ் 6 அறிக்கைகளை 11-8-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்து அதிலும் சாதனை படைத்துள்ளார்கள். ஒவ்வோர் அறிவிப்பும் பொக்கிஷம் போன்றது. எதைச் சொல்வது, எதை விடுப்பது எனத் தெரியவில்லை. நான் பல குறிப்புகளை @ வைத்திருந்தாலும், நேரமின்மை காரணமாக அவற்றைத் தெரிவிக்க முடியவில்லை. அவையின் அனுமதியோடு அவற்றை அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்கிறேன்.

@ 1183 முதல் 1197 வரையிலான பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

ஒரேயொரு கருத்து. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை வைத்தபின்னர், நன்றி தெரிவித்து திரு. கே. கோபிநாத் அவர்கள் தெலுங்கில் உரையாற்றுகையில், தான் ஏற்கெனவே வைத்த கோரிக்கையினை தெலுங்கில் பேச, பன்மொழிப் புலமை பெற்ற பல்கலைக்கழகம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெலுங்கில் சுட்டிக்காட்டியது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களின்போது உறுப்பினர்கள் தெரிவிக்கும், அதிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உடனுக்குடன் ஆய்ந்து, ஒவ்வொரு துறை சம்பந்தமாகவும், தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளும், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்லாயிரம் கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்களை வகுத்து பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள் என்பதிலிருந்து, சட்டமன்ற ஜனநாயகத்திற்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த அளவுக்கு உயர் சிறப்பு முன்னுரிமை வழங்கி வருகிறார்கள் என்பது உறுப்பினர்களுக்குப் புலப்படும் என நான் கருதுகிறேன்.

மானியக் கோரிக்கைகளைப் பொறுத்தவரை, 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரியணை ஏறியபோதே, தனது பொறுப்பிலுள்ள துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்திற்கும் விளக்கமாகப் பதிலளிக்கும் சரித்திரச் சாதனையைப் படைத்தவர்கள். அதனை இன்று வரையும் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்த ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கை விவாதப் பதிலுரையின்போதுகூட, "மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலும், கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையைக் கருத்தில் கொண்டும், நடப்பு ஆண்டிற்கான அறிவிப்புகளை அளிக்கிறேன்" என்று குறிப்பிட்டுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

விவாதங்களில் சூட்டினைத் தவிர்க்க, ஹாஸ்யத்திற்கும் குறைவில்லை. 30-7-2014 அன்று மாண்புமிகு உயர் கல்வித் துறை

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

அமைச்சர் அவர்கள், 'எண்ணிய எண்ணியாங்கு' என ஒரு திருக்குறளைச் சொல்லி, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எனச் சொல்வதைக் கவனித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 'இந்தக் குறளைச் சொன்னவர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளுவர்' என்று சொல்லி அவையில் பலத்த சிரிப்பொலியை ஏற்படுத்த, அவையில் புதிய உற்சாகம் பிறந்தது.

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—

பொது நிறுவனங்கள் குழு	—	106
பொதுக் கணக்குக் குழு	—	74
அரசு உறுதிமொழிக் குழு	—	30
மனுக்கள் குழு	—	6
மதிப்பீட்டுக் குழு	—	5
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	—	5
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	—	1
அவை உரிமைக் குழு	—	1

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	—	141
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	—	375

உறுப்பினர்கள் வருகை—

30-1-2014 முதல் 12-3-2014 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 104 ஆகும்.

அனைத்து நாட்களுக்கும் வருகை புரிந்த உறுப்பினர்கள்—

வரிசைஎண்	உறுப்பினர்களின் பெயர்
1.	திரு. எம்.கே. அசோக்
2.	திரு. இரா. அண்ணாதுரை
3.	திரு. ஆ.க. அரங்கநாதன்

4. திருமதி க. அழகுவேலு
5. திரு. கே.பி. அன்பழகன்
6. திரு. வி.சி. ஆறுக்குட்டி
7. திருமதி த. இந்திராகாந்தி
8. திரு. கே.வி. இராமலிங்கம்
9. திரு. வி.எஸ். இராஜி
10. திரு. இரா. இராஜேந்திரன்
11. திரு. கடம்பூர் ராஜு
12. திருமதி எஸ். கனிதா சம்பத்
13. திரு. பா. கணேசன்
14. திரு. பி.வி. சுதிரவன்
15. திரு. கே.பி. சந்தன்
16. திரு. ஏ.ஏ. கருப்பசாமி
17. திரு. முவீ. கருப்பையா
18. திரு. வி.பி. கலைராஜன்
19. திரு. எஸ்.வி. காமராஜ்
20. திரு. கே. காமராஜ்
21. திரு. கார்த்திக் தொண்டைமான்
22. திரு. ஆர்.என். கிட்டுசாமி
23. திரு. கு.ப. கிருஷ்ணன்
24. திரு. சி. கிருஷ்ணன்
25. திரு. வே. குணசீலன்
26. திரு. ம. குணசேகரன்
27. திரு. கே. குப்பன்
28. திரு. இரா. குமரகுரு

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

29. திரு. க. கோபால்சாமி
30. திருமதி ம. சக்தி
31. திரு. சி. சண்முகவேலு
32. திரு. ஆர். சந்திரசேகர்
33. திரு. கோவி. சம்பத்குமார்
34. திருமதி ஆர். சாந்தி
35. திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்
36. திரு. ஓ.கே. சின்னராஜ்
37. திரு. ஆர். சீனிவாசன்
38. திரு. இ. சுப்பையா
39. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
40. திரு. ஞா. செந்தமிழன்
41. திரு. சித. செல்லப்பாண்டியன்
42. திரு. எஸ்.கே. செல்வம்
43. திரு. எம்.கே. செல்வராஜ்
44. திருமதி செல்வி ராமஜெயம்
45. திரு. வி. சோமசுந்தரம்
46. திரு. சோழன் சித. பழனிச்சாமி
47. திரு. தங்க. தமிழ்ச்செல்வன்
48. திரு. கா. தமிழரசன்
49. முனைவர் செ.கு. தமிழரசன்
50. திரு. இரா. தமிழ்ச்செல்வன்
51. திரு. ப. தன்சிங்
52. திரு. செ. தாமோதரன்
53. திரு. இரா. துரைக்கண்ணு

54. திரு. ஆர். துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை
55. திரு. என்.எஸ்.என். நடராஜ்
56. திரு. நயினார் நாகேந்திரன்
57. திரு. பி.ஜி. நாராயணன்
58. திரு. வ. நீலகண்டன்
59. திரு. கோடி. பச்சைமால்
60. திரு. மு. பரஞ்ஜோதி
61. திரு. கே.பி. பரமசிவம்
62. திரு. சு. பவன்ராஜ்
63. திரு. ச. பழனிச்சாமி
64. திரு. க. பாண்டியராஜன்
65. திரு. அ. பாப்பா சுந்தரம்
66. செல்வி கே. பாலபாரதி
67. திரு. கே.பி.பி. பாஸ்கர்
68. திரு. ஜே.சி.டி. பிரபாகர்
69. திரு. புத்திசந்திரன்
70. திரு. இரா. பெருமாள்
71. திரு. கே. பொன்னுசாமி
72. திரு. ஏ.கே. போஸ்
73. திரு. இரா. மணிமாறன்
74. திரு. துரை. மணிவேல்
75. திரு. தா. மலரவன்
76. திரு. க. மனோகரன்
77. திருமதி மனோரஞ்சிதம்
78. திரு. சு. மாதேஸ்வரன்

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

79. திரு. கு.வ. மார்க்கண்டேயன்

80. திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி

81. திருமதி ச. முத்துசெல்வி

82. திரு. ம. முத்துராமலிங்கம்

83. திரு. மு. முருகன்

84. திரு. என். முருகுமாறன்

85. திரு. வ. முஹம்மத்ஜான்

86. திரு. காகோ. ரமேஷ்

87. திரு. க. ரவி

88. திரு. மு. ராஜநாயகம்

89. திருமதி ஆர். ராஜலட்சுமி

90. திரு. பொன். ராஜா

91. திரு. எம். ரெங்கசாமி

92. திரு. மு. ரெத்தினசாமி

93. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

94. டாக்டர் வி.எஸ். விஜய்

95. திரு. கோ. வெங்கடாஜலம்

96. திரு. வி.பி. வெங்கட்ராமன்

97. திரு. எஸ். வேதாச்சலம்

98. முனைவர் வைகைச்செல்வன்

99. திரு. பி.கே. வைரமுத்து

100. திரு. ஐ. ஞானசேகரன்

101. திரு. டி. ஜெயக்குமார்

102. திருமதி எல். ஜெயசுதா

103. டாக்டர் த. ஜெரிதாஸ்

104. டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிராண்சிஸ்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம் — 21,702

ஆண்கள் — 19,758

பெண்கள் — 1,944

நூலகம்—

சட்டாவது கூட்டத்தொடரின்போது சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	—	489
வழங்கப்பெற்ற நூல்கள்	—	171
இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	—	38

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய

மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	—	475
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	—	6,929
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	1,780
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	—	521

சட்டமன்ற உறுப்பினர்களின் சலவைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சலவைத் தொழிலாளர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய 18 அறைகளை 8-7-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் திறந்துவைத்து அந்த அறைகளை எவ்விதக் கட்டணமுமின்றி சலவைத் தொழிலாளர்களுக்கு வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட சட்டமன்றக் குடியிருப்பு வளாகத்தின் முகப்பு வாயிலையும் அவ்வமயம் மாண்புமிகு அம்மா அவர்கள் தமது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள்.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

இப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல அறிவிப்புகளைச் செய்துள்ளதை நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டினேன்.

உறுப்பினர்கள் அவையில் தவறான தகவல்களையோ அல்லது முன்னுக்குப் பின் முரணான கருத்துகளை வெளியிடும்போதுகூட, பழைய நிகழ்வுகளை நினைவுகூர்ந்து சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அல்லது கொள்கை விளக்கக் குறிப்புகள் போன்ற ஆவணங்களில் இருந்து மேற்கோள் காட்டி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உரையாற்றிய நேர்வுகள் பல.

உதாரணமாக 19-2-2014 அன்று முன்னாள் பிரதமர் திரு. இராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பது தொடர்பான பிரச்சினையில் உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், அதற்கு முன்பு அவையில் பேசிய உரையை சரியான நேரத்தில் அவையின் கவனத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுவந்தது அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய ஒன்று.

மற்றொரு நேர்வில், வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்தின்போது 20-2-2014 அன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குற்றங்கள் உயர்ந்துவிட்டதாகக் குறிப்பிட்டதுடன், மேதகு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு தான் அளித்த பதிலுரை அச்சிடப்பட்டு அன்று மேஜையில் வைக்கப்பட்டதை நினைவுபடுத்தி, அதில் 58 ஆம் பக்கத்தில் "குற்றங்கள் குறைந்தன" என்ற தலைப்பில் உறுப்பினர் தெரிவித்த கருத்துகள் குறித்து ஏற்கெனவே தான் விளக்கமளித்துள்ளது பற்றி உடன் எழுந்து மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தான் கொண்ட முழு ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக் கூட்டம் நடைபெற்ற நாட்களிலெல்லாம் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டதோடு, மேதகு ஆளுநர் உரை மீதான விவாதம், வரவு-செலவுத் திட்ட பொது விவாதம், மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு அவ்வப்போது, அனைத்துத் துறைகள் பற்றிய பதில்களையும் விரல் நுனியிலிருந்து வழங்கி நம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2014 ஆகஸ்ட் 12

மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகையில், டிஜிட்டல் ரன்னிங் போர்டு வைத்து குழந்தை பிறந்த நேரத்தை மருத்துவமனைகளில் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை வைக்கையில், "அது ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது" எனக் குறிப்பால் தெரிவித்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அளவிற்கு விரல் நுனியில் அனைத்துத் தகவல்களையும் வைத்துள்ளார்கள் என்பதைக் கண்டு வியந்தேன்.

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்தி, எடுத்துக்கொண்ட அலுவல்களை எதையும் நிலுவையில் வைக்காமல், அன்றன்று எடுத்த அலுவல்களை தவறாமல் அன்றன்றே நிறைவேற்ற, தக்க ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கி பேரவை நடவடிக்கைகளைச் சுமுகமாக நடத்திட வழிவகுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில சமயம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை வலியுறுத்த ஒரு சேர எழுந்து நின்று அதனால் அவையில் சற்று சூடான விவாதம் நடைபெற்றபோதுகூட, பேரவை விதிகளையும், நடைமுறைகளையும், மரபுகளையும் பொறுமையுடன் எடுத்துவைத்து அவை நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற உதவிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் என் நன்றியினை இத்தருணத்தில் உரித்தாக்கிக்கொள்கிறேன்.

பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்குப் பெரிதும் துணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவையில் மாற்றுத் தலைவர்களாகச் செயல்பட்ட உறுப்பினர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சிக் கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

பேரவை நிகழ்ச்சிகளை வீடியோ பதிவு செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிபெருக்கி வசதி செய்த பொதுப் பணித் துறை அலுவலர்களுக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல உதவிய அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்ற உதவிய பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவை நடவடிக்கைகளில் அங்கமாகத் திகழ வாய்ப்பை நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்தக் கூட்டத் தொடர் இனிதே நிறைவு பெற, உறுதுணையாக இருந்து உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் அவையின் சார்பில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

10. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஆகஸ்ட் 12

"பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பிற்பகல் 3-30

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-30 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

133. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (அரசு, தனியார் பங்களிப்புடன் கூடிய கொள்முதல்) விதிகளை இயற்றியது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 26-11-2012 ஆம் நாளிட்ட 409 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

134. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 11-12-2012 ஆம் நாளிட்ட 425 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2014 ஆகஸ்ட் 12]

135. 1990 ஆம் ஆண்டு மாநில மனநல விதிகளை இரத்து செய்து அதற்குப் பதிலாக 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனநல விதிகளை இயற்றியது குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ZI) துறையின் 26-9-2013 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு மனநலச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1987) 95(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

136. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதி நிலை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

137. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொது மற்றும் சமூகப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

138. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொருளாதாரப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

139. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய்ப் பிரிவு). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

140. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொதுத் துறை நிறுவனங்கள்). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

141. 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும்

[2014 ஆகஸ்ட் 12

தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (உள்ளாட்சி அமைப்புகள்). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

370. 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

371. மானியக் கோரிக்கை எண் 38 - பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

372. மானியக் கோரிக்கை எண் 38 - பொது (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

373. மானியக் கோரிக்கை எண் 16 - நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

374. மானியக் கோரிக்கை எண் 36 - திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

375. மானியக் கோரிக்கை எண் 50 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

376. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)

377. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 350 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

378. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 325 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டவை)

****

இணைப்பு I

(419 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 8 மற்றும் 9@

பட்டியல் 8

1—

சொந்தக் கட்டடம்

வினா எண் 1197—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை மின்வாரிய அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

1. திருத்துறைப்பூண்டி:

திருத்துறைப்பூண்டி நகரத்தின் மையப் பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர்/இயக்குதலும் காத்தலும் நகர் மற்றும் புறநகர் ஆகிய இரண்டு பிரிவு அலுவலகங்களும் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. இதனால் மின் வாரியப் பணிகளுக்கும், பொது மக்களுக்கு சேவை புரியவும், சிறப்பாக

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

செயல்படவும் வசதியாக உள்ளது. மின் வாரிய நிதிநிலைக்கு ஏற்ப புதிய மின் வாரிய நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும்.

2. முத்துப்பேட்டை:

ஆலங்காடு 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தியவுடன் முத்துப்பேட்டை மின் வாரிய அலுவலகங்களுக்கு மின் வாரிய நிதிநிலைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 1202—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, புத்தகரம் ஊராட்சி, காரைத்திடல் கிராமத்திற்கு புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, புத்தகரம் ஊராட்சி, காரைத்திடல் கிராமத்தில் தற்போது உள்ள மின்மாற்றி போதுமானது. ஒரு முனை மின்சாரத்தை மும்முனை மின்சாரமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 2933—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், சிரமம் ஊராட்சி, நந்தனூர், இழவனூர் ஆகிய பகுதிகளில் மின்மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

4—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 3725—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்கா பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்கா வளாகத்தில் துணை மின் நிலையம் அமைக்க நிட்டமிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் உயரழுத்த மின் இணைப்பு வேண்டி புதிய தொழில் தொடங்குவோர் விண்ணப்பிக்கும்பட்சத்தில் இம்மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

புதிய மின் உற்பத்தி நிலையம் அமைத்தல்

வினா எண் 3947—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் தேங்காய் நாரிலிருந்து கோது என்ற உபபொருளை ஒருங்கிணைத்து மின் உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தேங்காய் நார் தொழிற்சாலைகளின் கூட்டமைப்புகள் தேங்காய் நாரிலிருந்து மின் உற்பத்தி செய்வதைத் தடை செய்யும்படி கேட்டுக் கொண்டதன்பேரில், அரசு தொழில் துறை அரசு ஆணை எண் 11, நாள் 20-2-2007 மூலம் தேங்காய் நாரினை மின்சாரம் தயாரிக்க உபயோகிக்கக்கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

6—

சூரிய ஒளியில் மின் உற்பத்தித் திட்டம்

வினா எண் 4133—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதியில் வேளாண்மையை மேம்படுத்த சூரிய ஒளியில் மின் உற்பத்தித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதியில் வேளாண்மையை மேம்படுத்த சூரிய ஒளியில் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தினைச் செயல்படுத்த தற்பொழுது அரசிடம் செயல் திட்டம் ஏதுவும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

7—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 5073—திரு. கொ.ஈ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, வெப்பாலம்பட்டி ஊராட்சி, நல்லப்பநாயக்கனூரில் புதிய மின் மாற்றிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பர்கூர் தொகுதி, வெப்பாலம்பட்டி ஊராட்சி, நல்லப்பநாயக்கனூருக்கு தற்சமயம் ஏலப்பாலம்பட்டி மின்மாற்றி எண் V (100 கே.வி.ஏ. 11 கேவி/433 வோ) மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் புதிய மின்மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை.

8—

புதிய பராமரிப்பு அலுவலகம் அமைத்தல்

வினா எண் 5315—திரு. கொ.ஈ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பன்னந்தூரை மையமாகக் கொண்டு மின்வாரிய இயக்கமும், பராமரிப்பு அலுவலகமும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். பர்கூர் தொகுதி, பன்னந்தூரில் புதிய பிரிவு அலுவலகம் துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 15-7-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

9—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 5324—திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, திருநெடுங்குளம் ஊராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நெடுங்குளம் ஊராட்சியில் உள்ள வாளவந்தான் கோட்டை பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 5641—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பரந்தூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் தொகுதி, பரந்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் சுருத்துரு இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

11—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 5686—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கீழாநிலைபுதுப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, கீழாநிலைபுதுப்பட்டி அருகில் உள்ள வடக்காட்டுப்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு 7-3-2013 அன்று சோதனை மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது.

12—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 5704—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஒன்றியம், கூரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் ஒன்றியம், கூரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

13—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 6282—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, பெட்டமுகிலாளம் கிராமத்தில் 100 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, பெட்டமுகிலாளம் கிராமத்திற்கு தற்சமயம் சிந்தாபுரம் மின்மாற்றி எண் 1 (100 கே.வி.ஏ. II கி.வோ/433 வோ) மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. புதியதாக 100 கே.வி.ஏ. மின்மாற்றி கூடுதலாக அமைக்க மதிப்பீடு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

14—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 6283—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, உரிகம் ஊராட்சி, உரிகம் கிராமத்தில் 250 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, உரிகம் ஊராட்சி, உரிகம் கிராமத்திற்கு தற்சமயம் எண்1 (63 கே.வி.ஏ. 11 கி.வோ./ 433 வோ.) மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் இல்லை.

15—

மின் மாற்றி அமைத்தல்

வினா எண் 6284—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, கொடகரை மலை கிராமத்தில் 250 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, கொடகரை மலை கிராமத்திற்கு தற்சமயம் கொடகரை மின்மாற்றி எண் 1 மற்றும் (2) (63 கே.வி.ஏ. 11 கி.வோ./ 433 வோ.) மூலமாக ஒரு முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் புதிய மின்மாற்றி அமைக்கும் அவசியம் எழவில்லை.

16—

மதுபானக் கடையை மாற்றியமைத்தல்

வினா எண் 6943—திரு. ப. சிவக்கொழுந்து: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

பண்ருட்டி தொகுதி, நத்தம் ஊராட்சி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, நத்தம் ஊராட்சி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள மதுபானக் கடை எண் 2617, ஜனவரி 2004 முதல் மேற்படி இடத்தில் இயங்கி வருகிறது. இக்கடை பேருந்து நிறுத்தத்திலிருந்து 110 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மேலும், இம்மதுபானக் கடை, கடலூர்-விழுப்புரம் மாவட்டங்களின் எல்லையில், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் அமையப் பெற்றுள்ளபடியால், இக்கடையினை இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 7070—திரு. செ. காமராஜ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சங்கரமலைபட்டியில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சங்கரமலைபட்டி பகுதிக்கு 3 கி.மீ. தொலைவில் உள்ள மாயனூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் புதிய 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

18—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 7286—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. சீர்காழி தொகுதியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

19—

கண்காணிப்புக் குழுக்கள் அமைத்தல்

வினா எண் 7319—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் திருட்டு மற்றும் மின்சாரத்தினைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க, மாவட்டந்தோறும் பறக்கும் படை, கண்காணிப்புக் குழுக்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மின்திருட்டைத் தடுப்பதற்காக அமலாக்கப் பிரிவானது காவல் துறை/விழிப்பு பணிக் குழுமம் அவர்களின்

கட்டுப்பாட்டிலும் மேற்பார்வை பொறியாளர்/அமலாக்கம் அவர்களின் நேரடிப் பார்வையிலும் செயல்பட்டு வருகின்றது. சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோவையில் அமலாக்கப் பிரிவின் 4 கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு செயற்பொறியாளரின்கீழ் இயங்கி வருகின்றது. இந்த 4 கோட்டங்களின்கீழ் 17 அமலாக்கப் பிரிவு உபகோட்டங்கள் 17 உதவி செயற்பொறியாளர்களின் தலைமையில் செயல்படுகின்றன. மேலும், பறக்கும் படை/சென்னை என்ற பிரிவும் ஓர் உதவி செயற் பொறியாளர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

விழுகம்:

அமலாக்கப் பிரிவினர், மின் திருட்டைத் தடுத்திட கீழே கொடுக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்:

1) அனைத்து தரப்பு நுகர்வோர்களின் மின் இணைப்புகளை வாலாயமாகவும், எதிர்பாராத வகையிலும், இரவு நேரங்களிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும் ஆய்வு செய்து மின்திருட்டு ஏதேனும் இருப்பின் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2) உயர் அழுத்த மின் இணைப்புகளில் மின்திருட்டைத் தடுக்கும் வகையில் மின் அளவியை மக்கள் நடமாட்டம் உள்ள சாலைகளின் மிக அருகிலேயே பொருத்துவதை உறுதி செய்தல்.

3) குறிப்பிட்ட சில உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்புகளில் சோதனை மின் அளவியை நுகர்வோர்களது இருப்பிடத்திற்கு வெளியே, சற்று தொலைவில் மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் பொருத்தி சோதனை மின் அளவியின் பயனீட்டு அளவோடு நுகர்வோரது மின் அளவியின் பயனீட்டை ஒப்பீடு செய்து கண்காணித்தல்.

4) அனைத்து உயர் அழுத்த மற்றும் மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ள தாழ்வழுத்த மின் இணைப்புகளில் மின்னணு மின் அளவி பொருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.

இந்த ஆண்டு (2011-2012) ரூ.200 கோடி அமலாக்கப் பிரிவிற்கு வருடாந்திர இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை (31-8-2011 வரை) 3034 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2014 ஆகஸ்ட் 12]

இத்திருட்டுகளில் ஈடுபட்டவர்கள் குற்றவியல் நடவடிக்கையை தவிர்ப்பதற்காக சமரசத் தொகையாக ரூ.221.76 இலட்சம் செலுத்தியுள்ளனர். அவர்கள்மீது அபராதத் தொகையாக ரூ.194.70 இலட்சம் விதிக்கப்பட்டுள்ளது.

அமலாக்கப் பிரிவை தவிர. மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்காணிக்க அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் நேரடிப் பார்வையிலும், அரசு மின் ஆய்வாளர்கள் தலைமையின்கீழ் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் அடங்கிய (தமிழ்நாடு மின்சார வாரிய அதிகாரிகள் அல்லாத) 12 தனி குழுக்கள் 5-10-2010 தேதியிட்ட அரசு ஆணை எண் 96, எரிசக்தி (பி1) துறை ஆணையின்படி உருவாக்கப்பட்டு நீவிர ஆய்வுகள் மேற்கொண்டு மின் திருட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் 31-8-2011 வரை 744 மின் இணைப்புகளை ஆய்வு செய்து அவற்றுள் 66 மின் திருட்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவற்றின்மூலம் ரூ.27.84 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக விதிக்கப்பட்டது. மற்றும் குற்றவியல் நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக சமரசத் தொகையாக ரூ.2.39 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மின் திருட்டை ஒடுக்க முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு மின்சார பாதுகாப்புப் படை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி ஒரு குழுவிற்கு 5 முன்னாள் இராணுவத்தினர் வீதம் 25 குழுக்களாகக் கொண்ட மின்சார பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டு 26-9-2011 முதல் 1-10-2011 வரை 3 நாட்களுக்கு வகுப்பறைப் பயிற்சியும், அடுத்த 3 நாட்களுக்கு களப்பணிப் பயிற்சியும் வழங்கப்பட்டு அவர்கள் 3-10-2011 முதல் மின் இணைப்புகளை ஆய்வு செய்து மின் திருட்டு கண்டுபிடிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இக்குழுவினர் இதுவரை (3-10-2011 முதல் 10-12-2011 வரை) 1955 மின் திருட்டுகளைக் கண்டுபிடித்து இதன்மூலம் இழப்பீட்டுத் தொகை மற்றும் சமரசத் தொகையாக ரூ.484.58 இலட்சம் விதிக்கப்பட்டுள்ளது.

20—

மின் கம்பிகள் பதித்தல்

வினா எண் 7355—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் சாலையின் இருபுறமும் உள்ள மின் கம்பங்களை அகற்றி, பூமிக்கு அடியில் மின் கம்பிகளைப் பதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் சாலையின் இருபுறமும் உள்ள மின் கம்பங்களை அகற்றி, பூமிக்கு அடியில் மின் கம்பிகளைப் பதிக்க தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

21—

மின் இணைப்பு வசதி செய்தல்

வினா எண் 7474—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, வேலப்பாடி கிராமத்திலுள்ள அங்கன்வாடிக்கு மின் இணைப்பு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

22—

துணை மின் நிலையத்தில் நிருவாக வசதி செய்தல்

வினா எண் 7710—திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் 33/11 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையத்தில் நிருவாக வசதிக்காக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயக்காரன்புலம் 33/11 கி.வோ. (ஆளில்லா) துணை மின் நிலையமானது வாய்மேடு என்னும் பிரிவின்கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி போதுமான மின் மாற்றிகள் இல்லாததால் ஆயக்காரன்புலத்தில் புதிய பிரிவு அலுவலகம் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

23—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 7613—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கட்டமன்கோட்டை கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கட்டமன்கோட்டை கிராமத்திற்கு கட்டமன்கோட்டை SS I 100 KVA/11KV மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் கூடுதல் மின்பளு மற்றும் குறைந்த மின்னழுத்தம் எதுவும் இல்லை. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

24—

துணை மின் நிலையம் சீரமைத்தல்

வினா எண் 8114—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தூதை விலக்கு அருகில் உள்ள துணை மின் நிலையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், தூதை விலக்கு அருகில் உள்ள திருப்பாசேத்தி 33/11 KV துணை மின் நிலையத்திற்கு வரும் 33 கி.வோ. மின் பாதையில் இருந்த தென்னை மரக்கிளைகள் முழுவதும் அகற்றப்பட்டு துணை மின் நிலையத்திற்குச் சிரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

25—

மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 8125—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) மதுரை பசுமலை, அண்ணா நகர் பகுதியில் மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 4-2-2011 அன்று மாவட்ட ஆட்சியர், தாசில்தார், திருமண்டல பிரதிநிதிகள் மற்றும் செயற் பொறியாளர்/மதுரை மேற்கு ஆகியோர் முன்னிலையில் பிரஸ்தாப இடத்தின் ஆக்கிரமிப்பாளர்களிடம் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் மதுரை இராமநாதபுரம் திருமண்டலம் கிறிஸ்துவ சபைக்குச் சொந்தமான இடத்தில் திருமண்டலம் அனுமதிக்கும்பட்சத்தில் மட்டுமே மின் இணைப்புகள் வழங்கப்படும் எனத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

26—

மும்முனை மின்சாரம் வழங்குதல்

வினா எண் 5484—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், கூகலூர் பகுதிக்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கூகலூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு மின் விநியோகம் கூகலூர் 110/22-11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ./எருங்காட்டூர் மற்றும் 11 கி.வோ./பொன்னாச்சி புதூர் ஆகிய உயர்வழுத்த மின்பாதைகள் வழியாக மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி மின் பாதைகள் கிராமிய மின் பாதை அந்தஸ்தில் உள்ளது.

27—

தடையில்லாத மின்சாரம் வழங்குதல்

வினா எண் 8498—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கலங்காதன் கோட்டையில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கலங்காதன் கோட்டைக்கு கலங்காதன் கோட்டை துணை மின் நிலையம் I 100 KVA மற்றும் துணை மின் நிலையம் II 100 KVA ஆகிய இரண்டு மின்மாற்றிகள்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றிகளில் கடைநிலை மின்னழுத்தம் குறியீடுகளுக்குட்பட்டுள்ளது.

28—

தடையில்லாத மின்சாரம் வழங்குதல்

வினா எண் 8499—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கல்லடிதிடல் பகுதியில் மின் கம்பிகளைச் சீரமைத்து தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், கல்லடிதிடல் பகுதியில் 31-10-2011 அன்று தொய்வான கம்பிகள் சீரமைக்கப்பட்டு கல்லடிதிடல் துணை மின் நிலையம் I 100 KVA/11 KV மின்மாற்றிமூலம் தடையில்லாத மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

29—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 8500—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரியாண்டிபுரத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரியாண்டிபுரம், கோட்டை துணை மின் நிலையம் 1 100 KVA மற்றும் துணை மின் நிலையம் II 63 KVA ஆகிய மின்மாற்றிகள்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றிகளில் கடைநிலை மின்னழுத்தம் குறியீடுகளுக்குட்பட்டு உள்ளது. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

30—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 8570—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரண்மனைகரை கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அரண்மனைக்கரை கிராமத்திற்கு கலங்காதன்கோட்டை துணை மின் நிலையம் 1 100 KVA/11 KV மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றியில் எடுக்கப்பட்ட கடைநிலை மின்னழுத்தம் குறியீடுகளுக்குட்பட்டு உள்ளது. மேலும், இணைக்கப்பட்டுள்ள மின் பளு 47 KW ஆகும். எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

31—

துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்குதல்

வினா எண் 8816—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச்சுத்துப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்குப் புதிதாக நவ்வலடி பகுதியில் அமைக்கப்பட்டு வரும் துணை மின் நிலையத்தில் இருந்து மின்சாரம் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கரைச்சுத்துப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்குப் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நவ்வலடி துணை மின் நிலையத்திலிருந்து 18-2-2013 முதல் மின் விநியோகம் செய்யப்படுகிறது.

32—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 3617—திரு. டி. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலியந்திடல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலியந்திடல் கிராமத்திற்கு ஆச்சிலாங்குடி SS-1, 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றியில் 5-1-2012 அன்று எடுக்கப்பட்ட கடைநிலை மின்னழுத்தம் குறியீடுகளுக்குட்பட்டு உள்ளது. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

33—

கள்ளச் சாராய விற்பனையைத் தடுத்தல்

வினா எண் 11111—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை, வலத்தி, அத்தியூர், கெங்காவரம் ஆகிய பகுதிகளில் கள்ளச் சாராய விற்பனையை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை, வலத்தி, அத்தியூர் மற்றும் கெங்காவரம் ஆகிய பகுதிகளில் கள்ளச் சாராய குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. யாரேனும் மதுவிலக்கு குற்றங்களில் ஈடுபட்டால் அவர்கள்மீது தடுப்புக் காவல் சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

34—

உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 11751—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, மயிலாடும்பாறை, கொம்பேகவுண்டனூர், மாவளம்பாறை பகுதிகளில் உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, மயிலாடும்பாறை, கொம்பேகவுண்டன்துறை மற்றும் மாவளம்பாறை பகுதிகளில் ஏற்கெனவே மின்மாற்றிகள் உள்ளன. மாவளம்பாறை மதகடிப்புதூரில் ஏற்கெனவே உள்ள 75 கேவிஏ மின்மாற்றியை 100 கேவிஏ மின்மாற்றியாக அமைக்க 18-5-2011 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், புதிதாக 100 கேவிஏ மின்மாற்றி ஒன்று அமைப்பதற்கும் 15-10-2011 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு மின்னூட்டம் செய்யப்படும். மயிலாடும்பாறை கிராமத்தில் உள்ள 7 தெரு விளக்குகள் மற்றும் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி மின் இணைப்புகளுக்கு சரியாக மின்சாரம் கிடைக்காமல் இருந்தது. தற்போது புதிய மின்பாதை நீட்டிப்பு மற்றும் மேம்பாடு செய்யப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

35—

உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 11752—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் தெற்கு கண்ணாடிபுத்தூரில் உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் தெற்கு கண்ணாடிபுத்தூரில் ஒரு 100 கேவிஏ உயர்

மின்னழுத்த மின்மாற்றியுடன் கூடுதலாக ஒரு 100 கேவிஏ மின்மாற்றியும் அமைக்கப்பட்டு அந்தப் பகுதியில் மின்னழுத்த குறைபாடுகள் சரிசெய்யப்பட்டன.

36—

உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 11753—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் கிருஷ்ணாபுரம் 1-வது வார்டு பிரதான சாலையில் உயர் மின்னழுத்த மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் கிருஷ்ணாபுரம் 1-வது வார்டு பிரதான சாலையில் ஒரு 100 கேவிஏ மின்மாற்றி 9-3-2012-ல் புதியதாக அமைக்கப்பட்டு மின்னழுத்த குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுவிட்டன.

37—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 11954—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி, கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

38—

மின் கம்பங்களைக் கண்காணித்து சீரமைத்தல்

வினா எண் 12891—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் கடலோரக் கிராமங்களில் உப்புக் காற்றால் பழுதடையும் மின்கம்பங்களை மூன்று மாதத்திற்கு ஒருமுறை கண்காணித்து சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழகக் கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் உப்புக் காற்றால் பழுதடையும் மின்கம்பங்கள் அவ்வப்பொழுது கண்டறியப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன.

39—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 12912—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) மானாமதுரை தொகுதி, கண்ணமங்கலம் ஊராட்சி, சவேரியார்புரம் கிராமத்தில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கண்ணமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட சவேரியார்புரம் கிராமத்திற்கு 100 கே.வி.ஏ. கண்ணமங்கலம் SS I மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் தேவைக்கு அதிகமான மின்பளுவோ அல்லது சவேரியார்புரம் கிராமத்தில் குறைந்த மின்னழுத்தமோ இல்லை. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

40—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 12913—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், துகவூர் கிராமத்திற்குத் தனியாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், துகவூர் கிராமத்திற்கு 100 கே.வி.ஏ. துகவூர் SS I மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட

2014 ஆகஸ்ட் 12]

மின்மாற்றியில் அளவுக்கதிகமான மின்பளுவோ மற்றும் அப்பகுதியில் குறைந்த மின்னழுத்தமோ இல்லை. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

41—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 14336—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, நடுகுப்பத்தில் எஸ்.எஸ். 3 மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, நடுகுப்பம் கிராமத்தில் மின்மாற்றி எண் 3-ல் இரண்டு 63 கேவிஏ மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. வீட்டு மின் இணைப்புகள் 63, விவசாய மின் இணைப்புகள் 25 மற்றும் மேனீர் தொட்டி மின் இணைப்பு 1-ன் மின் தேவைகளுக்கு மேற்கண்ட மின்மாற்றிகளிலிருந்து சீராக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள மின்பளுவிற்கு தற்போதுள்ள மின்மாற்றிகளின் திறன் போதுமானது.

42—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 14337—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, முள்ளிப்பட்டுவில் எஸ்.எஸ். 3 மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, முள்ளிப்பட்டு கிராமத்திற்கு மின்மாற்றி எண் 3-ல் 100 கே.வி.ஏ.-ல் இருந்து வீட்டு மின் இணைப்புகள் 120, விவசாய மின் இணைப்புகள் 14, மேனீர் தொட்டி மின் இணைப்புகள் 5 மற்றும் தொழிற்சாலை மின் இணைப்பு 2-ற்கும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியின் மின்பளு மின்திறனுக்குள் இருப்பதாலும், கடைநிலை மின்னழுத்தம் நன்றாக இருப்பதாலும் தற்போது உள்ள மின்மாற்றி போதுமானது.

43—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 14338—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, சின்னபுத்தூரில் மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதிக்குட்பட்ட சின்னப்புத்தூர் கிராமத்திற்கு வாழியூர் மின்மாற்றி எண் 1 250 கேவிஏ-ல் இருந்து வீட்டு மின் இணைப்புகள் 300, விவசாய மின் இணைப்புகள் 29 மற்றும் தொழிற்சாலை மின் இணைப்பு 2-க்கும் சீராக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியின் மின்பளு மின்திறனுக்குள் இருப்பதாலும், கடைநிலை மின்னழுத்தம் நன்றாக இருப்பதாலும் தற்போதுள்ள மின்மாற்றியே போதுமானது.

2014 ஆகஸ்ட் 12]

44—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 14339—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேல்சீசமங்கலம் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதிக்குட்பட்ட மேல்சீசமங்கலம் கிராமத்தில் மின்மாற்றி எண் VIII-ல் 100 கேவிஏ மின்மாற்றி 12-4-2012 அன்று அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

45—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 14340—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி தேவிகாபுரத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதிக்குட்பட்ட மேற்கு ஆரணி, தேவிகாபுரத்தில் 19 மின்மாற்றிகள் முறையே 250 கேவிஏ-2, 100 கேவிஏ-11, 63 கேவிஏ-2, 25 கேவிஏ-4 அமைக்கப்பட்டு அனைத்து

[2014 ஆகஸ்ட் 12

மின் இணைப்புகளுக்கும் சிரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள மின்பளுவிற்கு தற்போது இயங்கிவரும் மின்மாற்றிகளின் திறன் போதுமானது. எனவே, புதிய மின்மாற்றி அமைக்க தேவை எழவில்லை.

46—

மின் கட்டணம் செலுத்துதல்

வினா எண் 16120—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைப் போன்று அனைத்து முக்கிய மண்டலங்களிலும், மின் நுகர்வோர்கள் இணையதளத்தின்மூலம் மின் கட்டணம் செலுத்தும் முறையை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அனைத்து மண்டலங்களிலும் உள்ள நுகர்வோர்கள் தங்களின் மின் கட்டணத்தை ஆன்லைனில் செலுத்தும் வசதி உள்ளது.

47—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 17182—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், நகரகுடிக்கு புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், நகரகுடிக்கு நகரகுடி SS 1 63 KVA/11 KV மற்றும் நகரகுடி S 1I 63 KVA/11 KV மின்மாற்றிகளின்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றிகளில் கூடுதல் மின்பளு மற்றும் அப்பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் எதுவும் இல்லாததால் இப்பகுதிகளில் உள்ள மின்பளுவிற்கு மேற்படி மின்மாற்றிகளின் திறன் போதுமானது.

48—

புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 17187—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், அய்யங்கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) தற்பொழுது அய்யங்கோட்டையில் துணை மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் இல்லை.

49—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 17386—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலியந்திடல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், சாலியந்திடல் கிராமத்திற்கு சூச்சிலாங்குடி SS-1, 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மாற்றியில் கூடுதல் மின்பளு மற்றும் அப்பகுதியில் குறைந்த மின்னழுத்தம் எதுவும் இல்லாததால் தற்போது சாலியந்திடல் கிராமத்திற்கு தனியாக புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

50—

புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 17582—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். சேலம் மாநகராட்சியில் உள்ள பள்ளப்பட்டியில் ஒரு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க 12-வது பெருந்திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான நிலத்தை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

(ஆ) தேவையான நிலம் கிடைக்கப் பெற்றவுடன், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின் நிலம் கையகப்படுத்தப்பட்டு 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்குரிய நிருவாக ஆணை வழங்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும்.

51—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 17618—திரு. க. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமம், அருந்ததிபாளையத்தில் தனி மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, மூதூர் ஊராட்சி, மூதூர் கிராமம், அருந்ததிபாளையத்திற்கு மூதூர் SS-11, 100 KVA மின்மாற்றியிலிருந்து தற்பொழுது சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்மின் மாற்றியில் 13 விவசாய மின் இணைப்பு, 2 OHT மற்றும் 65 வீட்டு மின் இணைப்புகள் உள்ளன. இதில் இணைக்கப்பட்டுள்ள மொத்த மின் பளு 98 KW ஆகும். இப்பகுதியில் உள்ள மின்பளுவிற்கு மேற்படி மின்மாற்றியின் திறன் போதுமானது.

52—

புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 17644—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

53—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 17645—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சூராணத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூராணம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

54—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 17750—திரு. சு. ரவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், புதுகேசாவரம் ஊராட்சி, பழைய கேசாவரம் கிராமத்திற்கு தனியாக புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், புதுகேசாவரம் ஊராட்சி, பழைய கேசாவரம் கிராமத்திற்கு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

55—

துணை மின் நிலையம்

வினா எண் 18864—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர் கோட்டையில் 33/11 கி.வோ துணை மின் நிலையம் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

56—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 18871—திரு. கு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 26-வது வார்டில் 250 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 26-வது வார்டில் உள்ள விண்டர்பெட் SS-III, 100 கே.வி.ஏ. மின்மாற்றியை 24-5-2012 அன்று 250 கே.வி.ஏ. மின்மாற்றியாகத் தரம் உயர்த்தப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

57—

இலவச மின்சாரம் வழங்குதல்

வினா எண் 20104—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயிறு உற்பத்தியாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கயிறு உற்பத்தியாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

58—

துணை மின் நிலையம்

வினா எண் 20565—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் உள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110/11 கி.வோ துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

59—

புதிய மின் மாற்றி அமைத்தல்

விளா எண் 20756—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம் டீச்சர்ஸ் காலனி பகுதிகளில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம் டீச்சர்ஸ் காலனியில் புதிய 250 கே.வி.ஏ. மின்மாற்றி, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு கடந்த 18-7-2012 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

60—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 20762—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், 14-வது மேற்கு குறுக்கு தெருவில் 750 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், 14-வது மேற்கு குறுக்கு தெரு, மகாகவி பாரதி நகரில் தற்பொழுது 250 கே.வி.ஏ. மின்மாற்றி இயங்கி வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியின் மின்பளு 75% மின் திறனுக்குள் இருப்பதால் தற்போது கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க அவசியம் எழவில்லை.

61—

புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 21304—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

ஆம். பட்டுக்கோட்டை தொகுதி, கரம்பயம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் 11-8-2012 அன்று துவக்கப்பட்டுள்ளது.

62—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 21621—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சூராணத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆராணம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

63—

மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 21789—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை ஒன்றியம், தலைஞாயிறு பட்டவர்த்தியில் உள்ள என்.பி.கே.ஆர். சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரில் மின்சாரம் தயாரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை ஒன்றியம், தலைஞாயிறு பட்டவர்த்தியில் உள்ள என்.பி.கே.ஆர். சர்க்கரை ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரில் மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

64—

மின் வசதி செய்தல்

வினா எண் 22079—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், சாமண்டஹள்ளி ஊராட்சி, பெரியார் நகர் கிராமத்திலுள்ள வீடுகளுக்கு மின் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* அரூர் தொகுதி, அரூர் வட்டம், சாமண்டஹள்ளி ஊராட்சி, பெரியார் நகர் கிராமத்தில் தற்சமயம் வீட்டு மின் இணைப்பு வேண்டி இரண்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. விண்ணப்பப் பதிவு மூப்பு அடிப்படையில் வீட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

65—

மின் வசதி செய்தல்

வினா எண் 22084—திருமதி ர. சுபா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், மணிவிழுந்தான் தெற்கு கோவிலுக்கு மின் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், மணிவிழுந்தான் தெற்கு கோவிலுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

66—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 22526— திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியாலில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதிக்குட்பட்ட புளியால் பகுதியிலுள்ள மின் பளுவின் அடிப்படையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

67—

மின் கம்பங்கள் அமைத்தல்

வினா எண் 22673—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, வேடகட்டமடுவு ஊராட்சி, டி. ஆண்டியூர் பகுதியில் மின் கம்பம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, வேடகட்டமடுவு ஊராட்சி, டி. ஆண்டியூர் பகுதிக்கு ஆண்டியூர் மின்மாற்றி எஸ்.எஸ். 1 100

கே.வி.ஏ. மற்றும் 63 கே.வி.ஏ. மூலமாக சுமார் 170 வீடுகளுக்கும், 37 எண்ணிக்கை விவசாய மின் இணைப்புகளுக்கும் மற்றும் 25 எண்ணிக்கை தெரு மின் விளக்குகளுக்கும் மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. டி.. ஆண்டியூர் பகுதியில் பழுதான மின்கம்பம் எதுவும் இல்லை. மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்களும் ஏதும் நிலுவையில் இல்லை.

68—

புதிய துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 23950—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, மேலபாளையூர் ஊராட்சியில் 33 கி.வோ. திறனுடைய மின் நிலையத்தை 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

புவனகிரி தொகுதி, மேலபாளையூரில் உள்ள துணை மின் நிலையத்தை 110 கி.வோ. திறனுடைய துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் கருத்துரு ஏதும் இல்லை.

69—

மின் இணைப்புகளை பூமிக்கடியில் பதித்தல்

வினா எண் 23968—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கடற்கரை கிராமங்களில் மின் இணைப்புகளை புதைவடங்களாக பூமிக்கடியில் பதிக்க அரசு முன்வருமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் கடற்கரை கிராமங்களில் மின் இணைப்புகளை புதைவடங்களாக பூமிக்கடியில் பதிக்க தொழில்நுட்ப காரணங்களாலும், மிகுந்த நிதி ஆதாரம் தேவைப்படுவதாலும் கடலோர கிராமங்களில் தற்போது உள்ள மேல்நிலை பாதைகளை புதைவடமாக மாற்றுவது இயலாது.

70—

மின் உற்பத்தி செய்தல்

வினா எண் 25539—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலுக்குள் காற்றாலை அமைத்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலுக்குள் காற்றாலை அமைத்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசிடம் இல்லை.

71—

மின் வசதி செய்தல்

வினா எண் 25656—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் காலனிக்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் காலனிக்கு தஞ்சாக்கூர் SS I 100 KVA மின்மாற்றிமூலம் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

72—

காற்றாலைகள் அமைத்தல்

வினா எண் 26435—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, கம்பம், பாலக்காடு, ஆரல்வாய்மொழி ஆகிய கணவாய் பகுதிகளில் கூடுதல் காற்றாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, கம்பம், பாலக்காடு, ஆரல்வாய்மொழி ஆகிய கணவாய் பகுதிகளில் தனியாரால் காற்றாலைகள் அமைக்கப்படுகின்றன.

73—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 28355—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது அலங்காநல்லூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கண்டறியப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கண்டறியப்பட்டவுடன், தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் இருப்பின் நிலம் கையகப்படுத்தப்படும். பின்பு, நிருவாக அனுமதி வழங்கப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

74—

நீர்மின் சக்தித் திட்டத்தில் இரண்டாம் பிரிவு தொடங்குதல்

வினா எண் 28660—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறு நீர் மின்சக்தித் திட்டத்தில் இரண்டாம் பிரிவை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு நீர் மின்சக்தித் திட்டத்தில் இரண்டாம் பிரிவை மீண்டும் துவக்க இயலாது.

75—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 28853—திரு. து. முருகேசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டில் புதியதாக துணை மின் நிலையம் அமைக்கவும், மின் பாதைகளை நவீனப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். செங்கல்பட்டில் புதியதாக துணை மின் நிலையம் அமைக்கவும் மற்றும் உயரழுத்த, தாழ்வழுத்த மின்பாதைகளை நவீனப்படுத்தும் பணிகள் மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் ரூ.8.53 கோடி செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகள் ஆகஸ்ட் திங்கள் 2013-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

76—

மின் உற்பத்தி

வினா எண் 30060—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, அப்பர் அமராவதி அணையில் மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 30 மெகாவாட் மின் திறன் கொண்ட மேல் அமராவதி மின் திட்டத்தை வடிவமைத்தது. ஆனால், இத்திட்டத்திற்கு வனச் சரணாலய நிலம் மற்றும் வனநிலம் மிக அதிகமாக தேவைப்பட்டதால் வனத் துறை எதிர்ப்பு தெரிவித்தது. எனவே, இத்திட்டம் 1992-ஆம் ஆண்டிலேயே கைவிடப்பட்டது.

77—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 30632—திரு. சு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 31-வது வார்டு அச்சப்ப நாயுடு பகுதியில் 100 கி.வா. திறனுடைய புதிய மின்மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 31-வது வார்டு அச்சப்ப நாயுடு பகுதியில் 100 கி.வா. திறனுடைய புதிய மின்மாற்றி 9-10-2013 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

78—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 32367—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூரிலுள்ள மேச்சேரியில் அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயிலுக்கு தனி மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூரிலுள்ள மேச்சேரியில் அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயிலுக்குச் சிரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால், தனி மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

79—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 32668—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, துறையூர் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, துறையூர் கிராமத்தில் புதிய 100 KVA/11 KV மின்மாற்றி நிறுவப்பட்டு 2-4-2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது.

80—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 32672—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) திருமயம் தொகுதி, நச்சாந்துப்பட்டி அருகில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நச்சாந்துப்பட்டி பகுதிக்கு, புதுக்கோட்டை 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் புதிய கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அவசியம் தற்பொழுது எழவில்லை.

81—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 34453—மூனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டம், வாலாந்தரவை ஊராட்சி, வழுதூரில் 250 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், வாலாந்தரவை ஊராட்சி, வழுதூர் பகுதியில் புதிய 100 KVA மின்மாற்றி (வழுதூர் SS VII) ரெகுநாதபுரம் விளக்கு ரோட்டில் அமைக்கப்பட்டு, 16-12-2013 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டது.

82—

துணை மின் நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 36080—திரு. கே. குப்பன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, மணலி, திருவொற்றியூர் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, மணலி, திருவொற்றியூர் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

83—

மின்மாற்றி மாற்றியமைத்தல்

வினா எண் 36145—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், இருமதியிலுள்ள 110 கே.வி.ஏ. திறனுடைய மின்மாற்றியை 220 கே.வி.ஏ. மின்மாற்றியாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், இருமதி கிராமத்திற்கு பனங்குளம் SS I 100 KVA மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 6-1-2014 அன்று இருமதி கிராமத்தில் புதிய 100 KVA மின்மாற்றி பனங்குளம் SS II என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

84—

தனி மின்பாதை

வினா எண் 36833—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் அம்மையாப்பட்டி நீரேற்று நிலையத்திற்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க தனி மின்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் அம்மையாப்பட்டி நீரேற்று நிலையத்திற்கு 22-11-2013 முதல் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

85—

மும்முனை மின்சாரம்

வினா எண் 36834—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் இராணியார் மருத்துவமனைக்கு 24 மணி நேரமும், மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகராட்சியிலுள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் இராணியார் மருத்துவமனைக்கு நகர மின்பாதைகளிலிருந்து தற்போது 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

86—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 37741—திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நெய்தலூர் கிராமத்திலுள்ள சின்பனியூரில் 110 K.V. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நெய்தலூர் கிராமத்திலுள்ள சின்பனியூரில் 110 K.V. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

87—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 40658—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, மணவிடுதியிலுள்ள துணை மின் நிலையம் IV-ல் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை தொகுதி மணவிடுதியிலுள்ள துணை மின் நிலையம் IV-ல் உள்ள மின் பளுக்கலை பிரித்து 100

2014 ஆகஸ்ட் 12]

KVA/22 KV திறனுடைய மின்மாற்றி மணவிடுதியில் நிறுவப்பட்டு 2-4-2014 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது.

88—

மும்முனை மின்சாரம்

வினா எண் 42418—திரு. கு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தக்கோலம் பேரூராட்சிக்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தக்கோலம் பேரூராட்சிக்குத் தற்போது தக்கோலம் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. புரிசை (கிராமிய) மின் பாதை வழியாக மின் விநியோகம் செய்யப்படுகிறது.

11 கிலோ வோல்ட் புரிசை மின் பாதையில் 300-க்கும் குறைவான தொழிற்சாலை மின் இணைப்புகள் மற்றும் 50 சதவீதத்திற்கும் குறைவான தொழிற்சாலை மின் இணைப்புகளின் மின்பளு இருப்பதால் கிராமிய மின் பாதைகளை நகர மின் பாதைகளாக மாற்றுவதற்கான விதிமுறைகள் பொருந்தவில்லை. எனவே, மேற்கண்ட பகுதிக்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்க இயலவில்லை.

89—

சொந்தக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 47254—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் தேவகோட்டையிலுள்ள மின் பகிர்மான அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் தேவகோட்டையிலுள்ள மின் பகிர்மான அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

90—

விளையாட்டுத் திடல் சீரமைத்தல்

வினா எண் 3095—திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பெசன்ட் நகரில் கக்கன் காலனியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான விளையாட்டுத் திடலை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பெசன்ட் நகரில் கக்கன் காலனியில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான விளையாட்டுத் திடல் ஏதுமில்லை. எனவே, அதை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

91—

புதிய அடுக்குமாடிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 3110—திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் பழுதடைந்துள்ளதால், புதியதாக அடுக்குமாடிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குடிசைமாற்று திட்டத்தின்கீழ் மொத்தம் 1,072 குடியிருப்புகள் கட்டப்பட்டு அத்தனை குடியிருப்புகளும் பழுதடைந்துள்ளதால், தொழில்நுட்பக் குழுவின் ஆய்வறிக்கையின்படி, மொத்தக் குடியிருப்புகளையும் இடிப்பதற்கு அரசாணை எண் 163, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 21-7-2010-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இடிப்பதற்காக ஒப்பளிக்கப்பட்ட வீடுகளைக் கட்டுவதற்காக ரூ.5,500 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டு, அதில் சில கூடுதல் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. கூடுதல் விவரங்கள் பெறப்பட்ட பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

92—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 6973—திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசாணை (நிலை) எண் 299, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 28-12-2010-ன்படி திருப்பத்தூரில் பகுதி 1 மற்றும் பகுதி 2-ல் உள்ள குடியிருப்புகளுக்கு முறையே 96 மற்றும் 66 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ரூ.34.80 இலட்சம் மற்றும் ரூ.7.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையின்மூலம் சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

93—

வீடு ஒப்படைப்பு

வினா எண் 7369—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணத்தை செலுத்தியவர்களுக்கு பத்திரப்பதிவு ஆவணங்களை வழங்கி வட்டி இல்லாமல் அவர்களுக்கு வீடு ஒப்படைப்பு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அரசு நிதியுதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதனைக் கருத்தில் கொண்டு வாரியம் பயனாளிகளிடமிருந்து மிகக் குறைந்த வீதத்திலான வட்டி வசூல்

2014 ஆகஸ்ட் 12]

செய்கிறது. ஆகவே, அந்த வட்டியை தள்ளுபடி செய்ய வழிவகையில்லை. மேலும் அரசாணை (நிலை) எண் 215, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 28-09-2012-ன்மூலம் வட்டி தள்ளுபடி சலுகை அளித்துள்ளது. அதனைப் பயன்படுத்தி ஒதுக்கீடுதாரர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

94—

புதிய குடியிருப்புகளைக் கட்டித் தருதல்

வினா எண் 18563—திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் பழுதடைந்த அரசு குடியிருப்பை அகற்றிவிட்டு புதிய குடியிருப்பை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கியில் உள்ள அரசு குடியிருப்புகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்து மேல் தளங்கள் (Top Floors) மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேல் தளங்களை மட்டும் இடிக்க பரிந்துரை செய்தது. ஆனால், மேல் தளங்களை மட்டும் இடிக்கும்பொழுது மற்ற தளங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தொழில்நுட்ப வல்லுநர் குழுவை அமைக்க ஆணை வேண்டி கடிதம் பெறப்பட்டு, அதில் வாரியத்திடம் சில கூடுதல் விவரங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, குழுவின் பரிந்துரை பெறப்பட்ட பின்னர், பரிந்துரையின் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

95—

குடியிருப்புகளைப் புதுப்பித்தல்

வினா எண் 22841—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளுக்கு அரசு ஆணை எண் 299, நாள் 28-12-2010-ன்படி ரூ.162 இலட்சத்திற்கு சிறப்புப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.

96—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 26917—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரிலுள்ள பழுதடைந்த வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரிலுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் மொத்த கொள்முதல் மற்றும்

2014 ஆகஸ்ட் 12]

தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே, விற்பனை செய்யப்பட்டுள்ள வீடுகளில் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள செயற்குறிப்பு ஏதும் இல்லை.

97—

அரசு பணியாளர்கள் குடியிருப்புகளைக் கட்டுதல்

வினா எண் 30058—திரு. சி. கண்முகவேலு: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் அரசு பணியாளர் குடியிருப்புகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகம் தலைமையிடமாக உள்ளதால், இங்கு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் கட்டும் சாத்தியக் கூறு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

98—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 35598—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கொடுங்கையூர் ராஜரத்தினம் நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்புக் கட்டடங்களை சீரமைத்து, பராமரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். சென்னை கொடுங்கையூர் ராஜரத்தினம் நகர் குடிசைமாற்று வாரிய குடியிருப்புக் கட்டடங்களை பெரம்பூர் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.30.00 இலட்சம் செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் கூடுதல் பழுது பார்க்கும் பணிகள் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில நிதி உதவியின்கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

99—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 675—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை இரயில்வே மேம்பாலத்தின் மேற்குப் பகுதியில் இரண்டு பக்கமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை இரயில்வே மேம்பாலத்தின் மேற்குப் பகுதியில் இரண்டு பக்கமும் தடுப்பு சுவர் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

100—

உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல்

வினா எண் 971—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை-கன்னியாகுமரி நான்குவழிச் சாலையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி புறவழிச்சாலை சந்திப்புப் பகுதியில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை-கன்னியாகுமரி நான்குவழிச் சாலையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி புறவழிச்சாலை சந்திப்புப் பகுதியில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

101—

விபத்தைத் தவிர்த்தல்

வினா எண் 972—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை-கன்னியாகுமரி நான்கு வழிச் சாலையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி புறவழிச்சாலை சந்திப்புப் பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை-கன்னியாகுமரி நான்கு வழிச் சாலையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி புறவழிச்சாலை சந்திப்புப் பகுதியில் விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க தற்போது பாதுகாப்பு வசதிகள் (எச்சரிக்கை) சிவப்பு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

102—

பாலம் கட்டுதல்

வினா எண் 1575—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம் முறியப்பாஞ்சான் கிராமத்தின் அருகில் ஓடும் உப்பாற்றில் தனிப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்வி எழாது.

103—

பயணியர் விடுதி

வினா எண் 1644—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பயணியர் விடுதி கட்டுவதற்கு செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

104—

பிரதான சாலைப் பணி

வினா எண் 1837—திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூர் பிரதான சாலைப் பணியைத் தொடர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூர் பிரதான சாலையில் பணி மேம்பாடு செய்யப்பட்டு, தற்போது சாலை போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

105—

தரைப் பாலம்

வினா எண் 1852—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வழூர்-மருதாடு இடையே சுக நதியின் குறுக்கே தரைப் பாலத்தை மேம்பாலமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வழூர்-மருதாடு இடையே சுக நதியின் குறுக்கே தரைப் பாலத்தை மேம்பாலமாகக் கட்டுவதற்கு நிதிநிலைமைக்கேற்ப பரிசிலிக்கப்படும்.

106—

இணைப்புச் சாலை

வினா எண் 2751—திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, பாக்கம்-புலிக்குரடு சாலையை தாதங்குப்பம் வரை இணைப்புச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பாக்கம்-புலிக்குரடு சாலையை, தாதங்குப்பம் வரை இணைப்புச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

107—

சாலை வகை மாற்றம்

வினா எண் 2782—திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பெரம்பலூர்-மானாமதுரை நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், பெரம்பலூர்-மானாமதுரை சாலை மாநில நெடுஞ்சாலையிலிருந்து தேசிய நெடுஞ்சாலையாக, 19-6-2007 அன்று வகை மாற்றம் செய்யப்பட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

108—

பாலம் அமைத்தல்

வினா எண் 3010—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சி, குண்டாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சி, குண்டாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி 4-3-2013-ல் முடிவடைந்துள்ளது.

109—

சுற்றுச் சாலை

வினா எண் 3078—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் மற்றும் அரசூர் ஆகிய ஊராட்சிகளில் புறவழிச் சாலையில் ரவுண்டானா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் மற்றும் அரசூர் ஊராட்சிகளில் புறவழிச் சாலையில் ரவுண்டானா அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

110—

சாலை மற்றும் பாலம் அமைத்தல்

வினா எண் 3262—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், வலையபட்டியில் இருந்து மஞ்சமலை கோயிலுக்கு சாலை மற்றும் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், வலையபட்டியில் இருந்து மஞ்சமலை கோயிலுக்கு சாலை மற்றும் பாலம் அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

111—

சுங்கச் சாவடி கட்டணம்

வினா எண் 3304—திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச் சாவடியில் செலுத்தக் கூடிய நுழைவுத் தொகையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுங்க வரி கட்டணம், மத்திய அரசு அறிக்கை எண். சி.எஸ்.ஆர். (இ) நாள் 12-1-2011 இன்படி சலுகை

2014 ஆகஸ்ட் 12]

உரிமைதாருடன் மேற்கொண்ட உடன்படிக்கை அடிப்படையில் குறிப்பிட்ட காலம் வரை தேசிய நெடுஞ்சாலை, பாலம், சுரங்கப் பாதை மற்றும் புறவழிச் சாலை ஆகியவற்றின்மீது சுங்க வரி விதிக்கப்படுகிறது. சுங்க வரி கால அவகாசம் முடிவுற்றதும் துறையில் சாலை ஏற்பட்ட நாளிலிருந்து 40 விழுக்காடு குறைத்தும், மேலும் சுங்க வரி கொள்கைக்கேற்றார்போல் மாற்றியும் அமைக்கப்படும்.

112—

நடை மேம்பாலம்

வினா எண் 3705—திரு. ப. தன்சிங்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, குரோம்பேட்டை இரயில் நிலையம் எதிரிலுள்ள பேருந்து நிலையத்திற்குச் செல்ல மக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எழும்பூரில் உள்ளதுபோல் இரும்பிலான இணைப்பு மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை குரோம்பேட்டை இரயில் நிலையம் எதிரிலுள்ள பேருந்து நிலையத்திற்குப் பாதசாரிகள் கடக்க தானியங்கி நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

113—

பாலம் கட்டுதல்

வினா எண் 3714—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே கண்ணநல்லூரில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே கண்ணநல்லூரில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

114—

சாலைப் பணிகள்

வினா எண் 3881—திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, பெருங்குடி-பரம்புப்பட்டி சாலை, நிலையூர்-பரம்புப்பட்டி சாலை, மேலக்குயில்குடி, கீழக்குயில்குடி, பர்மா காலனி சாலை மற்றும் நெடுமதுரை சாலைப் பணிகளை உடனடியாகத் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பரங்குன்றம் தொகுதி, நெடுஞ்சாலைத் துறையின் மதுரை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலைகளான பெருங்குடி-பரம்புப்பட்டி சாலை, பர்மா காலனி மற்றும் நெடுமதுரை சாலைகளில் பழுதடைந்த பகுதிகளை ஆய்வு செய்து சீர் செய்ய பரிசீலிக்கப்படும். நிலையூர்-பரம்புப்பட்டி சாலை, மேலக்குயில்குடி, கீழக்குயில்குடி சாலைகளில் மிகவும் பழுதடைந்த

2014 ஆகஸ்ட் 12]

சாலை பகுதிகள் 13-வது நிதிக் குழு திட்டத்தின்கீழ், சிறப்பு பழுது பார்த்தல் பணியாக மேற்கொள்ளப்பட்டு, 31-3-2013 இல் அச்சாலைப் பணிகள் யாவும் முடிவடைந்துள்ளன.

115—

மேம்பாலம் கட்டுதல்

வினா எண் 3927—திரு. எஸ். செந்தில்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, திருச்சிராப்பள்ளி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பொன்மலை ஜி-கார்னர் பகுதியில் மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்மலை ஜி-கார்னர் பகுதியில் மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

116—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 5863—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே அரண்மனை சிறுவயல் சருகணி ஆற்றில் உள்ள பழுதான தரைப் பாலத்தை அகற்றி உயரமான பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே அரண்மனை சிறுவயல் சருகணி ஆற்றில் உள்ள பழுதான தரைப் பாலத்தை அகற்றி உயரமான பாலம் கட்டுவது தொடர்பான பிரேரணை மத்திய சாலை நிதித் திட்டத்தின்மூலம் நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

117—

சாலை மேம்பாடு

வினா எண் 5929—திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர்-தருமபுரி மாநில நெடுஞ்சாலையில் காக்கங்கரை ஏரிக்கரையின் மேல் செல்லும் குறுகிய சாலை கரையினை அகலப்படுத்தி, தடுப்புச் சுவர் அமைத்து, சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர்-தருமபுரி மாநில நெடுஞ்சாலையில் காக்கங்கரை ஏரியின்மேல் செல்லும் இருவழித்தடமாக உள்ள சாலையினை அகலப்படுத்தி தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

118—

பாலம் அமைத்தல்

வினா எண் 5960—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை, விரிசுழி ஆற்றின் குறுக்கே அனுமந்தகுடி அருகில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை, விரிசுழி ஆற்றின் குறுக்கே அனுமந்தகுடி அருகில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

119—

பாலம் கட்டுதல்

வினா எண் 6076—திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி காவேரி ஆற்றின் குறுக்கே பிலிக்கல்பாளையத்தில் பாலம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி காவேரி ஆற்றின் குறுக்கே பிலிக்கல்பாளையத்தில் பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

120—

சாலை மேம்பாடு

வினா எண் 6108—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிக்கிளி மலை சாலையை அகலப்படுத்தி, மேடுகளைக் குறைத்து பக்கவாட்டு சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

வரும் நிதியாண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்து மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

121—

புறவழிச் சாலை

வினா எண் 6114—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், இண்டூர், தருமபுரி, பாலக்கோடு சாலைகளை இணைத்து புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், இண்டூர், தருமபுரி, பாலக்கோடு சாலைகளில் போக்குவரத்து செறிவு குறைவாக உள்ள காரணத்தால், அச்சாலைகளை இணைத்து புறவழிச் சாலையாக மாற்றும் சாத்திக்கூறுகள் தற்போது இல்லை.

122—

இருவழிச் சாலைகள்

வினா எண் 6117—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம்-மலையனூர் (முசிகம்பட்டி வழி), ஏரியூர்-பழையூர் ஒருவழிச் சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம்-மலையனூர் (முசிகம்பட்டி வழி), ஏரியூர்-பழையூர் ஒருவழிச் சாலைகளை தற்போதுள்ள போக்குவரத்து செறிவிற்கு ஏற்றாற்போல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வரும் காலங்களில் போக்குவரத்து செறிவு அதிகரிக்கும்போது ஆய்வு செய்யப்படும்.

123—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 612—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், அண்ணா நகர், தருமபுரி சாலை சந்திப்பிலிருந்து பாப்பாரப்பட்டி சாலை (கௌரிசெட்டிபட்டி ஏரி) சந்திப்பு வரை நெடுஞ்சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், அண்ணா நகர், தருமபுரி சாலை சந்திப்பிலிருந்து பாப்பாரப்பட்டி சாலையானது தற்போதுள்ள போக்குவரத்து செறிவிற்கேற்ப பராமரிக்கப்பட்டு வருவதால், அச்சாலையினை அகலப்படுத்தும் நடவடிக்கை தற்சமயம் ஏதுமில்லை.

124—

பயணியர் விடுதி

வினா எண் 6367—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, அரிமழம் பேரூராட்சியில் பயணியர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, அரிமழம் பேரூராட்சியில் புதியதாக பயணியர் மாளிகை கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

125—

சாலை வகை மாற்றம்

வினா எண் 6500—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர்-மைசூர் வழி, மேச்சேரி, பெண்ணாகரம், கோட்டி, அஞ்செட்டி - உன்சனள்ளி -கனகபுரம் (கர்நாடகா) மைசூருடன் இணைத்து தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஓமலூர்-மைசூர் வழி, மேச்சேரி, பெண்ணாகரம், கோட்டி, அஞ்செட்டி - உன்சனள்ளி -கனகபுரம் (கர்நாடகா) மைசூருடன் இணைத்து தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

126—

புதிய பாலம்

வினா எண் 6570—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கேள்வினும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம், நந்தி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நந்தி ஆற்றின் குறுக்கே திருத்தணி நகரத்தில் நுழைவதற்கும், திருத்தணி நகரத்திலிருந்து வெளியில் செல்வதற்கும் இரண்டு பாலப் பணிகள் நடைபெற்று வருவதால் புதிய பாலம் கட்ட அவசியம் எழவில்லை.

127—

சாலை தரமுயர்த்துதல்

வினா எண் 6571—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கேள்வினும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்-திருப்பெரும்புதூர் சாலையை நான்கு வழிப் பாதையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் பெரிய வெளிவட்டச் சாலை அமைக்கும் பணி நடைபெறும் பொழுது திருவள்ளூர்-திருப்பெரும்புதூர் சாலை நான்கு வழிப் பாதையாகத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்யப்படவுள்ளது.

128—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 6572—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம் செல்லும் வழியில் புதிய பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம் செல்லும் வழியில் உயர்மட்டப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

129—

இரயில்வே பாலம்

வினா எண் 6574—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஒன்றியம், கடம்பத்தூரில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஒன்றியம், கடம்பத்தூரில் இரயில்வே கடவு எண் 21 இல் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

130—

சுற்றுச் சாலை

வினா எண் 6668—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதி, தாரமங்கலத்தில் சுற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதி, தாரமங்கலத்தில் சுற்றுச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

131—

இருவழிச் சாலை

வினா எண் 6723—திரு. சு. ரவி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரப் பழைய பேருந்து நிலையத்திலிருந்து அரக்கோணம் நகரக் காவல் நிலையம் வரை இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரப் பழைய பேருந்து நிலையத்திலிருந்து அரக்கோணம் நகரக் காவல் நிலையம் வரையிலான சாலை இ.மீ. 93/6-94/0 வரை ஏற்கனவே இருவழித்தடமாக உள்ளது.

132—

புறவழிச் சாலை

வினா எண் 6940—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி புறவழிச் சாலை ஏ.கேடி. பள்ளி அருகிலிருந்து கள்ளக்குறிச்சி-திருவண்ணாமலை சாலையை இணைக்க புறவழிச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி புறவழிச் சாலை ஏ.கேடி. பள்ளி அருகிலிருந்து கள்ளக்குறிச்சி-திருவண்ணாமலை சாலையை இணைக்கும் புறவழிச் சாலை அமைக்க சாத்தியகூறுகள் தற்போது இல்லை.

133—

சாலை தரமுயர்த்துதல்

வினா எண் 6953—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பூம்புகார் சாலையை இருவழிச் சாலையாக தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பூம்புகார் சாலை முழுவதும் இருவழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

134—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 6959—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் இருந்து கொண்டல் செல்லும் சாலையில் உள்ள இரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்திலிருந்து கொண்டல் செல்லும் சாலையில் உள்ள இரயில்வே கடவு எண் 218-இல் இரயில்வே மேம்பாலம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

135—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 6960—திருமதி ம. சக்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில்-பட்டவத்தி சாலையில் இரும்பு ஆலை இடையில் இரயில்வே கிராசிங்கில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில்-பட்டவத்தி சாலையில் இரும்பு ஆலை இடையில் இரயில்வே கடவு எண் 222-இல் மாற்றாக இரயில்வே மேம்பாலம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

136—

சாலை மேம்பாடு

வினா எண் 7150—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, ஆமத்தூர்-லெட்சுமியாபுரம் தார்ச்சாலை சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, ஆமத்தூர்-லெட்சுமியாபுரம் சாலையில் கி.மீ. 0/0-14/8 வரையுள்ள பகுதியில் கி.மீ. 9/0-12/0 வரையுள்ள பகுதியினை நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் மூலமாக 2013-2014 ஆம் ஆண்டு மேம்படுத்த பிரேரணை பரிசீலனையில் உள்ளது. மற்ற பகுதிகள் அனைத்தும் மேம்படுத்தப்பட்டு சாலை போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளது.

137—

சாலை சீரமைத்தல்

வினா எண் 7152—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, இராமசந்திராபுரம்-எம்.புதுப்பட்டி சாலை சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, இராமசந்திராபுரம்-எம்.புதுப்பட்டி சாலை சீரமைக்கப்பட்டு போக்குவரத்து நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

138—

சாலை சீரமைத்தல்

வினா எண் 7154—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, எம். புதுப்பட்டி-மங்கலம் சாலை சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகாசி ஒன்றியம், மங்கலம் ஊராட்சி, எம். புதுப்பட்டி-மங்கலம் சாலையில் பணிகள் அனைத்தும் முடிக்கப்பெற்று, இச்சாலைகளில் போக்குவரத்து நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.

139—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 7558—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மெயின் ரோடிலிருந்து குண்ணத்தூர் வழி உள்ளே செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மெயின் ரோடிலிருந்து குண்ணத்தூர் [illegible] சாலைப் பகுதி இ.மீ. 0/0-2/8 வரையுள்ளதாகும். இச்சாலையில் இ.மீ. 2/8-10 இல் சமண்டல நாக நதி குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி, நபார்டு மற்றும் கிராமச் சாலைகளின்மூலம் நபார்டு திட்டத்தின்கீழ் செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இப்பாலப் பணியின் அணுகுசாலை இத்திட்டத்தின்கீழ் சீர் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சாலைப் பகுதி வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் சீர் செய்யப்படும்.

140—

இரும்பு நடை மேம்பாலம்

வினா எண் 7559—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கு இரும்பு நடை மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் பாதசாரிகள் சாலையைக் கடப்பதற்கு இரும்பு நடை மேம்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், ஆகாய நடைபாதை அமைக்கும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

141—

புதிய பாலம்

வினா எண் 7634—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருவலஞ்சுழி தகரவெளி கிராமத்தை இணைக்கும் ராஜன் வாய்க்காலில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருவலஞ்சுழி தகரவெளி கிராமத்தை இணைக்கும் ராஜன் வாய்க்காலில் புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

142—

புதிய பாலம்

வினா எண் 7635—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கூட்டுமேடு ஆதிரெங்கம் சேகல் சாலையை இணைக்கும் முள்ளியாற்றில் புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கூட்டுமேடு ஆதிரெங்கம் சேகல் சாலையை இணைக்கும் முள்ளியாற்றில் புதிய பாலம் கட்ட தற்போது கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

143—

இணைப்புப் பாலம்

வினா எண் 7639—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொழுவத்தூர் ஊராட்சி, சால்வன் ஆறு மேல்புறம் கோரையாற்றில் பரவக்கோட்டை-திருத்துறைப்பூண்டி சாலையை இணைக்க பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரவக்கோட்டை-திருத்துறைப்பூண்டி சாலையை இணைக்க பாலம் கட்டுவது தற்போது சாத்தியமில்லை.

144—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 7760—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, தாம்பரம்-முடிச்சூர் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

தாம்பரம் தொகுதி, தாம்பரம்-முடிச்சூர் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

145—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 7787—திரு. க. பவுன்ராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் குறுகலாக உள்ள தரங்கம்பாடி-ஆடுதுறை சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதியில் குறுகலாக உள்ள தரங்கம்பாடி-ஆடுதுறை சாலை போக்குவரத்து செறிவிற்கேற்ப பராமரிக்கப்பட்டு வருகிறது. அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

146—

மேம்பாலம் செப்பனிடுதல்

வினா எண் 7956—திரு. தா. மலரவன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், கணபதி மேம்பாலத்தில் பழுதடைந்துள்ள பகுதியை செப்பனிட்டு நவீனப்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை, கணபதி மேம்பாலத்தின் மேல்தளத்தில் பழுதடைந்துள்ள பகுதி சரி செய்யப்பட்டுள்ளது. மேலும், நவீனப்படுத்திட தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

147—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 7995—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், குன்னத்தூர்-திருநெல்வேலி டவுன் செல்லும் சாலையை விரிவுபடுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், குன்னத்தூர்-திருநெல்வேலி டவுன் செல்லும் சாலையினை தற்சமயம் அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

148—

இரயில்வே சுரங்கப் பாதை

வினா எண் 7998—திரு. சு. ரவி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, பரமேஸ்வரமங்கலம் இரயில்வே இருப்புப் பாதையின்கீழ் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

அரக்கோணம் தொகுதி, பரமேஸ்வரமங்கலம் இரயில்வே இருப்புப் பாதை பகுதியில் தற்சமயம் சாலை மேம்பாலம்/கீழ்பாலம் அமைப்பதற்கான சாத்தியகூறு இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

149—

புதிய பாலம்

வினா எண் 8238—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், புளியம்பட்டி-பங்களாபுதூர் இடையில் பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், புளியம்பட்டி-பங்களாபுதூர் இடையில் பவானி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

150—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 8272—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சூராணத்திலிருந்து ஏறுவயல், பழவூர் வழியாக மறவமங்கலம் செல்லும் சாலையை அகலப்படுத்தி, சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சூராணத்திலிருந்து ஏறுவயல், பழவூர் வழியாக மறவமங்கலம் செல்லும் சாலையை அகலப்படுத்தி, சீரமைக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

151—

சிமெண்ட் சாலை

வினா எண் 8520—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, பவானி நெடுஞ்சாலை-பயணியர் விடுதி வரை சிமெண்ட் சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி பேரூராட்சி, பவானி நெடுஞ்சாலை-பயணியர் விடுதி வரை சிமெண்ட் சாலை அமைக்க அவசியம் எழவில்லை.

152—

புறவழிச் சாலை

வினா எண் 8535—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பொருட்டு திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை எண் 210-ல் கி.மீ.74/0 முதல் 94/0 வரை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

153—

பயணியர் விடுதி

வினா எண் 8876—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டையில் பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி சாக்கோட்டையில் பயணியர் விடுதி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

154—

பயணியர் விடுதி

வினா எண் 8882—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரில் பயணியர் மாளிகை கட்டும் திட்டம் தற்போது இல்லை.

155—

சாலைகள்

வினா எண் 9314—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசியிலிருந்து சுரண்டை, வாடியூர், கருவாந்தா, ஊத்துமலை, மருங்கலாங்குளம், பாவூர்சத்திரம், தேவர்குளம், கழுகுமலை வழியாக கோவில்பட்டி வரை புதிய சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, தென்காசியிலிருந்து சுரண்டை, வாடியூர், கருவாந்தா, ஊத்துமலை, மருங்கலாங்குளம், பாவூர்சத்திரம், தேவர்குளம், கழுகுமலை வழியாக கோவில்பட்டி வரை புதிய சாலை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

156—

சுரங்கப் பாதை

வினா எண் 10570—திரு. பொன். ராஜா: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் இரயில் நிலையம் எதிரில் சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பெருங்களத்தூர் இரயில் நிலையம் எதிரில் சுரங்க நடைபாதை அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படும்.

157—

பாலம்

வினா எண் 1117—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர்-திருப்பதி நெடுஞ்சாலை மணவாளநகர் பெரிய பாலம் அருகில் புறவழிச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகருக்குப் புறவழிச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

158—

பாலம்

வினா எண் 1120—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, நந்தி ஆறு குறுக்கே பாதியில் நிற்கும் பாலப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில், நந்தி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் உயர்மட்டப் பாலப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

159—

சுரங்கப் பாதை

வினா எண் 12502—திரு. து. முருகேசன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரம், புதிய பேருந்து நிலையம் அருகில் ஜி.எஸ்.டி. சாலையில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரம், புதிய பேருந்து நிலையம் அருகில் ஜி.எஸ்.டி. சாலையில் சுரங்கப் பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

160—

கூற்றுச் சாலை

வினா எண் 14525—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் தொகுதி, தேனி நகரில் சுற்றுச் சாலை அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

பெரியகுளம் தொகுதி, தேனி நகரில் சுற்றுச் சாலை அமைக்கும் பணி தற்சமயம் ஏதும் நடைபெறவில்லை.

161—

பிளாஸ்டிக் சாலைகள்

வினா எண் 14525—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் பிளாஸ்டிக் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் பிளாஸ்டிக் சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

162—

பயணிகள் தங்கும் விடுதி

வினா எண் 18345—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பயணிகள் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பயணிகள் தங்கும் விடுதி அமைக்கும் பணி விரைவில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

163—

சுரங்க நடைபாதை

வினா எண் 19515—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு முன்பு சுரங்கப் பாதை அமைக்கும் பணி துவங்கப்பட்டு, பல்வேறு காரணங்களால் அதனை செயலாக்க முடியாததால் அப்பணி கைவிடப்பட்டது.

164—

புறவழிச் சாலை

வினா எண் 19694—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேருராட்சியில் புறவழிச் சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

165—

கிராமச் சாலைகள்

வினா எண் 19770—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, கிராமச் சாலைகளை ஒரு வழித் தடத்திலிருந்து இரு வழிச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, கிராமச் சாலைகளை ஒரு வழித் தடத்திலிருந்து இரு வழிச் சாலையாக மாற்ற தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

166—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 20468—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி-மழவராயநல்லூர் முதல் தலைஞாயிறு வரை உள்ள அரிச்சந்திர நதிக்கரை சாலையை அகலப்படுத்தி, பலப்படுத்த அரசு முன்வருமா?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மன்னார்குடி-மழவராயநல்லூர் முதல் தலைஞாயிறு வரை உள்ள அரிச்சந்திர நதிக்கரை சாலை போக்குவரத்து செறிவு அதிகரிக்கும்போது அகலப்படுத்தி, பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

167—

சாலை சீரமைத்தல்

வினா எண் 20697—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், முப்பையூர்-புதுக்குறிச்சி நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், முப்பையூர்-புதுக்குறிச்சி நெடுஞ்சாலைத் துறையின் சாலைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டுள்ளன.

168—

சாலைகள்

வினா எண் 20728—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) தனி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து பஞ்சப்பள்ளி செல்லும் சாலையை இரு வழிப் பாதையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை-பஞ்சப்பள்ளி சாலையை இரு வழிப் பாதையாக அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

169—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 20883—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

170—

புதிய பாலம்

வினா எண் 20894—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு தெரு இடையே அடப்பாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தெற்கு தெரு இடையே அடப்பாற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்க கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

171—

பயணியர் விடுதி

வினா எண் 21005—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் அரசு பயணியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கோட்டூரில் அரசு பயணியர் விடுதி அமைக்க தற்போது அவசியம் ஏதும் ஏழவில்லை.

172—

பயணியர் விடுதி

வினா எண் 21520—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பயணியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பயணியர் விடுதி கட்டும் பணி 2013-2014 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தில் ரூ.35.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி நடைபெற்றுவருகிறது. ஏப்ரல் 2014-க்கு முன்னர் அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும்.

173—

இரயில்வே மேம்பாலம்

வினா எண் 21847—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருங்கல்-மார்த்தாண்டம் சாலை விரிகோடு பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

கருங்கல்-மார்த்தாண்டம் சாலை விரிகோடு பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

174—

பயணியர் விடுதி

வினா எண் 23075—திரு. து. முருகேசன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகரத்தில் புதிய பயணியர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு நகரம், சென்னை மாநகரத்திற்கு அருகாமையில் உள்ளதால், செங்கல்பட்டு நகரத்தில் புதிய பயணியர் விடுதி கட்ட அவசியம் எழவில்லை.

175—

மேம்பாலம்

வினா எண் 24597—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் சந்திப்பில் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

176—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 24642—திரு. மு. முருகன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதிகளிலுள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதிகளிலுள்ள சாலைகள் 2012-2013 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளின்கீழ் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன.

177—

மேம்பாலம்

வினா எண் 24679—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-எலையமுத்தூர் சாலை கி.மீ. 0/6-ல் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-எலையமுத்தூர் சாலை கி.மீ. 0/6-ல் மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

178—

இருவழிச் சாலை

வினா எண் 24826—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

(அ) சேலம்-கொச்சின் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து நெய்க்காரப்பட்டி வழியாக எளம்பிள்ளை சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து செறிவு உயரும்போது சாலையை அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

179—

இருவழிச் சாலை

வினா எண் 24831—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி-பூலாம்பட்டி வழியாக மேட்டூர் செல்லும் சாலையை அகலப்படுத்தி, இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி-பூலாம்பட்டி வழியாக மேட்டூர் செல்லும் சாலை ஏற்கெனவே இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டு, போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

180—

இருவழிச் சாலை

வினா எண் 24836—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி இரயில் நிலையம், கோழிக்கால்நத்தம் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி இரயில் நிலையம், கோழிக்கால்நத்தம் சாலை தற்போதைய போக்குவரத்திற்கு ஏற்றாற்போல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

181—

இணைப்புச் சாலை

வினா எண் 26621—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, குறிச்சி, முனைவென்றி, அதிகரை வழியாக இளையான்குடி, பரமக்குடி இணைப்புச் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, குறிச்சி, முனைவென்றி, அதிகரை வழியாக இளையான்குடி, பரமக்குடி இணைப்புச் சாலை போக்குவரத்து நெரிவிற்கு ஏற்றாற்போல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

182—

வெளிவட்டச் சாலை

வினா எண் 26679—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வெளிவட்டச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகருக்கு புறவழிச் சாலை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் 5.10 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. விடுபட்ட பகுதியில் தற்போது புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

183—

மேம்பாலம்

வினா எண் 26698—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-திருமூர்த்தி மலை நெடுஞ்சாலையில் 10/4 கி.மீ. இல் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-திருமூர்த்திமலை சாலை கி.மீ. 10/4-ல் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

184—

மேம்பாலம்

வினா எண் 26707—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உடுமலைப்பேட்டை-திருமூர்த்தி மலை சாலை கி.மீ. 10/4-ல் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை-திருமூர்த்திமலை சாலை கி.மீ. 10/4-ல் மேம்பாலம் கட்டும் பணிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு, பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

185—

மேம்பாலம்

வினா எண் 26902—திரு. ஏ. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

புனித தோமையர் மலை-பூந்தமல்லி சாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

புனித தோமையர் மலை-பூந்தமல்லி சாலை சந்திப்பில் காட்டுப்பாக்கத்தில் மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

186—

வெளிவட்டச் சாலை

வினா எண் 26903—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை வெளிவட்டச் சாலை அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

சென்னை வெளிவட்டச் சாலை முதற்கட்டப் பணிகள் 83% முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசிலனையில் உள்ளது.

187—

மேம்பாலம்

வினா எண் 26904—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போரூரில் கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலையில் மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

போரூரில் கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலையில் மேம்பாலம் கட்டும் பணி 2014 ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப்படும்.

188—

மேம்பாலம்

வினா எண் 26906—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் நெடுஞ்சாலை சந்திப்பில் மூலக்கடைப் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

மாதவரம் நெடுஞ்சாலை சந்திப்பில் மூலக்கடைப் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மேம்பாலப் பணி முழுவதும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

189—

சாலை மேம்படுத்துதல்

வினா எண் 26976—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜீவ்காந்தி சாலையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் அருகில் கிழக்கு கடற்கரை சாலை வரை 25 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழித்தடமாக மேம்படுத்தும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

இராஜீவ்காந்தி சாலையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் அருகில் கிழக்கு கடற்கரை சாலை வரை 25 கி.மீ. நீளத்திற்கு ஆறு வழித்தடமாக மேம்படுத்துவதற்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அப்பணிகள் முடிவுற்றதும் சாலை அமைக்கும் பணி தொடங்கப்படும்.

190—

பாலம்

வினா எண் 28379—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மழவராயனேந்தலுக்கும் வேம்பத்தூருக்குமிடையே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில், மழவராயனேந்தலுக்கும் வேம்பத்தூருக்குமிடையே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லை.

191—

எரிபொருள் மறு நிரப்புதல் நிலையம்

வினா எண் 28774—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் கடலோரத்தில் எரிபொருள் மறு நிரப்புதல் நிலையத்தினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும். (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் கடலோரத்தில் எரிபொருள் மறு நிரப்புதல் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

192—

மேம்பாலம்

வினா எண் 28782—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலை, தேவனூர்புதூர்-ஆண்டியூர் சாலையில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலை, தேவனூர்புதூர்-ஆண்டியூர் சாலையில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது.

193—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 28785—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சின்னார் சாலை முதல் பெரியவாளவாடி சாலையில் உள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சின்னார் சாலை முதல் பெரியவாளவாடி சாலையில் உள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

194—

மேம்பாலம்

வினா எண் 28787—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் துங்காவி-ராமேசவுண்டன்பூதூர், சாளரப்பட்டி-பாப்பன்குளம் சாலைகளில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் துங்காவி-ராமேசவுண்டன்பூதூர், சாளரப்பட்டி-பாப்பன்குளம் சாலைகளில் மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

195—

சாலை விரிவாக்கம்

வினா எண் 28995—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம்-முடிச்சூர் சாலையை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம்-முடிச்சூர் சாலையை விரிவாக்கம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

196—

புறவழிச்சாலை

வினா எண் 29075—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு முதல் ஆரணி வரை புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யாறு முதல் ஆரணி வரை உள்ள திருவத்திபுரம்-ஆரணி சாலை தற்போதைய போக்குவரத்துக்கு ஏற்ப பராமரிக்கப்பட்டுவருவதால், புறவழிச்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

197—

புறவழிச்சாலை

வினா எண் 29077—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு-ஆரணிக்கு புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு-ஆரணிக்கு 5.1 கி.மீ. நீளத்தில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்து பயன்பாட்டில் உள்ளது.

198—

மேம்பாலம்

வினா எண் 30262—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் இரயில்வே கடவு எண் 90-ல் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் இரயில்வே கடவு எண் 90-ல் மேம்பாலம் கட்டும் திட்டம் இல்லை.

199—

வட்டச் சாலை

வினா எண் 30377—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) மாமல்லபுரம்-எண்ணூர் வட்டச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரம்-எண்ணூர் வட்டச் சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

200—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 30403—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், நாட்க்கல்-பாளையம் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க நபார்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், நாட்க்கல்-பாளையம் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

201—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 30406—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, மலையாண்டி பட்டினம் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்க நபார்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, மலையாண்டிபட்டினம் சாலையில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

202—

மேம்பாலம்

வினா எண் 30859—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) டைடல் பார்க்கிலிருந்து திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வரை நான்கு வழிச்சாலை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டைடல் பார்க்கிலிருந்து திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. பணி விரைவில் துவங்கப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

203—

புறவழிச் சாலை

வினா எண் 31770—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணிக்கு புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிக்கு புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

204—

பலவழித்தடம்

வினா எண் 31771—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-தூத்துக்குடி சாலையை பலவழித்தடமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படும் மதுரை-தூத்துக்குடி சாலையை பலவழித்தடமாக மாற்றும் திட்டம் தற்போது இல்லை.

205—

சாலை அகலப்படுத்துதல்

வினா எண் 33227—திரு. பி.ஆர். மனோகர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் முதல் நெமிலி, பணப்பாக்கம் வழியாக ஒச்சேரி வரை செல்லும் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் முதல் நெமிலி, பணப்பாக்கம் வழியாக ஒச்சேரி வரை செல்லும் சாலை இருவழிச் சாலையாக போக்குவரத்திற்கு ஏற்றார்போல் உள்ளது.

206—

விபத்துகளைத் தடுத்தல்

வினா எண் 41488—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விபத்துகளைத் தவிர்க்க சாலைகளில் உள்ள வேகத் தடைகளில் வெள்ளை பெயிண்ட் அல்லது ஒளிரும் ஸ்டிக்கர்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விபத்துகளைத் தவிர்க்க சாலைகளில் உள்ள வேகத் தடைகளில் வெள்ளை மற்றும் கருப்பு பெயிண்ட் அடித்தல்

2014 ஆகஸ்ட் 12]

மற்றும் ஒளிரும் ஸ்டிக்கர்கள் வைத்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

207—

உயர்மட்டப் பாலம்

வினா எண் 41822—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு-சேரன்மகாதேவி சாலையில் வடக்கு பச்சையாற்றின் குறுக்கே பத்மநேரியில் அமைந்துள்ள உயர்மட்டப் பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு-சேரன்மகாதேவி சாலையில் வடக்கு பச்சையாற்றின் குறுக்கே பத்மநேரியில் அமைந்துள்ள உயர்மட்டப் பாலத்தை அகலப்படுத்துவதற்கு தற்போது சாத்தியமில்லை.

208—

புறவழிச் சாலை

வினா எண் 48107—திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

209—

வட்டியில்லாத கடனுதவி

வினா எண் 3893—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்த இளைஞர்களுக்கு எந்தவித நிபந்தனையுமின்றி வட்டியில்லாத கடனுதவி அளித்து தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* படித்த இளைஞர்களுக்கு எந்தவித நிபந்தனையுமின்றி வட்டியில்லாத கடனுதவி அளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்-தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன் பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12]

(2) மேலும், மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்களில் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், தொடர்புடைய மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

210—

தொழிற்பேட்டை

வினா எண் 6371—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பெல் தொழிற்சாலை அருகில் தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, பெல் தொழிற்சாலை அருகில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் இடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் முன்வந்தால், தொழில்முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் திருமயம் தொகுதி, பெல் தொழிற்சாலை அருகில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

211—

தொழிற்சாலை

வினா எண் 13256—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் மற்றும் மாம்பழம் பதனிடப்படும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் பகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் மற்றும் மாம்பழம் பதனிடப்படும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் பகுதியில் மாம்பழக்கூழ் தயாரிக்கும் மற்றும் மாம்பழம் பதனிடப்படும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள், தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்கள் பெற்று பயன் பெறலாம்.

(இ) மேலும், படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள "புதிய தொழில்முனைவோர்-தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல் 25 விழுக்காடு அரசு மானியத்துடன், 3 விழுக்காடு பின்முறை வட்டி மானியத்துடன் வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று, தொழில்முனைவோர்கள் பயன் பெறலாம். இத்திட்டத்தில் மகளிருக்கு 50 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

(ஈ) இவையல்லாது, தொழில்முனைவோர்கள் மைய அரசின் 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' மற்றும் மாநில அரசின் 'வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்' கீழும் வங்கிக் கடன் மற்றும் மானிய உதவி பெற்று பயனடையலாம். மேற்காணும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ் தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர், தேனி மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பித்து, மானியங்களுடன் வழிகாட்டுதல்களையும் பெறலாம்.

2014 ஆகஸ்ட் 12]

212—

தொழிற்பேட்டை

வினா எண் 23081—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், தேவையான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் முன்வந்தால், தொழில்முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ மூலமாக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

213—

சத்துணவு

வினா எண் 7738—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பகுதியிலுள்ள ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் முட்டைகளை எடுத்துச்சென்று வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

வால்பாறை நகராட்சி அலுவலகத்திலிருந்து முட்டை சத்துணவு அமைப்பாளர்களால் 35 கிலோ மீட்டர் தூரத்திற்கு எடுத்துச்

[2014 ஆகஸ்ட் 12

செல்லப்படுகிறது. முட்டை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துப் படி அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வால்பாறை பகுதியிலுள்ள அனைத்து மையங்களுக்கும் முட்டை கொண்டுசென்று வழங்க, வால்பாறை நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

214—

அங்கன்வாடி மையம்

வினா எண் 8054—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, பக்காளியூர், 17-வது வார்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, பக்காளியூர், 17-வது வார்டில் நட்டும்பாளையம்-II அங்கன்வாடி மையம் 1-3-2006 முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி, இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, சேலம் மாவட்டத் திட்ட அலுவலரால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

215—

சத்துணவு

வினா எண் 8569—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சத்துணவுக் கூடங்களில் உள்ள பழைய பாத்திரங்களை மாற்றி புதிய பாத்திரங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 5 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய சமையல் பாத்திரங்கள் வாங்கி வழங்க மையம் ஒன்றுக்கு ரூ.5,000/- வீதம், 2012-2013 ஆம் ஆண்டில் மத்திய அரசுமூலம் ரூ.8.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 17,312 மையங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பாத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டிலும் ரூ.6.50 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்தொகையில் பாத்திரங்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

216—

சத்துணவு

வினா எண் 12903—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், மேல்சாணங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மேல்சாணங்குப்பம் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக அரசாணை (நிலை) எண் 106, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள் 9-5-2007-ன்படி தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் 322 மாணவ / மாணவியர்கள் பயில்கின்றனர். 25-6-2007 முதல் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பள்ளியில் பயிலும் 282 மாணவ/மாணவியர்கள் சத்துணவுத் திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

217—

சத்துணவு மையம்

வினா எண் 13621—திரு. க. ரவி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, மேல்களத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குத் தனியே சத்துணவு மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஊராட்சி ஒன்றியம், மேல்களத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 148 மாணவ/மாணவியர் பயில்கின்றனர். 145 மாணவ/மாணவியர் மதிய உணவு உண்கின்றனர்.

இம்மையத்திற்கு 1996-1997 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சமையலறையில், மதிய உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. இத்தச் சமையலறைக் கட்டடம் பழுதான நிலையில் உள்ளதால், 2012-2013 ஆம் நிதியாண்டின் NP-MDMS திட்ட நிதி ஒதுக்கீட்டில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.2,40,000/- மதிப்பீட்டில் இருப்பறையுடன்கூடிய சமையலறை புதிதாகக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

218—

சமையலறைக் கட்டடம்

வினா எண் 13624—திரு. கு. ரவி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சத்துணவு சமையலறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெமிலி ஊராட்சி ஒன்றியம், சயனபுரம் ஊராட்சி, சயனபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள சத்துணவு மையம் 2010-2011 ஆம் ஆண்டில் NP-MDMS திட்ட நிதி ஒதுக்கீட்டில் 36 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.3,00,000/- மதிப்பீட்டில் இருப்பறையுடன்கூடிய சமையலறை ஒன்று கட்டி முடிக்கப்பட்டு, 30-3-2012 முதல் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 460 மாணவ/மாணவிகள் கல்வி பயில்கின்றனர். அதில் 280 மாணவ/மாணவியர்கள் சத்துணவுத் திட்டத்தின்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

219—

முதியோர் இல்லம்

வினா எண் 14344—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, காமக்கூரில் முதியோர் இல்லம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை ஒன்றியத்தில் 'டெர்ரி டெஸ் ஹோம்ஸ் கோர் டிரஸ்ட்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், செய்யாறு ஒன்றியத்தில் 'மாஸ் வெல்ஃபேர் அசோசியேஷன்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 'ஹாஸ்பிடாலிட்டி ஃபார் த நீடி சொசைட்டி' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் செயல்படுத்தும் முதியோர் இல்லத்தில் 40 முதியோர்கள் பயனுறும் வகையில் மாநில அரசு ஆண்டொன்றிற்கு ரூ.2.00 இலட்சம் மானியம் வழங்கி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 'மாஸ் வெல்ஃபேர் அசோசியேஷன்' மற்றும் 'நியூ எஜுகேஷனல் சோஷியல் அவேர்னஸ் அண்ட் மேனேஜ்மென்ட் சொசைட்டி' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன. ஆரணி தொகுதி, காமக்கூரில் முதியோர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

220—

முதியோர் உதவித் தொகை

வினா எண் 18773—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், பொங்கலூர் ஊராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறாதவர்களுக்கு அரசு வழங்கும் முதியோர் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் மனுதாரர் பெயர் இல்லாவிட்டாலும், தகுதியின் அடிப்படையில் உண்மையாக ஏழையாக இருந்தால் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாநில அரசின் ஓய்வூதியத் திட்டங்களில், ஓய்வூதியம் பெறுவதற்கு வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பட்டியலில் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற அளவுகோல் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. மைய அரசின் திட்டங்களான (i) இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டம், (ii) இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் தேசியத் திட்டம், (iii) இந்திரா காந்தி விதவைகள் ஓய்வூதியத் தேசியத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களுக்கு மட்டும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் பெயர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. ஆதரவற்றவர்களுக்கு அவர்களது தகுதியின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் தமிழக அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது. பல்லடம் வட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் இடம்பெறாத, தகுதியுள்ள 31 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

221—

அங்கன்வாடி மையம்

வினா எண் 1901—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், ஆலங்குடி, இஸ்திரிக்கோட்டை, மேலக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஒன்றியத்தில், ஆலங்குடி அங்கன்வாடி மையம் மற்றும் இஸ்திரிக்கோட்டை அங்கன்வாடி மையம் ஆகிய இரு அங்கன்வாடி மையங்களும் 1-12-2009 முதல் தனித்தனியே இயங்கி வருகின்றன. மேலக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள 0-24 மாதக் குழந்தைப் பயனாளி நால்வர் மட்டும் அருகிலுள்ள அனுமந்தக்குடி அங்கன்வாடி மையத்தின்மூலம் பயன்பெற்று வருவதாலும், மேலக்குடியிருப்பு கிராமத்திற்கென தனி அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

222—

சத்துணவுக் கூடம்

வினா எண் 19019—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 50-வது வார்டு, நடராஜபுரத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சியில் 1 முதல் 27 வார்டுகள் மட்டுமே உள்ளது. 50-வது

2014 ஆகஸ்ட் 12]

வார்டு என இல்லை. காரைக்குடி தொகுதி, தேவக்கோட்டை நகராட்சி 1-வது தொகுதி, நடராஜபுரம் நகராட்சி தொடக்கப் பள்ளிக்குப் பொது நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் 2011-2012 ஆம் ஆண்டில் சத்துணவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு, 5-1-2012 முதல் சத்துணவு மையம் செயல்பட்டு வருகின்றது.

223—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 1983—திருமதி ர. சுமா: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், கவர்பனை பகுதியில் அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், கவர்பனை அங்கன்வாடி மையம் 1-7-1982 முதல் அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

224—

அங்கன்வாடி மையம்

வினா எண் 1984—திரு. சோழன் சிந. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், மாடக்கோட்டை கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், மாடக்கோட்டை கிராமத்தில் 14-11-2007 முதல் அங்கன்வாடி குறு மையம் செயல்பட்டு வருவதால், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கத் தேவை எழவில்லை.

225—

திருமண உதவித் திட்டம்

வினா எண் 20375—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) படிக்காத மற்றும் அனாதைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண நிதியுதவித் திட்டங்களில், படிக்காத ஏழைப் பெண்களுக்கு ரூ.25,000/- நிதியுதவியுடன், திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும், படிக்காத அனாதைப் பெண்களுக்கு ஏற்கெனவே அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில் ரூ.25,000/- நிதியுதவியுடன் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

226—

அங்கன்வாடி மையம்

வினா எண் 20824—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, எம்.ஏ. நகர் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி ப. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டாரம், கரைப்புதூர் ஊராட்சியில் கரைப்புதூர் அங்கன்வாடி மையம் 17-12-1993 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எம்.ஏ. நகர் பகுதி மக்கள் அருகில் உள்ள மையத்தில் பயனடைந்து வருவதால், அங்கு புதிய மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

227—

சத்துணவுக் கூடம்

வினா எண் 21543—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் மேலப்பாளையம் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கம், மேலப்பாளையம் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வைப்பறையுடன்கூடிய சமையலறை ஒன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,10,000/- செலவினத்தில் 20 சதுர மீட்டரில் 2009-2010 ஆம் ஆண்டு புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டு, 22-7-2010-லிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் 800 மாணவிகள் பயில்கின்றனர். இவற்றில் 450 மாணவிகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

228—

அங்கன்வாடி மையம்

வினா எண் 22670—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரூர் தொகுதி, சாமாண்டஹள்ளி ஊராட்சி, தொட்டம்பட்டி ஆர்.எஸ். காலனியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரூர் சட்டமன்றத் தொகுதி, சாமாண்டஹள்ளி ஊராட்சி, தொட்டம்பட்டி ஆர்.எஸ். காலனியில் உள்ள பயனாளிகள் அருகில் உள்ள தொட்டம்பட்டி முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கத் தேவை எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

229—

அங்கன்வாடி மையம்

வினா எண் 22674—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, குமாரபுரம் ஊராட்சி, உபகாரமாதா குடியிருப்புப் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

ராதாபுரம் தொகுதி, குமாரபுரம் ஊராட்சி, உபகாரமாதா குடியிருப்பில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் 1-2-2012 முதல் செயல்பட்டு வருவதால், புதிதாக அங்கன்வாடி மையம் துவங்குவதற்கானத் தேவை எழவில்லை.

230—

முதியோர் இல்லம்

வினா எண் 22831—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி, தேவகோட்டை, கண்டனூர், கண்ணங்குடி, சாக்கோட்டை ஆகிய பகுதிகளில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு

இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, சிவகங்கை மாவட்டத்தில், சிவகங்கை வட்டாரத்தில் 'இன்டகரேட்டட் ரூரல் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் சொசைட்டி' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், மானாமதுரை வட்டாரத்தில் 'மாதா மெமோரியல் எஜூகேஷன் டிரஸ்ட்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டத்தில், 'திருப்பத்தூர் கிராம முன்னேற்றத் திட்டக் கழகம்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் செயல்படுத்தும் முதியோர் இல்லத்தில், 40 முதியோர்கள் பயனுறும் வகையில், மாநில அரசு ஆண்டொன்றிற்கு ரூ.2.00 இலட்சம் மானியம் வழங்கி வருகிறது. சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டையில், 'சிங்கம்பட்டி கிராம முன்னேற்றச் சங்கம்', சக்கந்தி என்ற ஊரில் 'சொசைட்டி பார் ரூரல் அண்ட் அர்பன் விமன்ஸ் ரெனைசன்ஸ் ஆக்டிவிட்டிஸ்', காரைக்குடி, நாகப்பபுரத்தில், 'டெவலப்மெண்ட் பார் ரூரல் அப்ரெஸ்டு பியூப்பிள்ஸ் சர்வீஸ் சொசைட்டி' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன. எனவே, காரைக்குடி தொகுதியில் முதியோர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

231—

சத்துணவுக் கூடம் சீரமைத்தல்

வினா எண் 25560—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி ஒன்றியம், மோரூர் கிராமம், கிழக்கு ஊராட்சி, திருவாண்டிபட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் சத்துணவுக் கூடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், மோரூர் கிராமம், கிழக்கு ஊராட்சி, திருவாண்டிபட்டி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் 34 மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்றும், சத்துணவு உண்டும் பயன்பெற்று வருகின்றனர். இப்பள்ளிக்கு 2010-2011 ஆம் ஆண்டில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.2 இலட்சம் செலவினத்தில் வைப்பறையுடன்கூடிய சமையலறைக் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. தற்பொழுது மேற்கூரை அமைக்கும் பணி நடைபெற்று முடிந்துள்ளது. 30-11-2013-க்குள் பணி முழுவதுமாக முடிக்கப்படும்.

232—

காப்பகம் மற்றும் முதியோர் இல்லம்

வினா எண் 27278—திரு. க. ரவி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம் மற்றும் காவேரிப்பாக்கம், நெமிலி ஆகிய ஒன்றியங்களில் சிறுவர்கள் காப்பகம் மற்றும் முதியோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, வேலூர் மாவட்டம், காட்பாடி ஒன்றியத்தில் 'முதியோர் பாலர் குடும்ப கிராமப் பண்ணை' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும்,

வாணியம்பாடி ஒன்றியத்தில் 'சரணாலயம் கருணை இல்லம்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. எனவே, அரக்கோணம் தொகுதியில் சிறுவர்கள் காப்பகம் மற்றும் முதியோர் இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

233—

சத்துணவு மையம்.

வினா எண் 28343—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் ஊராட்சி, சென்னிமலைபாளையம் தொடக்கப் பள்ளியில் புதிய சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர், சென்னிமலைபாளையம் தொடக்கப் பள்ளியில் 44 மாணவ/மாணவியர் பயில்கின்றனர். அப்பள்ளியில் புதிய சத்துணவு மையம் அமைக்க அப்பள்ளி தலைமையாசிரியரிடமிருந்து கருத்துரு உரிய அலுவலர்மூலமாக ஒருங்கிணைந்த கோவை மாவட்டமாக இருந்தபொழுது பெறப்பட்டு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நடவடிக்கை நகஎண் 2395/2003/Q3, நாள் 8-1-2004-ன்படி புதிய சத்துணவு மையம் துவங்க அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டு, 8-1-2004 முதல் செயல்பட்டு வருகிறது. அப்பள்ளியில் பயிலும் 4 மாணவ/மாணவியர்கள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

2014 ஆகஸ்ட் 12]
234—

முதியோர் காப்பகம்

வினா எண் 29544—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, தேவூரில் முதியோர் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி மா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியத்தில் 'காந்தி அமைதி மையம்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், காடையாம்பட்டி ஒன்றியத்தில் 'பெத்தேல் அக்கிலல்சுரல் ஃபெல்லோஷிப்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் 'ஊன்றுகோல் முதியோர் இல்லம்', 'காந்தி அமைதி மையம்' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன. எனவே, சங்ககிரி தொகுதி, தேவூரில் முதியோர் காப்பகம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

235—

முதியோர் இல்லங்கள்

வினா எண் 29762—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதரவற்ற முதியோர்களுக்கு வட்டந்தோறும் முதியோர் இல்லங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரத்தில் 'காந்தி அமைதி மையம்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், காடையாம்பட்டி வட்டாரத்தில் 'பெத்தேல் அக்ரிகல்சுரல் ஃபெல்லோஷிப்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. சேலம் மாவட்டத்தில் 'காந்தி அமைதி மையம்', 'ஊன்றுகோல் முதியோர் இல்லம்' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன.

236—

முதியோர் காப்பகம்

வினா எண் 29787—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) பெரியகுளம் தொகுதியில் முதியோர் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, தேனி மாவட்டத்தில், தேனி ஒன்றியத்தில் 'மைத்ரி சொசைட்டி' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், போடிநாயக்கனூர் ஒன்றியத்தில் 'அம்பேலால் ஹென்ரிச் மெமோரியல் டிரஸ்ட்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. தேனி மாவட்டத்தில் 'கிராமிய சங்கம்', 'யுவ விகாஸ் கேந்த்ரா' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன. எனவே, பெரியகுளம் தொகுதியில் முதியோர் காப்பகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

237—

அலுவலகம்

வினா எண் 30032—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் கோட்ட அளவில் சமூக நலத் துறை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட சமூக நலத் துறை அலுவலகங்கள் செயல்படுகின்றன. சமூக நலத் துறைக்குட்பட்ட அனைத்து அரசு நலத் திட்டங்களும், மாவட்ட சமூக நல அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடலூர் மாவட்ட சமூக நல அலுவலகம், 13 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், கடலூர் மாவட்ட திட்ட அலுவலகம் மற்றும் அதன்கீழ் 14 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்கள் வாயிலாக சமூக நலத் துறையின் அனைத்து நலத் திட்டங்களும் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த ஒரு மாவட்டத்திலும் கோட்ட அளவில் சமூக நலத் துறை அலுவலகம் அமைக்கப்படவில்லை. ஆகவே, விருத்தாசலம் கோட்ட அளவில் சமூக நலத் துறை அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

238—

சத்துணவுக் கூடம்

வினா எண் 30128—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியில் 250 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அம்மாணவர்களில் 230 மாணவர்கள் சத்துணவுத்

2014 ஆகஸ்ட் 12]

திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர். இச்சத்துணவு மையத்திற்கு 28 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.2.50 இலட்சம் செலவினத்தில் வைப்பறையுடன்கூடிய சமையலறை கட்டுவதற்கென 2012-2013 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 20-8-2013 நாளிட்ட செயல்முறை ஆணை வாயிலாக நிருவாக அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை விரைவில் முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

239—

சத்துணவு

வினா எண் 30364—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு உதவிபெறாத துவக்கப் பள்ளி மாணவர்களுக்குக் கட்டணம் வசூலிக்காமல் சத்துணவு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டுமே தற்போது சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. அரசு உதவிபெறாத பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குச் சத்துணவு வழங்க வழிவகை இல்லை.

240—

அங்கன்வாடி மையம்

வினா எண் 30586—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, கள்ளித்தாங்கலில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், கள்ளித்தாங்கல் அங்கன்வாடி மையம் 2007 முதல் குறு மையமாகச் செயல்பட்டு வருவதால், புதியதாக மையம் அமைக்கத் தேவை எழவில்லை.

241—

பாதுகாப்பு ஆணையம்

வினா எண் 30969—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் அரசாணை (நிலை) எண் 45, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28-3-2012-ன்படி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

242—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 31092—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 11-வது மற்றும் 13-வது வார்டில் புதிய அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 11-வது மற்றும் 13-வது வார்டில் முதன்மை அங்கன்வாடி மையங்கள் 1992 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய அங்கன்வாடிக் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

243—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 31412—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், சிங்கநேரி ஊராட்சி, கீழபுத்தநேரியில் அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, சிங்கநேரி ஊராட்சியிலுள்ள கிழபுத்தநேரி கிராம பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள சிங்கநேரி அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், அங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

244—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 31652—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், புதுக்கோட்டை காலனியில் அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை காலனியில் உள்ள 5 வயதிற்குட்பட்ட 12 குழந்தைகள் அருகிலுள்ள பின்னப்பட்டு மையத்தில் பயனடைந்து வருவதால், அங்கு புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

245—

சத்துணவு மையம்

வினா எண் 32461—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) மடத்துக்குளம் தொகுதி, காரத்தொழுவு, கடத்தூர், துங்காவி, எஸ்.கே.புத்தூர், பாப்பாகுளம், அமராவதி நகர், திருமூர்த்தி நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மடத்துக்குளம் தொகுதி, காரத்தொழுவு உயர்நிலைப் பள்ளிக்கென புதிய சத்துணவு மையம் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு நக. எண் 222/2010/அ4, நாள் 3-1-2011-ன்படி 7-1-2011 ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. மடத்துக்குளம் தொகுதி, கடத்தூர், துங்காவி, எஸ்.கே.புத்தூர், பாப்பாகுளம் ஆகிய நான்கு உயர்நிலைப் பள்ளிக்கென புதிய சத்துணவு மையம் அமைக்க அனுமதி கோரி உரிய கருத்துரு மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் 20-6-2013 ஆம் தேதியன்று அனுப்பி வைக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. மேலும், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகர், திருமூர்த்தி நகர் ஆகிய பள்ளிகளில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நக. எண் 34/2012/அ4, நாள் 17-4-2013-ன்மூலம் துவக்கப்பட்டு, உணவு வழங்கப்பட்டு வருகிறது.

246—

சிறுவர் சீர்திருத்தப் பள்ளி

வினா எண் 32806—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாவட்டந்தோறும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

மாவட்டந்தோறும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

247—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33939—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை தாணிச்சாவூரணி பகுதியில் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை தாணிச்சாவூரணி பகுதியில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவிபெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

248—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33940—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அண்ணா சாலைப் பகுதியில் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அண்ணா சாலைப் பகுதியில் நகராட்சி துவக்கப் பள்ளியோ, நடுநிலைப் பள்ளியோ செயல்பட்டவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

249—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33941—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 4-வது வார்டு, திருகப்பூரார் தெருவில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 4-வது வார்டு, திருகப்பூரார் தெருவில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவிபெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

[2014 ஆகஸ்ட் 12

250—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33942—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 5-வது வார்டு, அம்பேத்கர் தெரு மற்றும் நடராஜபுரம் பகுதியில் புதிய சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 5-வது வார்டு, அம்பேத்கர் தெரு மற்றும் நடராஜபுரம் பகுதியில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவி பெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

251—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33943—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 8-வது வார்டு, சிவன் கோயில் தெற்குத் தெருவில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 8-வது வார்டு, சிவன் கோயில் தெற்குத் தெருவில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவிபெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

252—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33944—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 11-வது வார்டு, சரஸ்வதி வாசக சாலை, துப்புரவுப் பணியாளர் குடியிருப்புப் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 11-வது வார்டு, சரஸ்வதி வாசக சாலை, துப்புரவுப் பணியாளர் குடியிருப்புப் பகுதியில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவி பெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

253—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33945—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 12-வது வார்டு, விநாயகபுரம் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 12-வது வார்டு, விநாயகபுரம் பகுதியில் நகராட்சித் துவக்கப் பள்ளியோ, நடுநிலைப் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

254—

சத்துணவுக் கூடம்

வினா எண் 33946—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 27-வது வார்டு, ஆத்தங்கரை தெருவில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை 27-வது வார்டு, ஆத்தங்கரை தெருவில் அரசு பள்ளியோ அல்லது அரசு உதவிபெறும் பள்ளியோ செயல்படவில்லை. எனவே, அங்கு புதிய சத்துணவுக் கூடம் துவங்க வாய்ப்பு ஏதுமில்லை. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்கீழ் அவ்விடத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

255—

அங்கன்வாடி மையம்

வினா எண் 33971—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு மதுரா மேல்புத்தூரில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு மதுரா மேல்புத்தூர் முதன்மை அங்கன்வாடி மையம் ஏற்கெனவே 2008 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அங்கு மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

256—

அங்கன்வாடி மையம்

வினா எண் 33972—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு மதுரா பாலம்பட்டுக்கு அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு மதுரா பாலம்பட்டு கிராமத்தில் உள்ள 12 பயனாளிக் குழந்தைகள் அருகிலுள்ள முனுகப்பட்டு மையத்தின்மூலம் பயனடைந்து வருவதால், அங்கு புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

257—

அங்கன்வாடி மையம்

வினா எண் 35065—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பொன்னலிக்கோட்டை ஊராட்சியில் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பொன்னலிக்கோட்டை கிராமத்தில் அங்கன்வாடி மையம் 1982 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அம்மையக் கட்டடம் பழுதடைந்த நிலையில் இருந்ததால், கட்டடப் பழுதுகள் முழுவதும் சரி செய்யப்பட்டு, 1-10-2012 முதல் மையம் அதே கட்டடத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

258—

அங்கன்வாடி மையம்

வினா எண் 35070—திரு. சோழன் கித. பழனிச்சாமி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், மாவிடுதிக்கோட்டை ஊராட்சி, மாவிடுதிக்கோட்டையில் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், மாவிடுதிக்கோட்டையில் அங்கன்வாடி மையம் 1-7-1982 முதல் முதன்மை மையமாக அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் உள்ள பழுதுகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

259—

அங்கன்வாடி மையம்

வினா எண் 35318—திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கீழ்வேளூர் தொகுதி, வெங்கிடங்காலிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, வெங்கிடங்கால் முதன்மை அங்கன்வாடி மையம் 1982 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2013-2014 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, தரை மற்றும் மேற்கூரைகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு, நல்ல முறையில் இயங்கி வருவதால், இங்கு புதியக் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

260—

மனநலக் காப்பகம்

வினா எண் 35332—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் மனநலக் காப்பகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், கூட்டாம்புளியில் அன்பு உள்ளங்கள் என்ற தொண்டு நிறுவனத்தின்மூலம் அரசின் நிதியுதவியுடன் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் செயல்பட்டு வருகின்றது. இவ்வில்லத்தில் 50 பயனாளிகள் தங்கி பயனடையும் வகையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 3 மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்தினை மையமாகக் கொண்டு மனநலக் காப்பகங்கள் செயல்படுகின்றன. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மையமாக தூத்துக்குடியில் மனநலக் காப்பகம் இயங்கி வருகின்றது. கன்னியாகுமரிக்கு அருகில் தூத்துக்குடி உள்ளதால், கன்னியாகுமரியில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களை அரசு நிதியுதவியுடன் செயல்படும் தூத்துக்குடி மாவட்டம்,

2014 ஆகஸ்ட் 12]

கூட்டாம்புளியில் இயங்கும் அன்பு உள்ளங்கள் என்ற தொண்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட்டுவரும் மனநலக் காப்பகத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

261—

மறுவாழ்வு மையம்

வினா எண் 35355—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திலும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

262—

முதியோர் பராமரிப்பு இல்லம்

வினா எண் 35976—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆதரவற்ற முதியோர்களுக்குப் பராமரிப்பு இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும்

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்டத்தில், சிவகாசி வட்டாரத்தில் 'ஜீவக்கல் சோஷியல் வெல்பேர் யூத் சொசைட்டி' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், விருதுநகர் ஒன்றியத்தில் 'விருட்சம் மகளிர் முன்னேற்றக் களஞ்சியம்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொவிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆதரவற்ற முதியோர்களுக்குப் பராமரிப்பு இல்லம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

263—

அங்கன்வாடி மையம்

வினா எண் 36724—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மத்தளம்பாறை ஊராட்சி, முத்துவிநாயகபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, மத்தளம்பாறை ஊராட்சியில் மத்தளம்பாறை 1, மத்தளம்பாறை 2 மற்றும் புதுக்காலனி ஆகிய 3 முதன்மை அங்கன்வாடி மையங்கள் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. முத்துவிநாயகபுரம் கிராமத்தில் உள்ள பயனாளிகள் அருகிலுள்ள புதுக்காலனி அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

264—

சொந்தக் கட்டடம்

வினா எண் 36726—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், ஆனைகுளத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், ஆனைகுளம் முதன்மை அங்கன்வாடி மையம் 1-7-1982 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

265—

சத்துணவு மையம்

வினா எண் 36796—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி ஊராட்சி, திருமலைகவுண்டர் நகருக்குச் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி ஊராட்சி, திருமலைகவுண்டர் நகரில் அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகள் ஏதும்

[2014 ஆகஸ்ட் 12

செயல்படவில்லை என்பதால், அங்கு சத்துணவு மையம் அமைக்க வழிவகை இல்லை. மேலும், திருமலைகவுண்டர் நகரில் உள்ள மாணவ, மாணவியர்கள் அருகில் உள்ள (கவரைக்காரன் கொட்டாய், நூலஅள்ளி அரசினர் உயர்நிலைப் பள்ளி மற்றும் வெங்கட்டம்பட்டி) அரசுப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர்.

266—

சேவை இல்லம்

வினா எண் 37469—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமூக நலத் துறைமூலம் சேவை இல்லம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அண்டை மாவட்டமான திருநெல்வேலியில் ஏற்கெனவே ஒரு அரசு சேவை இல்லம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாநில அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள்மூலம் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதியதாக சேவை இல்லம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

267—

அங்கன்வாடி மையம்

வினா எண் 37479—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நெடும்பலம் ஊராட்சி, மங்களநாயகிபுரம் மேற்கில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நெடும்பலம் ஊராட்சி, மங்களநாயகிபுரம் மேற்கில் உள்ள பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள சிங்களாந்தி-I அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், இங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

268—

அங்கன்வாடி மையம்

வினா எண் 38281—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குற்றாலத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சியிலுள்ள 2 பயனாளிகள், அருகிலுள்ள காசிமேஜர்புரம் அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், அங்கு அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

269—

அங்கன்வாடி மையம்

வினா எண் 41085—திரு. கு. மாதேஸ்வரன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) ஆத்தூர் தொகுதி, மேல்நாடு ஊராட்சி, மோதூர் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, மேல்நாடு ஊராட்சி, மோதூர் கிராமத்தில் உள்ள பயனாளிகள் அருகில் உள்ள களக்கம்பாடி. அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

270—

அங்கன்வாடி மையம்

வினா எண் 41152—திரு. க. ரவி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெம்மேலி ஒன்றியம், நாகவேடு ஊராட்சி, பாடி., நாகவேடு-II, முருங்கை-I, சித்தூர்-I ஆகிய பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெம்மேலி வட்டாரம், பாடி., நாகவேடு-II, முருங்கை-I மற்றும் சித்தூர்-I ஆகிய அங்கன்வாடி மையங்கள் 1982 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் பாடி., நாகவேடு-II, சித்தூர்-I ஆகிய அங்கன்வாடி மையங்களின் பழுதுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முருங்கை-I

2014 ஆகஸ்ட் 12]

அங்கன்வாடி மையத்தின் பழுதுகள் சரிசெய்யப்பட்டு மையம் நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்டுவதற்குத் தேவை எழவில்லை.

271—

முதியோர் இல்லம்

வினா எண் 41349—திரு. கு. மாதேஸ்வரன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட, 'தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் ஏற்படுத்தப்படும்' என்ற அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியத்தில் 'காந்தி அமைதி மையம்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும், காடையாம்பட்டி ஒன்றியத்தில் 'பெத்தேல் அக்ரிகல்சுரல் ஃபெல்லோஷிப்' எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலமும் ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 5-9-2012 அன்று காணொலிக் காட்சிமூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. சேலம் மாவட்டம், மாசிநாயக்கன்பட்டியில் 'ஊன்றுகோல் முதியோர் இல்லம்', ஆத்தூர் தாலுகாவில் 'காந்தி அமைதி மையம்' ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள் மத்திய அரசின் முதியோருக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மானியம் பெற்று இயங்கி வருகின்றன. எனவே, ஆத்தூர் தொகுதியில் முதியோர் இல்லம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

272—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42071—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, கொடிக்குளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, கொடிக்குளம் கிராமத்திலுள்ள பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள ஸ்ரீராமன்குளம் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

273—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42072—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, ஸ்ரீராமன்குளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, ஸ்ரீராமன்குளம் முதன்மை அங்கன்வாடி மையம் 2004-ல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவதால், புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

274—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42073—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, தெற்கு பொன்னாக்குடியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பொன்னாக்குடி ஊராட்சி, தெற்கு பொன்னாக்குடி கிராமத்தில் மக்கள் தொகை குறைவாக உள்ளதால், அக்கிராமத்தின் பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள வடக்கு பொன்னாக்குடி குறு அங்கன்வாடி மையத்திற்குச் சென்று பயனடைந்து வருகின்றனர். எனவே, தெற்கு பொன்னாக்குடி கிராமத்திற்குப் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

275—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42074—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, ஆலங்குளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, ஆலங்குளத்தில் மக்கள் தொகைக் குறைவாக உள்ளதால் அக்கிராமத்தின் பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள கண்டித்தான்குளம் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகின்றார்கள். எனவே, ஆலங்குளம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

276—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42075—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, கண்டித்தான்குளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், தருவை ஊராட்சி, கண்டித்தான்குளத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் 1992 முதல் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

277—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42076—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை ஒன்றியம், சிவலப்பேரி ஊராட்சி, சிவலப்பேரியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், சிவலப்பேரி ஊராட்சிக்குட்பட்ட சிவலப்பேரியில், 1984 முதல் சிவலப்பேரி-I முதன்மை அங்கன்வாடி மையமும் மற்றும் 1992 முதல் சிவலப்பேரி-II முதன்மை அங்கன்வாடி மையமும் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருவதால் அங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

278—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42079—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி ஒன்றியம், இறைப்புவாரி ஊராட்சி, இறைப்புவாரியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, இறைப்புவாரி ஊராட்சி, இறைப்புவாரி கிராமப் பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள மேலக்காரங்காடு அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால் அங்கு புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

279—

அங்கன்வாடி மையம்

வினா எண் 42401—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 36-வது வார்டு, அமராவதி நகரில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டாரம், அமராவதிபாளையத்தில் முதன்மை அங்கன்வாடி மையம் 25-6-2007 முதல் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. அமராவதி நகரில் உள்ள மக்கள் அனைவரும் அமராவதிபாளையம் மையத்தில் பயனடைந்து வருவதால் அமராவதி நகரில் அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

280—

அங்கன்வாடி மையம்

வினா எண் 45828—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மேலபுத்தநேரி ஊராட்சி, வேலவன்குளத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டாரம், மேலபுத்தநேரி ஊராட்சியிலுள்ள வேலவன்குளம் கிராமப் பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள மேலபுத்தநேரி-2 அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால் வேலவன்குளத்தில் அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

281—

அங்கன்வாடி மையம்

வினா எண் 47384—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வீரகுடும்பன்பட்டி, சங்கரலிங்காபுரம்-3, பூசாரிபட்டி ஆகிய கிராமங்களில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வீரகுடும்பன்பட்டி, சங்கரலிங்காபுரம்-3, பூசாரிபட்டி ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு புதியதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை.

282—

அங்கன்வாடி மையம்

வினா எண் 47387—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வச்சக்காரப்பட்டி, கேபுதூர்-2, குமாரபுரம் ஆகிய கிராமங்களில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வச்சக்காரப்பட்டி, கே.புதூர்-2, குமாரபுரம் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு புதியதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை.

283—

அங்கன்வாடி மையம்

வினா எண் 47390—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், தாதம்பட்டி, மருளுத்து-2, சின்ன மருளுத்து ஆகிய கிராமங்களில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், தாதம்பட்டி, மருளுத்து-2, சின்ன மருளுத்து ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு புதியதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை.

284—

அங்கன்வாடி மையம்

வினா எண் 47393—திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஆமத்தூர்-2, பாவாலி-1, புல்லலக்கோட்டை ஆகிய கிராமங்களில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஆமத்தூர்-2, பாவாலி-1, புல்லலக்கோட்டை ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு புதியதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை.

285—

அங்கன்வாடி மையம்

வினா எண் 47396—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வள்ளியூர்-2, சங்குரெட்டியபட்டி-2, சீனியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், வள்ளியூர்-2, சங்குரெட்டியபட்டி-2, சீனியாபுரம் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருவதால் அங்கு புதியதாக அங்கன்வாடி மையங்கள் அமைக்கும் தேவை எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

286—

பெண்கள் கலைக் கல்லூரி

வினா எண் 291—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

287—

கலைக் கல்லூரி

வினா எண் 2953—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, மேலும் பல கலைக் கல்லூரிகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

சென்னையிலுள்ள மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, மேலும் பல கலைக் கல்லூரிகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

288—

ஆயத்த ஆடை வடிவமைப்புக் கல்லூரி

வினா எண் 3101—திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோட்டில் அரசு ஆயத்த ஆடை வடிவமைப்புக் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஈரோட்டில் அரசு ஆயத்த ஆடை வடிவமைப்புக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

289—

பல்கலைக்கழகம்

வினா எண் 3103—திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோட்டில் பல்கலைக்கழகம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோட்டில் பல்கலைக்கழகம் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

290—

பொறியியல் கல்லூரி

வினா எண் 3105—திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ஈரோட்டில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

291—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 3951—திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரையில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஊத்தங்கரை தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2014 ஆகஸ்ட் 12

292—

பொறியியல் கல்லூரி

வினா எண் 4977—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் அரசு பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

293—

கலைக் கல்லூரி

வினா எண் 5021—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில் புதிதாக அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

294—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 5265—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மேட்டூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

295—

கலைக் கல்லூரி

வினா எண் 5296—திரு. ஆர். சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, மேலூரில் பெண்கள் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலூர் தொகுதி, மேலூரில் புதிதாக அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

296—

சுழற்சி முறை

வினா எண் 5298—திரு. ஆர். சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் அனைத்துப் பாடப் பிரிவு வகுப்புகளுக்கும் சுழற்சி முறை அமல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

மேலூர் தொகுதி, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் அனைத்துப் பாடப் பிரிவு வகுப்புகளுக்கும் சுழற்சி முறை அமல்படுத்துவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

297—

பொறியியல் கல்லூரி

வினா எண் 5571—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

298—

கல்லூரி

வினா எண் 5658—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பலதொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதியில் புதிதாக அரசு கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் பலதொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

299—

உறுப்புக் கல்லூரி

வினா எண் 5674—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் அழகப்பா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் அழகப்பா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

300—

பொறியியல் கல்லூரி

வினா எண் 5689—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதி, பொன்னமராவதி ஒன்றியத்தில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

301—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 5724—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

302—

கலைக் கல்லூரி

வினா எண் 5743—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூர் பகுதியில் கலைக் கல்லூரி பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, மானூர் பகுதியில் புதிதாக அரசு கலைக் கல்லூரி பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

303—

பொறியியல் கல்லூரி

வினா எண் 5748—திரு. பொன். ராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில், பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

பொன்னேரி தொகுதியில், பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

304—

கலைக் கல்லூரி

வினா எண் 6852—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, சங்ககிரியில் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

305—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7041—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் பல தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

306—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7117—திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) ராஜபாளையம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

307—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7285—திருமதி ம. சக்தி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

308—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7336—திரு. கோ. வெங்கடாஜலம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் புதிதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டத்தில் புதிதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

309—

பொறியியல் தொழில் கல்வி நிலையம்

வினா எண் 7711—திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் பொறியியல் தொழில் கல்வி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆயக்காரன்புலத்தில் பொறியியல் தொழில் கல்வி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

310—

பொறியியல் கல்லூரி

வினா எண் 8122—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தென்காசி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

311—

கலைக் கல்லூரி

வினா எண் 8490—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

312—

கலை, அறிவியல் கல்லூரி

வினா எண் 11439—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரம் அரசு கலை, அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு மாதிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு விளாத்திகுளம் வட்டம், கவுண்டன்பட்டி கிராம புல எண் 8/2D1, 8/2D2 மற்றும் 8/2D3 எண்ணிலுள்ள 7.77.0 ஹெக்டேர் பட்டா நிலங்கள் நன்கொடை பத்திரம்மூலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்வது தொடர்பான கருத்துரு இப்பல்கலைக்கழக பதிவாளரிடம் பெறப்பட்டு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

313—

சூரிய ஆற்றல் ஆலை

வினா எண் 11714—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் சூரிய ஆற்றல் ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் சூரிய ஆற்றல் ஆலை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

314—

கலைக் கல்லூரி

வினா எண் 14689—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

315—

ஆய்வுத் திறனை மேம்படுத்துதல்

வினா எண் 15841—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்கலைக்கழகங்களின் ஆய்வுத் திறனை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) பல்கலைக்கழகங்களின் ஆய்வுத் திறனை மேம்படுத்துதல் தொடர்பாக கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

316—

மாலை நேரக் கல்லூரி

வினா எண் 16548—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அழகப்பா பல்கலைக்கழகம் சார்பில் மாலை நேர கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் கல்வியாண்டில் மானாமதுரையில் சுயநிதி அடிப்படையில் இயங்கும் மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், மானாமதுரைக்கு அருகில் திருப்புவனத்தில் அழகப்பா பல்கலைக்கழக மாலை நேரக் கல்லூரி ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மானாமதுரையில் அழகப்பா பல்கலைக்கழகம் சார்பில் மாலை நேரக் கலைக் கல்லூரி துவக்க தற்போது வாய்ப்பு ஏதுமில்லை. இருப்பினும். மானாமதுரையில் மாலை நேரக் கலைக் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பது குறித்து அரசால் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

317—

இணையதள உலாவி மையம்

வினா எண் 17254—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இலவச இணையதள உலாவி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையில் 75 விழுக்காடு நிதி ஒதுக்கீடுடனும், மாநில அரசின் 25 விழுக்காடு நிதி ஒதுக்கீடுடனும் 5 ஆண்டுக் காலத்திற்கு B.S.N.L. நிறுவனத்தின்மூலம் இலவச இணையதள வசதி செய்து தரப்பட்டுள்ளது.

318—

இணையதளம்மூலம் சான்றிதழ்

வினா எண் 17255—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டப் படிப்பு சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களின் நகல்களை மாணவர்கள் பெறுவதற்கு இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டப் படிப்பு சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களின் நகல்களை மாணவர்கள் பெறுவதற்கு

[2014 ஆகஸ்ட் 12

இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் வசதி செய்யும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை. இருப்பினும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையதளம்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

319—

தேர்வுக் கட்டணம்

வினா எண் 17261—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆசிரியர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் தேர்வுகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தைக் குறைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

320—

மகளிர் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி

வினா எண் 17651—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் மகளிர் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் மகளிர் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

321—

அரசு பெண்கள் கல்லூரி

வினா எண் 18585—திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

322—

பொறியியல் கல்லூரி

வினா எண் 20349—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் பொறியியல் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

323—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 20587—திரு. வி.எஸ். இராஜி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யூர் தொகுதி, செய்யூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

செய்யூர் தொகுதி, செய்யூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

324—

இலவசப் பயிற்சி

வினா எண் 21568—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

325—

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி

வினா எண் 22065—திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, மானூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, மானூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

326—

மாலைநேர கலைக் கல்லூரி

வினா எண் 22646—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் மாலைநேர கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் மாலைநேர கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

327—

உறுப்புக் கலைக் கல்லூரி

வினா எண் 25520—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அழகப்பா பல்கலைக்கழக உறுப்புக் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அழகப்பா பல்கலைக்கழக உறுப்புக் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

328—

அறிவியல் கலைக் கல்லூரி

வினா எண் 25523—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் அறிவியல் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் அறிவியல் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

329—

ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 29565—திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில் அரசு ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பகுதியில் அரசு ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

330—

கலைக் கல்லூரி

வினா எண் 29582—திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதியில், கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஆற்காடு தொகுதியில், கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

331—

கலைக் கல்லூரி

வினா எண் 30009—திரு. வி. முத்துக்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதி, திரு. கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் புல் தரையுடன்கூடிய ஆடுகளம் அமைக்க, அடிப்படை வசதிகள் செய்து உடற்கல்வி பயிற்சியாளரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம், திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் விளையாட்டு மைதானத்தில் புல் தரையுடன்கூடிய ஆடுகளம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசால் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படின், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும். இக்கல்லூரியில் காலியாக உள்ள உடற்கல்வி பயிற்றுநர் பணியிடத்தை நிரப்பிக் கொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரால் 27-10-2011 அன்று அனுமதி வழங்கப்பட்டு உடற்கல்வி இயக்குநரால் மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

332—

கல்லூரிக் கட்டடம்

வினா எண் 32432—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி குழித்துறை பர்தேவிகுமாரி மகளிர் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை பர்தேவிகுமாரி மகளிர் கல்லூரி ஒரு அரசு உதவி பெறும் கல்லூரியாகும். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டடப் பணிகளை அக்கல்லூரிகளே தங்கள் நிதியிலிருந்து மேற்கொள்ளவேண்டும்.

333—

அரசு கலைக் கல்லூரி

வினா எண் 34487—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எம்.சி.ஏ. பாடப் பிரிவிற்கு அரசு கலைக் கல்லூரிகளில் தனித் துறை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் எம்.சி.ஏ. பாடப் பிரிவிற்கு அரசு கலைக் கல்லூரிகளில் தனித் துறை உருவாக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

334—

காணொலித் தொடர்பு

வினா எண் 36141—திரு. சு. ரவி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, திருவள்ளூர் பல்கலைக்கழக இருபாலர் உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காணொலித் தொடர்பு என்ற பாடப்பிரிவை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, திருவள்ளூர் பல்கலைக்கழக இருபாலர் உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காணொலித் தொடர்பு என்ற பாடப்பிரிவு தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

335—

திறந்தநிலை பல்கலைக்கழகம்

வினா எண் 36780—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் திறந்தநிலை பல்கலைக்கழக மண்டல மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக மண்டல மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

336—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 37488—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா பெயரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா பெயரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

337—

பயிர்க் கடன்கள்

வினா எண் 622—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு, குறு விவசாயிகளுக்கு அரசமைப்புச் சார்ந்த கடன்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறு, குறு விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் பயிர்ச் சாகுபடி மேற்கொள்வதற்கு பயிர்க் கடன்கள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

338—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 642—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சேனார்குளம், பொன்னார்குளம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சேனார்குளம், பொன்னார்குளம் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகள் இருக்கன்துறை தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இருக்கன்துறை தாய் நியாய விலைக் கடையில் 505 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும் இத்தாய் நியாய விலைக் கடைக்கு ஊரல்வாய்மொழி மற்றும் சங்கநேரி என்ற இரண்டு பகுதி நேரக் கடைகள் உள்ளன. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணையின்படி இரண்டிற்கும் மேற்பட்ட பகுதி நேரக் கடைகள் திறக்க வாய்ப்பில்லை என்பதாலும், சேனார்குளம் மற்றும் பொன்னார்குளம் பகுதியில் மொத்தம் 116 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும் புதிய பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

339—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 3689—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம், கரைச்சுற்றுப்புதூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரம் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம், கரைச்சுற்றுப்புதூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரம் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட உரிய இடத்தை அடையாளம் காண்பித்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி அளிக்கும்பட்சத்தில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

340—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 3691—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், இடையான்குடி ஊராட்சி, உப்பச்சம்பாடு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், இடையான்குடி ஊராட்சி, உப்பச்சம்பாடு நியாய விலைக் கடை 77 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்

[2014 ஆகஸ்ட் 12

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும் பட்சத்தில் உப்பச்சம்பாடு நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

341—

கடன்கள்

வினா எண் 4454—திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகளில் அனைத்து வகையான கடன்களும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவு வங்கிகளில் அனைத்து வகையான கடன்களும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

342—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 7456—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராம நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராம நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதியதாகக் கட்டடம் கட்டவேண்டிய தேவை எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

343—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 7657—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழவெள்ளூர் கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் 300 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் மேலவெள்ளூர் தாய் நியாய விலைக் கடையுடன் கீழவெள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த 78 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி, கீழவெள்ளூர் கிராமத்திற்குப் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

344—

கடன் அட்டை

வினா எண் 8018—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் பயிர்க்கடன் பெற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கடன் அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயிகள் பயிர்க் கடன் பெற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கடன் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

345—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 8303—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, தப்பாங்குட்டை ஊராட்சி, அய்யனூரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, தப்பாங்குட்டை ஊராட்சியில், 765 குடும்ப அட்டைகளுடன் தப்பாங்குட்டை கிராமத்தில் தாய் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இத்தாய் நியாய விலைக் கடையுடன் அய்யனூர் கிராமத்தைச் சேர்ந்த 124 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள அரசு நிபந்தனைகளின்படி அய்யனூர் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

346—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 8540—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) சங்கரி தொகுதி, இருகாலூர் புதுப்பாளையம் கிராமம், பூசாரிநாய்க்கன்வளவில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, வைகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் GP 085 ஊத்துப்பாளையம் நியாய விலைக் கடை 340 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. ஊத்துப்பாளையம் தாய் நியாய விலைக் கடையிலிருந்து 227 குடும்ப அட்டைகளைப் பிரித்து பூசாரிநாயக்கன்வளவு பகுதியில் புதிய பகுதி நேரக் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

347—

கூட்டுறவு வங்கி

வினா எண் 8832—திரு. சோழன் சிது. பழனிச்சாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகர கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை பகுதியில் நகரக் கூட்டுறவு வங்கி ஏதும் தற்பொழுது செயல்படவில்லை. எனவே, காரைக்குடி தொகுதிக்குட்பட்ட தேவகோட்டை பகுதியில் நகரக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் கேள்வி எழவில்லை.

348—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 8788—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி பஞ்சாயத்து, கணபதிபாளையத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கத்தேரி பஞ்சாயத்து, கணபதிபாளையத்தில் 42 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் கணபதிபாளையம் பகுதியில் தனியே ஒரு பகுதி நேரக் கடை அமைத்திட இயலாத நிலை உள்ளது. எனினும் கணபதிபாளையம் பகுதியில் உள்ள 42 குடும்ப அட்டைதாரர்களும் சாமியம்பாளையம் நியாய விலைக் கடையில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தடையின்றி பெற்று வருகின்றனர்.

349—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 8789—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, கனககிரி கிராமம், வேலப்பன் கோயில் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கனககிரி கிராமம், வேலப்பன் கோயிலைச் சேர்ந்த 135 குடும்ப அட்டைதாரர்கள் 889 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கனககிரி தாய் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகள் இந்நோ்வில் பூர்த்தியாகாததால் வேலப்பன் கோயில் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

350—

நியாய விலைக் கடைகள்

வினா எண் 8790—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மேட்டுக்காடு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மேட்டுக்காடு நியாய விலைக் கடைக்குச் சொந்த கட்டடம் கட்டிக் கொள்ள மேட்டுக்காடு பகுதியில் அடிநிலம் ஒதுக்கித் தருமாறு இடங்கணசாலை பேரூராட்சி தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்படும் அடிநிலத்தில் நியாய விலைக் கடைக்கு அரசுத் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித்தர திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் அவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2014 ஆகஸ்ட் 12

பட்டியல் 9

1—

நியாய விலைக் கடை

வினா எண் 8792—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, மாட்டையாம்பட்டி நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் எஸ்.331 இடங்கணசாலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஜிப்பி 088 மாட்டையாம்பட்டி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் 395 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது, இந்நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்திற்குச் சொந்த அடிநிலம் ஏதுமில்லை. எனவே, இந்நியாய விலைக் கடை செயல்பட்டுவரும் பகுதியில் ஊரின் மையப் பகுதியில் குடும்ப அட்டைதாரர் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று செல்ல வசதியாகவும், வாகன போக்குவரத்துக்கு வசதியாகவும் உள்ள இடத்தில் அரசுத் திட்டத்தின்கீழ் இந்நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்ள மாட்டையாம்பட்டி பகுதியில் அடிநிலம் ஒதுக்கித் தருமாறு இடங்கணசாலை பேரூராட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்படும் அடிநிலத்தில் நியாய விலைக் கடைக்கு அரசுத் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித் தர திட்ட அலுவலர், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

2—

நியாய விலைக் கடை

வினா எண் 8794—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, கே.கே.நகர் மேற்கு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் காடையாம்பட்டி கூட்டுறவுப் பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் ஜிஜி009, கே.கே.நகர் முழுநேர நியாய விலைக் கடை 778 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடை தனியாருக்குச் சொந்தமானக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பண்டகசாலைக்கு சொந்த அடிநிலம் ஏதுமில்லை. நிதி வசதியும் இல்லை. எனவே, கே.கேநகர் மேற்கு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட இயலாது.

3—

நியாய விலைக் கடை

வினா எண் 8795—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, தனலட்சுமி நடராஜா நகர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ஙரி தொகுதி, சுத்தேரி ஊராட்சி, தனலட்சுமி நடராஜா நகர் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4—

நியாய விலைக் கடை

வினா எண் 9918—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இடையான்குடி ஒன்றியம், விஜயன்குடி மற்றும் மருதங்கநல்லூர் கிராமத்தில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இடையான்குடி ஒன்றியம், விஜயன்குடி கிராமத்தில் ஏற்கெனவே 278 குடும்ப அட்டைகளுடன் நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அங்கு புதிதாக நியாய விலைக் கடை அமைக்கும் நேர்வு எழவில்லை. அதேபோல், மருதங்கநல்லூர் கிராமத்தில் 171 குடும்ப அட்டைகளுடன் 2009 முதல் ஏற்கெனவே நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அங்கும் புதிதாக நியாய விலைக் கடை அமைக்கும் நேர்வு எழவில்லை.

5—

நியாய விலைக் கடை

வினா எண் 13910—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) ஆரணி தொகுதி, E.B. நகரில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, E.B. நகரில் செயல்பட்டு வரும், பகுதிநேர நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் ஆரணி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2010-2011 ஆம் ஆண்டு கட்டப்பட்டு மேற்படி நியாய விலைக் கடை புதிய கட்டடத்தில் நவம்பர் 2012 திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது.

6—

குடும்ப அட்டை

வினா எண் 452—திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அட்டை இல்லாதவர்களுக்குப் புதிதாகக் குடும்ப அட்டைகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதிய குடும்ப அட்டை பெற தகுதி படைத்த அனைத்துக் குடும்பங்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தனி சமையல் அறையுடன்கூடிய, வீட்டில் தனிக் குடித்தனமாக வசிக்கும் தகுதி உள்ள குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

7—

நியாய விலைக் கடை

வினா எண் 639—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, கீழ்க்குளம் ஊரில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சி, கீழ்க்குளம் பகுதியிலுள்ள 136 குடும்ப அட்டைகள், இருக்கன்துறை தாய்க் கடையின் இரண்டாவது பகுதி நேரக் கடையான, ஊரல்வாய்மொழி கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் 136 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், இக்குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள ஊரல்வாய்மொழி கடைக்கு 286 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், கீழ்க்குளம் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க தற்போது வழிவகை இல்லை.

8—

நியாய விலைக் கடை

வினா எண் 640—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் ஊராட்சி, மாடநாடார் குடியிருப்பு கிராமத்தில், நியாய விலைக் கிளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் வட்டாரத்தில் பணகுடி கூட்டுறவுப் பண்டகச்சாலை கட்டுப்பாட்டின்கீழ், மாடநாடார் குடியிருப்பில் 409 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகின்றது. இக்கடையுடன் மாடநாடார் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த 199 குடும்ப அட்டைகளும், புதியம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 210 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இரண்டு கிராமங்களுக்கும் இடையே ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தூரமே உள்ளது. எனவே, மாடநாடார் குடியிருப்புப் பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க வழிவகை இல்லை.

9—

குடும்ப அட்டை

வினா எண் 2115—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரே வீட்டில் வசிக்கும் இரண்டு மூன்று குடும்பதாரர்களுக்கு தனித் தனியாக உணவுப் பொருள் வழங்கல் அட்டை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்பம் தனி சமையலறையுடன் தனியாக வசிக்கும்போது குடும்ப அட்டை தனியாக வழங்கப்படுகிறது. ஒரே வீட்டில் வசிக்கும் இரண்டு, மூன்று குடும்பதாரர்கள் தனியாக புதிய குடும்ப அட்டை வழங்கக் கோரினால், தலத் தணிக்கையில் மேற்படி குடும்பதாரர்கள் தனிக் குடும்பமாக, தனி சமையலறையுடன் வசிப்பது ஊர்ஜிதம் செய்தபின்பு குடும்ப அட்டை பெற தகுதி பெற்றவர்களுக்குப் புதிய குடும்ப அட்டை அச்சடித்து வழங்கப்பட்டு வருகிறது.

10—

நியாய விலைக் கடை

வினா எண் 2116—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் பாக்கெட் முறையில் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் வழங்கும் பொருட்களின் எடை அளவு குறைவு போன்ற நிகழ்வுகளைத் தவிர்க்க, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு மின்னணு கடை தராசுகள் கொடுக்கப்பட்டுள்ளது. பாமாயில் பாக்கெட் முறையில் வழங்கப்பட்டு வருகிறது. பொருட்களை முன்னமே, சரியான எடையிட்டு பாலித்தீன் பைகளில் அடைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கக் கூடுதல் செலவாகும் என்பதாலும், அரசு ஏற்கெனவே அதிக மானிய செலவில் அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகிறது என்பதாலும், நியாய விலைக் கடைகளில் பாக்கெட் முறையில் பொருட்கள் வழங்க தற்போது வழிவகை இல்லை.

11—

நியாய விலைக் கடை

வினா எண் 2377—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்புப் பகுதியில் நியாய விலைக் இளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 83 குடும்ப அட்டைதாரர்கள் 579 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் அச்சம்பாடு தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளனர். அச்சம்பாடு தாய் நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே இரண்டு பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டு, செயல்பட்டு வருவதால் தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி புதுக்குடியிருப்புப் பகுதியில் 3-வது புதிய பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

நியாய விலைக் கடை

வினா எண் 2381—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, ஜார்ஜ் மற்றும் மிக்கேல் நகர் பகுதியில் நியாய விலைக் கிளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, ஜார்ஜ் மற்றும் மிக்கேல் நகர் பகுதிகளைச் சேர்ந்த 138 குடும்ப அட்டைகள், 388 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவரும் குட்டம் தாலுகா நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தாய் நியாய விலைக் கடைக்கு ஏற்கெனவே மூன்று பகுதிநேரக் கடைகள் உள்ளன. என்வே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி ஜார்ஜ் மற்றும் மிக்கேல் நகர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

நியாய விலைக் கடை

வினா ஏண் 2382—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சௌந்தரபாண்டியபுரம் ஊராட்சி, இளையநயினார் குளத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உதயத்தூர் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டிருந்த வடக்கு இளையநயினார்குளம் கிராமத்தைச் சார்ந்த 153 குடும்ப அட்டைகளைப் பிரித்து, வடக்கு இளையநயினார் குளத்தில் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு 14-7-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

14—

நியாய விலைக் கடை

வினா எண் 3561—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் ஒரேநேரத்தில் அனைத்துப் பொருட்களையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் அவர்களுக்குரிய அளவில் நியாய விலைக் கடைகளில் குடும்ப

2014 ஆகஸ்ட் 12]

அட்டைதாரர்கள் வசதிக்கேற்ப ஒரே தவணையிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தவணையிலோ பெற்றுக்கொள்ளலாம். இதற்கு ஏதுவாக அனைத்து பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்களும் போதிய அளவில் நியாய விலைக் கடைகளில் எந்த நேரத்திலும் கையிருப்பு வைத்திருக்க வேண்டும் என்கிற நோக்கில் ஒதுக்கீடு மாதத்திற்கு முந்தைய மாதம் 25 ஆம் தேதியிலிருந்து ஒதுக்கீட்டில் 60% அத்தியாவசியப் பொருட்கள் முன் நகர்வு செய்யப்பட வேண்டுமென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் தவிர, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் ஒரே நாளில் வழங்கப்படுகின்றன. பாதுகாப்புக் கருதி, மண்ணெண்ணெய் வேறொரு நாளில் வழங்கப்படுகிறது.

15—

சீருடை

வினா எண் 4453—திரு. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கும் ஒரே மாதிரியான சீருடை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில், கூட்டுறவு நிறுவனங்களால் அதிகப்படியான நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைப் பணியாளர்களை அடையாளம் காண ஏதுவாக நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்குக் கழுத்தில் தொங்கும் விதமான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளன. நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்குச் சீருடை வழங்குவது, கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தும் என்பதால், நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்குச் சீருடை வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

தலைமை அலுவலகம் கட்டுதல்

வினா எண் 5385—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தைக் கிண்டியில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் முதலில் கதவு எண் 2, பிரகாசம் சாலை, தியாகராய நகர், சென்னை-17-ல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் தேதி முதல் கதவு எண் 82, அண்ணாசாலை, கிண்டி, சென்னை-32 என்ற விலாசத்தில் உள்ள சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு தரைத் தளத்தில் இயங்கி வந்தது. கடந்த 1994-1995 ஆம் ஆண்டில் மூன்று தளங்கள் (தரை தளத்தையும் சேர்த்து) ரூ.93,13,430/- மதிப்பீட்டில் முறைப்படி கட்டப்பட்டு தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

17—

நியாய விலைக் கடை

வினா எண் 6162—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சம்பராயனேந்தலில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சம்பராயனேந்தல் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை 28-2-2012 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

18—

நியாய விலைக் கடை

வினா எண் 6605—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், சித்தம்மநாயக்கன்பட்டி ஊராட்சியில் பகுதிநேர பொது விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம், புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் புதுக்கோட்டை முழுநேர நியாய விலைக் கடை 1,128 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இத்தாய் நியாய விலைக் கடையிலிருந்து சித்தம்மநாயக்கன்பட்டி பகுதியில் உள்ள 398 குடும்ப அட்டைகளைப் பிரித்து அப்பகுதியிலேயே பகுதிநேர நியாய விலைக் கடை மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று, 16-2-2013 முதல் செயல்பட்டு வருகிறது.

19—

நியாய விலைக் கடை

வினா எண் 7241—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சி, கொருக்கை பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கொருக்கை ஊராட்சி, கொருக்கை பகுதிநேர அங்காடியை முழுநேர அங்காடியாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

20—

நியாய விலைக் கடை

வினா எண் 7242—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி 17 மற்றும் 18-வது வார்டு நியாய விலைக் கடையைப் பிரித்து பெரிய சிங்களாந்தியில் புதியதாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி வட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட சந்தைப்பேட்டை என்ற இடத்தில் திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச் சாலையின் நியாய விலைக் கடை எண் 2, 1,106 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடியில் வார்டு 17 மற்றும் 18 ஆகியவற்றில் உள்ள குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

வார்டு 17 மற்றும் வார்டு 18-ல் 344 குடும்ப அட்டைகள் இருந்தாலும், பகுதிநேரக் கடை துவங்குவதற்குத் தேவையான அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்துள்ள நிலையில், உரிய

2014 ஆகஸ்ட் 12]

முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெறப்பட்டு, 17-8-2012 முதல் பெரிய சிங்களாந்தி பகுதிநேரக் கடைத் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

21—

நியாய விலைக் கடை

வினா எண் 7665—திரு. செ. காமராஜ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், ஜெகதாபி ஊராட்சி, பொம்மனத்துப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, தாந்தோணி ஒன்றியம், ஜெகதாபி ஊராட்சி, பொரணி தாய் நியாய விலைக் கடையிலிருந்து 153 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 153 குடும்ப அட்டைகளுடன் பொம்மனத்துப்பட்டியில் புதிய பகுதிநேர அங்காடி 2-9-2013 முதல் செயல்பட்டு வருகிறது.

22—

நியாய விலைக் கடை

வினா எண் 8308—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ரி வட்டம், அரசிராமணி கிராமம், எல்லப்பாளையம் நியாய விலைக் கடையைப் பிரித்து, நல்லாம்பாளையத்தில் புதிய பகுதிநேரக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், அரசிராமணி கிராமம், எல்லாப்பாளையம் நியாய விலைக் கடையைப் பிரித்து, நல்லாம்பாளைத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

23—

நியாய விலைக் கடை

வினா எண் 8327—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, மேலப்பனையூர் ஊராட்சி, உக்கடையில் பகுதிநேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருத்துறைப்பூண்டி தொகுதி, மேலப்பனையூர் ஊராட்சி, உக்கடை கிராமத்தில் உள்ள 63 குடும்ப அட்டைகள் 804 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் மேலப்பனையூர் தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகளின்படி உக்கடையில் புதிய பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

நியாய விலைக் கடை

வினா எண் 8783—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சங்கரி தொகுதி, காளிகவுண்டம்பாளையம் கிராமம், நொருக்கம்பாளையம் கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, நெ.5927 வைகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் காளிகவுண்டம்பாளையம்-2 முழுநேர நியாய விலைக் கடை 615 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில் நொருக்கம்பாளையம் பகுதியில் 176 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்க் கடையிலிருந்து நொருக்கம்பாளையம் பகுதிக்கு குடும்ப அட்டைகள் பிரித்த பின்னர், தாய்க் கடையில் மீதம் 439 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். தற்போது நடைமுறையில் உள்ள அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் நொருக்கம்பாளையம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

நியாய விலைக் கடை

வினா எண் 10983—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேட்டில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் 85 குடும்ப

[2014 ஆகஸ்ட் 12

அட்டைகள் மட்டுமே உள்ளதால் அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் முழுவதுமாக பூர்த்தியாகாததால் பூச்சிமேட்டில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க இயலாத நிலை உள்ளது.

26—

நியாய விலைக் கடை

வினா எண் 11006—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பாப்பான்குளத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டப் பகுதியில் 1,030 குடும்ப அட்டைகளுடன் ராதாபுரம் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையிலிருந்து பாப்பான்குளத்தைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைதாரர்கள் அனைத்து அத்தியாவசியப் பொருட்களைத் தடையின்றி பெற்று வருகின்றனர். எனவே, 80 குடும்ப அட்டைதாரர்களே உள்ள பாப்பான்குளத்தில் அரசு நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் அங்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

நியாய விலைக் கடை

வினா எண் 11324—திரு. சு. ரவி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் ஊராட்சி, மூதூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் மூதூர் தலைமையிட கூட்டுறவு நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டிருந்த 856 குடும்ப அட்டைகளிலிருந்து 181 குடும்ப அட்டைகளைப் பிரித்து மூதூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை கடந்த 1994 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

28—

நெல் கொள்முதல் நிலையம்

வினா எண் 1161§—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரத்தில் நெல் கொள்முதல் பருவம் 2011-2012-ல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு, அதன் வாயிலாக 650 மெட்ரிக் டன் அளவிற்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் பருவம் 2012-2013-ல் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யக் கோரி கோரிக்கை ஏதும் வரப்பெறாததால் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

29—

நியாய விலைக் கடை

வினா எண் 12216—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மாவடப்பு, காட்டுப்பட்டி, கருமுட்டி மலைவாழ் மக்களுக்கு குடிமைப்பொருள் உடுமலைப்பேட்டை வட்டத்திலிருந்து வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், இராவணபுரம் கிராமம், மாவடப்பு மற்றும் காட்டுப்பட்டி செட்டில்மெண்ட் மலைவாழ் மக்களது 121 குடும்ப அட்டைகள் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி 121 குடும்ப அட்டைகளுடன் மாவடப்பு வன நிர்ணயப் பகுதியில் ஒரு புதிய பகுதிநேர அங்காடி செயல்பட்டு வருகிறது. குடும்ப அட்டைதாரர்கள் இந்தக் கடையில் சிரமம் ஏதுமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

30—

நியாய விலைக் கடை

வினா எண் 13105—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, கொங்குரார் குட்டைப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சியில் 1,161 குடும்ப அட்டைகளுடன் ஜல்லிப்பட்டியில் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து கொங்குரார்குட்டைப் பகுதியைச் சேர்ந்த 82 குடும்ப அட்டைதாரர்கள் அனைத்து அத்தியாவசியப் பொருட்களைத் தடையின்றி பெற்று வருகின்றனர். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள அரசு நிபந்தனையின்படி 82 குடும்ப அட்டைகள் உள்ள கொங்குரார்குட்டைப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

நியாய விலைக் கடை

வினா எண் 13106—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் ஊராட்சியில், 696 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் கல்லாபுரம் முழுநேர நியாய விலைக் கடையுடன் பூச்சிமேடு பகுதியைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கக்கோரும் பூச்சிமேடு 2 கி.மீ. தூரத்தில் இருந்தாலும், இப்பகுதியில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், இங்கு வசிப்பவர்களில் பெரும்பகுதி தோட்டத்து சாலைகளில் உள்ளதாலும், நியாய

விலைக் கடை அமைக்க இடவசதியில்லாததாலும், அரசாணை எண் 147 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்-2) துறை, நாள் 24-8-2006-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கல்லாபுரம் ஊராட்சி, பூச்சிமேடு பகுதியில் ஒரு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

நியாய விலைக் கடை

வினா எண் 13107—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பம்பாளையம் ஊராட்சி, சின்னப்புதூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், செல்லப்பம்பாளையம் ஊராட்சி, சின்னப்புதூர் கிராமத்தில் ஏற்கெனவே பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

33—

நியாய விலைக் கடை

வினா எண் 13108—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி ஊராட்சி, 9/6 சோதனைச் சாவடி அருகில் பகுதிநேர நியாய விலைக் கடைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி ஊராட்சி, 9/6 சோதனைச் சாவடி அருகில் இந்திரா நகரில் 246 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே பகுதி நேரக் கடை அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருவதால் அங்கு மீண்டும் பகுதிநேரக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

34—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 13625—திரு. க. ரவி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, சாலி கிராமத்தில் உள்ள நரிக்குறவர் காலனி மக்களுக்குக் குடும்ப அட்டை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், பெருமாள்ராஜப்பேட்டை ஊராட்சி, சாலி கிராமத்திலுள்ள நரிக்குறவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் புதிய குடும்ப அட்டை வழங்கக் கோரி மனு செய்த தகுதியுள்ள நபர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

35—

நியாய விலைக் கடை

வினா எண் 13957—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) மேற்கு ஆரணி, அய்யம்பாளையம் ஊராட்சி, சின்ன அய்யம்பாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், மேல்நகர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குட்பட்ட அய்யம்பாளையம் நியாய விலைக் கடையில் உள்ள 705 மொத்தக் குடும்ப அட்டைகளில் சின்ன அய்யம்பாளைத்துக்குட்பட்ட 207 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி தாய்க் கடையில் இருந்து 207 குடும்ப அட்டைகளைப் பிரித்து, சின்ன அய்யம்பாளையம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

36—

நியாய விலைக் கடை

வினா எண் 19587—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, பின்னல்வாடி ஊராட்சி, பின்னல்வாடி காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, பின்னல்வாடி ஊராட்சியில் செம்பியன்மாதேவி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பின்னல்வாடி நியாய விலைக் கடை முழுநேர நியாய விலைக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. பின்னல்வாடி முழுநேர நியாய விலைக் கடையில்

2014 ஆகஸ்ட் 12]

தற்போது உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 618 ஆகும். இதில் பின்னல்வாடி கிராமத்திலுள்ள 200 குடும்ப அட்டைகளும், பின்னல்வாடி காலனி பகுதியின் 418 குடும்ப அட்டைகளும் அடங்கும். உத்தேச புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும், பின்னல்வாடி காலனி பிரிக்கும் பட்சத்தில் தாய்க் கடையில் 200 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய்க் கடையில் இருந்து பின்னல்வாடி காலனி பகுதியானது 500 மீட்டர் இடைவெளியில் உள்ளது. அரசின் நிபந்தனைப்படி, தாய்க் கடைக்கும், உத்தேச பகுதிநேர கடைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது 1½ கி.மீ. இருக்கவேண்டும். கடை பிரிக்கும்பட்சத்தில் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். பின்னல்வாடி பகுதியில் 418 குடும்ப அட்டைகள் இருப்பினும், அரசின் இதர நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தினால், பின்னல்வாடி காலனி பகுதிக்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

புதிய கிடங்குக் கட்டுதல்

வினா எண் 21513—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் புதிய கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாக தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி வட்டக் கிடங்கு வளாகத்தில் 3,700 மெட்ரிக் டன் கொள்ளளவில் கிடங்கு ஒன்று தற்போது இயங்கி வருகிறது. அதே கிடங்கு வளாகத்தில் புதியதாக 1,200 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட கூடுதல் கிடங்கு கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

38—

நியாய விலைக் கடை

வினா எண் 21514—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியத அள்ளி ஊராட்சி ஜருகு நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மானியத அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், மானியத அள்ளி (ஜருகு) தாய் நியாய விலைக் கடை தற்போது தனது விற்பனையாளரைக் கொண்டு வாரத்தில் மூன்று நாட்கள் செயல்பட்டு வருகிறது. இத்தாய்க் கடை மூன்று பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் செயற்படுத்தி வருகிறது.

மானியத அள்ளி (ஜருகு) தாய் நியாய விலைக் கடை 825 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் மானியத அள்ளி (ஜருகு) நியாய விலைக் கடையினை முழுநேரக் கடையாக மாற்றும் கேள்வி எழவில்லை.

39—

நியாய விலைக் கடை

வினா எண் 21681—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, ஆறுார் பேரூராட்சி, சுங்கான்கடை நியாய விலைக் கடையைப் பிரித்து இறிஸ்டோபர் காலனியில் புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதிக்குட்பட்ட வீரநாராயணசேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் சுங்கான்கடையில் 1,121 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. மேற்படி தாய்க் கடையிலிருந்து ஏற்கெனவே, 345 குடும்ப அட்டைகளுடன் பனைவிளை பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. தற்போது பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக்கோரும் கிறிஸ்டோபர் நகரில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், கிறிஸ்டோபர் நகர், தாய்க் கடையிலிருந்து 1.25 கி.மீ. தூரத்திற்குள் உள்ளது. நியாய விலைக் கடை அமைப்பதற்கு இலவச கட்டடம் மற்றும் மரத் தளவாடங்கள் வழங்க பொது மக்கள் முன்வரவில்லை. அரசு விதிகளின்படி பகுதிநேர கடை அமைக்க உத்தேச பகுதியில் 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும். தாய்க் கடைக்கும், உத்தேச கடைக்கும் இடையே 1½ கி.மீ. தூரம் இருக்கவேண்டும். மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் கிறிஸ்டோபர் காலனியில் புதிய நியாய விலைக் கடை துவக்க சாத்தியமில்லை.

40—

நியாய விலைக் கடை

வினா எண் 2216—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி வட்டம், அதியமான்கோட்டை ஊராட்சி, ஜீவா நகர் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி வட்டம், அதியமான்கோட்டை, ஜீவா நகர் பகுதியில் அரசு விதிகளின்படி புதிய பகுதிநேரக் கடைக்கு

குடும்ப அட்டைகளை பிரித்தபிறகு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

41—

சொந்தக் கட்டடம்

வினா எண் 22148—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், கோட்டூர் மற்றும் ஆதிச்சப்புரம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியத்தில் நிதி ஆண்டு 2011-2012-ல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு, 1-3-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காணொலி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் ஆதிச்சப்புரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் நிரந்தரக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு சென்ற கொள்முதல் பருவத்தில் 924 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

42—

நியாய விலைக் கடை

வினா எண் 26710—திரு. க. தினகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியம், பட்டணம் ஊராட்சியில் இயங்கும் நியாய விலைக் கடையைப் பிரித்து 5

2014 ஆகஸ்ட் 12]

மற்றும் 6-வது வார்டுக்கு இடையே புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியம், பட்டணம் ஊராட்சிக்குட்பட்ட பட்டணம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் பட்டணம்-1 நியாய விலைக் கடையில் உள்ள 1,606 குடும்ப அட்டைகளிலிருந்து, வார்டு எண் 5 மற்றும் 6-க்குட்பட்ட 800 குடும்ப அட்டைகளைப் பிரித்து பெருமாள் வீதி பட்டணம் எனும் முகவரியில் பட்டணம்-2 என்ற புதிய முழுநேர நியாய விலைக் கடை 4-5-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

43—

நியாய விலைக் கடை

வினா எண் 27169—திரு. கு. ரவி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், பெருமூச்சி ஊராட்சி, வெங்கடேசபுரம் பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதியில் அரக்கோணம் ஒன்றியத்திற்குட்பட்ட பெருமூச்சி ஊராட்சியில் வெங்கடேசபுரம் பகுதியில் செயல்படும் வேலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலையின்

[2014 ஆகஸ்ட் 12

"கற்பகம்" கடை எண் 15 முழுநேர நியாய விலைக் கடையாகும். இக்கடையின் விற்பனையாளர் பணியிடம் காலியாக இருந்த காரணத்தால் உள் ஏற்பாடுமூலம் கடை எண் 9 இன் விற்பனையாளர், கடை எண் 15-ஐ கூடுதல் பொறுப்பில் கவனித்து வந்ததால் கடை எண் 15-ஐ வாரத்தில் மூன்று நாட்களும் கடை எண் 9-ஐ வாரத்தில் மூன்று நாட்களும் திறந்து விற்பனை செய்து வந்தார்.

தற்போது மாவட்டக் கூட்டுறவு ஆள்சேர்ப்பு பணிமூலம் புதிய விற்பனையாளர் தெரிவு செய்யப்பட்டு, காலிப் பணியிடம் நிரப்பப்பட்டு, 1-3-2013 முதல் வெங்கடேசபுரம் நியாய விலைக் கடை முழுநேர நியாய விலைக் கடையாகச் செயல்பட்டு வருகிறது.

44—

நியாய விலைக் கடை

வினா எண் 27490—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுவிளையில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா, வெள்ளிகோடு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் முளகுமூடு நியாய விலைக் கடை 685 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 100 குடும்ப அட்டைகளை உடைய கல்லுவிளை பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கடை கோரும் இடத்திற்கும், தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5. கி.மீ. உள்ளது. அரசு வகுத்தமைத்த நிபந்தனைகளின்படி புதிய பகுதிநேரக் கடை அமைக்கக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததால் கல்லுவிளையில் புதிய பகுதிநேரக் கடை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

45—

நியாய விலைக் கடை

வினா எண் 29064—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் கோடாங்கி பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் இச்சிப்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 437 குடும்ப அட்டைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து பெத்தாழுச்சிபாளையம் பகுதிநேரக் கடை பிரிக்கப்பட்டு, 437 குடும்ப அட்டைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சிப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் புதிய நியாய விலைக் கடை அமைக்கும் கேள்வி எழவில்லை.

46—

நியாய விலைக் கடை

வினா எண் 29066—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 36, அமராவதிபாளையத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 36, அமராவதிபாளையத்தில் 588 குடும்ப அட்டைகளுடன் கடந்த மே 2010 முதல் ஒரு நியாய விலைக் கடை, திருப்பூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலையால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடையின் குறியீடு எண் எல்கே.094 ஆகும். இதனுடைய தாய்க் கடை எல்கே 055 கோயில் வழிக் கடை ஆகும். எனவே, அமராவதிபாளையத்தில் ஏற்கெனவே 588 குடும்ப அட்டைகளுடன் கடந்த 3 ஆண்டுகளாக நியாய விலைக் கடை செயல்பட்டுவரும் நிலையில், புதிய நியாய விலைக் கடை அமைக்கும் கேள்வி எழுவில்லை.

47—

அரிசி விலையைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 29236—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 46, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்1) துறை, நாள் 1-4-2013-ன்மூலம் அரிசியினை வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின்கீழ் ஒரு கிலோ அரிசியை ரூ.20/-க்கு விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் 17-4-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இச்செயல்பாட்டின்மூலம் அரிசியின் விலைக் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

48—

கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

வினா எண் 678—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு எள்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நலிவடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

49—

சர்க்கரை ஆலை

வினா எண் 3263—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியில் அரசு சார்பில் இயங்கி வந்த பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குத்தகைக்கு விடுதல், புனரமைத்தல், இயக்குதல், திரும்ப ஒப்படைத்தல் அடிப்படையில் பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரா சர்க்கரை ஆலையை மீண்டும் திறக்க அரசு முடிவு செய்தது. ஆனால், அவ்வாலையின் முன்னாள் உரிமையாளர்

திரு. கேஎஸ். சேது அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் 10904/2008 என்ற நீதிப் பேராணை விண்ணப்பத்தினை தாக்கல்செய்து தடையாணை பெற்றார். இவ்வழக்கின் சிக்கலான நிலையைக் கருதி, அரசின் சார்பில் வாதாடுவதற்காகக் கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர்-1 நியமிக்கப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நீதிப் பேராணை முடியும் தருவாயில் உள்ளது. இந்த நீதிப் பேராணை வழக்கு முடிவுக்கு வந்தவுடன் மேற்கண்ட ஆலையைத் திறக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

50—

தொழில் தொடங்குதல்

வினா எண் 6553—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட் பகுதியில் இரும்பு தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்தில் இரும்பு தொழில் தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

51—

ஆட்டோ நகர்

வினா எண் 6672—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் ஆட்டோ நகர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை.

52—

சிமெண்ட் தொழிற்சாலை

வினா எண் 8713—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

இல்லை.

53—

கரும்பு சக்கையிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

வினா எண் 13466—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு சக்கையிலிருந்து மின்சாரம் மற்றும் எத்தனால் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

54—

சர்க்கரை ஆலை

வினா எண் 17052—திரு. மு. வீ. கருப்பையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை மீண்டும் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* குத்தகைக்கு விடுதல், புனரமைத்தல், இயக்குதல், திரும்ப ஒப்படைத்தல் அடிப்படையில் பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரா சர்க்கரை ஆலையை மீண்டும் திறக்க அரசு முடிவு செய்தது. அவ்வாலையின் முன்னாள் உரிமையாளர் திரு. கே.எஸ். சேது அவர்கள் மேற்படி ஆலையை திருப்பி அளிக்கும்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் 10904/2008 என்ற நீதிப் பேராணையை தாக்கல்செய்து 30-4-2008 அன்று ஆலையை குத்தகை விடுவதற்கு இடைக்காலத் தடை ஆணை பெற்றார். இந்த நீதிப் பேராணை 9-2-2012 அன்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து திரு. கே.எஸ். சேது அவர்கள் மேல்முறையீட்டு நீதிப் பேராணை எண் 1029/2012 (Writ Appeal) தாக்கல்செய்து இடைக்காலத் தடை உத்தரவு கோரினார். திரு. கே.எஸ். சேது அவர்கள் தொடர்ந்த மேல்முறையீட்டு நீதிப் பேராணை 9-8-2012 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் மீண்டும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி, நீதிமன்ற ஆணை (Judgement) பெறப்பட்டதும், மதுரா சர்க்கரை ஆலையை மீண்டும் துவக்க, குத்தகைக்கு விடுதல் சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

55—

காகிதத் தொழிற்சாலை

வினா எண் 19998—திரு. இரா. குமாரகுரு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, பெரியசெவலை செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

நச்சுக் கழிவு

வினா எண் 20182—திரு. ரா. வைத்தியலிங்கம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கலையநல்லூர் தரணி சர்க்கரை ஆலையின் நச்சுக் கழிவு மணிமுத்தாற்றில் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தரணி சர்க்கரை ஆலையானது விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம் தாலுகாவின் கலையநல்லூரில் அமைந்துள்ள ஒருங்கிணைக்கப்பட்ட சர்க்கரை ஆலையாகும். இவ்வாலையில் சர்க்கரை உற்பத்தி, மின் உற்பத்தி மற்றும் வடிசாலை (Distillery)

உற்பத்தி நடைபெற்று வருகிறது. இவ்வாலையில் அமைந்துள்ள வடிசாலையானது கழிவில்லா ஆலையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வடிசாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் (Effluent water) இதற்காக அமைக்கப்பட்டுள்ள நீராவி கலன்களில் (Evaporator) செலுத்தப்பட்டு, ஆவியாக்கப்படுவதுடன் அதில் உள்ள கழிவு (Sludge) 55-60 பிரிக்சில் கடினமாக்கப்பட்டு அதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ள கொதிகலன் அடுப்பில் (Incineration Boiler) எரிக்கப்படுகிறது. அதில் இருந்து பெறப்படும் சாம்பலில் பொட்டாஷ் உரம் நிரம்பியுள்ளதால் கரும்பு விவசாயிகளால் உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஆகையால், இவ்வாலையில் இருந்து கழிவு நீர் (Effluent water) வெளியில் செல்ல வாய்ப்பில்லை. எனினும், இதுகுறித்து சர்க்கரைத் துறை அலுவலகத்திலிருந்து ஒரு குழுவை அனுப்பி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வடிப்பகத்தின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையானது அந்த வடிப்பகத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்கத் தேவையான வசதிகள் பொருந்தியதாகவும், கழிவு நீர் வெளியேற்றம் இல்லாத ஆலையாக அந்த ஆலையை இயக்கக்கூடிய அனைத்து அம்சங்களும் பொருந்தியதாகவும் ஆய்வின்போது கண்டறியப்பட்டது. எனவே, அத்தகைய சுத்திகரிப்பு ஆலையின் இயக்கத்தில் கழிவு நீரானது ஓடையில் வெளியேற்றப்பட வேண்டிய தேவையில்லை.

57—

காகித ஆலை

வினா எண் 32769—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் உள்ள தைல மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு அரிமழத்தில் காகித ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

திருமயம் தொகுதியில் காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

58—

இரப்பர் தொழிற்சாலை

வினா எண் 32885—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில்முனைவோர்கள் போதிய நிதி ஆதாரங்களுடன், திட்ட செயல் குறிப்புகளுடனும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

59—

காகித ஆலை

வினா எண் 33459—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

டயர் தொழிற்சாலை

வினா எண் 34173—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தரமான இரப்பர் விளைவதால் அரசு டயர் தொழிற்சாலை அமைக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில், டயர் தொழிற்சாலை துவங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. தனியார் எவரேனும் முதலீடு செய்து டயர் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், தமிழக அரசின் தொழில் கொள்கையின்படி ஆவன செய்யப்படும்.

61—

இரப்பர் பூங்கா குழுக்கள்

வினா எண் 34179—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா குழுக்கள் (Cluster Rubber Park) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா குழுக்கள் (Cluster Rubber

2014 ஆகஸ்ட் 12]

Park) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில்முனைவோர்கள் போதிய நிதி ஆதாரங்களுடனும், திட்ட செயல் குறிப்புகளுடனும், கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் இரப்பர் பூங்கா குழுக்கள் (Cluster Rubber Park) அமைக்க முன்வந்தால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளும்.

62—

மின் உற்பத்தி

வினா எண் 35514—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 183 மெகா வாட் திறனில் ரூ.964.88 கோடி செலவில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், ரூ.276.27 கோடி செலவில் மேற்காணும் ஆலைகள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

63—

காகித ஆட்டை தொழிற்சாலை

வினா எண் 47170—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டையில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டையில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

பொதுப் பணி வில்லை

வினா எண் 167—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழுத படிக்கத் தெரிந்தவர்களுக்கும், வாடகை ஊர்திகளை இயக்குவதற்கு பொதுப் பணி வில்லை (பேட்ச்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகளில் விதி 8-ன்படி போக்குவரத்து வாகனங்களை (அதாவது வாடகை ஊர்திகளை) ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் பெற குறைந்தபட்ச கல்வித் தகுதி 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள விதிகளின்படி 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி கல்வித் தகுதியின்றி, எழுதப் படிக்க மட்டும் தெரிந்த நபர்களுக்கு பொதுப் பணி வில்லை (Public Service Badge) வழங்க வழிவகை எதுவும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

65—

கண்காணிப்புக் காமிரா

வினா எண் 887—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகரங்களில் வாகன ஓட்டிகள் சாலை அத்துமீறலைக் கண்காணிக்க, கண்காணிப்பு காமிரா பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் கண்காணிப்பு நிழற்படக் கருவிகளைப் பொருத்துவது தொடர்பாக சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

66—

குளிர்சாதன சொகுசுப் பேருந்து

வினா எண் 3495—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி-சென்னைக்கு இரண்டு குளிர்சாதன சொகுசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்சமயம் அரசு ஒதுக்கீட்டில் குளிர்சாதன சொகுசுப் பேருந்துகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., விழுப்புரம் மண்டலத்திற்கு எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

67—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 3496—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை வழியாக சென்னைக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை வழியாக, சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த பேருந்துகள், திருவண்ணாமலையை மையமாகக் கொண்டு புதிய மண்டலம் உருவாக்கிய பின்னர் அனைத்துப் பேருந்துகளும் அவ்வாறே இயக்கப்பட்டு வருகின்றன.

68—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3531—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து குற்றாலத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து குற்றாலத்திற்கு நேரடி பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

69—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3532—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து திருச்செந்தூருக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து திருச்செந்தூருக்கு நேரடியாக பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

70—

மாநகரப் பேருந்துகள் பராமரித்தல்

வினா எண் 3543—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரப் பேருந்துகளை தினமும் சுத்தம்செய்து, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரப் பேருந்துகள் தினமும் பணிமனைகளில் சுத்தம்செய்து, பராமரிப்புப் பார்க்கப்பட்ட பின்புதான் காலையில் வழித்தடத்தில் இயக்கப்படுகிறது.

[2014 ஆகஸ்ட் 12

பேருந்துகள் தடத்தில் இயக்கப்படுவதற்கு முன் சுத்தம் செய்யப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையாளர்கள் ஆய்வுசெய்த பின்னரே தடத்தில் இயக்கப்படுகின்றன.

71—

சிறப்புப் பேருந்து

வினா எண் 3545—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியில் பள்ளி நேரங்களில் மாணவர், மாணவியர்களுக்கு மட்டும் சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி பணிமனையிலிருந்து 27 நகரப் பேருந்துகள் 74 வழித் தடங்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இனசரி இயக்கப்பட்டு வருவதால், இதுவே போதுமானதாக உள்ளது என்றும், எந்த வழித்தடத்தில் மாணவ, மாணவியருக்குச் சிறப்புப் பேருந்து இயக்கவேண்டும் என குறிப்பிட்டுக் கேட்கப்படுமானால், ஆய்வுசெய்து சிறப்புப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3546—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலிருந்து கோயம்புத்தூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து கோயம்புத்தூருக்கு பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. எனவே, புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

73—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3547—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலிருந்து திருப்பத்தூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து திருப்பத்தூருக்கு பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. நேரடி பயணிகள் உபயோகம் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

74—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3548—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி-சென்னை (வழி) வாலாஜா என 28 பேருந்துகள் தினசரி 112 நடைகள் போதுமான அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. ஆரணியிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்குவது குறித்து தற்போது ஏதும் பரிசீலனையில் இல்லை.

75—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 3900—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் இரயில் நிலையம் அமைக்க ஏதுவாக நிலம் கையகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆரணி வட்டம், இரும்பேடு கிராமத்தில், இரயில் நிலையம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தென்னக இரயில்வே துறையிடம் இல்லை என்பதால் மேற்படி இரயில் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

76—

விரைவுப் பேருந்து

வினா எண் 4226—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) நாங்குநேரி தொகுதி, ஏர்வாடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக நடம் எண் 198X-ல் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு ஏர்வாடி வழியாக தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன.

77—

விரைவுப் பேருந்து

வினா எண் 4227—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரியிலிருந்து சென்னைக்குச் செல்லும் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவு. எனவே, நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு நேரடியாக அரசு விரைவுப் பேருந்து இயக்க வேண்டியதில்லை.

78—

புறநகரப் பேருந்து

வினா எண் 4250—திரு. து. முருகேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு பேருந்து நிலையத்திற்குள் அனைத்துப் புறநகரப் பேருந்துகளும் வந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்துகளுக்கே போதிய இடவசதி இன்றி உள்ளது. எனவே, அனைத்துப் புறநகரப் பேருந்துகளும் செங்கல்பட்டு பேருந்து நிலையத்திற்குள் தற்சமயம் வந்து செல்ல இயலாது.

79—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4252—திரு. து. முருகேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு-அனுமந்தை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு முதல் அனுமந்தை வரை சிங்கபெருமாள் கோவில் வழியாக தடம் எண் டி.60ஜேமூலம் தினசரி 6 நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருவதால் தற்போதைய சூழலில் இத்தடத்தில் இதுவே போதுமானதாக்க் கருதப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12]

80—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4336—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து சேலம் வழியாக, சங்கரிக்கு புதிய வழித் தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம்-சேலம் (வழி) ஆரணி வழித்தடத்தில் 7 பேருந்துகள்மூலம் 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆரணியிலிருந்து சேலம் சென்றடைந்தால் 5 நிமிட இடைவெளியில் சேலத்திலிருந்து சங்கரிக்கு பேருந்து வசதி உள்ளது. எனவே, புதிய வழித் தடத்தில் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

புதிய பேருந்து

வினா எண் 4399—திரு. க. மனோகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூரிலிருந்து விஜயநகரம் வழியாக வேளச்சேரிக்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூரிலிருந்து விஜயநகரம் வழியாக வேளச்சேரிக்கு தடம் எண் 568பி-ல் ஒரு பேருந்தினை மாநகரப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது.

82—

பேருந்து நீட்டித்தல்

வினா எண் 4401—திரு. க. மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையிலிருந்து கேளம்பாக்கம் வரை இயக்கப்படும் 21-எச் பேருந்தை திருப்போரூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து கேளம்பாக்கம் வரை இயக்கப்படும் வழித்தடம் எண் 21-எச் பேருந்துகளை திருப்போரூர் வரை நீட்டிக்க வாய்ப்பு இல்லை.

83—

கூடுதல் பேருந்து

வினா எண் 4407—திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி, கவரைப்பேட்டை, சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம், எறாவூர் மற்றும் மாதர்பாக்கம் பகுதிகளில் காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி, கவரைப்பேட்டை, சுண்ணாம்புக்குளம், ஆரம்பாக்கம், எறாவூர் மற்றும் மாதர்பாக்கம் பகுதிகளில் காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் தேவைக்கேற்ப பேருந்து வசதி உள்ளது.

84—

பணிமனை

வினா எண் 4421—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரியில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் சார்பில் மேச்சேரியில் இருந்து 20 கி.மீ. தொலைவில் மேட்டூரில் ஒரு பணிமனையும், 18 கி.மீ. தொலைவில் ஓமலூரில் ஒரு பணிமனையும், 22 கி.மீ. தொலைவில் தாரமங்கலத்தில் ஒரு பணிமனையும் இயங்கி வருகின்றன. இக்கழகப் பேருந்துகள் இயங்கும் வழித்தடத்தில்தான் மேச்சேரி உள்ளது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம் பணிமனைகளிலிருந்து மேச்சேரிக்குத் தேவையான பேருந்துகள் இயக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் அந்தந்தப் பணிமனைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேச்சேரியில் பணிமனை அமைக்கும் உத்தேசம் தற்போது ஏதும் இல்லை.

85—

புதிய பேருந்து

வினா எண் 4422—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, சிந்தாமணியூர்-மேட்டூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம்-மேட்டூர் (வழி) சிந்தாமணியூர் வழித்தடத்தில் அரசு மற்றும் தனியார் புறநகர் பேருந்துகள் தினசரி 220 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டியதில்லை.

86—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4433—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலிருந்து பெரம்பலூர் மற்றும் திருநெல்வேலிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வால்பாறையிலிருந்து பொள்ளாச்சி, திருப்பூர் வழியாக திருச்சி, பெரம்பலூர் செல்லவும், பொள்ளாச்சி, திருப்பூர் வழியாக மதுரை, திருநெல்வேலி செல்லவும் பகுதி வாரியாக போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2014 ஆகஸ்ட் 12]

87—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4434—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலிருந்து பாலக்காடு மற்றும் எர்ணாகுளத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வால்பாறை-பாலக்காடு, வால்பாறை-எர்ணாகுளம் வழித்தடம் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தடமாகும். அண்டை மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களில் இரு மாநில அரசுகளுக்கிடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அடிப்படையில்தான் பேருந்துகள் இயக்கிட இயலும்.

88—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4435—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து கோயம்புத்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி-தஞ்சாவூருக்கு 15 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மன்னார்குடி-கோயம்புத்தூர், தஞ்சாவூர்-கோயம்புத்தூர் தினசரி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டியிலிருந்து கோயம்புத்தூருக்கு, நேரடி பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழாது.

89—

கூடுதல் பேருந்து

வினா எண் 4490—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து சென்னைக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி-சென்னை வழித்தடத்தில் தினமும் நான்கு தடப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வார இறுதி நாட்கள் மற்றும் விழா நாட்களில் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

90—

கூடுதல் பேருந்து

வினா எண் 4521—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து சென்னைக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]
விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர்-சென்னை (வழி) சேலம் தடத்தில் 2 பேருந்துகளும், மேட்டூர்-சென்னை (வழி) தருமபுரி 6 பேருந்துகளும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

91—

விரைவுப் பேருந்து

வினா எண் 4536—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து கன்னியாகுமரிக்கு புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டியிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக உள்ளது. எனவே, திருத்துறைப்பூண்டியிலிருந்து கன்னியாகுமரிக்குப் புதிய விரைவுப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

92—

குளிர்சாதனப் பேருந்து

வினா எண் 4561—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் முதல் சென்னை வரை புதிய குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள சூழ்நிலையில் காட்டுமன்னார்கோவில் முதல் சென்னை வரை புதிய குளிர்சாதன சொகுசுப் பேருந்துகள் இயக்க வாய்ப்பில்லை.

93—

புதிய பேருந்து

வினா எண் 4569—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் முதல் சிதம்பரம் வரை டி.நெடுஞ்சேரி வழியாக புதிய புறநகர்ப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில்-சிதம்பரம் வழி டி.நெடுஞ்சேரி இடையே நாள் ஒன்றுக்கு 45 நடைகள் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

94—

இரவு நேரப் பேருந்துகள்

வினா எண் 4601—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) பல்லடம் தொகுதி, பல்லடத்திலிருந்து திருப்பூர் இரயில் நிலையம் வரை இரவு நேரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடத்திலிருந்து திருப்பூருக்கு நள்ளிரவு 12.00 மணி வரை பேருந்து வசதி உள்ளது. பின்னர், அதிகாலை 4.00 மணி அளவில் இருந்து பேருந்து வசதிகள் உள்ளன. திருப்பூர் நகரில் இரவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பல்லடத்தில் இருந்து திருப்பூர் இரயில் நிலையம் வரை இரவுப் பேருந்துகள் இயக்குமளவிற்கு பயணிகள் அடர்வு இல்லை. எனவே, இரவு நேரப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

95—

ஓய்வூதியத் திட்டம்

வினா எண் 4633—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் செயல்படுத்தப்படும் ஓய்வூதியத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓய்வூதிய நம்பகம் வருமான வரிச் சட்டத்தின்கீழ், வருமான வரி விலக்கு பெற்று இயங்கி வருகிறது. எனவே, இந்நிலையில், அரசு ஏற்று நடத்த வழியில்லை.

96—

பேருந்து இயக்குதல்

வினா எண் 5400—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பிலிருந்து பாட்டக்குளம் வழியாக சிவகாசிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சிவகாசிக்கு நேரடிப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேற்படி வழித்தடத்தில் பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

97—

விரைவுப் பேருந்து

வினா எண் 5484—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, கீழாநிலை புதுப்பட்டியிலிருந்து அரிமழம், புதுக்கோட்டை வழியாக விரைவுப் பேருந்து சென்னைக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழாநிலை புதுப்பட்டியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் நகர/புறநகரப் பேருந்து வசதியை பயன்படுத்தி

2014 ஆகஸ்ட் 12]

காரைக்குடி வந்து காரைக்குடியிலிருந்தும் அதன் வழியாகவும் சென்னைக்கு புதுக்கோட்டை வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்து வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

98—

சிமெண்ட் தரைத் தளம்

வினா எண் 6171—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி அரசு பேருந்து பணிமனைக்கு சிமெண்ட் தரைத் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருத்துறைப்பூண்டி அரசு பேருந்து பணிமனைக்கு சிமெண்ட் தரைத் தளம் அமைக்கும் பணியினை தற்போதுள்ள நிதிநெருக்கடியில் செய்திட இயலாது.

99—

புதிய பேருந்து

வினா எண் 6174—திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து திருச்சிக்கும், திருச்சியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கும் நிறைய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு நேரடியாகப் புதிய பேருந்து இயக்க தற்போது அவசியம் எழவில்லை.

100—

மகளிர் சிறப்புப் பேருந்து

வினா எண் 6239—திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் காலை மற்றும் மாலை நேரங்களில் மகளிர் சிறப்புப் பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பூரில் தற்பொழுது மகளிர் சிறப்புப் பேருந்துகள் காலை நேரத்தில் பாண்டியன்-நகர் திருப்பூர் வழித் தடத்தில் 2 பேருந்துகள் தலா ஒரு தனி நடை இயக்கப்படுகிறது. பெரியபாளையம்-திருப்பூர் வழித் தடத்தில் மகளிர் பேருந்து ஒரு நடை இயக்கப்படுகிறது. மகளிர் பேருந்துகளில் பயணிகள் அடர்வு குறைவாகவே உள்ளது. தற்போது இயக்கப்படும் மகளிர் பேருந்துகளின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளது.

101—

பேருந்து வசதி

வினா எண் 6777—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) இராமேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள சூழ்நிலையில் இராமேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு நேரடி குளிர்சாதன வசதியுள்ள பேருந்து இயக்க இயலாது.

102—

பேருந்து வசதி

வினா எண் 6781—திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, 52-வது வார்டு, கிழக்கு ஜெ.ஜெ.நகர் பகுதிக்குக் கூடுதல் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிழக்கு ஜெ.ஜெ.நகர் பகுதியிலிருந்து திநகர், அண்ணாசதுக்கம், திருவான்மியூர், பிராட்வே போன்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே 4 வழித்தடங்களில் 18 பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுவதால். இத்தடத்தில் மேலும் பேருந்துகளை இயக்க தற்போதைக்கு அவசியம் இல்லை.

103—

பேருந்து வசதி

வினா எண் 6782—திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் பகுதிக்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொரட்டூர் பகுதி மக்களின் வசதிக்காக கொரட்டூர் பேருந்து நிலையத்திலிருந்து தற்போது 4 வழித்தடங்களில், 18 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், கொரட்டூர் வழியாக 5 வழித்தடங்களிலும், 16 பேருந்துகள் இயக்கப்படுவதால், இத்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க தற்போதைக்கு அவசியம் எழவில்லை.

104—

பேருந்து வசதி

வினா எண் 6818—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி பணிமனைக்குக் கூடுதல் பேருந்துகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி பணிமனைக்குக் கூடுதல் பேருந்து வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

105—

பேருந்து வசதி

வினா எண் 6844—திரு. ப. சிவக்கொழுந்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

பண்ருட்டி தொகுதி, நெல்லிக்குப்பம்-திருச்சிக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புதுச்சேரியிலிருந்து நெல்லிக்குப்பம் வழியாக திருச்சிக்கு பேருந்து இயக்கப்படுகிறது.

106—

பேருந்து வசதி

வினா எண் 6845—திரு. ப. சிவக்கொழுந்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, நெல்லிக்குப்பம்-சென்னை விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நெல்லிக்குப்பத்திலிருந்து கடலூர் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து ஒன்று 22-11-2010 முதல் இயக்கப்படுகிறது.

107—

பேருந்து வசதி

வினா எண் 7076—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர்-எரிச்சநத்தம் வரை கூடுதலாக இருநடை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாணவர்களின் நலன் கருதி, பள்ளி நேரங்களில் விருதுநகரிலிருந்து எரிச்சநத்தத்திற்கு 4 தனி நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில், தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமானதாகும்.

108—

ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7132—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மற்றும் ஈரோடு பயிற்சி மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, சங்கரியில் ஓட்டுநர் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வழிவகை இல்லை.

109—

ஓட்டுநர் உரிமம்

வினா எண் 7133—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) தமிழ்நாட்டில் எழுத, படிக்கத் தெரிந்த அனைவருக்கும் ஓட்டுநர் உரிமம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழுத, படிக்கத் தெரிந்த அனைவரும் போக்குவரத்து வாகனங்களை ஓட்டுவதற்கான உரிமம் பெறுவதற்கேற்ற வகையில் மத்திய மோட்டார் வாகன விதிகளில் திருத்தம் வெளியிடுமாறு மைய அரசிடம் வேண்டுவதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

110—

பேருந்து வசதி

வினா எண் 7149—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் ஊராட்சி, பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பி.ஆர்.சி. பேருந்து நிலையம் ஆகியவற்றை இணைக்கும் சுற்றுப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் ஊராட்சி, பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பி.ஆர்.சி. பேருந்து நிலையம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் சுற்றுப் பேருந்து இயக்கும் அளவிற்கு போக்குவரத்துத் தேவை எழவில்லை.

111—

பேருந்து வசதி

வினா எண் 7258—திரு. க. தினகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயாம்பாளையம்-சூலூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாகராயாம்பாளையத்திலிருந்து சூலூருக்கு பகுதிவாரியாக பேருந்துகள் இயங்கி வரும் நிலையில் புதிய வழித்தடப் பேருந்துகள் இயக்குவது குறித்து தற்போது பரிசீலனை ஏதும் இல்லை.

112—

பேருந்து வசதி

வினா எண் 7259—திரு. க. தினகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயாம்பாளையம்-திருப்பூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை-அவினாசி பிரதான சாலையில் தென்னம்பாளையம் பிரிவிலிருந்து வாகராயாம்பாளையம் சுமார்

2014 ஆகஸ்ட் 12]

8.0 கி.மீ. தொலைவிலுள்ளது. வாகராயாம்பாளையத்திற்கு இக்கழக நகரப் பேருந்துகள் 32 நடைகளும், மேற்காண் அவினாசி பிரதான சாலையில் கோவை-இருப்பூருக்கு கழகப் பேருந்துகள் 27 தினசரி 217 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளின் அடர்வுகளின் அடிப்படையில் இவ்வழித்தடத்தில் பேருந்துகளின் இயக்கம் போதுமானதாக உள்ளது.

113—

பேருந்து வசதி

வினா எண் 7260—திரு. க. தினகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயாம்பாளையம்-அன்னூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உக்கடம்-அன்னூர் (வழி) வாகராயாம்பாளையம் என ஒரு தனியார் பேருந்து தினசரி 8 நடைகள் தற்போதைய பயணிகள் அடர்விற்கு ஏற்ப இயங்கி வருகிறது. புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

114—

பேருந்து வசதி

வினா எண் 7462—திருமதி ம. சக்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி-அளக்குடி வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தடம் எண் A மூலம் சீர்காழி-அளக்குடிக்கு தற்சமயம் TN-49-N-1390 என்ற பேருந்து நல்ல நிலையில், பொலிவுடன் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

115—

சிற்றுந்து வசதி

வினா எண் 7566—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதிக்குட்பட்ட இரும்பேடு கிராமத்திற்கு தனியார் மினி பேருந்து வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற பகுதிகளில் பேருந்து இயங்காத வழித்தடங்களில் மொத்தம் 20 கி.மீ. தூரம் சிற்றுந்து இயக்க 1999-ல் அரசு உரிய சட்டத்தினை அறிவிக்கை செய்தது. அதன்படி, தகுதியுள்ள தடங்களில் சிற்றுந்து இயக்குவதற்காக 4,003-க்கும் மேற்பட்ட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அரசாணை எண் 136, உள் (போ.வ. 3) துறை, நாள் 23-2-2011-ன்படி, 100-ம், அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க தனியார்மூலம் கிராமப் பகுதிகளுக்கு மினி பேருந்து இயக்க ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

116—

பேருந்து வசதி

வினா எண் 7654—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியிலிருந்து நாகூருக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடியிலிருந்து சிவகங்கைக்கும், சிவகங்கையிலிருந்து நாகூருக்கும் என பகுதி, பகுதியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணம் செய்யும் நேரடி பயணிகள் மிக, மிகக் குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும்.

117—

பேருந்து வசதி

வினா எண் 7655—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து வேளாங்கண்ணிக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து திருப்பத்தூருக்கும், திருப்பத்தூரிலிருந்து வேளாங்கண்ணிக்கும் என பகுதி, பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போதைய தேவைக்கு இதுவே போதுமானதாகும்.

118—

பேருந்து வசதி

வினா எண் 7656—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், திருப்புவனத்திலிருந்து அம்பலத்தடி வழியாக வடுகன்குளத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடுகன்குளத்திலிருந்து அம்பலத்தடி வழியாக திருப்புவனத்திற்கு நேரடிப் பேருந்து இயக்குமளவிற்கு போதுமான பயணிகள் அட்டவு இல்லை.

119—

பேருந்து வசதி

வினா எண் 7915—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் சந்திப்பிலிருந்து திக்கணங்கோடு, முளகுமூடு வழியாக நாகர்கோவிலுக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குளச்சல் சந்திப்பிலிருந்து திக்கணங்கோடு, முளகுமூடு வழியாக நாகர்கோவில் என்பது ஒரு சுற்று வழித்தடம் என்பதால் பேருந்து இயக்க இயலாது.

2014 ஆகஸ்ட் 12]

120—

பேருந்து வசதி

வினா எண் 7916—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் நகரிலிருந்து குளச்சல், கருங்கல், பள்ளியாடி, இரவிபுதூர்கடை, சிராயன்குழி, உண்ணாமலைக்கடை மற்றும் ஆற்றூர் வழியாக அருமனைக்கு புதிய வழித்தடப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திங்கள் நகரிலிருந்து குளச்சல், கருங்கல், பள்ளியாடி, இரவிபுதூர்கடை, சிராயன்குழி, உண்ணாமலைக்கடை மற்றும் ஆற்றூர் வழியாக அருமனை என்பது ஒரு நீண்ட சுற்று வழித்தடமாகும். எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

121—

பேருந்து வசதி

வினா எண் 7917—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏர்வாடியிலிருந்து நாங்குநேரி, களக்காடு வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 198 X-ல் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு நாங்குநேரி, ஏர்வாடி வழியாக தினசரி 2 அதி நவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை ஏர்வாடியிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

122—

பேருந்து வசதி

வினா எண் 8013—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து காஞ்சிரங்குளம் கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து காஞ்சிரங்குளம் கிராம மக்களின் தேவைக்கேற்ப தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாகும்.

123—

சிற்றுந்து வசதி

வினா எண் 8195—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சங்கரியிலிருந்து பள்ளிப்பாளையத்திற்கு கூடுதல் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து சேவை வழங்கப்படாத, போக்குவரத்து சேவை போதிய அளவில் அளிக்கப்படாத புறநகர் மற்றும் கிராமப்புறங்களின் நிலையைக் கவனத்தில் கொண்டு, தனியாரால் இயக்கப்படும் சிற்றுந்து சேவைத் திட்டத்தினை 1997 ஆம் ஆண்டு முதல் அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி, கிராமப்புறங்களில் இயங்கும் சிற்றுந்துகளின் தட நீளம் 20 கிலோ மீட்டராகவும், அதில் பேருந்து செல்லும் தடங்களில் 4 கிலோ மீட்டர் வரை இயக்கவும் அரசு வழிவகை ஏற்படுத்தியது. சங்கரியிலிருந்து பள்ளிப்பாளையத்திற்கு தற்போது 32 அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சங்கரி மற்றும் பள்ளிப்பாளையம் பகுதியில் வசிக்கும் மக்களின் தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. தற்போது அரசாணை எண் 136, உள் (போ.வ.3) துறை, நாள் 23-2-2011-ன்படி., 100-ம், அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் கிராமப் பகுதியை அருகிலுள்ள பேருந்து நிலையத்துடனும், நகரத்துடனும் இணைக்க தனியார்மூலம் மினி பேருந்து இயக்க வழிவகை ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது. இதில் பேருந்து வழித்தடத்தில் 30% மிகாமல் இம்மினி பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். எனவே, சங்கரியிலிருந்து பள்ளிப்பாளையத்திற்கு கூடுதல் சிற்றுந்து இயக்க தற்போதைய அரசாணைகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

124—

பேருந்து வசதி

வினா எண் 8336—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு கூடுதலாக குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு ஒரு அல்ட்ரா டீலக்ஸ் பேருந்தும், சிறப்பு இயக்கமாக ஒரு சாதாரணப் பேருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பேருந்துகள் விழாக்காலங்கள் தவிர மற்ற நாட்களில் சுமாரான பயணிகள் அடர்வுடனேயே இயக்கப்பட்டு வருகின்றன. திருமங்கலம் பகுதி மக்கள் சென்னைக்குச் சென்றுவர தற்போதைய பேருந்து வசதிகள் போதுமானதாகும்.

125—

பேருந்து வசதி

வினா எண் 8348—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சூராணத்திலிருந்து இளையான்குடிக்கு கூடுதலாக ஒரு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூராணத்திலிருந்து இளையான்குடிக்கு தற்போது போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

126—

போக்குவரத்துப் பணிமனை

வினா எண் 8532—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தின் சார்பாக காரைக்குடியில் அரசு பணிமனை ஒன்று 71 நகர் மற்றும் புறநகர்ப் பேருந்துகளுடன் 3.51 ஏக்கர் பரப்பளவில் பராமரிப்புக் கூடம், தொழிலாளர்கள் ஓய்வறை, உணவகம், கழிவறை மற்றும் குளியல் அறை ஆகிய போதுமான கட்டமைப்பு வசதிகளுடன் இயங்கி வருகின்றது. எனவே, தற்சமயம் காரைக்குடியில் புதிய பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

127—

சிற்றுந்து வசதி

வினா எண் 10351—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டியிலிருந்து ஓலப்பாளையம், கல்லம்பாளையம் வழியாக சங்கரிக்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தற்போதைய விதிகளின்படி மேற்படி வழித்தடத்தில் சிறிய பேருந்துகள் இயக்குவதற்கு வழிவகை இல்லை.

128—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 10891—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் நற்போது இயங்கி வரும் பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் இல்லை.

129—

பேருந்து வசதி

வினா எண் 13034—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு ஒன்றியம், விநாயகபுரம், ரங்காபுரம், கடர்மாபாளையம், அத்திமாகுலபள்ளி மற்றும் ராளகொத்தூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது விநாயகபுரம் மற்றும் அத்திமாகுலபள்ளிக்கு ஆம்பூரிலிருந்து ஏ16 என்ற நகரப் பேருந்துமூலம் தினசரி 7 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாகும்.

130—

ஓட்டுநர் பயிற்சி மையம்

வினா எண் 13678—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமத்தில் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலத்தில் போக்குவரத்துத் துறை தொடர்பான அபிவிருத்தித் திட்டப் பணிகள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமத்தில் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்தில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் சார்பாக ஓட்டுநர் பயிற்சி மையம் அமைக்கத் தேவையான மூலதனச் செலவினம் ரூ.450 இலட்சத்தில் ரூ.250 இலட்சம் நிதியாக வழங்கிடுமாறு சாலைப் பாதுகாப்பு ஆணையர் மற்றும் போக்குவரத்து ஆணையர் அவர்கள் மூலமாக மத்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து மானியமாக பெற கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிதி ஒதுக்கப்பெற்றவுடன் பயிற்சி மையம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

131—

பேருந்து வசதி

வினா எண் 13925—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலிருந்து சேவூர் இரகுநாதபுரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இரகுநாதபுரம் கிராமம், ஆரணி-வேலூர் பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் உள்ளதால், பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுவதால், மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டிய தேவை எழவில்லை.

132—

பேருந்து வசதி

வினா எண் 13945—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி முதல் மழையூர், தேரூர், வடக்குப்பட்டு, கள்ளப்புலியூர், தேவனூர், வளத்தி, அவனூர்பேட்டை, மங்கலம் வழியாக திருவண்ணாமலை வரை பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வந்தவாசி முதல் மழையூர், தேரூர், வடக்குப்பட்டு, கள்ளப்புலியூர், தேவனூர், வளத்தி,

2014 ஆகஸ்ட் 12]

அவனூர்பேட்டை, மங்கலம் வழியாக திருவண்ணாமலை செல்லும் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதி பெற்றுள்ளன. மேற்படி வழித்தடத்தில் நேரடி பயணிகள் பயன்பாடு இருக்க வாய்ப்பில்லை. தற்போதுள்ள பேருந்து வசதிகளே பொதுமக்கள் தேவைக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

133—

பேருந்து வசதி

வினா எண் 13947—திரு. ரா.மு. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து மேல்சிசமங்கலம் வழியாக சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலையிலிருந்து மேல்சிசமங்கலம் வழியாக சென்னை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். மேற்படி வழித்தடத்தில் நேரடி பயணிகள் வசதிக்கு ஏற்ப கோரிய வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

134—

பேருந்து வசதி

வினா எண் 13948—திரு. ரா.மு. பாபு முருகவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மாளிகைப்பட்டு முதல் மேல்சிசமங்கலம், வாழைப்பந்தல், சடத்தாங்கல் வழியாக ஆரணிக்கு புதிய பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மாளிகைப்பட்டு முதல் மேல்சீசமங்கலம், வாழைப்பந்தல், சடத்தாங்கல் வழியாக ஆரணி செல்லும் வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். மேற்படி வழித்தடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளன. இருந்தபோதும், கோரிய வழித்தடத்தில் பேருந்து இயக்க பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

135—

பேருந்து வசதி

வினா எண் 14380—திரு. ஆர். சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மேலூரிலிருந்து சென்னைக்கு செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், மேலூரிலிருந்து சென்னைக்கு நேரடி பேருந்து இயக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

136—

அடையாளவில்லை வழங்குதல்

வினா எண் 18724—திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் உரிமம் பெற்ற அனைவருக்கும் அரசு உரிமை உள்ள் அடையாளவில்லை (Badge) வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

137—

விமான நிலையம்

வினா எண் 19961—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சர்வதேச விமான நிலையம் அமைப்பது தொடர்பாக கருத்துரு எதுவும் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் இல்லை. எனவே, மேற்படி திட்டத்தினை வலியுறுத்தும் உத்தேசம் மாநில அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

138—

விமான நிலையம்

வினா எண் 19962—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலியில் சர்வதேச விமான நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலியில் சர்வதேச விமான நிலையம் அமைப்பது தொடர்பாக மண்டல செயல் அலுவலர் (Regional Executive Director), இந்திய விமான நிலைய ஆணையம், சென்னை அவர்களிடம் குறிப்புரை கோரப்பட்டதில், மேற்படி திட்டம் தொடர்பான கருத்துரு எதுவும் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

(ஆ) எழாது.

139—

போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம்

வினா எண் 20465—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி நகரில் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் புதியதாக பகுதி அலுவலகம் (மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்) அமைப்பதற்கு அரசாணை (நிலை) எண் 1020, உள் (போ.வ.7) துறை, நாள் 27-11-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2014 ஆகஸ்ட் 12]

140—

பேருந்து வசதி

வினா எண் 20505—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி முதல் திருவண்ணாமலை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது பரமக்குடியிலிருந்து காரைக்குடி வழியாக, திருவண்ணாமலைக்கு 1-4-2012 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

141—

பேருந்து வசதி

வினா எண் 22629—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலிருந்து வேதாரண்யத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரம், பட்டுக்கோட்டை, வேதாரண்யம் வழியாக ஆர்க்காட்டுத்துறை வரை 19-4-2010 முதல் வேதாரண்யத்திற்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

142—

ஒட்டுநர் பயிற்சிப் பள்ளி

வினா எண் 25272—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற 3 தனியார் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளும், 35 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளும் என மொத்தம் 38 ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி ஒன்றும் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் பகுதியில் இயங்கி வருகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி துவக்க வேண்டிய நிலை எழவில்லை.

143—

பேருந்து வசதி

வினா எண் 26983—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுரண்டையிலிருந்து இருக்கன்குடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி முதல் இருக்கன்குடி வரை சுரண்டை வழியாக புறநகர்ப் பேருந்து (தடம் எண் 125) ஒன்று 16-9-2012 முதல் தினசரி 2 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிறது.

144—

பேருந்து வசதி

வினா எண் 27155—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூரிலிருந்து பேர்ணாம்பட்டிற்கு இரவு 12.00 மணிக்கு இரவுப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது ஆம்பூரிலிருந்து பேர்ணாம்பட்டிற்கு இரவு 10.45 மணிக்கு இயக்கப்படும் பேருந்தில் பயணிகள் அடர்வு 29 சதவிகிதம் மட்டுமே உள்ளது. எனவே, மேற்கண்ட தடத்தில் இரவு 12.00 மணிக்கு இரவுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

145—

போக்குவரத்து தலைமை அலுவலகம்

வினா எண் 30370—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கோயம்பேட்டில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் மற்றும் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை கோயம்பேட்டில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பணிமனை செயல்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டு வரும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தினை கோயம்பேட்டில் அமைக்கும் நிலை எழவில்லை.

146—

மோனோ இரயில்

வினா எண் 32494—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலிருந்து நெருக்கடி மிகுந்த NH 47 தேசிய நெடுஞ்சாலையில் மோனோ இரயில் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலிருந்து நெருக்கடி மிகுந்த NH 47 தேசிய நெடுஞ்சாலையில் மோனோ இரயில் திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

147—

மகளிர் பேருந்து

வினா எண் 36883—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் மாநகரங்களில் மகளிர் மட்டும் செல்ல சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மதுரை மாநகரில் மகளிர் பயன்பெறும் வகையில், தற்போது 36 தனிநடைகள் "மகளிர் மட்டும்" பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூரில் 5 "மகளிர் மட்டும்" பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. சேலம் மாநகரில் மகளிர் மட்டும் பயணம் செய்ய தினசரி 15 நடைகள் "மகளிர் மட்டும்" பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

148—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 513—திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மன்னம்பந்தல் கிராமத்திலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மன்னம்பந்தல் கிராமத்திலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை மீண்டும் திறக்க வாய்ப்புகள் இல்லை.

149—

பால் குளிரூட்டும் நிலையம்

வினா எண் 5037—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணியிலிருந்து 11 கி.மீ. தொலைவிலுள்ள மொரப்பந்தாங்கலில் 5,000 லிட்டர் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பு மையம் செயல்படுவதால், ஆரணியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

150—

பால் பதனிடும் தொழிற்சாலை

வினா எண் 5268—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதியில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் தொகுதியில் தற்போது 8 தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொகுப்பு பால் குளிர்விப்பான் மையம் அமைக்கப்படவுள்ளது. எனவே, மேட்டூர் தொகுதியில் பால் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

151—

பால் வளம்

வினா எண் 8812—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு தனி அலுவலர் மற்றும் செயலரின் பரிந்துரைப்படி கறவை மாடு கடன் வழங்கி, பால் உற்பத்தியை பெருக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் சிறு பால் பண்ணை அதிபர்கள் வளர்ச்சி (DEDS) திட்டத்தின்கீழ், மானியத்துடன் கூடிய கறவை மாட்டுக் கடன் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில், அக்டோபர் 2011 முதல் டிசம்பர் 2011 வரை 5,608 கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

152—

பால் வளம்

வினா எண் 8813—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

தமிழகத்தில் உள்ள பால் உற்பத்தி செய்யும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க அனைத்து உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் வாயிலாக கால்நடைத் தீவனம் மற்றும் தாது உப்பு வழங்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஈரோடு கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையில் உற்பத்தியாகும் கால்நடைத் தீவனம் அனைத்து மாவட்ட ஒன்றியங்களின் மூலமாக 2011-2012 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக 5,311 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு விற்பனை இணையத்தின்மூலம் கால்நடைத் தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், திருச்சி, விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் நிறுவப்பட்டுள்ள தாது உப்புக் கலவை (Mineral Mixture) ஆலையில் தாது உப்புக் கலவை உற்பத்தி செய்யப்பட்டு 2011-2012 ஆம் ஆண்டில் 127 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

153—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 8839—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் ஆவினில் உற்பத்தி செய்யும் மதிப்புக் கூட்டு பொருட்களைச் சேமிக்க போதிய கிடங்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உள்ள APS பகுதியில், சேலம் ஆவினில் உற்பத்தி செய்யப்படும் மதிப்புக் கூட்டுப் பொருட்களைச் சேமிக்க போதிய இடங்கு வசதி உள்ளதால், மேலும் இடங்கு வசதி ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

154—

பால் குளிர்விப்பான்கள்

வினா எண் 8989—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமையாத பகுதிகளிலிருந்து பால் கொள்முதல் செய்ய 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு (2011-2012) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 400 இலட்சம் ரூபாயிலிருந்து 10 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ, நிருவாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

155—

பால் விநியோக்க மையங்கள்

வினா எண் 9000—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) கிராமத்தில் பால் உற்பத்தி செய்ய 1,500 லிட்டர் பால் விரிவாக்க மையங்களை அரசு சார்பற்ற சேவை நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு கிராம அளவில் உள்கட்டமைப்புகளை பலப்படுத்த 2011-2012 ஆம் ஆண்டிற்கான தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.310.14 இலட்சம் பெறப்பட்டு, அரசுசாரா சேவை நிறுவனங்களின் உதவியுடன் ஆண்டிற்கு 1,500 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

156—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 14323—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, அடையபுலத்திலுள்ள பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதிக்குட்பட்ட அடையபுலம் கிராமத்தில் தற்போது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. எனவே, அடையபுலம் கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்டுவது பற்றிய கேள்விக்கே இடமில்லை.

2014 ஆகஸ்ட் 12]

157—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 14324—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, வெட்டியாந்தொழுவத்திலுள்ள பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதிக்குட்பட்ட வெட்டியாந்தொழுவம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் SGRY திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.178 இலட்சம் மதிப்பீட்டில் சங்க அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. சங்கம் மேற்படி நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

158—

பால் உபபொருள் தொழிற்சாலை

வினா எண் 15503—திரு. ரா. சுரத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அம்பத்தூர் பால் உபபொருட்கள் தொழிற்சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க புதிய பால் உபபொருட்கள் தொழிற்சாலை பணி மேலும் விஸ்தரிக்கப்பட்டு பால் உபபொருட்களின் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும்விதமாக ரூ.11.51 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

159—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 17156—திரு. சு. ரவி: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, கீழ்வெங்கடாபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் கிராமத்தில் வி.எல்.ஆர்.192, கீழ்வெங்கடாபுரம் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் 19-2-2013 அன்று பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

160—

பால் வளம்

வினா எண் 17397—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் [2]

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பால் சார்ந்த தொழில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில், இளையான்குடி பகுதியில் பால் கொள்முதல் உபரியாக இல்லாததால் அங்கு தற்போது பால் சார்ந்த தொழில் துவக்க வாய்ப்பு ஏதுமில்லை.

161—

ஆவின் பாலகங்கள்

வினா எண் 28662—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகம் முழுவதும் ஊராட்சிவாரியாக ஆவின் பாலகங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர் மற்றும் தமிழகத்தின் இதர மாவட்டங்களில் இதுவரை 190 புதிய ஆவின் பாலகங்கள் அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. பாலகங்கள் அமைக்க விரும்பும் முகவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு புதிய பாலகங்கள் அமைக்க அனுமதிக்கப்படுகின்றன.

162—

பால் பவுடர் தொழிற்சாலை

வினா எண் 39095—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஈரோடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பால் பவுடர் தொழிற்சாலை செயல்பட்டு வருவதாலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய பால் பவுடர் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளதாலும், தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களில் உபரியாக உள்ள பால், இப்பால் பவுடர் தொழிற்சாலைகளுக்கு பால் பவுடராக உருமாற்றம் செய்ய அனுப்பப்பட்டு வருவதால், பல்லடம் தொகுதியில் பால் பவுடர் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

163—

ஆவின் பாலகம்

வினா எண் 39945—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சி, பாலையூரில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினால் காரைக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான சிறுவயல், புதுவயல், பாலையூர், கண்டனூர் ஆகிய பகுதிகளில் கமிஷன் அடிப்படையில் பால் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, பால் விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும், பாலையூரில் மெயின் ரோட்டிலேயே ஆவின் பாலகம் ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டு திருமதி கே. கலைச்செல்வி என்பவரால் இனமும் 150 லிட்டர் வரை பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனால், அப்பகுதியில் ஆவின் பாலகம் அமைக்க அவசியம் எழவில்லை.

164—

வரி விலக்கு

வினா எண் 5820—திரு. எஸ்.ஜூர். பார்த்திபன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இன்சுலின் மருந்துக்கு வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு இன்சுலின் மருந்துக்கு 1-4-2012 முதல் 2006 ஆம் ஆண்டைய மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

165—

பத்திரப் பதிவு

வினா எண் 9090—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மண்டல 60 சார்-பதிவாளர் அலுவலகங்களில் உள்ள மின்னணு முத்திரையிடும் நடைமுறையை அனைத்து மண்டலங்களிலும் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

மின்னணு முத்திரையிடும் முறை சென்னையில் 9 சார்-பதிவாளர் அலுவலகங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு, பின்னர் சென்னை மண்டல அனைத்து 63 அலுவலகங்களிலும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. இம்மின்னணு முத்திரையிடும் முறை அனைத்து பதிவு மண்டலங்களிலும் நடைமுறைப்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

166—

பத்திரப் பதிவு

வினா எண் 9091—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது அதிகார ஆவணத்தை தவறாகப் பயன்படுத்தி விற்பனை ஆவணங்கள் (Sale deeds) பதிவு செய்வதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

பொது அதிகார ஆவணத்தை தவறாகப் பயன்படுத்தி விற்பனை மற்றும் இதர ஆவணங்கள் பதிவு செய்வதைத் தவிர்க்க ஏற்கெனவே அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

167—

வணிக வரி அலுவலகம்

வினா எண் 32912—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை மற்றும் குழித்துறை வணிக வரி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

13-5-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தக்கலை மற்றும் குழித்துறை உள்ளிட்ட 9 வணிக வரி அலுவலகங்களுக்கு ரூ.10.93 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, தக்கலை மற்றும் குழித்துறை உள்ளிட்ட வணிக வரி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கல்குளம் தாலுகா, வாள்வச்ச கோஷ்டம் கிராமம், புல எண் 228/8-ல் 00.04.00 ஹெக்டேர் தரிசு நிலம் தெரிவு செய்யப்பட்டு, வணிக வரித் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்குரிய உத்தேச திட்ட மதிப்பீடு பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டு நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

168—

பத்திரப் பதிவு

வினா எண் 9439—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழான கட்டணங்களை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி, சங்கங்களை பதிவு செய்யும்போது செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் முன்னதாக 2002 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திருத்தியமைக்கப்பட்டது. கட்டணங்கள், கடைசியாக திருத்தியமைக்கப்பட்டதிலிருந்து 9 ஆண்டுகளுக்குமேல் கடந்துவிட்டமையாலும், அவற்றை பதிவுத் துறை வழங்கும் பணிகளின் மதிப்பிற்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டியுள்ளது என்பதாலும், இக்கட்டணத்தை திருத்துவதெனவும், அந்த நோக்கத்திற்காக 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) இணைப்புப் பட்டியலை திருத்துவதெனவும் அரசு முடிவு செய்து, புதிய கட்டணங்கள் தொடர்பாக அரசாணை (நிலை) எண் 124, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12-10-2011-ல் உரிய அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய கட்டணங்கள் 14-10-2011 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

169—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 1205—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, எழிலூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, எழிலூர் கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், எழிலூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

170—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1208—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டில் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்படும்.

171—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 1213—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீரக்களூர் கால்நடைக் கிளை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2011-2012 ஆம் நிதியாண்டில் செய்யப்படும்.

172—

கால்நடை ஆராய்ச்சி மையம்

வினா எண் 1349—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தும் நோக்கம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

173—

மாட்டுப் பண்ணை

வினா எண் 1290—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஆகஸ்ட் 12]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் அரசு மாட்டுப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கால்நடைப் பண்ணை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

174—

கால்நடை மருந்தகம்

வினா எண் 2932—திருமதி எஸ். கனிதா சம்பத்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, அனந்தமங்கலம் கிராமத்தில் கால்நடை மருத்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, அனந்தமங்கலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் மட்டும் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது.

175—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3176—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், தேவநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தற்போது கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

176—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4019—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அளக்குடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

177—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4020—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சீர்காழி தொகுதி, ஆச்சாள்புரம் ஊராட்சியில் புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, ஆச்சாள்புரம் கிராமத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

178—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4030—திரு. து. முருகேசன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, கருநிலம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கருநிலம் கிராமத்திற்கு அருகில் ஒரு கால்நடை மருந்தகம் மற்றும் ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 1,681 மட்டுமே உள்ளதாலும், கருநிலம் கிராமத்தில் தற்போது கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

179—

கால்நடை கோட்ட அலுவலகம்

வினா எண் 4938—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கோட்ட அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கோட்ட அலுவலகம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

180—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5034—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலுள்ள கால்நடை மருத்துவமனையைப் புதுப்பித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பழுது நீக்கப் பணிகள் விரைவில் முடிவடையும் தருவாயில் உள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

181—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5308—திரு. க. தினகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், செஞ்சேரி மலையில் பகுதிநேர கால்நடை மருத்துவமனையை முழுநேர கால்நடை மருத்துவமனையாக மாற்றி மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், செஞ்சேரி மலையில் பகுதிநேர மருத்துவமனையை முழுநேர கால்நடை மருத்துவமனையாக மாற்றி மருத்துவரை நியமிக்க வாய்ப்பில்லை. எனினும், வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் மேற்காணும் பொருள் குறித்து பரிசிலிக்கலாம்.

182—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5360—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பி. அக்கரகாரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பி. அக்கரகாரத்தில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதால், பி.அக்கரகாரத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

183—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5609—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிவபுரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, சிவபுரியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. எனினும், வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசிலிக்கலாம்.

184—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 5654—திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, சந்திலி ஒன்றியம், குரும்போரி ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் தொகுதி, சந்திலி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரும்போரி கிராமம் மற்றும் இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள

2014 ஆகஸ்ட் 12]

கால்நடைகளின் அலகுகள் தற்போது 18-வது கால்நடைக் கணக்கெடுப்பின்படி பெறப்பட்டுள்ள அறிக்கையில் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வரும் ஆண்டில் மேற்படி கிராமமான குரும்பேரி கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில், தேவையின் அடிப்படையில் குரும்பேரி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

185—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 5855—திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், மண்டல நாயன குண்டா ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மண்டல நாயன குண்டா கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 18-வது கால்நடைக் கணக்கெடுப்பின்படி பெறப்பட்டுள்ள அறிக்கையில் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க விதிமுறைகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வரும் ஆண்டில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில், மண்டல நாயன குண்டா கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) கேள்வி எழாது.

[2014 ஆகஸ்ட் 12

186—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 5556—திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், காக்கன்கரை ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், காக்கன்கரை ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் திட்டம் ஏதும் இடம் பெறாததால் புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் துவக்க திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்து பரிசீலிக்கப்படும்.

187—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 5666—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

188—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5675—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியன் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேலராங்கியன் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில், மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

189—

கால்நடை மருந்தகம்

வினா எண் 5706—திரு. கு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, இச்சிபுத்தூர் ஊராட்சி, கெடவாரி கண்டிகை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, இச்சிபுத்தூர் ஊராட்சி, கெடவாரி கண்டிகை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வாய்ப்புகள் உள்ளது.

(ஆ) புதிய கால்நடை மருந்தகம் துவங்கும் திட்டம் இடம்பெறும்போது முன்னுரிமைப் பட்டியலில் மேற்காணும் கிராமத்தையும் சேர்த்து தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கலாம்.

190—

கால்நடை மருந்தகம்

வினா எண் 6854—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, சங்ரி வட்டம், தேவூர் பேரூராட்சியில் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தேவூர் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட பொதுப் பணித் துறைமூலம் நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

191—

கால்நடை மருந்தகம்

வினா எண் 6855—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ஙரி தொகுதி, மோரூர் மேற்கு ஊராட்சி, மைலோரிபட்டி மற்றும் சின்னாகவுண்டனூர் ஊராட்சிப் பகுதிகளில் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ஙரி தொகுதி, மோரூர் மேற்கு ஊராட்சி, மைலோரிபட்டி மற்றும் சின்னாகவுண்டனூர் ஊராட்சிகளில் நபார்டு 2011-2012 திட்டத்தின்கீழ் (NABARD RIDF XVII) கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

192—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 6875—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, பின்னல்வாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, பின்னல்வாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

193—

கலப்பின ஆடுகள்

வினா எண் 6910—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு "சிரோகி" போன்ற கலப்பின ஆடுகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த "சிரோகி" ஆடுகள் அதிக வெப்பத்தை தாங்கி மிகவும் வறண்ட சூழ்நிலையில் வளரும் தன்மை உடையதாகும். தமிழ்நாட்டு தட்பவெப்ப நிலைக்கேற்ப கன்னியாடு, கொடியாடு மற்றும் சேலம் கருப்பாடு ஆகிய உள்நாட்டு இனங்களும், கலப்பினங்களும் கலந்து காணப்படுகின்றன. இராஜஸ்தானில் உள்ள வளர்ச்சி மற்றும் உற்பத்தி போல் தமிழ்நாட்டு தட்பவெப்ப நிலை மற்றும் நோய் தாக்கம் ஆகியவற்றை அனுசரித்து, வளர்ந்து தழைப்பது குறித்த விவரங்கள் இல்லாத நிலையில், அரசாணை (நிலை) எண் 78, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 29-7-2011-ல் 7 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்குவதற்கான ஆணை வெளியிடப்பட்டது. இலவச வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் "சிரோகி" போன்ற கலப்பின ஆடுகளை தமிழ்நாட்டிலுள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

2014 ஆகஸ்ட் 12]

194—

கோழி வளர்ப்பு மேலாண்மை மையம்

வினா எண் 6912—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலகத் தரம் வாயந்த கோழி வளர்ப்பு மற்றும் மேலாண்மை மையம் ஒன்றை ஒரூரில் ஏற்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருஷ்ணகிரி மாவட்டம், ஒரூர் வட்டம், மாவட்ட கால்நடைப் பண்ணை, பூனப்பள்ளி கிராமப் புல எண் 863-ல் 51.75 ஏக்கர் நிலமும், நாகொண்டபள்ளி கிராமப் புல எண் 634-ல் 28.25 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 80.00 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத் தரம் வாய்ந்த கோழியின உற்பத்தி, வளர்ப்பு மற்றும் மேலாண்மை நிலையத்தினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

195—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 6913—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி நடப்பாண்டில் தொடங்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிதிநிலை அறிக்கை 2011-2012-ன்படி, புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் மாவட்டம் ஓரத்தநாட்டில் தொடங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, ரூ.1,633.94 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

196—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 6914—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிதி நிலை அறிக்கை 2011-2012 அறிவிப்பின்படி, புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராமையன்பட்டியில் தொடங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, ரூ.1,259.45 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

197—

நாட்டு மாடுகள்

வினா எண் 6915—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு தார்பார்க்கர், நெல்லூர் இன நாட்டு மாடுகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு தார்பார்க்கர், நெல்லூர் இன நாட்டு மாடுகளை வழங்குவதற்கான செயற்குறிப்புகள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

198—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7289—திருமதி ம. சக்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் கால்நடை மருந்தகக் கட்டடம் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.2,89,591/- செலவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்போது மருந்தகம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

199—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7471—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, குண்ணத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆரணி தொகுதி, குண்ணத்தூர் கிராமத்திற்கு அருகில் ஒரு கால்நடை மருந்தகம் மற்றும் ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 417 மட்டுமே உள்ளதாலும், மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் குண்ணத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

200—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7473—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை சீரமைத்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை/கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடைக் கிளை

2014 ஆகஸ்ட் 12]

நிலையம் ஏதும் செயல்படாததால் இரும்பேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

201—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7485—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

202—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7486—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்பதன் இருப்பில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், செம்பதன் இருப்பில் ஒரு கால்நடை மருந்தகமும் மற்றும் இரண்டு கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,236 மட்டுமே உள்ளதால், மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை. எனினும், இனிவரும் காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் செம்பதன் இருப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

203—

கால்நடை மருந்தகம்

வினா எண் 7722—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகக் கட்டடங்களை சீரமைத்து, நவீனப்படுத்த அரசு ஆவனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்தகக் கட்டடங்களை சீரமைத்து, நவீனப்படுத்த ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) மானாமதுரை தொகுதியைச் சார்ந்த திருப்புவனம் கால்நடை மருந்தகக் கட்டடத்தினை சீரமைக்கும் புனரமைப்புப் பணி இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

204—

கால்நடை மருந்தகம்

வினா எண் 7723—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச்சுவர் ரூ.2.00 இலட்சம் செலவில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

205—

கால்நடை பராமரிப்பு

வினா எண் 7884—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கப்பலூர், டி. கல்லுப்பட்டியில் கோழிப்பண்ணை நடைபெற்ற இடத்தில் கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம் புதிதாகத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருமங்கலம் தொகுதி, கப்பலூர், டி. கல்லுப்பட்டியில் கோழிப்பண்ணை நடைபெற்ற இடத்தில் கால்நடை வளர்ப்பு

[2014 ஆகஸ்ட் 12

பயிற்சி முகாம் புதிதாகத் துவங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

206—

கால்நடை மருந்தகம்

வினா எண் 7890—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், பனான்குளம் கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், பனான்குளம் கிராமத்திற்கு அருகில் இரண்டு கால்நடை மருந்தகங்களும் மற்றும் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 2,575 மட்டுமே உள்ளதால், மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கத் தற்போது வாய்ப்பில்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் பனான்குளம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

207—

கால்நடை மருந்தகம்

வினா எண் 7891—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், தேவநல்லூரில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், தேவநல்லூரில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இனி வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் மேற்காணும் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

208—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8821—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியான் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியான் கிராமத்தில் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையமாக அரசாணை (3டி) 2, நாள் 25-2-2011-ன்படி தரம் உயர்த்தப்பட்டு, தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையமாக செயல்பட்டு வருகிறது. எனவே, புளியான் கிராமத்தில்

கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனினும் இனிவருங்காலங்களில், கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

209—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 8865—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, பாலையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, பாலையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளைக் மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் துவக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இடம்பெறும்போது முன்னுரிமை பட்டியலில் சேர்த்து, தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

210—

கால்நடை மருந்தகம்

வினா எண் 9771—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) மானாமதுரை தொகுதி, இளையாண்குடி ஒன்றியம், மேலாயூர் கிராமத்தில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையாண்குடி ஒன்றியம், மேலாயூர் கிராமத்தில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க வாய்ப்பில்லை. எனினும் வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

211—

கால்நடை பராமரிப்பு

வினா எண் 1047—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆடுகளில் கலப்பினங்களை உருவாக்க செயற்கை கருவூட்டல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தற்சமயம் பகுவினம் மற்றும் எருமையின கால்நடைகளில் மட்டுமே செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆடுகளில் செயற்கை முறை கருவூட்டல் பணி மூலமாக கலப்பினங்களை உருவாக்குவது தொடர்பாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் பரீட்சார்த்த அடிப்படையில் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. சோதனை முடிவுகள் சாதகமாக இருப்பின், இது தொடர்பாக அரசு பரிசிலனை செய்யும்.

(ஆ) இத்திட்டம் தொடர்பாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து திட்ட செயலாக்கத்தின் வெற்றியின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

212—

கால்நடைப் பண்ணை

வினா எண் 10477—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் 10 துணை பன்றிப் பிரிவுகள் ஏற்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலையினை தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

பன்றிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, ரூ.300.00 இலட்சம் செலவில் இனப் பெருக்கப் பண்ணைகளின் மூலம் பன்றி வளர்ப்பை விருத்தி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதில், ரூ.252.23 இலட்சம் செலவில் முதன்மை இனப்பெருக்கப் பண்ணை நிறுவப்பட்டு, பன்றிக் குட்டிகளை 10 துணை இனப்பெருக்க பண்ணைகளுக்கு இலவசமாக வழங்கி பன்றி வளர்ப்பினை மேம்படுத்தும்பொருட்டு ரூ.47.77 இலட்சம் ஒதுக்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

213—

கால்நடை பராமரிப்பு

வினா எண் 10486—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) தமிழ்நாட்டில் காங்கேயம், பர்கூர், புலிக்குளம், உம்பளச்சேரி, ஆலம்பாடி ஆகிய இன நாட்டு மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நாட்டு மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு பர்கூர், புலிக்குளம் மற்றும் உம்பளாச்சேரி இன காளைகள் உறைவிந்து உற்பத்திக்கென கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகளுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இக்காளைகளிலிருந்து உறைவிந்து உற்பத்தி செய்யப்பட்டு, கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு, இவ்வின மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

214—

கால்நடை மருத்துவமனை

விளா எண் 11726—திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நல்லவண்ணிப்பட்டியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நல்லவண்ணிப்பட்டி கிராமம் மற்றும் இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,549 மட்டுமே

உள்ளதால் இக்கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், வருங்காலங்களில் இக்கிராமத்தில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் துறையூர் ஒன்றியம், நல்லவண்ணிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(ஆ) கேள்வி எழாது.

215—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 11945—திரு. சு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அனந்தாபுரம் ஊராட்சி, அனந்தாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அனந்தாபுரம் கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை ஊரகக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை. எனினும் வருங்காலங்களில் கால்நடைகளின் அலகுகள் கூடும்பட்சத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

216—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 12881—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் செயல்படும் பகுதிநேர கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் முழு நேர கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

217—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 13328—திரு. கி. சண்முகவேலு: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மானுப்பட்டி கிராமத்திற்கு மிக அருகில், குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், மானுப்பட்டி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு, குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுகிறது. எனினும்,

[2014 ஆகஸ்ட் 12

மானுப்பட்டி கிராமத்தில் தேவையின் அடிப்படையில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

(அ) கேள்வி எழாது.

218—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 14808—திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, இச்சிப்பாளையம் ஊராட்சி, வளந்தான்குட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, இச்சிப்பாளையம் ஊராட்சி, வளந்தான்குட்டையில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக உள்ளதால், புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்புகள் இல்லை. ஆனால் கால்நடை அலகுகள் 3,000 உள்ளதால், அரசாணை எண் 187, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப2) துறை, நாள் 30-10-2012-ன்படி வளந்தான்குட்டையில் புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்கப்பட்டு, 26-12-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

219—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 15261—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

பின்னர்—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் உள்ள கால்நடைக் கிளை நிலையம் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது கால்நடை மருந்தகமாக செயல்பட்டு வருவதால் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

220—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 1545—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி கால்நடை மருத்துவமனைக்கும், உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

பின்னர்—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தென்காசி, கால்நடை மருந்தகத்திற்கும், உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் 2011-2012 ஆம் நிதியாண்டில் தமிழக அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.25.00 கோடி நிதியில் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டப்பட்டு வருகிறது.

221—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 18574—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி ஊராட்சியிலுள்ள பகுதிநேர கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, மணலி ஊராட்சியில் செயல்பட்டுவந்த கால்நடைக் கிளை நிலையம் அரசு ஆணை (நிலை) எண்15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (காப3) துறை, நாள் 15-2-2012-ன்படி தரம் உயர்த்தப்பட்டு முழுநேர ஊரக கால்நடை மருந்தகமாக 30-5-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

222—

கால்நடை மருந்தகம்

வினா எண் 18586—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாளாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள கால்நடை மருந்தகத்தை சீரமைத்து நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவ நிலையங்களின் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிக்காக ரூ.22.00 கோடி நிதி ஒதுக்கீடு

2014 ஆகஸ்ட் 12]

செய்யப்பட்டது. மானாமதுரை தொகுதி, கால்நடை மருந்தகத்தை சீரமைக்க ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

223—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 19111—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, பாட்டப்பத்து ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தென்காசி தொகுதி, பாட்டப்பத்து ஊராட்சியில், பாட்டப்பத்து கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக உள்ளதால், பாட்டப்பத்து கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

224—

கால்நடை வட்டார நிலையம்

வினா எண் 19152—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் தீவன உற்பத்தி மற்றும் செயல்முறை விளக்க வட்டார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் உதவி இயக்குநர்கள், கால்நடை பராமரிப்புத் துறைமூலம் மாநில/மத்திய பகுந்தீவன அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில், கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அமைப்புமூலம் தீவனப் பயிர் சாகுபடி குறித்ததான ஆலோசனை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதால், அனைத்து வட்டங்களிலும் தீவன அபிவிருத்தி அமைப்பு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழாது.

225—

கால்நடை உற்பத்தி பயிற்சி நிலையம்

வினா எண் 19153—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு அனைத்து வட்டங்களிலும் மத்திய உறைவிந்து உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஈச்சங்கோட்டை, உயிரின கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஓசூர் மற்றும் உதகை மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உறைவிந்து உற்பத்தி செய்வதற்கு உகந்த இடமாக கருதப்பட்டு, உறைவிந்து குச்சிகள் போதுமான அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி

2014 ஆகஸ்ட் 12]

மாவட்டத்தில் கால்நடைகளுக்கு அனைத்து வட்டங்களிலும் மத்திய உறைவிந்து உற்பத்தி பயிற்சி நிலையம் அமைப்பது மத்திய அரசினைச் சார்ந்ததாகும்.

226—

கால்நடை அபிவிருத்தி அமைப்பு

வினா எண் 19155—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் மத்திய கோழிப்பண்ணை அபிவிருத்தி அமைப்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு அமைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

227—

கால்நடைத் தீவன அபிவிருத்தி அமைப்பு

வினா எண் 19156—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் மத்திய பசுந்தீவன அபிவிருத்தி அமைப்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் உதவி இயக்குநர்கள், கால்நடை பராமரிப்புத் துறைமூலம் மாநில/மத்திய பசுந்தீவன அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அனைத்து வட்டங்களிலும் தீவன அபிவிருத்தி அமைப்பு அமைக்க அவசியம் எழவில்லை.

(ஆ) எழாது.

228—

கால்நடை பராமரிப்பு

வினா எண் 19157—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் கால்நடை நோய் கண்காணிப்பு மற்றும் சான்று வழங்கும் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில இயங்கிவரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுமூலம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நோய் கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சான்று வழங்கும் பணி சென்னை சைதாப்பேட்டையில் உள்ள மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம்மூலம் (Central Referral Laboratory) நடைபெறுகிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டங்களிலும் கால்நடை நோய் கண்காணிப்பு மற்றும் சான்று வழங்கும் பணிமனை அமைத்திட தற்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

229—

துணை கால்நடை மருந்தகம்

வினா எண் 19924—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மீனாட்சிபுரத்தில் துணை கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள டி. மீனாட்சிபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 330 மட்டுமே உள்ளதாலும், இக்கிராமத்திற்கு வெகு அருகாமையில் 3 கால்நடை மருந்தகங்கள் 1 கால்நடைக் கிளை நிலையம் உள்ளதாலும், மீனாட்சிபுரம் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. விவசாயிகள் அருகிலுள்ள கால்நடை மருத்துவ நிலையங்களில் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) கேள்வி எழாது.

230—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 20352—திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், காந்தலவாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, காந்தலவாடி கிராமத்திற்கு அருகில் 3 கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருவதாலும், இக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதாலும், இக்கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சை பணிகளே போதுமானதாகும்.

231—

கால்நடை துணை மருத்துவமனை

வினா எண் 20605—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தக்குடியில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், அனுமந்தக்குடியில் அரசாணை எண் 137 (பல்வகை), கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (காப3) துறை, நாள் 14-11-2011-ன்படி ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. ஒரு கால்நடை உதவி மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) கேள்வி எழாது.

2014 ஆகஸ்ட் 12]

232—

கால்நடை துணை மருத்துவமனை

வினா எண் 20607—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியாள், சருகணி பகுதிகளில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புளியாள் கிராமத்தில் 28-5-2012 முதல் வாரக் கால்நடை மருந்தகமும், சருகணியில் கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

233—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 20645—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நெட்டாங்கோடு, நெய்யூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) குளச்சல் தொகுதி, நெட்டாங்கோடு கிராமம் மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் மிகவும்

[2014 ஆகஸ்ட் 12

குறைவாக உள்ளதால், நெட்டாங்கோடு கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் வரும் ஆண்டுகளில், கால்நடைகளின் அலகுகள் அதிகரிக்கும்பட்சத்தில் அக்கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) கேள்வி எழாது.

234—

கால்நடை மருந்தகம்

வினா எண் 20661—திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, அரவட்லா மலை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) குடியாத்தம் தொகுதி, அரவட்லா மலை கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) கேள்வி எழாது.

235—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 21548—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல் செங்கம், அரசங்கன்னியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, மேல் செங்கம் கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. அக்கால்நடை மருந்தகம் அரசங்கன்னி கிராமத்திற்கு அருகில் இயங்கி வருகிறது. மேலும், மேல்செங்கம், அரசங்கன்னி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை அலகுகள் மிகவும் குறைவாக (அதாவது 277 அலகுகள்) உள்ளதால், மேல்செங்கம் மற்றும் அரசங்கன்னி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

236—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 21562—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராதாபுரம் தொகுதி, செட்டிக்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 15-2-2012-ன்படி ராதாபுரம் தொகுதி, செட்டிக்குளத்தில் 24-5-2012 முதல் ஓர் ஊரகக் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்த அவசியம் எழாது.

237—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22060—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, இராஜபதி, நாரணம்மாள்புரம், சுத்தமல்லி, கானார்பட்டி பகுதிகளில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, இராஜபதி கிராமத்திற்கு மிக அருகில் ஒரு ஊரகக் கால்நடை மருந்தகமும், கானார்பட்டி கிராமத்திற்கு அருகில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், அரசு ஆணை எண் 113, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 6-5-1997-ன்படி. சுத்தமல்லியில் ஏற்கெனவே ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், அரசு ஆணை எண் 172, கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன்வளத் (கா-3) துறை, நாள் 18-9-2006-ன்படி. நாரணம்மாள்புரத்தில் எற்கெனவே ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும, இராஜபதி, நாரணம்மாள்புரம், சுத்தமல்லி, கானார்பட்டி ஆகிய பகுதிகளில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

238—

கால்நடை துணை நிலையங்கள்

வினா எண் 22061—திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, களக்குடி, பாலாமடை, தென்பத்து, புதூர் தெற்குபட்டி, பிள்ளையார்குளம் கிராமங்களில் கால்நடை துணை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, பாலாமடை, தென்பத்து, புதூர் தெற்குபட்டி, பிள்ளையார்குளம் கிராமங்களில் கால்நடை துணை நிலையங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. களக்குடி கிராமத்தில் அரசாணை எண் 172, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் (காப3) துறை, நாள் 18-9-2006 மற்றும் அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட அரசு கடிதம் எண் 21383/காப3-1/2006-5, நாள் 7-2-2007-ன்படி ஏற்கெனவே ஒரு கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது.

239—

கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 22071—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கூடக்கோவிலில் கால்நடைக் கிளை மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருமங்கலம் தொகுதி, கூடக்கோவிலில் கடந்த 1-6-2012 முதல் ஒரு கால்நடை உதவி மருத்துவர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டு, ஊரகக் கால்நடை மருந்தகம் தற்போது செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

240—

கால்நடை மருந்தகம்

வினா எண் 22226—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டியில் கால்நடை மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

241—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 22531—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செட்டிநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், செட்டிநாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது நடவடிக்கை ஏதுமில்லை.

242—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22532—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெரிய கோட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெரியகோட்டை கிராமத்திற்கு அருகில் புதுவயலில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், பெரியகோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக, (அதாவது 704 அலகுகள்) உள்ளதாலும் பெரியகோட்டையில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையத்தின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

243—

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம்

வினா எண் 22545—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க தற்போது நடவடிக்கை ஏதுமில்லை.

244—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 22677—திரு. மு. முருகன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாயல்குடியில்

2014 ஆகஸ்ட் 12]

1-1-2005 முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மேலும், சாயல்குடியில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் அங்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்து பதில் கூறும் நிலை எழவில்லை.

245—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 25503—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, சாலைக் கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவ நிலையங்களின் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிக்காக ரூ.22.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மானாமதுரை தொகுதி, சாலைக் கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சீரமைப்பு பணிகள் மார்ச் 2012-ல் முடிக்கப்பட்டுள்ளது.

246—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 26303—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

247—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 26746—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், மைக்குடி, காண்டை ஆகிய கிராமங்களில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 187, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.2) துறை, நாள் 30-10-2012-ன்படி திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், மைக்குடி கிராமத்தில் கிளை நிலையம் துவக்குவதற்கு ஆணை பெறப்பட்டு 31-1-2013 முதல் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது.

திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஒன்றியம், காண்டை கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை (954) குறைவாக உள்ளதால், கிளை நிலையம் துவக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

248—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 26747—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பையாபுரம் காரைக்கேணி, சிட்டுலொட்டி ஆகிய கிராமங்களில் மற்றும் கள்ளிக்குடி ஒன்றியம், கல்லணை கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், பாப்பையாபுரம் காரைக்கேணி, சிட்டுலொட்டி மற்றும் கள்ளிக்குடி ஒன்றியம், கல்லணை ஆகிய கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 3,000-க்கும் குறைவாக உள்ளதால், புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

249—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 28353—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், வாவிடமருதூரில் அரசாணை (நிலை) எண் 15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 15-2-2012 வழி 14-5-2012 முதல் ஊரகக் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், வாவிடமருதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது அவசியம் இல்லை. எனவே, விவசாயிகள் இவ்வூரகக் கால்நடை மருந்தகச் சேவையுடன் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

250—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 29193—திரு. பி.ஆர். மனோகர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, அரக்கோணம் வட்டம், உளியநல்லூர் கிராமத்தை மையமாகக் கொண்டு பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, அரக்கோணம் வட்டம், உளியநல்லூர் கிராமத்திற்கு அருகில் மகேந்திரவாடி மற்றும் பனப்பாக்கத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், கீழ்வேதியில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், உளியநல்லூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கு குறைவாக (அதாவது 2,971 அலகுகள்) உள்ளதாலும், உளியநல்லூர்

2014 ஆகஸ்ட் 12]

கிராமத்தை மையமாகக் கொண்டு பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

251—

கால்நடை மருந்தகம்

வினா எண் 33866—திரு. சோழன் சிது. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், புதுவயலில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுவயல் கால்நடைக் கிளை நிலையம், அரசாணை (நிலை) எண் 20, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப. I) துறை, நாள் 26-2-2006-ன் வழி தரம் உயர்த்தப்பட்ட கால்நடைக் கிளை நிலையமாக மாற்றப்பட்டு, தற்பொழுது 21-6-2012 முதல் கால்நடை மருந்தகமாக செயல்பட்டு வருகின்றது.

252—

கால்நடை மருந்தகம்

வினா எண் 34431—திரு. க. தினகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜல்லிபட்டி ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜல்லிபட்டி ஊராட்சிக்கு மிக அருகில் ஜே. கிருஷ்ணாபுரம் கால்நடை மருந்தகமும், செஞ்சேவிபுத்தூர் கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், ஜல்லிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,846 அலகுகள்) உள்ளதாலும், ஜல்லிபட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், இக்கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு அருகில் செயல்படும் கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளை விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

253—

கால்நடை மருந்தகம்

வினா எண் 34432—திரு. க. தினகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், கள்ளிப்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், கள்ளிப்பாளையம் ஊராட்சிக்கு அருகில் பாப்பம்பட்டி மற்றும் செட்டிப்பாளையம் ஆகிய கால்நடை மருந்தகங்களும், தேகாணியில் ஓர் ஊரகக் கால்நடை மருந்தகமும் மற்றும் போகம்பட்டியில்

2014 ஆகஸ்ட் 12]

ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், கள்ளிப்பாளையம் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,248 அலகுகள்) உள்ளதால், கள்ளிப்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

254—

தரம் உயர்த்துதல்

வினா எண் 34433—திரு. க. தினகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், போகம்பட்டி ஊராட்சி கால்நடைக் கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 299, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப.3) துறை, நாள் 16-11-2013-ன் வழி சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், போகம்பட்டி ஊராட்சி கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

255—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 35236—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூரில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையம், அரசாணை (நிலை) எண் 15, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப. 3) துறை, நாள் 15-2-2012-ன்படி ஊரகக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, சோழவந்தான் தொகுதி, வாவிடமருதூரில் தற்போது ஊரகக் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால் கால்நடை மருத்துவமனை அமைக்கும் அவசியம் எழாது.

256—

கால்நடைக் கிளை மருத்துவமனை

வினா எண் 35981—திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், பரவக்கல் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், பரவக்கல் ஊராட்சிக்கு அருகில் மொரசபல்லி, ஏரிக்குத்தி மற்றும் செட்டிக்குப்பம் ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், பரவக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள்

2014 ஆகஸ்ட் 12]

3,000-க்கும் குறைவாக (அதாவது 611 அலகுகள்) உள்ளதாலும், (பரவக்கல் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

257—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3591—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மேட்டுப்பாளையம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேட்டுப்பாளையம் கிராமத்தினைச் சுற்றி, மீஞ்சூர், பொன்னேரி ஆகிய இடங்களில் இரண்டு கால்நடை மருத்துவமனையும், தேவதானத்தில் ஒரு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், மேட்டுப்பாளையம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கு குறைவாக (அதாவது 511 அலகுகள்) உள்ளதாலும், மேட்டுப்பாளையம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

258—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3606—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஆகஸ்ட் 12

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை "மல்டி ஸ்பெஷாலிட்டி" மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் கால்நடை பெரு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு, எக்ஸ்ரே வசதிகள், சோதனைச் சாலை முதலிய முழு வசதிகளுடன் உள்ளதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் "மல்டி ஸ்பெஷாலிட்டி" மருத்துவமனை அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

259—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 36214—திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, சமயநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 117, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 5-6-1999-ன்படி சோழவந்தான் தொகுதி, சமயநல்லூர் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, 5-6-1998 முதல் கால்நடை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

260—

கால்நடை துணை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 36218—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செம்மினிப்பட்டியில் கால்நடை துணை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செம்மினிப்பட்டிக்கு அருகில் கச்சைகட்டி கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், செம்மினிப்பட்டியில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக(அதாவது 283 அலகுகள்) உள்ளதாலும், செம்மினிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையமோ/கால்நடை மருந்தகமோ அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

261—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 36749—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை கிராமத்திற்கு அருகில் தென்காசி மற்றும் பாவூர் சத்திரம் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், மத்தளம்பாறை கிராமத்திலுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 122 அலகுகள் மட்டும்) உள்ளதாலும், மத்தளம்பாறை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

262—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 36750—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, காசிமேஜர்புரம் ஊராட்சிக்கு அருகில் இலஞ்சி மற்றும் தென்காசி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், காசிமேஜர்புரத்தில் கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 272 அலகுகள் மட்டும்) உள்ளதாலும், காசிமேஜர்புரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

2014 ஆகஸ்ட் 12]

263—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 36751—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், பாட்டப்பத்து ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாட்டப்பத்து கிராமத்திற்கு அருகில் தென்காசியில் ஒரு கால்நடை மருந்தகமும், கீழப்புலியூரில் ஒரு கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 938 அலகுகள்) உள்ளதாலும், பாட்டப்பத்து கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

264—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 36752—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல் வலசை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல் வசசை ஊராட்சிக்கு அருகில் கடையநல்லூரில் ஒரு கால்நடை மருந்தகமும், வேலாயுதபுரத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், குத்துக்கல் வலசை ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 305 அலகுகள்) உள்ளதாலும், குத்துக்கல் வலசை ஊராட்சியில் கால்நடை மருந்தகமோ/கால்நடைக் கிளை நிலையமோ அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

265—

பகுதிநேர கால்நடை மருத்துவமனை

வினா எண் 38050—திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், பூண்டி ஊராட்சி, கோக்குடி கிராமத்தில் பகுதிநேர கால்நடை மருத்துவமனையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், பூண்டி ஊராட்சி, கோக்குடி கிராமத்திற்கு அருகில் மேலப்பழுவூர், இலந்தைக்கூடம், கீழப்பழுவூர் ஆகிய மூன்று கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், கோக்குடி கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,679 அலகுகள் மட்டும்) உள்ளதாலும், கோக்குடி கிராமத்தில் பகுதிநேர கால்நடை மருத்துவமனையை மீண்டும்

2014 ஆகஸ்ட் 12}

இயக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

266—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38141—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருச்சிற்றம்பலம் கிராமம் மற்றும் அக்கிராமத்திற்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் 2 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் அலகுகள் மிகவும் குறைவாக (அதாவது 252 அலகுகள்) உள்ளதாலும், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் கால்நடை மருந்தகமோ/கால்நடைக் கிளை நிலையமோ அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

267—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38142—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, மடத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சிவநாடானூர் ஊராட்சி, மடத்தூருக்கு அருகில் பாவூர்சத்திரம் மற்றும் ஆவுடையானூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், சிவநாடானூர் ஊராட்சி, மடத்தூர் கிராமத்திலுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 550 அலகுகள் மட்டும்) உள்ளதாலும், மடத்தூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

268—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38143—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, பாட்டாகுறிச்சி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, பாட்டாகுறிச்சி ஊராட்சிக்கு அருகில் சுந்தரபாண்டியபுரத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், கீழப்புலியூரில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், பாட்டாகுறிச்சி ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 418 அலகுகள் மட்டும்) உள்ளதாலும், பாட்டாகுறிச்சி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2014 ஆகஸ்ட் 12]

269—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38144—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கேஎம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், ஆயிரப்பேரி ஊராட்சிக்கு அருகில் தென்காசியில் ஒரு கால்நடை மருந்தகமும், கீழப்புவியூரில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், ஆயிரப்பேரி ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,009 அலகுகள்) உள்ளதாலும், ஆயிரப்பேரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

270—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38145—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், சில்லரைபுரவு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், சில்லரைபுரவு கிராமத்திற்கு அருகில் பாவூர்சத்திரம், ஆவுடையானூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், சில்லரைபுரவு கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 137 அலகுகள்) உள்ளதாலும், சில்லரைபுரவு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

271—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38188—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவமனை கட்டடங்களைப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் (Maintenance and Renovation) பணிக்காக ரூ.22.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் மானாமதுரை கால்நடை மருந்தகக் கட்டடம் நவீனப்படுத்த ரூ.6.00 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கப்பட்டு, அம்மருந்தகம் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

272—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38306—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், திப்பணம்பட்டி ஊராட்சிக்கு அருகில் பாவூர்சத்திரம் மற்றும் ஆவுடையானூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், திப்பணம்பட்டி ஊராட்சியிலுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,691 அலகுகள்) உள்ளதாலும், திப்பணம்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

273—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38307—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இனாம்வெள்ளகால் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், இனாம்வெள்ளகால் கிராமத்திற்கு அருகில் பாவூர்சத்திரத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், இடையர்தவணையில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், இனாம்வெள்ளகால் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களின் கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 152 அலகுகள்) உள்ளதாலும், இனாம்வெள்ளகால் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

274—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38310—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளகால் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழவெள்ளகால் கிராமத்திற்கு அருகில் பாவூர்சத்திரத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், இடையர்தவணையில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதாலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 236 அலகுகள்) உள்ளதாலும்,

2014 ஆகஸ்ட் 12]

கீழவெள்ளகால் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

275—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38311—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, செட்டியூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, கல்லூரணி ஊராட்சி, செட்டியூருக்கு அருகில் பாவூர்சத்திரம் மற்றும் ஆவுடையனூர் ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், செட்டியூர் கிராமத்திலுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 1,608 அலகுகள்) உள்ளதாலும், கல்லூரணி ஊராட்சி செட்டியூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

276—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 39068—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலகம் கிராமத்திற்கு அருகில் தென்காசி கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 652 அலகுகள்) உள்ளதாலும், மேலகம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

277—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 39069—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குற்றாலத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குற்றாலம் கிராமத்திற்கு அருகில் இலஞ்சி மற்றும் தென்காசி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 403

2014 ஆகஸ்ட் 12]

அலகுகள்) உள்ளதாலும், குற்றாலத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

278—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 39290—திருமதி ம. சக்தி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆலங்காடு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதி, ஆலங்காடு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

279—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 45803—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களக்காடு ஒன்றியம், கள்ளிகுளம் ஊராட்சி, வடக்கு மீனவன்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கள்ளிகுளம் ஊராட்சி வடக்கு மீனவன்குளம் கிராமத்திற்கு அருகில் சிங்கிகுளம், களக்காடு ஆகிய இடங்களில் இரண்டு கால்நடை மருந்தகங்களும் பத்மனேரில் ஓர் ஊரகக் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், மீனவன்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 2,027 அலகுகள்) உள்ளதாலும், வடக்கு மீனவன்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

280—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 45804—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) களக்காடு ஒன்றியம், கீழகருவேலன்குளம் ஊராட்சி, கல்லடிசிதம்பராபுரம் மேலூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழகருவேலன்குளம் ஊராட்சி, கல்லடிசிதம்பராபுரம் மேலூருக்கு அருகில் களக்காடு மற்றும் பத்மனேரி ஆகிய இடங்களில் இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலூர் கிராமத்தினைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக

2014 ஆகஸ்ட் 12]

(அதாவது 277 அலகுகள்) உள்ளதாலும், கல்லடிசிதம்பராபுரம் மேலூரில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

281—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 47220—திரு. ரா. சந்துமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கருவந்தா ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கருவந்தா ஊராட்சிக்கு அருகில் வீராணத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், அச்சாங்குன்றத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. கருவந்தா ஊராட்சியில் உள்ள கால்நடை அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 499 அலகுகள்) உள்ளதாலும், கருவந்தா ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

282—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 47261—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 12

(அ) காரைக்குடி தொகுதி, கோவிலூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, கல்லல் ஊராட்சி ஒன்றியம், கோவிலூர் ஊராட்சிக்கு அருகில் குன்றக்குடி, காரைக்குடி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்களும் பாதரக்குடி, தளக்காவூர், ஓசிறுவயல் ஆகிய இடங்களில் மூன்று கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. கோவிலூர் கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 5,000-க்கும் குறைவாக (அதாவது 547 அலகுகள்) உள்ளதால், கோவிலூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

283—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 48116—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீழபனையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கீழபனையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2014 ஆகஸ்ட் 12]

284—

கால்நடைக் கிளை நிலையம்

வினா எண் 48117—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, இராயநல்லூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

285—

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை இலாபத்தில் இயக்குதல்

வினா எண் 10262—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை இலாபத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை இலாபத்தில் இயக்க அரசு ஆவன செய்யும்.

(ஆ) கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தினை இலாபத்தில் இயக்குவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் செயல்பாட்டினை மேம்படுத்தி துணி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் கோவையிலுள்ள குறிச்சியில் 10 நாடாயில்லா தாணியங்கி விசைத்தறிகளை நிறுவுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இக்கழகத்தின்மூலம் விசைத்தறி கூடங்களை அமைத்து, அதில் 228 விசைத்தறிகளை நிறுவி, 140 விசைத்தறி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. மேலும், இக்கழகத்தினை இலாபத்தில் செயல்படுத்துவதற்காக அரசு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளி சிறார்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ் உற்பத்தித் திட்டம் வழங்கி அதன்மூலம் இலாபம் ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

286—

கூட்டுறவு நூற்பாலை செயல்படுத்துதல்

வினா எண் 19925—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையை செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) செயலிழந்து தற்போது கலைக்கப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறந்து செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

2014 ஆகஸ்ட் 12]

287—

விசைத்தறி தொழிலாளர் நல வாரியம்

வினா எண் 35465—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கு தனியாக நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) 13-7-2009 அன்று விசைத்தறி தொழிலாளர்களுக்கென விசைத்தறி தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

288—

ஆதி திராவிடர் நலன்

வினா எண் 1525—திரு. கு. ரவி: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, மேல்களத்தூர் ஊராட்சி, அருந்ததிபாளையத்தில் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், மேல்களத்தூர் ஊராட்சி, அருந்ததிபாளையத்தில் புல

எண் 34/1-ல் 0.97.0 ஏர்ஸ் குளம் புறம்போக்கு என் வகைபாடு செய்துள்ளவற்றில், 34 அருந்ததியர் குடும்பங்கள் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். நீர்நிலை புறம்போக்கு புலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க உச்ச நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் இப்புலங்களில் வீடுகள் கட்டி அனுபவித்து வரும் அருந்ததியர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

289—

ஆதி திராவிடர் நலன்

வினா எண் 1333—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், புங்கமுத்தூர் ஊராட்சி, கரட்டூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், புங்கமுத்தூர் ஊராட்சி, கரட்டூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட 2011-2012 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், அரசாணை (நிலை) எண் 211, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 3-11-2011-ல் ரூ.2.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி துவங்கும் நிலையில் உள்ளது. மேற்காணும் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் 2012-2013 ஆம் ஆண்டில் கட்டப்படும்.

2014 ஆகஸ்ட் 12]

290—

ஆதி திராவிடர் நலன்

வினா எண் 23958—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூர்வீகமாக வனங்களில் வாழ்ந்து வரும் தொல்பழங்குடி மக்களுக்கு வசிக்கும் இடத்திலேயே வீடுகட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடியினருக்கு (PTG- Particularly Vulnerable Tribal Groups) மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பழங்குடியினருக்குப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வீடுகள் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன:

1. தோடா, 2. கோட்டா, 3. குரும்பா, 4. இருளா, 5. பனியா, 6. காட்டுநாயக்கன்

அதன்படி 2012-2013 ஆம் ஆண்டிற்கான அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடி மக்களுக்கு மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.14.00 கோடி விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.524.00 இலட்சத்திற்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்கு வீடுகள் கட்டித்தர அரசாணை எண் (D) 57 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 19-3-2013-ன்படி அரசு ஆணையிட்டுள்ளது.

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	வீடுகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	நீலகிரி	212	424.00
2.	காஞ்சிபுரம்	20	40.00
3.	வேலூர்	20	40.00
4.	திருவள்ளூர்	10	20.00
மொத்தம்		262	524.00

291—

மீனவ மக்கள் நிவாரணம்

வினா எண் 3235—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் பகுதி மீனவ மக்களுக்கு நிவாரண மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் பகுதியில் தகுதியான மீனவக் குடும்பங்கள் என கண்டறியப்பட்ட 1,053 மீனவக் குடும்பங்களுக்கு 2013-2014 ஆம் ஆண்டிற்கான மீன் பிடி குறைவு காலத்திற்கான சிறப்பு உதவித் தொகை ரூ.4,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது.

292—

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

வினா எண் 6903—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்திற்கருகில் மூக்கையூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க நிதி உதவியை விரைந்து வழங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வின் அடிப்படையில்,

2014 ஆகஸ்ட் 12]

விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் மீனவ கிராமத்தில் ரூ.148.00 கோடி செலவில் மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. துறைமுகக் கட்டுமானப் பணிகள் துவங்கிவிட்டன.

293—

மீன் பண்ணை அமைத்தல்

வினா எண் 7472—திரு. ஏ.எ. பாபு முருகவேல்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் மீன் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) ஆரணி தொகுதி, இரும்பேடு கிராமத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் (NADP) முன் பண்ணை அமைத்து தனியார் பயன் அடைந்துள்ளனர். மேலும், இந்தத் தொகுதியில் மீன் வளத் துறைமூலம் மீன் பண்ணை அமைக்க தனியார் முன்வரும் பட்சத்தில் மீன் வளத் துறைமூலம் உரிய மானிய உதவி வழங்க ஆவன செய்யப்படும்.

(ஆ) வினா எழாது.

294—

மீன் உலர்களம் அமைத்தல்

வினா எண் 7875—திரு. கு. பவுன்ராஜ்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, சந்திரபாடி ஊராட்சியில் மீன் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, சந்திர்பாடி ஊராட்சியில் 2005 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் நிதி உதவியுடன் 10மீ x 10மீ அளவுள்ள ஒரு மீன் உலர்களம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

295—

மீன் வள வங்கி அமைத்தல்

வினா எண் 21319—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் வள வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் வள வங்கி அமைக்க வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

296—

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

வினா எண் 32214—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 12]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் மீனவ கிராமத்தில் திருத்திய நிருவாக ஒப்புதல் ரூ.148.00 கோடி செலவில் மத்திய-மாநில அரசுகளின் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துறைமுகக் கட்டுமானப் பணிகள் துவங்கிவிட்டன.

297—

மீன் விதைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 32217—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முட்டத்தில் மீன் விதைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் மீனவ கிராமத்தில் பெரும்பான்மையான மீனவர்கள் கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால், அங்கு மீன்விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை.

298—

மீன் இறங்குதளம் அமைத்தல்

வினா எண் 42952—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் மீனவ கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் மீனவ கிராமத்தில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கு மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின் அரசின் கொள்கை முடிவின்படி அந்த இடத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

299—

மாநில செய்தி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

வினா எண் 11350—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் இயங்கும் மாநில செய்தி நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வந்த மாநில செய்தி நிலையம் மாற்றம்

2014 ஆகஸ்ட் 12]

செய்யப்பட்டு, தற்போது சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தின் முதல் தளத்தில் செயல்பட்டு வருகிறது. மாநில செய்தி நிலையம் பாரதியார் நினைவு இல்லத்தில் அமைந்திருப்பதால், பாரதியார் நினைவு இல்லத்தைப் பார்வையிட பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பார்வையாளர்கள் பாரதியார் நினைவு இல்லத்தைப் பார்வையிடுவதோடு, மாநில செய்தி நிலையத்திலுள்ள நூலகத்தையும், படிப்பகத்தையும் பயன்படுத்தி வருகிறார்கள். பாரதியார் இல்லம் அமைந்துள்ள திருவல்லிக்கேணிக்கு பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து செல்ல போக்குவரத்து வசதி நன்றாக இருக்கிறது. எனவே, மாநில செய்தி நிலையத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு தற்போது கருத்துரு எதுவும் எழவில்லை.

300—

சிலை அமைத்தல்

வினா எண் 12933—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மெரினா கடற்கரை சாலையில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சென்னை கிரீன்வேஸ் சாலையில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டு, ஆதி திராவிடர் நலத் துறைமூலம் முறையாக பராமரிக்கப்பட்டு வருவதால், சென்னை மெரினா கடற்கரை சாலையில் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு சிலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

301—

மணிமண்டபம்

வினா எண் 19016—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடியில் இசைமேதை இராமானுஜ அய்யங்காருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், அரியக்குடியில் இசைமேதை இராமானுஜ அய்யங்காருக்கு மணிமண்டபம் அமைக்க அரசால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

302—

அரசு அச்சகங்கள்

வினா எண் 22730—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து வட்டங்களிலும் அரசு அச்சகங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

தமிழகம் முழுவதுமுள்ள அரசு அலுவலகங்களின் அனைத்து வகையான அச்சுத் தேவைகளும் சென்னையில் அரசு மைய அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற வளாக அரசு இளை அச்சகம்,

2014 ஆகஸ்ட் 12]

திருச்சி, சேலம், புதுக்கோட்டை, விருத்தாசலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு இளை அச்சகங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை இளை வளாக அரசு இளை அச்சகம் ஆகியவற்றின்மூலம் தொய்வின்றி சிறப்பாக நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, வட்டங்கள்தோறும் அரசு அச்சகங்கள் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

303—

நினைவுச் சின்னம்

வினா எண் 30122—**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்கும் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மார்த்தாண்டம், புதுக்கடை, மாங்காடு ஆகிய இடங்களில் நினைவுச் சின்னம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைக்க போராட்டம் நடத்தி தம் இன்னுயிர் நீத்த தியாகிகளான குமரித் தந்தை மார்ஷல் நேசமணி மற்றும் சிதம்பரநாதன் நாடார் ஆகியோருக்கு முறையே கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் ரூ.48,70,000/- செலவில் மணிமண்டபமும், களியக்காவிளையில் ரூ.8,50,000/- செலவில் முழு உருவ வெண்கலச்சிலையும் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்கும் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு மார்த்தாண்டம், புதுக்கடை, மாங்காடு ஆகிய இடங்களில் நினைவுச் சின்னம் அமைக்கும் சுருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

304—

நினைவு இல்லம்

வினா எண் 30356—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் உள்ள தமிழ் தாத்தா உ.வே.சா. அவர்களின் நினைவு இல்லத்தினைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் அமைந்துள்ள தமிழ் தாத்தா உ.வே.சா. நினைவில்லத்தின் முதல் தளத்தில் 23-05-2008 முதல் பொது நூலகத் துறை சார்பில் ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்நூலகம் தினந்தோறும் காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரையிலும், மாலை 4-00 மணி முதல் மாலை 6-30 மணி வரையிலும் செயல்படுகிறது. இந்நினைவில்லம், மாவட்ட ஆட்சியர்மூலம் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்ட நூலகப் பணியாளர்மூலம், நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

305—

மணிமண்டபம்

வினா எண் 32459—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட விடுதலை போராட்ட வீராங்கனை குயிலிக்கு மணிமண்டபம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 12]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 15-05-2013 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில் வீரத் தாய் குயிலிக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படும்" என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, அன்னாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

306—

மணிமண்டபம்

வினா எண் 34054—திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தவத்திரு சுவாமி ஸ்ரீலஸ்ரீ சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தவத்திரு சுவாமி ஸ்ரீலஸ்ரீ சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

307—

மணிமண்டபம்

வினா எண் 35966—திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டம், வையம்பாளையத்தில் பெருந்தலைவர் சி. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கோவை மாவட்டம், வையம்பாளையத்தில் பெருந்தலைவர் சி. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

308—

மணிமண்டபம்

வினா எண் 37535—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை அல்லது காளையார்கோவிலில் மருது சகோதரர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சிவகங்கை அல்லது காளையார்கோவிலில் மருது சகோதரர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2014 ஆகஸ்ட் 12]

309—

தேயிலைத் தோட்டம்

வினா எண் 7006—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் தேயிலையைப் பயிரிடும் பரப்பை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் தேயிலை பயிரிடும் பரப்பை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

310—

மரக்கன்றுகள்

வினா எண் 7007—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமான சந்தன மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் வனத் துறைக்கு வெளியே தனியார் நிலங்களில் மரம் வளர்க்க விரும்பும் விவசாயிகளின் நிலங்களில் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் 5.45 கோடி தேக்கு, வேம்பு, பீநாரி,

குமிழ், சவுக்கு போன்ற மரக்கன்றுகள் 2011-12 ஆம் ஆண்டு வரை நடவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்மூலம் 2011-2012 வரை 84,099 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் மூலமாக தனியார் நிலங்களில், விவசாயிகளின் விருப்பத்தின் அடிப்படையில் இலவசமாக மரக்கன்றுகள் நடவு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நிலங்களில் அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறும், மண்ணின் தன்மைக்கேற்றவாறும் இத்திட்டத்தின்மூலம் விவசாயிகளின் கோரிக்கையின் பேரில், அவர்களுடைய நிலங்களில் சந்தன மரக்கன்றுகள் இலவசமாக நடவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

311—

வன விலங்குகள் சரணாலயம்

வினா எண் 7010—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்தில் யானைகள் இடம் பெயர்வதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) யானைகள் இயற்கையாகவே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலிருந்து கிழக்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளான சத்தியமங்கலம், ஈரோடு, தருமபுரி, ஓசூர் போன்ற பகுதிகளுக்கு வருடம் முழுவதும் இடம் பெயர்வது வழக்கமான ஒன்றாகும். தென்மேற்கு பருவக் காலம் முடிந்தவுடன் தண்ணீருக்காக கிழக்கு மலைப் பகுதிக்குச் செல்வது வழக்கம்.

2014 ஆகஸ்ட் 12]

ஒவ்வொரு வருடமும் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, முதுமலை அருகிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இருந்து கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்கு சென்று மீண்டும் திரும்பி வருவது வருடாந்திர இடம் பெயர்வது இயற்கையான செயலாகும். எனவே, இயற்கையாக தலைமுறை தலைமுறையாக பல்லாண்டு காலமாக நடந்து வரும் நிகழ்வினை செயற்கையான நடவடிக்கையினால் தடுக்க இயலாத ஒன்றாகும்.

312—

யானைகள் முகாம்

வினா எண் 7011—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலை மசினகுடி யானைகள் முகாமில் உள்ள யானைகளுக்கு போதுமான ஊட்டச்சத்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், முதுமலை மசினகுடி யானைகள் முகாமில் 24 யானைகள் உள்ளன. அவற்றுக்கு கால்நடை மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்பேரில் உடல் ஆரோக்கியத்திற்குத் தகுந்த ஊட்டச்சத்து வழங்கப்படுகிறது.

313—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1747—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, எதப்பட்டு ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அரசால் நிறுவப்பட்டு வருகிறது. தற்பொழுது மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளத்தி, அவலூர்பேட்டை, மேல்மலையனூர் மற்றும் மேல்செவலாம்பாடி ஆகிய நான்கு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், எதப்பட்டு கிராமத்திற்கும், பாடகம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் அறு கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், எதப்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

314—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4400—திரு. க. மனோகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்போரூர் தொகுதி, நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார மையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் ஒத்திவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், நெல்லிக்குப்பம் ஊராட்சி

2014 ஆகஸ்ட் 12]

ஒன்றிய மருந்தகத்தை 24 மணி நேரமும் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை.

315—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4523—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பன்னந்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கூடுதல் படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் பாரூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பன்னந்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

316—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 8914—திரு. செ. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கம்மநல்லூர் ஊராட்சி, கம்மநல்லூரில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 12

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், கம்மநல்லூர் ஊராட்சியிலுள்ள கம்மநல்லூரில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

317—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 13212—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பெரியாங்குப்பம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகை ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே, குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டர் இருத்தல் வேண்டும். பெரியாங்குப்பம் கிராமத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஆம்பூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால், பெரியாங்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2014 ஆகஸ்ட் 12]

318—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 21032—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும் என்ற நியதியில் துணை சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. பூங்குளம் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது.

319—

நடமாடும் மருத்துவக் குழு

வினா எண் 29389—திருமதி ப. வினயல்ட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, சங்ரி-சேலம் தேசிய நெடுஞ்சாலையில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) நடமாடும் மருத்துவமனைத் திட்டம், தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ், 385 வட்டாரங்களில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு

வருகின்றது. நடமாடும் மருத்துவமனை வாகனம் ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்டமிடப்பட்ட பயண அட்டவணைப்படி நெடுந்தொலைவிலுள்ள மற்றும் அணுகமுடியாத கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் சென்று சேவை செய்து வருவதால், சங்ரி-சேலம் நெடுஞ்சாலையில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

320—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 30218—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், சேதுவராயன்குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். சேதுவராயன்குப்பம் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் ஈய்யனூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், சேதுவராயன்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

2014 ஆகஸ்ட் 12]

321—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 30848—திரு. ரா. சதகுமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அதன் துணை சுகாதார நிலையங்கள் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

322—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 31352—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கன்னிகுளம் ஊராட்சி, கள்ளிகுளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகை ஒர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. தற்பொழுது களக்காடு ஊராட்சி ஒன்றியத்தில் ஏர்வாடி., சிங்கிகுளம், திருக்குறுங்குடி ஆகிய 3 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். கள்ளிகுளம் கிராமத்திற்கும், சிங்கிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், கள்ளிகுளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

323—

தாய் சேய் மருத்துவமனை

வினா எண் 33235—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், மேல்நகரம்பேடு தாய் சேய் மருத்துவமனையை மேம்படுத்தி 24 மணி நேரமும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இரு சுகாதார நிலையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஊராட்சி ஒன்றியம் மேல்நகரம்பேடு கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில்

2014 ஆகஸ்ட் 12]

நாவல்பாக்கம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மேல்நகரம்பேடு துணை சுகாதார நிலையம் ஏற்கெனவே 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. மேல்நகரம்பேடு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

324—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 34326—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, செம்புளிச்சாம்பாளையம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 30,000 மக்கள்தொகை ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்பட்டு வருகிறது. செம்புளிச்சாம்பாளையம் கிராமம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அந்தியூர் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கேற்ப நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், செம்புளிச்சாம்பாளையம் கிராமத்திற்கு ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அந்தியூர் அரசு மருத்துவமனை செயல்படுவதாலும், செம்புளிச்சாம்பாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2014 ஆகஸ்டு 12

325—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 36452—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பாப்பம்பாடி கிராமம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. அவ்வூராட்சி ஒன்றியத்தில் கே.ஆர். தோப்பூர், சேடப்பட்டி, தாரமங்கலம் ஆகிய மூன்று இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. அக்கிராமத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளாளபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், பாப்பம்பாடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

******

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(497 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 38 - பொதுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

பொதுத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. இத்துறை, மாநிலத்தின் பொது நிருவாகம் சம்பந்தப்பட்ட முக்கியப் பணிகளை கவனித்து வருகிறது. இத்துறையில் கையாளப்படும் மிக முக்கியமான பணிகளாவன:-

- மேதகு ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப் பராமரிப்பு தொடர்பான பணிகள்.
- மாண்புமிகு அமைச்சர்களின் பணி நியமனம் தொடர்பான பணிகள்.
- மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைத் தொடர்பான பணிகள்.
- அமைச்சரவைக் கூட்டம் மற்றும் தொடர் நடவடிக்கைகள்.
- தகைசால் பெருமக்களின் வருகையின்போது மரபு சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்..
- நடுவண் அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்.
- சென்னை, உதகமண்டலம் மற்றும் புதுதில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிருவகித்தல்.
- அரசு விமான போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிருவகித்தல் மற்றும் கவனித்தல்.

[2014 ஆகஸ்ட் 12

- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிருவாகப் பணிகளை கவனித்தல்.
- மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்.
- விசாரணை ஆணையங்கள் அமைப்பது உட்பட சட்டம்-ஒழுங்குத் தொடர்பான பிரச்சினைகள்.
- மனித உரிமைகள் குறித்த விவரங்கள், மனித உரிமைகள் சட்டத்தை செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட பணிகள்.
- இந்திய தரைப்படை, கப்பற்படை, விமானப்படை மற்றும் கடலோரக் காவல் படை ஆகிய இராணுவ அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.
- அயல்நாட்டவர்களைப் பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம் 1946-ன்படி செயல்படுத்துதல்.
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தை நிருவகித்தல்.
- மாநிலத்தில் வெவ்வேறு முகாமகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்.
- உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள இலங்கைவாழ் தமிழர்கள் சம்பந்தப்பட்டப் பணிகள்.
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்.
- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்.

2014 ஆகஸ்ட் 12]

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்படும் மனுக்களை முதலமைச்சரின் தனிப் பிரிவுமூலம் ஆய்வு செய்து தீர்வு செய்தல்.

மாநில விழாக்கள் நடத்துதல்:

2. தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள், மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களை மாநில அளவில் கொண்டாடுவதுடன் அவ்விழாக்கள் மாநிலம் முழுவதும் தேசப் பற்றுடன் கொண்டாடுவதையும் இத்துறை உறுதி செய்கிறது.

நடுவண் அரசால் சிறப்பு நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள், மத நல்லிணக்க நாள், ஐக்கிய நாடுகள் தினம், தேசிய அர்ப்பணிப்பு நாள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நாள் ஆகிய நாட்களில் தலைமைச் செயலகத்தில் உறுதிமொழி ஏற்கவும் இத்துறை ஏற்பாடு செய்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வருடாந்திர மாநாடு:

3. மாவட்டங்களின் தேவைகளை மதிப்பீடு செய்து அவற்றின் தேவைகளை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாடு ஒவ்வொரு ஆண்டும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. அரசின் நலத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஆய்வு செய்வதற்கும், அவற்றைக் கண்காணிப்பதற்கும், ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் புதிய நலத் திட்டங்களை தீட்டுவதற்கும் இம்மாநாடு அடித்தளமாக அமைகிறது. கடந்த 11, 12 மற்றும் 13 டிசம்பர், 2013-ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 312 அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

விருதுகள் மற்றும் பதக்கங்கள்:

4. மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கல்பனா சாவ்லா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, கோட்டை அமீர் விருது மற்றும் பேரறிஞர் அண்ணா விருது ஆகியவற்றிற்கு விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது. மேலும், நடுவண் அரசின் பத்ம விருதுகளுக்கும்,

[2014 ஆகஸ்ட் 12

வீர தீரச் செயல்களுக்கான விருதுகளுக்கும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றினை ஆய்வு செய்த பின் உரிய பரிந்துரைகளுடன் நடுவண் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

அயல்நாட்டினர் செயலாக்க விதி:

5. அயல் நாட்டினர் இந்தியாவில் தங்குவதற்கு அனுமதியும் உரிய நுழைவிசைவுடன் வருகை புரியும் அயல்நாட்டினர்களுக்கு (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதியும், இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விரும்புபவர்களுக்கு அனுமதியும் (Exit Permission), மற்றும் இந்தியாவை விட்டு வெளியேற்றவும்/வெளியேறக் கோரி ஆணையும் மாநில அரசால் வழங்குவதற்கு பொதுத் துறை ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது. குடிநுழைவு, விசைவு, அயல்நாட்டினர் பதிவு மற்றும் கண்காணிக்கும் முறை (Immigration, Visa, Foreigners Registration and Tracking System) இவையாவும் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தின் வாயிலாக அயல்நாட்டினர் பதிவு அலுவலகத்தில் (FROs) மின்னணு மூலமாக இத்துறையால் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டினர் தொடர்புடைய பதிவு மற்றும் அனுமதிகள் வழங்குவது போன்ற அனைத்து செயல்கள் முதற்கொண்டு மின்னணு மூலமாக செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் உள்ள அயல்நாட்டினரின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு இச்செயல்முறை காவல் துறையினருக்கு உதவியாக உள்ளது. இதைத் தவிர பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின்மீது அவற்றின் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகிறது.

மாநில மரபு:

6. இம்மாநிலத்திற்கு (தமிழ்நாட்டிற்கு) வருகை புரியும் மாநில விருந்தினர்கள் மிக முக்கிய மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரின் மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தாண்டு நான்கு முறை இந்திய குடியரசுத் தலைவர் வருகை, மூன்று முறை இந்திய துணைக் குடியரசுத் தலைவர் வருகை மற்றும் ஒருமுறை இந்திய பிரதமர் வருகை உட்பட 1532 முக்கிய பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகைப் புரிந்துள்ளனர். மேலும், 5-12-2013 மற்றும் 6-12-2013-ல் சென்னைக்கு

2014 ஆகஸ்ட் 12]

வருகை புரிந்த ஜப்பானிய பேரரசர் மற்றும் பேரரசிக்கான மரபு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இத்துறையால் வெற்றிகரமாகக் கையாளப்பட்டது.

மனித உரிமைகள்:

7. மனித உரிமைகள் என்பது தனிநபர் சுதந்திரம், வாழ்வுரிமை, சமநிலை, சுயமரியாதை மற்றும் அரசியலமைப்பு சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியதாகும். அரசு அத்தகைய உரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, மனித உரிமை மீறல் தொடர்பான புகார்களைக் கண்காணிப்பது மற்றும் சட்டத்தில் உள்ள நடைமுறைகளின்படி உரிமை மீறும் நபர்களின்மீது தொடர்புடைய துறைகள்மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதுமட்டுமின்றி பாதிக்கப்படும் நபருக்கு இழப்பீடு பெற்றுத் தரவும் இத்துறை செயல்படுகிறது. மேலும், தேசிய மனித உரிமைகள் ஆணையம் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளை நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993 பிரிவு 21-ன்கீழ் அமைக்கப்பட்டு 17-4-1997 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தில் சட்டம், புலனாய்வு, நிருவாகம் என மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. மனித உரிமைகள் மீறப்படுவது சம்மந்தமான புகார்கள் ஆணையத்தில் எந்த மொழியிலும் தாக்கல் செய்யலாம். இதற்குக் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. புகார்கள்மீது விசாரணை மேற்கொள்வது மட்டுமின்றி மற்ற தகவல்களின் அடிப்படையில் சுயமாக வழக்குகளையும் ஆணையம் விசாரணைக்கு ஏற்றுக்கொள்கிறது. விசாரணைமுடித்த பின்பு தொடர்புடைய துறைகளுக்கு ஆணையம் அதன் பரிந்துரைகளை அனுப்புகிறது. அந்த பரிந்துரைகளை நிறைவேற்றும் பணியை இத்துறை கண்காணித்து வருகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு:

8. அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் தமிழகத்தின் பல்வேறு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் தொடர்பான பணிகளையும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. துறையில்

உள்ள புள்ளிவிவரங்களின்படி, இலங்கையில் 1983-ல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கு பிறகு 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து 30-4-2014 அன்று பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 19,728 குடும்பங்களைச் சேர்ந்த 65,272 இலங்கைத் தமிழர்கள் மாநிலத்தில் 26 மாவட்டங்களில் (இரண்டு சிறப்பு முகாம்கள் உள்ளிட்ட) 112 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, 13,271 குடும்பங்களைச் சேர்ந்த 34,566 இலங்கைத் தமிழ் அகதிகள், முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண உதவிகள், மைய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படியும் மற்றும் ஒப்புதலுடன் வழங்கப்படுகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் பல்வேறு நலத் திட்டங்கள்:

9. முகாம்களில் வசித்துவரும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்வதே இவ்வரசின் முனைப்பான திட்டமாகும். எனவே, மத்திய அரசு வழங்கிவரும் உதவியோடு கூடுதலாக தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்து நலத் திட்ட உதவிகளையும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்த இந்த அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. இந்த கொள்கை முடிவானது மேதகு ஆளுநர் உரையில் 3-6-2011 அன்று அறிவிக்கப்பட்டது.

10. இதன்படி, அகதிகளுக்கு நடைமுறையில் இருந்து வரும் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரணங்கள் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளது. குடும்பத் தலைவருக்கு வழங்கப்பட்டு வரும் பணக்கொடையின் அளவு மாதமொன்றிற்கு ரூ.400/-லிருந்து ரூ.1,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வயது வந்த பிற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத பணக் கொடையானது ரூ.288/-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.180/- மற்றும் ரூ.90/- என இரண்டு விதமாக வழங்கப்பட்டுவந்த மாத பணக்கொடை ரூ.400/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இலங்கைத் தமிழ் அகதிகள் குடும்பத்திற்கு மானிய விலையில்

2014 ஆகஸ்ட் 12]

வழங்கப்பட்டுவந்த அரிசியில் 20 கிலோ வரை விலை ஏதுமின்றி வழங்கப்படுகிறது. இத்துடன் சர்க்கரை, கோதுமை, மைதா, ரவை போன்ற பொருட்களும் மானிய விலையில் நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படுகிறது. முகாம்களில் வசித்துவரும் 19,728 அகதிகள் குடும்பத்தினர் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்து வருகின்றனர். மேலும், 2014 பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சரின் பொங்கல் பரிசுத் தொகுப்பானது அனைத்து முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

II. முகாம்களில் வசித்துவரும் அகதிகள் குடும்பத்தைச் சேர்ந்த சிறார்களின் முறையான கல்வி வளர்ச்சிக்கு, இவ்வரசு பல்வேறு சீரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்துவரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 12ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இத்துடன் தமிழ்நாட்டிலுள்ள பிற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், சீருடைகள், விலையில்லா மிதிவண்டி, கணித உபகரணங்கள் பெட்டி (Geometry box), புத்தகப் பை, மதிய உணவு, இலவச பேருந்து அனுமதிச்சீட்டு மற்றும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் 22,428 இலங்கைத் தமிழ் மாணவர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் கீழ்க்கண்டவாறு சேர்ந்துள்ளனர்:—

வ. எண்	நிலை	மாணவர்களின் எண்ணிக்கை
1.	மழலையர் பள்ளி	2,688
2.	ஆரம்பப் பள்ளி	8,752
3.	நடுநிலைப் பள்ளி	4,459
4.	உயர்நிலைப் பள்ளி	2,724
5.	மேல்நிலைப் பள்ளி	2,251
6.	கல்லூரி	1,554
	மொத்தம்	**22,428**

[2014 ஆகஸ்ட் 12

12. இத்துடன், இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், தொழில் சார்ந்த கல்லூரிகளிலும், தொழில்நுட்ப நிலையம் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில், பொதுப் பிரிவின்கீழ் கல்தாய்வில் கலந்து கொண்டு, சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மற்ற மாணவர்களைப் போல அனைத்துவிதமான கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள். மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் தாழ்த்தப்பட்ட (ம) பழங்குடியினர் நலத் துறை விடுதிகளில், தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு, தகுதியுள்ள இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினைத் தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

13. இலங்கை அகதிகள் முகாம்களில் வசித்துவரும் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் படிப்பிற்கு ஏற்ப ரூ.850/- முதல் ரூ.4,700/- வரை உயர் கல்வி தொடர கல்வி உதவித் தொகை, பின்வருமாறு வழங்கப்படுகிறது:—

வ. எண்	படிப்பின் பெயர்	ஆண்டிற்கான உதவித் தொகை ரூ.
1.	இளங்கலை	1,200/-
2.	இளம் அறிவியல்	1,250/-
3.	முதுகலை	1,330/-
4.	முதுநிலை அறிவியல்	1,650/-
5.	பட்டயப்படிப்பு (தொழில்நுட்பம்)	850/-
6.	பொறியியல்	2,750/-
7.	மருத்துவம்	4,700/-
8.	கால்நடை மருத்துவம்	1,400/-
9.	சட்டம்	860/-
10.	இளம் அறிவியல் (வேளாண்மை)	2,850/-

2014 ஆகஸ்ட் 12]

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 426 மாணவர்கள் கல்வி உதவித் தொகைகள் பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

14. இலங்கைத் தமிழர்கள் வருவாய் ஈட்டும் வேலைவாய்ப்பை பெருக்கிடும்வகையில் அவர்களுக்கு அரசு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து வருகிறது. முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு தகுதியின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. அதன்மூலம் அவர்கள் தங்களின் வருவாயை உயர்த்திக் கொள்ள இயலும். 2013-2014-ல் இதுவரை, 1130 பெண்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். முகாம்களில் வசிக்கும் அகதிகள் சிக்கனம் மற்றும் கடன் நடவடிக்கைகள் மூலமாக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும்வகையில் 416 மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, குழு ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் சுழல் நிதி "ஒருமுறை மானியமாக" வழங்கப்பட்டு வருகிறது.

15. மாதாந்திர பணக்கொடை மட்டுமில்லாமல், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில் 3,929 நபர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு இறுதி சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இந்த அரசால் ரூ.2,500/-லிருந்து உயர்த்தப்பட்டு தற்போது ரூ.5,000/- ஆக வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில், 203 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூ.15,000/-லிருந்து ரூ.25,000/-ஆக 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது.

16. மாநிலம் முழுவதிலும் உள்ள அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த

[2014 ஆகஸ்ட் 12

ரூ.25.00 கோடியில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் வாயிலாக குடிநீர் வசதி அமைத்துத் தர ரூ.4.33 கோடியும் மற்றும் பிற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.20.66 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசாணை (நிலை) எண் 1329, பொதுத் (மறுவாழ்வு-2)த் துறை, நாள்: 26-11-2013-ன்படி, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் தலா ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், நீடித்து நிலைக்கும் 1,655 புதிய வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.19.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணி ஊரக வளர்ச்சித் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

17. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் ஆகியவை இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், தகுதியுடைய பெண்களுக்கான உதவித் தொகை மற்றும் உரிய எடையுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கான தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2013-2014 ஆம் ஆண்டில் 73 மகளிர் பயனடைந்துள்ளனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்மூலம் கருவுற்ற முகாம்வாழ் இலங்கைத் தமிழ் பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 822 பெண்கள் பயனடைந்துள்ளனர். அதேபோன்று, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. 2013-2014-ல் இத்திட்டத்தின்மூலம் 47 பெண் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

18. முதலமைச்சரின் புதிய விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2011-2012-ல் முகாம்களில் வசித்துவரும் தமிழர்களுக்கும், 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் பயன் பெறும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

சிறப்பு முகாம்:

19. தமிழகத்தில் செய்யார் (திருவண்ணாமலை மாவட்டம்) மற்றும் திருச்சி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) சிறப்பு முகாம்களில் காவல் துறையின் எதிர்மறையான குறிப்புகள் கொண்ட, மாநிலத்திற்குள் சுதந்திரமாக செல்ல முடியாத இலங்கைத் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 31-07-2014 நிலவரப்படி, சுமார் 50 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் 1946-பிரிவு 3(2)இ-ன்கீழ் இவ்விரண்டு சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தினமும் ரூ.70/- வீதம் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

அகதிகள் தாயகம் திரும்புதல்:

20. தங்கள் சொந்த விருப்பத்தின்பேரில் தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு "வெளிச்செல்" அனுமதி, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. "வெளிச்செல்" அனுமதி, விரைவாக வழங்குவதற்கு எளிய நடைமுறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2013-2014-ல் 618 நபர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரக நிதி உதவியுடன் (UNHCR) இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்:

21. தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், படையெடுப்பின் பொருட்டும், குடியமர்வின் பொருட்டும் தொன்றுதொட்டு அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். பொருளாதார காரணங்களுக்காகவும், பொருளாதாரம் உலகமயமாக்கப்பட்டதன் காரணமாகவும், ஒவ்வொரு வருடமும் அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வேலை தேடியும், வாழ்வாதாரத்திற்காகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போது, எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசை அணுக வேண்டியுள்ளது. முன்னர், இது போன்ற பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் வெளி

விவகாரத் துறை அமைச்சகம்மூலம் மட்டும் தீர்வு காண போதுமானதாக இருந்தது. இருப்பினும், ஏராளமான தமிழர்கள் வெளிநாட்டில் தங்கியுள்ளதால், குறிப்பாக குறைந்த வருவாய் பெற்று, வெளிநாட்டில் தங்கியுள்ள தமிழர்களின் உரிமைகளை மாநில அரசு பாதுகாக்க வேண்டியுள்ளது. இதன் விளைவாக, சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தில் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டு, இந்த ஆணையரகத்தின் பெயர் அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

22. வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் அதிகாரிகளைத் தொடர்புகொள்ளும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) "மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)" ஆகவும் மற்றும் மாவட்ட தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (வெளிநாடுவாழ் தமிழர்கள்)" ஆகவும் செயல்படும். இந்தப் பிரிவானது வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களிடமிருந்து வருகின்ற முறையீடுகள் மற்றும் குறைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, உரிய பதிவேட்டில் பதிவு செய்து, தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், வெளிநாடுகளில் வேலை தேடிச் செல்லும் தமிழர்கள் தொடர்பான விளம்பரங்களை முறைப்படுத்துவது தொடர்பாகவும், பதிவு செய்யப்படாத முகவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிதி நிலை:

23. 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் நிதி ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	திட்டம் (கணக்குத் தலைப்பு)	வரவு–செலவு மதிப்பீடு 2013 – 2014	திருத்திய மதிப்பீடு 2013–2014	இறுதி திருத்திய மதிப்பீடு 2013–2014	வரவு–செலவு மதிப்பீடு 2014 – 2015
1.	2235–01–105–I-AA-துயர் தணிப்பு நடவடிக்கைகள்	7.56	3.63	3.63	4.01
2.	2235–01–105–I-AC-தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைகள்	9468.27	11836.81	11858.77	10364.02
3.	2235–01–800–I-AH-வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்	14.79	6.18	6.18	6.42
4.	4235–01–105–II-JW-அகதிகள் முகாமில் வீடுகள் கட்டுதல்	1500.00	1500.00	1500.00	0.01

முன்னாள் படைவீரர்கள் நலன்:

24. நாட்டிற்குச் சேவை செய்ய இளைய ஆண்கள் மற்றும் பெண்களை இந்திய இராணுவப் படைக்கு அனுப்பி வைப்பதில் தமிழ்நாடு உன்னதமான மரபைக் கொண்டுள்ளது. இப்படை வீரர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கு ஏதுவாக, அவர்கள் குடும்பத்தினருடன் இல்லாதபோது அவர்களுடைய குடும்பங்களை காப்பதும், மேலும் அவர்கள் அமைதியாகவும், ஆக்கப் பூர்வமாகவும் ஓய்வு காலத்தைக் கழிப்பதற்கு வழிவகை செய்வது இன்றியமையாததாகும். இவ்விரு நோக்கங்களையும் நிறைவேற்ற முன்னாள் படைவீரர் நல இயக்ககம் 1974-ல் ஏற்படுத்தப்பட்டு பாடுபட்டு வருகிறது.

25. முன்னாள் படைவீரர் நல இயக்ககம், முன்னாள் படைவீரர்கள், படைப் பணி புரிவோர் மற்றும் படைப் பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினரின் நலனை மேம்படுத்திடும்

பொருட்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும், ஏறக்குறைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 1400 படைவீரர்கள் படைப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். 31-03-2014 அன்றைய நிலவரப்படி, முன்னாள் படைவீரர் நலத் துறையில் 2,28,676 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் கைம்பெண்கள் பதிந்துள்ளனர். இவ்வியக்ககம் 29 மாவட்ட அலுவலகங்கள் மூலம் இவர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவு செய்கிறது. முன்னாள் படைவீரர் நலத் துறை அதனுடைய திட்டங்களுக்கான செலவினத்திற்கு கொடிநாள் நிதி திரட்டும் திட்டத்தின்கீழ் நிதியினை திரட்டுகிறது.

26. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் தலையாய திட்டங்களை கீழ்வருமாறு ஐந்து முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

1. நிதியுதவிகள் / மானியங்கள்.
2. மறு வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
3. திறன் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி.
4. கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடுகள்.
5. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்.

நிதி உதவிகள்/மானியங்கள்:

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு பல்வேறு வகை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி:

27. ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவி, முன்னாள் படைவீரர்களின் மகள்களுக்கு திருமண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி மற்றும் இயற்கைச் சீற்றங்கள் நிதியுதவி போன்ற நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில், 10,823 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகை ரூ.19,19,55,245/- வழங்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி

2014 ஆகஸ்ட் 12]

முறையே, ரூ.2,000/-லிருந்து ரூ.3,000/-ஆகவும், ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதர மானியங்களின்கீழ் உள்ள நிதியுதவிகளின் அளவுகோல் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:-

வ. எண்	நிதியுதவியின் பெயர்	உயர்த்தப்பட்ட தொகை மாதந்தோறும் ரூபாயில்
1.	வறியவருக்கான ஆயுட்கால மானியம்	1,000/–
2.	முதியோர் ஓய்வூதியம்	1,000/–
3.	கண்பார்வையற்றோருக்கான நிதியுதவி	1,000/–
4.	தொழுநோய் மானியம்	1,000/–
5.	பக்கவாதத்திற்கான மானியம்	1,000/–
6.	மாதாந்திர நிதியுதவி – வறியநிலையில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு	1,000/–.
7.	மாதாந்திர நிதியுதவி – வறியநிலையில் உள்ள கைம்பெண்களுக்கு	1,000/–
8.	காசநோய் மானியம்	1,000/–
9.	பக்கவாத மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு)	1,000/–
10.	கண்பார்வையற்றோர் மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு)	1,000/–
11.	மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மானியம் (முன்னாள் படைவீரர்கள் குழந்தைகளுக்கு)	1,000/–
12.	பற்றுநோய் நிவாரண நிதியுதவி	1,000/–
	<u>இதர உதவிகள்</u>	
13.	திருமண மானியம்	10,000/–
14.	ஈமச்சடங்கு மானியம்	5,000/–
15.	தொழுநோயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்கள் / கைம்பெண்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகைக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	ரூ.1,000/–க்கு மிகாமல்

கூடுதலாக, செயற்கை உபகரணங்கள், பல்செட், மூக்கு கண்ணாடி, காது கேட்கும் கருவி தேவைப்படும் முன்னாள் படைவீரர்கள் / கைம்பெண்களுக்கு இந்நல நிதியிலிருந்து வழங்கப்படுகின்றன.

தொகுப்பு நிதி:

படைப் பணியில் உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கும், படைப் பணியில் ஊனமுற்றோருக்கும் வழங்கப்படும் பல்வேறு வகையான மானியங்கள் இத்தலைப்பின்கீழுள்ள நிதியிலிருந்து பயன்படுத்தப்படுகிறது. இம்மானிய அளவுகோலானது 2012-2013-ல் கீழ்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:-

வ. எண்	நிதியுதவியின் வகை	தற்போதுள்ள தொகை ரூ.	உயர்த்தப்பட்ட தொகை ரூ.
1.	கருணைத் தொகை – போர் கைம்பெண்கள்/ சார்ந்தோர்கள்	30,000/–	50,000/–
2.	வருடாந்திர பராமரிப்பு மானியம்	2,000/–	12,000/–
3.	திருமண மானியம்	10,000/–	25,000/–
4.	வீடு கட்ட மானியம்	30,000/–	50,000/–

அதுமட்டுமல்லாது, இந்நிதியிலிருந்து பெறப்படும் வருமானம் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்காகவும், மேலும், சுயவேலைவாய்ப்பு திட்டங்களுக்கான வட்டி மானியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொழில்நுட்பம்/வணிக/தொழிற்கல்விகளுக்கான் உதவித் தொகை ஆண்டொன்றிற்கு ரூ.7,000/-த்திலிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் 5,538 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.4,69,97,513/- வழங்கப்பட்டுள்ளது.

போர்ப் பணி ஊக்க மானியம்/வீரதீர செயல்கள், பதக்கம் பெற்றோருக்கான பணமுடிப்பு:

28. வீரதீர செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு வரவு-செலவு

2014 ஆகஸ்ட் 12]

நிதியொதுக்கத்தின்கீழ் அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 1012, பொதுத் (இராணுவம்) துறை, நாள்: 24-10-2011 மூலம் இப்பண முடிப்புகளை அரசு கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளது:-

வ. எண்	விருது பெயர்	நடைமுறையில் உள்ளது (Existing)		பணமுடிப்பு மற்றும் நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு தொகையினைச் சேர்த்து ஒட்டுமொத்தமாக உயர்த்தப்பட்ட தொகை (ரூபாய்)
	வீரதீர செயல் களுக்கான விருதுகள்	பணமுடிப்பு (ரூபாய்)	நிலத்திற்கு பதிலாக பணமுடிப்பு (ரூபாய்)	
1.	பரம்வீர் சக்ரா	22,500	1,50,000	15,00,000
2.	அசோக் சக்ரா	20,000	1,25,000	12,00,000
3.	மகாவீர் சக்ரா	15,000	1,00,000	10,00,000
4.	கீர்த்தி சக்ரா	12,000	75,000	8,00,000
5.	வீர் சக்ரா	7,000	50,000	7,50,000
6.	சௌரிய சக்ரா	5,000	40,000	5,00,000
6A	சேனா/நாவோ/ வாயு சேனா பதக்கம் (வீரவிருதுகள்)	--	--	50,000
7.	மென்சன்-- இன்-- டெஸ்பேட்ச்சஸ்	2,000	--	10,000

போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள்:

வ. எண்	விருது பெயர்	நடைமுறையில் உள்ள பணமுடிப்பு (ரூபாய்)	உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூபாய்)
1.	பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம்	15,000	50,000
2.	சர்வோத்தம் யுத் சேவா பதக்கம் (OPS)	17,000	50,000
3.	உத்தம் யுத் சேவா பதக்கம் (OPS)	10,000	25,000
4.	அதி விஷிஷ்ட் சேவா பதக்கம்	7,000	25,000
5.	யுத் சேவா பதக்கம் (OPS)	4,000	15,000
6.	விஷிஷ்ட் சேவா பதக்கம்	3,000	15,000
7.	சேனா பதக்கம்	3,000	15,000

2013-2014 ஆம் ஆண்டில், வீர பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 137 நபர்களுக்கு ரூ.4,31,000/- வழங்கப்பட்டுள்ளது. மேலும், வீர விருது பெற்ற 20 நபர்களுக்கு ஆண்டு உதவித் தொகையாக ரூ.7,650/- வழங்கப்பட்டுள்ளது.

29. தனது மகன்/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்களின் தியாகத்தை போற்றும் வகையில், தனது ஒரே மகனை/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.750/-ம், மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட மகன் / மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில், 1113 பெற்றோர்களுக்கு ரூ.10,14,500/- போர்ப் பணி ஊக்க மானியமாக தமிழக அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

போரில் உயிர்நீத்த/காயமடைந்தோருக்கான கருணைத் தொகை:

30. போரில் மற்றும் சிவில் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின்போது உயிரிழந்த / ஊனமுற்ற படைவீரர்களின்

2014 ஆகஸ்ட் 12]

மிக உன்னத நியாகத்தை போற்றும் வகையில், அவர்களை சார்ந்தோர்களுக்கு ரூ10.00 இலட்சம் வரை கருணைத் தொகையாக தமிழக அரசினால் வழங்கப்படுகிறது. இது அவர்தம் குடும்பத்தினரின் துயர் தணிப்பதை நோக்கமாகவும் கொண்டது. 2013-2014 ஆம் ஆண்டில், இதனடிப்படையில் 22 நபர்களுக்கு ரூ.12,01,000/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சார்ந்த மூன்று படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ25.00 இலட்சம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 1278, பொதுத் (இராணுவம்) துறை, நாள் 07-11-2013-ன்படி பணிகளின்போது உயிர்நீத்த/ஊனமுற்ற படைவீரர்களுக்கும், எல்லைப் பாதுகாப்பு படைவீரர்களுக்கும் வழங்கப்படும் கருணைத் தொகையினை போலவே மத்திய துணை இராணுவப் படைவீரர்களுக்கும் (CPMF) கருணைத் தொகை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மறு வேலைவாய்ப்பு உருவாக்குதல்:

31. முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம்பிராயத்தில் செயல்திறனுடைய பாதுகாப்புப் பணிக் காலத்தினை பல ஆண்டுகள் மீதமாகக் கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு, தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் கீழ்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:-

1.	பிரிவு "சி" காலிப் பணியிடங்கள்	5%
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள்	10%
3.	வனக் காவலர் காலிப் பணியிடங்கள்	10%
4.	வனப் பாதுகாவலர் காலிப் பணியிடங்கள்	5%
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவு காவலர்கள் காலிப் பணியிடங்கள்	25%
6.	சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" காலிப் பணியிடங்கள்	5%
7.	கால்நடை ஆய்வாளர்	5%

முன்னாள் படைவீரருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யும் கூட்டுப் பரிந்துரை அதிகாரத்தை, முன்னாள் படைவீரர் நலத் துறைக்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. 2013-2014-ல், அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் 591 முன்னாள் படைவீரர்கள் (குரூப் 'சி' பிரிவில் 238 நபர்களும், குரூப் 'டி' பிரிவில் 353 நபர்களும்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கோயில் பாதுகாப்புப் படை:

32. தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்புக் காவல் அலுவலர்களாகப் பணிபுரிய முன்னாள் படைவீரர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ.1,500/-லிருந்து ரூ.5,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்மூலம் 1,545 முன்னாள் படைவீரர்கள் பயன்பெற்றுள்ளனர்.

கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு:

33. படைப் பணியில் உயிர்நீத்தோர் மற்றும் பணியின்போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு நிலுவையிலிருந்த விண்ணப்பங்களை சிறப்பு நேர்வாக பரிசீலித்து, தீர்வு செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களை முகமை அலுவலர்களாக இந்த அரசு நியமனம் செய்தது. 2012 முதல் 2014 வரை பணியின்போது உயிரிழந்தோரின் 106 வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சேர்ப்பிற்கான எண்ணிக்கையினை மேம்படுத்துவதற்கான பயிற்சி:

34. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கான வாய்ப்பை மேம்படுத்தும் பொருட்டு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறான பயிற்சி தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் கோயம்புத்தூரில் வழங்கப்பட்டு வருகிறது. 2012-2013-ல், 79 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.63,890/- அரசு

2014 ஆகஸ்ட் 12]

நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டு இப்பயிற்சி வழங்கப்பட்டது. அதேபோன்று, 2013-2014-ல் 137 விண்ணப்பதாரர்களுக்கு ரூ.79,348/- செலவினத்தில் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு:

35. முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல், மருத்துவம், பல்மருத்துவம், இளங்கலை (செவிலியர்), சட்டப் படிப்பு, பட்டதாரி ஆசிரியர் படிப்பு, தொழில்நுட்பப் பட்டயக் கல்வி, தொழிற்பயிற்சி போன்ற பல்வேறு படிப்புகளுக்காக கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. இது முன்னாள் படைவீரர்கள் மத்தியில் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்:

36. முன்னாள் படைவீரர்களும் தொழில் முனைவோர்களாக ஆவதற்கும், மேலும் சுய வேலைவாய்ப்பு துவங்கவும் ஊக்குவிக்கப்படுகிறது. இதற்காக தேவையான நிதி வங்கிகளிலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டு, மேலும், ரூ.5.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 75% வட்டி மானியமும், அதேபோன்று சுய உதவிக் குழுக்களால் பெறப்படும் ரூ.7.50 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 100% வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. 2013-2014-ல், இத்திட்டத்தின்மூலம் 293 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 8 சுய உதவிக் குழுக்கள் சுயமாக தொழில் தொடங்கி ரூ.20,04,710/-வரை வட்டி மானியமாகப் பெற்றுள்ளனர்.

மின் ஆளுமை:

37. அடையாள அட்டை வழங்குவதற்கு இணையதளம்மூலம் பதிவு செய்யவும், பல்வேறு வகையான உதவிகளைப் பெற விண்ணப்பிப்பதற்கான தகவல்களை அளிக்கவும், மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கும், இயக்குநரகத்திற்கும் இடையேயும் மாபெரும் தொடர்பை ஏற்படுத்திடவும், இத்திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ):

38. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து

[2014 ஆகஸ்ட் 12

செயல்படுத்திடவும், மேலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திடவும் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அடிப்படை செயல்பாடு ஒரு மனித வள முகமையாகும். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் பதிவுசெய்த முன்னாள் படைவீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு துறைகள், நிறுவனங்கள், ஏனைய சேவை கோரும் முகமைகளுக்கு பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலாக் காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் போன்ற பணிகளுக்கு பணியாளர்களை வழங்கி வருகிறது. 31-03-2014-ன்படி, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 9999 முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு, அதன் முக்கிய வாடிக்கைதாரர்களாக இந்திய எண்ணெய்க் கழகம், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கும் கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மற்றும் பல்வேறு துறைகள் இருந்து வருகின்றன. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், சென்னை மாநகராட்சிக்காக, இலாபத்தினைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் தலங்களில் பகுதிப் பணியினை மேற்கொண்டு வருகிறது.

39. மின் திருட்டைக் குறைக்கும் வகையிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) வருவாயைப் பெருக்கிடும் வகையிலும், மேலும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டும், "மின் திருட்டு தடுப்புப் படைகள்" முன்னாள் படைவீரர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதுவரை, 200 முன்னாள் படைவீரர்களைக் கொண்ட 40 குழுக்கள் அமைக்கப்பட்டு, பணியமர்த்தப்பட்டு, அவர்களின் பணிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) பாராட்டை பெற்றுள்ளது.

40. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக பணியாளர்களுக்கு பல்வேறு துறைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சியினைத் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. முன்னாள் படைவீரர்களுக்கு அவ்வாறான பயிற்சியினைத் துவங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம் அவர்கள் ஊதியத்துடன்கூடிய வேலைவாய்ப்பு பெறவும், மேலும்

2014 ஆகஸ்ட் 12]

அவர்கள் மிகவும் பயனுள்ள வகையில் அத்துறையில் பணியாற்றவும் இயலும்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்திறன் அறிக்கை கீழ்வருமாறு:

நிதி ஆண்டு	பணியமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை	வருவாய் (ரூபாய் இலட்சத்தில்)
2009 – 2010	7730	7128
2010 – 2011	8165	7738
2011 – 2012	9200	9144
2012 – 2013	9391	9838
2013 – 2014	9999	10399

முதலமைச்சரின் தனிப் பிரிவு:

41. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் அனுப்பும் மனுக்களின்மீதான குறைகளை விரைந்து களைவதை உறுதி செய்யும் பொருட்டு முதலமைச்சரின் தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இது, ஏழையெளிய மற்றும் அணைத்துத் தரப்பட்ட மக்கள் கண்ணியமான வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டுகிற வகையில் அவர்களுக்கு, தேவையான உதவியை நல்குதல் என்ற மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்திற்கு இயைந்தவாறு, பொதுமக்களின் சேவையில் தரம், திறன், நேர்மை, பயனுடைமை ஆகியவற்றை நிலை நாட்டும் வகையில் நிகரற்ற முறையில் செயலாற்றி வருகிறது. முதலமைச்சரின் தனிப் பிரிவு, பொது மக்களின் குறைகளை தீர்க்கும்விதமாக விரைவான, நியாயமான நிவாரணம் வழங்கி செயல்பட்டு வருகிறது.

42. முதலமைச்சரின் தனிப் பிரிவு, ஒரு முன்னோடி குறை தீர்வு மையமாகத் திகழ்ந்து வருகிறது. குறை தீர்க்கும் அமைப்பை

[2014 ஆகஸ்ட் 12

மேலும் செம்மையுறச் செய்வதற்காக, பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ)	புகார்களுக்கு உரிய காலத்தில் ஒப்புகையளித்தல்;
(ஆ)	புகார்களை மிகுந்த கவனத்துடன் ஆய்வு செய்தல்;
(இ)	மனுதாரர்களிடமிருந்து தகவலைப் பெறுதல்;
(ஈ)	முதுநிலை அதிகாரி நிலையில் புகார்கள்மீது முடிவெடுத்தல்;
(உ)	புகார் அளித்தவருக்கு ஆய்வுக்குப் பின்னர் உரிய பதிலை அளித்தல்; மற்றும்
(ஊ)	தெரிவு செய்யப்பட்ட சில மனுதாரர்களுடன், அவர்களுடைய குறைகளைத் தீர்வு செய்வதற்காக கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

புகார்களுக்கு நிவாரணம் அளிப்பதை விரைவுபடுத்துவதற்காக, வழக்கமான தகவல் தொடர்பு முறையை தவிர்த்து, மாநில அரசின்கீழ் உள்ள தகுதி வாய்ந்த உரிய அதிகாரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள தனிப் பிரிவிற்கு பொறுப்பு வகிக்கிற தனி அதிகாரிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

43. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணத்தின் போது அல்லது தலைமைச் செயலகத்தில் பெறப்படுகின்ற மனுக்களை அதன் தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மனுக்கள் குறியிடு செய்யப்பட்டு, அவற்றுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, அந்தந்தத் தலைமைச் செயலகத் துறைகள்/ துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள் / காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த ஏற்பாட்டுமுறை முழுவதும் கணினிமயமாக்கப்பட்டு, பதில்கள், வலைதளம் (Online) கண்காணிப்பு ஏற்பாட்டு முறையில் பதிவு செய்யப்படுகின்றன. நிலுவைகளின் கால அளவு, நிலுவைக்கான காரணம், தீர்வு தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கும், இந்த ஏற்பாட்டு முறையினைத் தொடர்ச்சியாக கண்காணித்து அதன் பலன்களை மதிப்பிடுவதற்கும், துறைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் புகார்கள் / குறைகள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும், துறைகள் மற்றும்

2014 ஆகஸ்ட் 12]

மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அனைவருக்கும் அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புகார் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை ஆய்வு செய்வது ஒவ்வொரு துறையின்/மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு அதிகாரியின் பொறுப்பாகும். முதலமைச்சரின் தனிப் பிரிவானது, ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை கண்டறிந்து சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக, மாதிரி ஆய்வுகளையும் மேற்கொள்ளுகிறது.

44. முதலமைச்சரின் தனிப் பிரிவுக்கென வலைத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது மணிமகுடத்தில் மேலும் மாணிக்கக்கல் பதிந்தது போலாகும். இந்த வலைத்தளத்திற்கு பொதுமக்களிடமிருந்து பெருத்த வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரையில், சுமார் 80,000 மனுக்கள் வலைதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 90 விழுக்காடு மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. இந்த வலைத்தளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து பெறப்பட்ட தகவல்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு செயல்பாட்டு தரம் உயர்த்தப்படுகிறது.

45. புகார்களுக்கு பதிலளிக்கின்ற கால அளவையும், தீர்வின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த அதிகாரிகளை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக, சிறப்பாக செயல்புரிபவர்களுக்கு விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த விருதுகள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டின் போது, துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

2014–2015–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்–(பகுதி–II)
(தொகுதி- I)

வரிசை எண்.	அலுவலகத்தின் பெயர்	மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்)
1.	தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி	38.44
2.	முன்னாள் படைவீரர்கள் நல இயக்ககம்	11.56
	மொத்தம்	50.00

2014–2015–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்–(பகுதி–II)
(தொகுதி–II)

வரிசை எண்.	அலுவலகத்தின் பெயர்	மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்)
1.	அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை–5.	53.27
2.	தமிழகம் விருந்தினர் இல்லம் – உதகமண்டலம்	98.33
3.	தமிழ்நாடு இல்லம், புதுடெல்லி	47.50
4.	மைய ஆவண பிரிவு நவீனப்படுத்தல் பொதுத் துறை	50.00
	மொத்தம்	249.10

2014 ஆகஸ்ட் 12]

மானியக் கோரிக்கை எண் 38 - பொதுத் துறை (தேர்தல்கள்)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

நமது நாடு உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு ஆகும். ஜனநாயகத்தின் ஆட்சியானது, அனைத்து குடிமக்களும் வாக்களிக்கும் உரிமைமூலம் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அளித்து, அவர்களின் மூலமாக மக்களின் குரல் கேட்க உறுதி செய்கிறது. இந்த வாக்களிக்கும் உரிமையே அரசாங்கமானது மக்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்பில் உள்ளது என்பதற்கு அடிப்படை கொள்கையாக செயல்படுகிறது. தேர்தல்கள் நடத்த வேண்டிய அதிகாரப் பொறுப்பு இந்திய தேர்தல் ஆணையத்திடம் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சுதந்திரமான, நியாயமான மற்றும் வெளிப்படையான தேர்தல்களை நடத்துவதற்கான உகந்த ஒரு சூழலையும், முழு ஒத்துழைப்பினையும் தமிழக அரசு தொடர்ந்து தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது.

அந்த வகையில் 16-வது மக்களவைத் தேர்தல் தமிழகத்தில் கடந்த 24-04-2014 அன்று தேர்தல் ஆணையத்தினால் நடத்தப்பெற்றது. தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்று, கடந்த ஆண்டுகளைவிட அதிக அளவில் வாக்குப்பதிவும் நடைபெற்று, உரிய காலத்தில் முடிவுகள் அறிவிக்கப்பெற்றன. தமிழக அரசு, தேர்தல் ஆணையத்தின் இப்பணிகளுக்கு முழு ஒத்துழைப்பினை நல்கி, பணிகள் திறம்பட நடைபெற உதவிபுரிந்தது.

I தேர்தல் நிருவாக அமைப்பு முறை

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 324-ன்கீழ், மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பொறுப்புகள், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட இந்திய தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 324-ன்கீழ் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால்

[2014 ஆகஸ்ட் 12

இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களான மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசு தலைவர் சட்டம், 1952, முதலியவற்றின்மூலம் மேலும் வலுவாக்கப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு மாநிலத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு மாநில அளவில் துறையின் தலைவராக விளங்கும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறைக்கு உதவுவதற்காக மாவட்ட அளவில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உள்ளனர். சென்னையைத் தவிர அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, சென்னை மாநகராட்சியின் ஆணையர் மாவட்ட தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்வரும் மாநில நிருவாக அரசு பணியாளர்கள் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு உதவுவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளனர்:-

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்குத் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (AROs).

மேற்காணும் அலுவலர்கள் இத்துறையைச் சார்ந்தவர்களாக இல்லாவிடினும், தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும்போது இந்திய தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களாக கருதப்படுவார்கள். கள அளவில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை இத்துறை பெற்றுள்ளது. அரசு பணியாளர்களான இவர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களாகப் பகுதி நேர அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 13A-ன்படி, தலைமைத் தேர்தல் அதிகாரி அனைத்து சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் திருத்தம் செய்தல் குறித்த பணிகளைக் கண்காணிக்க

2014 ஆகஸ்ட் 12]

நியமிக்கப்பட்டவராவார். மேலும், 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு-20ன்படி நாடாளுமன்ற மற்றும் மாநிலத்திற்கான சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோல், 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டப் பிரிவு 13AA-ன்படி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஊரகப் பகுதிகளில் அடங்கும் தொகுதிகளுக்கு, வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள்/துணை ஆணையர்கள் ஆகியோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர்கள், உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியின் மண்டல அதிகாரிகள் அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அதிகாரிகள்/செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

II பொது (தேர்தல்கள்) துறையின் பொறுப்புகள்

பொது (தேர்தல்கள்) துறையானது பின்வரும் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்களை நடத்தும் பொறுப்பினைப் பெற்றுள்ளது:-

- தமிழ்நாடு சட்டப் பேரவையின் 234 சட்டமன்றத் தொகுதிகள்
- தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 39 மக்களவைத் தொகுதிகள்
- தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 18 மாநிலங்களவை உறுப்பினர்கள்
- இந்திய குடியரசுத் தலைவர் பதவி; மற்றும்
- இந்திய துணை குடியரசுத் தலைவர் பதவி

இத்துறையானது உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயற்கட்டளைகளுக்கு உட்பட்டு செயல்படுகிறது.

[2014 ஆகஸ்ட் 12

இதனைக் கருத்தில் கொண்டு, இத்துறை பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:-

i பிழையில்லாத புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் பராமரித்தல்

ii வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்தல் மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் வழங்குதல்

iii வாக்குச்சாவடிகளை அமைத்தல்

iv பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் உரிய பயிற்சி வழங்குதல்

v முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு (SVEEP)

vi பாதுகாப்பு மற்றும் காவல் துறையினரை பணியில் ஈடுபடுத்துதல்

vii தேர்தல் செலவினக் கட்டுப்பாடு

viii தேர்தல் தொடர்புடைய பல்வேறு இதர பணிகள்

III. 2013–2014–ன் முக்கிய நிகழ்வுகள்

1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2014:

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 21-ன்படி மக்களவை அல்லது மாநில சட்டப் பேரவைக்கான ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்பும் மற்றும் காலியிடத்தை நிரப்புவதற்கான ஒவ்வொரு இடைத் தேர்தலுக்கு முன்பும், சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்யப்படும். மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் இத்தகைய வாக்காளர் பட்டியல் திருத்தம் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். சாதாரணமாக, வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12]

1-1-2014-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:

வரைவுப் பட்டியல் வெளியீடு	01–10–2013
கோரிக்கை/ மறுப்புரை அளிக்க கடைசி தேதி	31–10–2013
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	10–01–2014

இத்திருத்தத்தின்போது, வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற சேர்த்தல்கள், நீக்குதல்கள் மற்றும் திருத்தங்கள் பின்வருமாறு:-

	ஆண்	பெண்	இதர்	மொத்தம்
சேர்த்தல்கள்	13,22,223	14,30,219	667	27,53,109
நீக்குதல்கள்	2,03,544	1,99,809	54	4,03,407
திருத்தங்கள்	2,55,816	2,27,382	40	4,83,238

10-01-2014 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி 5.38 கோடி வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றனர். அதன் விவரம் பின்வருமாறு:-

	ஆண்	பெண்	இதர்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	2,68,93,009	2,68,56,677	2,996	5,37,52,682
பணித் தொகுதி வாக்காளர்கள்	51,862	17,996	0	69,858
மொத்தம்	2,69,44,871	2,68,74,673	2,996	5,38,22,540

[2014 ஆகஸ்ட் 12

2. மக்களவைப் பொதுத் தேர்தல், 2014 மற்றும் 28–ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலுக்கு பயன்படுத்துவதற்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்:

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, வாக்காளர் பட்டியல்களின் திருத்தம் தொடர்ந்து நடைபெற்றாலும், தேர்தல் நடைபெறும் காலங்களில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாளிலிருந்து தேர்தல் முடிவடையும் நாள் வரையிலான சிறிய காலகட்டத்தில் மட்டும் அத்திருத்தம் நடைபெறுவதில்லை. அதன்படி, 11-01-2014 முதல், வேட்புமனு தாக்கல் செய்வதற்கு கடைசி நாளான 05-04-2014 வரை நடைபெற்ற தொடர் திருத்தத்தில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற சேர்த்தல்கள், நீக்குதல்கள் மற்றும் திருத்தங்கள் பின்வருமாறு:-

	ஆண்	பெண்	இதரர்	மொத்தம்
சேர்த்தல்கள்	6,27,415	6,66,293	355	12,94,063
நீக்குதல்கள்	1,971	1,894	2	3,867
திருத்தங்கள்	42,913	35,219	9	78,141

மக்களவைப் பொதுத் தேர்தல், 2014-க்காகப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களின்படி மாநிலத்தில் 5.51 கோடி வாக்காளர்கள் இருந்தனர். அதன் விவரம் பின்வருமாறு:-

	ஆண்	பெண்	இதரர்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	2,75,18,373	2,75,21,162	3,341	5,50,42,876
பணித் தொகுதி வாக்காளர்கள்	53,625	18,366	0	71,991
மொத்தம்	2,75,71,998	2,75,39,528	3,341	5,51,14,867

2014 ஆகஸ்ட் 12]

3. சேலம் மாவட்டத்திலுள்ள 83—ஏற்காடு (எஸ்டி) சட்டப் பேரவை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 28—ஆலந்தூர் சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்:—

சேலம் மாவட்டத்திலுள்ள, 83—ஏற்காடு (எஸ்டி) சட்டப் பேரவை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, தமிழக சட்டப் பேரவை உறுப்பினரான திரு. பி. பெருமாள் அவர்களின் மறைவினால் தற்காலிக காலியிடம் ஏற்பட்டது. அதற்கான இடைத்தேர்தல் 04-12-2013 அன்று நடத்தப்பட்டது.

28. ஆலந்தூர் சட்டப் பேரவை தொகுதியிலிருந்து தமிழக சட்டப் பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் பதவி விலகல் காரணமாக தற்காலிக காலியிடம் 10-12-2013 அன்று ஏற்பட்டது. அத்தொகுதிக்கான இடைத்தேர்தல் பாராளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து 24-04-2014 அன்று நடத்தப்பட்டது.

இந்த் இடைத்தேர்தலில் தேர்தல் நடத்தைக்கான விதிமுறைகள் மற்றும் தேர்தல் செலவின கட்டுப்பாடு வழிமுறைகள் கண்டிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டன. மத்திய காவல் படையினர் தேவையான அளவு ஈடுபடுத்தப்பட்டதுடன், அனைத்து வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மற்றும் வாக்காளர் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன. 83—ஏற்காடு (எஸ்டி) சட்டமன்றத் தொகுதியிலுள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மற்றும் 28—ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஒருசில வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்ற வாக்குப்பதிவு நிகழ்வுகளை இணைய வழி (On line)/நிகழிட (Off Line) பதிவு மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இடைத்தேர்தல்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவ்வித அசம்பாவிதமின்றியும் நடைபெற்றது. 83—ஏற்காடு (எஸ்டி) சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு 89.15 சதவீதமும் மற்றும் 28—ஆலந்தூர் சட்டப் பேரவை தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு 64.47 சதவீதமும் பதிவாகியுள்ளன.

4. தேசிய வாக்காளர் தினம்:

இந்திய தேர்தல் ஆணையம், தன்னுடைய நிறுவன தினமான ஜனவரி, 25 ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, ஜனவரி 25, 2011 முதல், ஒவ்வோர் ஆண்டும் கொண்டாட முடிவு

[2014 ஆகஸ்ட் 12

செய்துள்ளது. மக்களவை பொதுத் தேர்தல், 2014-ஐ முன்னிட்டு 2014 ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் தினத்தின் முக்கிய குறிக்கோள் "கண்ணியத்துடன் வாக்களித்தல்", என்பதாகும். மேலும், இளைஞர்கள் மற்றும் சமூகத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோரது பெயர்கள் இடம் பெறுதலை அதிகப்படுத்துதலும் மற்றும் வாக்களித்தலின் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு அறிவுறுத்துதலும் குறிக்கோள்களாக கொள்ளப்பட்டன.

தேசிய வாக்காளர் தினமானது, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் கொண்டாடப்பட்டது. மாநில அளவில், ஆளுநர் மாளிகையில், மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் தேசிய வாக்காளர் தின விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அந்நிகழ்வில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி மேதகு ஆளுநர் தலைமையில் அனைவராலும் எடுக்கப்பட்டது. புதிதாக பதிவு செய்த வாக்காளர்களில் 25 வாக்காளர்களுக்குப் புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின்போது, வலுவான ஜனநாயகத்திற்குப் பெருமளவில் பங்கேற்றலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் பள்ளிக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மேலும், குடியரசுத் தினவிழா அணிவகுப்பின்போது இத்துறையின் சார்பில் ஒப்பனைக்காட்சி ஊர்தியும் இடம் பெற்றது. இதில் மக்களவைத் தேர்தல் 2014-ன் போது கண்ணியத்துடன் வாக்களியுங்கள் என்பதின் முக்கியத்துவம் எடுத்துசொல்லும் வகையில் அமைக்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி அனைவராலும் எடுக்கப்பட்டு, வாக்காளர் பட்டியலில் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதேபோன்று, ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டு, புதிய வாக்காளர்களுக்கான புகைப்பட வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட நிகழ்வுகள், வலுவான ஜனநாயகத்திற்குத் தேவையான தேர்தல் நடைமுறைகளின்பால் புதிதாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்களை மிகவும் ஈர்த்தன. தேசிய வாக்காளர் தின விழாக்களுக்கு, குடியுரிமை சங்க அமைப்புகள்,

2014 ஆகஸ்ட் 12]

அரசு சாரா அமைப்புகள், ஊடகங்கள், மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புகளும் தங்களின் முழு ஆதரவை நல்கின. இவ்வாண்டு நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற 28,611 நிகழ்ச்சிகளில், 15,48,920 வாக்காளர்கள் கலந்துகொண்டு புதிய புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகளைப் பெற்றனர். இவற்றில் 5,49,957 பேர் 18-19 வயதினர் ஆவர். இவ்விழாக்களில் தங்கள் அடையாள அட்டைகளை பெற முடியாதவர்களுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்மூலம் அவைகள் வழங்கப்பட்டன.

5. நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தல், 2014:

2014 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் தமிழ்நாட்டில், 6-வது கட்டமாக ஏப்ரல் 24, 2014 அன்று நடத்தப்பட்டு, மே 16, 2014-ல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

தேர்தல்கள் தொடர்பான சில முக்கிய புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:-

i) மொத்த பாராளுமன்றத் தொகுதிகள் : 39
ii) மொத்த வாக்குப்பதிவு மையங்கள் : 60,817
iii) போட்டியிட்ட மொத்த வேட்பாளர்கள் : 845
iv) பதிவான மொத்த வாக்குகள் : 4,06,44,282
v) வாக்குப்பதிவு சதவீதம் : 73.74%

பாராளுமன்ற தேர்தல்களின்போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய முயற்சிகள்:

i) 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் பின்னர் தயார் செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தியது:

2014, பாராளுமன்ற தேர்தலின்போது, தமிழகம் முழுவதும் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் பின்னர் தயாரிக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. மேலும், இந்திய மின்னணுவியல் கழக நிறுவனத்தால் 2006-க்கு பின்னர் தயாரிக்கப்பட்ட புதிய மேம்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தென்சென்னை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய பாராளுமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஒரு தொகுதியில் (மத்திய சென்னை) வாக்காளர் சரிபார்க்கத்தக்க காகிதச்சீட்டு

தனிக்கை ஏற்பாட்டு முறை (Voter Verifiable Paper Audit Trail System) நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்களவை பொதுத் தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

வ.எண்	மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் வகை	வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை	பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை	
			வாக்குப்பதிவு கருவி	கட்டுப்பாட்டு கருவி
1.	2006–க்கு முந்தைய பாரத் மின்னணுவியல் நிறுவனத் தயாரிப்பு	39,386	66,999	39,567
2.	2006–க்கு பிந்தைய பாரத் மின்னணுவியல் நிறுவனத் தயாரிப்பு	16,656	31,297	16,723
3	2006–க்கு பிந்தைய இந்திய மின்னணுவியல் கழக நிறுவன மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு	4,775	11,228	4,807
மொத்தம்		60,817	1,09,524	61,097

தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட விவிபிஏடி (VVPAT)-க்களின் எண்ணிக்கை

விவிபிஏடி பயன்படுத்தப்பட்ட நாடாளுமன்றத் தொகுதியின் பெயர் மற்றும் நிறுவனத்தின் பெயர்	நாடாளுமன்றத் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட விவிபிஏடி மொத்த எண்ணிக்கை
4. மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி பாரத் மின்னணுவியல் நிறுவன தயாரிப்பு	1,153

2014 ஆகஸ்ட் 12]

ii) புதிய செலவின கட்டுப்பாட்டு வழிகாட்டு நெறிமுறைகள்:

தேர்தல் பிரச்சாரங்களில் பணம் செலவழிக்கப்படுவது என்பது தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு அத்தியாவசியமானதாக இருப்பதால் பல கட்சிகள் களமிறங்கும் தேர்தலின்போது பணம் செலவழிக்கப்படாமல் ஜனநாயகம் இயங்க முடியாது என்பது உண்மை. ஆனால், பணபலம் முறையின்றி உபயோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகள், ஊடகம் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து நியாயமான மற்றும் நேர்மையான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் செலவுக் கண்காணிப்பு முறையை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் செலவுக் கண்காணிப்பின்மீது கவனம் இரு வழிகளில் செலுத்தப்படுகிறது. முதல் வழி, அனுமதிக்கப்பட்ட, உண்மையாக, சமர்ப்பிக்கப்படும் செலவினங்கள் பற்றிய அறிக்கை. இரண்டாவது, சட்டத்தினால் அனுமதிக்கப்படாத செலவின வகையாகும். தேர்தல் செலவுக் கண்காணிப்பு அமைப்பு உண்மையான செலவினங்கள் அனைத்தையும் வேட்பாளர்களின் கணக்கில் சேர்ப்பதுடன் தவறாக செயல்படுவர்களின்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதுடன் தேவைப்படின் காவல் துறை/தகுதி வாய்ந்த மாஜிஸ்டிரேட்கள் முன்னிலையில் புகார் செய்யப்படுவதையும் உறுதி செய்கிறது.

மேற்கண்டவற்றை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. மக்களவைத் தேர்தல் 2014-க்காக தமிழ்நாட்டில் 705 பறக்கும் படைகள், 705 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள், 298 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள், 238 வீடியோ பார்வையிடும் குழுக்கள் மற்றும் 39 கணக்குக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. மேலும், 78 செலவினப் பார்வையாளர்களும் 234 உதவி செலவினப் பார்வையாளர்களும் தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென நியமிக்கப்பட்டனர். மேற்கண்ட குழுக்கள் மக்களவைத் தேர்தல் 2014-ன்போது பணப் பறிமுதலுக்கான நிலையான செயல்பாட்டு முறைகளை பின்பற்றி ரூ.76,89,43,387/- மதிப்புள்ள பணம் மற்றும் பிற பொருட்களைக் கைப்பற்றினர்.

iii) தேர்தல் நடத்தை விதிமுறைகளைத் தீவிரமாக அமல்படுத்துதல்:

இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் தேர்தல்களின்போது அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சம வாய்ப்பு வழங்கவும் ஒரு நல்ல சூழலை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இம்மாதிரி நடத்தை விதிமுறைகளில், பெரும்பாலானவை, அரசியல் கட்சிகள் தாங்களே முன்வந்து ஏற்றுக்கொள்வதனால் அமல்படுத்தப்படுகின்றனவேயன்றி சட்டத்தினாலோ கட்டாயத்தினாலோ அல்ல. நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல்களை நடத்துவதற்கு மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை, அனைத்து அரசியல் கட்சிகளையும் கலந்து ஆலோசித்து, மாநிலம் முழுவதும் சரியான முறையில் அமல்படுத்துவது அவசியமாகிறது.

2014 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் 5-3-2014 அன்று அறிவிக்கப்பட்ட உடனே தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. தமிழ்நாட்டில் தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறை காலத்தில், மொத்தம் 3,371 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் 714 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டும், 2,133 வழக்குகள் நீதிமன்ற விசாரணையிலும், 121 வழக்குகள் விசாரணையிலும், 342 வழக்குகள் நடவடிக்கை தேவையில்லை என கைவிடப்பட்டும் மற்றும் 61 வழக்குகள் விடுதலை செய்யப்பட்டவையாகும்.

iv) முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு நிகழ்வுகள்:

"முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு" முயற்சிகள் மூலமாக 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்க இந்திய தேர்தல் ஆணையம் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டது. இந்நடவடிக்கைகளினால் மேற்காணும் தேர்தலின்போது தமிழ்நாட்டை பொறுத்தமட்டில் 73.74 சதவீதம் வாக்குப் பதிவினை எட்ட முடிந்தது. இது 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது பெற்ற 73.05%-ஐ விட சற்று அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

2014 ஆகஸ்ட் 12]

v) மத்திய காவல் படையினர், மாநில காவல், முன்னாள் இராணுவத்தினர், ஊர்க்காவல் மற்றும் இளைஞர் படையினரைப் பாதுகாப்பிற்காக பயன்படுத்தியது:

பாதுகாப்புத் திட்டம் மற்றும் படைப்பரவலாக்கம் ஆகியவை நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை உறுதிப்படுத்தின. தேர்தலை அமைதியாக நடத்துவதற்காக, பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிந்து அவற்றின்மீது அதிகக் கவனம் செலுத்துவதற்காக 140 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படை காவலர்கள் பயன்படுத்தப்பட்டனர். இதில் முன்னரே வரப்பெற்ற 32 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படை, வேட்பாளர்களின் செலவுகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்பட்டன. மீதமுள்ள 108 கம்பெனிகள் தேர்தலுக்கு முன்னர் ஏற்கெனவே பெறப்பட்ட 32 கம்பெனிகளுடன் சேர்த்து தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டன. மாவட்ட படைப் பரவலாக்கத் திட்டத்தின் அடிப்படையில், மண்டல அளவில் போதுமான நிலைப் படைகளைத் தேவையான சுற்றுக்காவல் படைகளின்மூலம் வலுவூட்டி அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. இதுதவிர, மாநில பாதுகாப்புப் படையை பொருத்தமட்டில், 1,04,713 மாநில காவலர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

2014 மக்களவைத் தேர்தலின்போது காவலர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பொருட்டு, 13,255 ஊர்க்காவலர்கள், 863 தீயணைப்பு படையினர், 112 வனத் துறை காவலர்கள், 9,847 முன்னாள் படைவீரர்கள், 1,054 ஓய்வுபெற்ற காவலர்கள், 8,858 இளைஞர் படையினர் மற்றும் இதர சீருடைப் பணியாளர்களை "சிறப்பு காவல் அலுவலர்களாக" தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 22-04-2014 முதல் 25-04-2014 வரை 4 நாட்களுக்கு நியமிக்கப்பட்டனர். கூடுதலாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 6,163 நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்கள் (NSS Volunteers) தேர்தல் நாளன்று வாக்குச் சாவடியில் வரிசை ஒழுங்கு படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்பட்டனர்.

vi) தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் இணைய கண்காணிப்பு:

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில் மொத்தமுள்ள 60,817 வாக்குச்சாவடிகளில், மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் கண்டறியப்பட்டு 17,684 பாதிப்புக்கு எளிதில்

[2014 ஆகஸ்ட் 12

இலக்காகக்கூடிய வாக்குச் சாவடிகளில் (பதற்றமானவை உள்பட) இணைய கண்காணிப்பு (Web Streaming) வசதி மூலம் ஒளிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

vii) வாக்காளர் சீட்டுகள் விநியோகம்:

நடந்து முடிந்த மக்களவை பொதுத் தேர்தல் 2014-ல், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற வாக்காளர்கள் அனைவருக்கும், வாக்காளர் பதிவு அலுவலரால் சான்றளிக்கப்பட்ட, புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் சீட்டு அத்தந்த வாக்குச் சாவடி நிலை அலுவலர் மூலமாக வழங்கப்பட்டது. இந்த வாக்காளர் சீட்டானது நடைபெற்ற மக்களவைத் தேர்தல், 2014-ல் வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைக்கு மாற்று அடையாள ஆவணமாகப் பயன்படுத்தி, வாக்களிப்பதற்காக வழங்கப்பட்டது.

viii) தேர்தல் நடத்தும் அதிகாரிகள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணுகை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பயிற்சி:

2014 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தலுக்கான கால அட்டவணை வெளியிடப்படும் நாளுக்கு முன்னதாகவே, 28-2-2014 அன்று மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு முழுமையான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்), தேர்முக உதவியாளர் (தேர்தல்) மற்றும் சிறப்பு வட்டாட்சியர் (தேர்தல்) அவர்களுக்கான பயிற்சியும் 10-3-2014 அன்று நடைபெற்றது.

மேலும் இதை தவிர, வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்-1 ஆகியோருக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை பயன்படுத்துவது குறித்த முன்பயிற்சி, சட்டமன்றத் தொகுதி தலைமைப் பயிற்சியாளரால் பயிற்சியளிக்கப்பட்ட மண்டல அலுவலர்களால் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பயிற்சியும், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. 4. மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் முதல் முறையாக வாக்காளரால் பரிசோதிக்கத்தக்க சீட்டுடன் கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதால், அதற்கான சிறப்பு பயிற்சி

2014 ஆகஸ்ட் 12]

அத்தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டது. தேர்தல் முடிந்த பின்னர், வாக்கு எண்ணுகைக் குறித்த பயிற்சி மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு 5-5-2014 முதல் 7-5-2014 வரை சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான வாக்கு எண்ணுகை அலுவலர்களுக்கு, வாக்கு எண்ணுகை குறித்த பயிற்சி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் வழங்கப்பட்டது.

ix) பொதுமக்களிடமிருந்து புகார்களைப்பெற அழைப்பு மையம் அமைத்தல்:

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், வாக்காளர் பட்டியல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை, மாதிரி நடத்தை விதிகள் மற்றும் செலவு கண்காணிப்பு பற்றிய பொதுமக்களின் புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு 2014 மக்களவைத் தேர்தலுக்காக தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் 10 இருக்கைகள் கொண்ட 1950 என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி அழைப்பு மையம் 10 ஹண்ட்டிங் லைன் வசதிகளுடன் 01-03-2014 முதல் 16-05-2014 வரையிலான மூன்றரை மாத காலத்திற்கு ஏற்படுத்தப்பட்டது.

x) ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்கள் கண்காணிப்பு மற்றும் சான்றளிப்பு செய்வதற்காகவும் பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதைக் கண்காணிப்பதற்காகவும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்:

தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்களை கண்காணித்தல் மற்றும் சான்றளிப்பு செய்வதற்காக ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களுக்கு அரசியல் கட்சிகளின் விளம்பரங்களை வானொலி, தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சி மற்றும் இணையதளங்களில் ஒளிபரப்பப்படுவதற்கு முன்னர், சான்றளிப்பு

செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இக்குழுக்களின் சான்றளிப்பின்றி செய்யப்படும் விளம்பரங்கள் தேர்தல் நடத்தை விதி முறைகளை மீறிய செயலாகும். இக்குழுக்கள், பணம் கொடுத்து செய்தி வெளியிடும் நிகழ்வுகளில் பெறப்படும் புகார்களின் மீது தக்க நடவடிக்கை மேற்கொண்டன. புகார் மனு மீது மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் மேற்கொள்ளும் முடிவின் மீது மாநில அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் மேல்முறையீடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டது.

IV. 2014–2015 இல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நிகழ்வுகள்

1. 01-01-2015–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2015:

01-01-2015-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்து இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தவுடன், 2014 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும். இந்த சுருக்கமுறைத் திருத்தத்துடன் விரிவான "முறையாக வாக்காளர்களுக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் நடைமுறையில் பங்கேற்பு" (Systematice Voters Education and Electoral Participation) (SVEEP) பிரச்சாரம் செய்யப்படுவதுடன், இந்திய தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்திய சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனத்தால் (India International Institute of Democracy and Election Management) தலைமை பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள்மூலம் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25-01-2015-ல் கொண்டாடப்படும். இத்தருணத்தில், புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

2. வாக்காளர்களுக்கு பிவிசியிலான வண்ண புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்:

தமிழ்நாட்டில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணி 1996 ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டங்களாக நடைபெற்று,

2014 ஆகஸ்ட் 12]

நான்காம் கட்ட பணிகள் பிப்ரவரி - ஏப்ரல் 2006-ல் (இணைய வழியில்) நடைபெற்றன. மாநிலம் முழுவதும் 100 விழுக்காடு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வாக்காளர்களுக்கான புகைப்பட அடையாள அட்டைகள் வழங்க இந்தியத் தேர்தல் ஆணையம் வலியுறுத்தி வந்துள்ளது. மேற்படி இலக்கை அடைவதற்கான அனைத்து முயற்சிகளும் ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக தற்பொழுது இம்மாநிலத்தில் 100 சதவீத புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, புதிதாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல் மற்றும் ஏற்கெனவே வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளுக்கான மாற்று அடையாள அட்டைகள் வழங்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது வழங்கப்படும் வாக்காளர் அடையாள அட்டையினை மேம்படுத்தி, பி.வி.சி. (பாலிவினைல் குளோரைடு) அடையாள அட்டை வழங்க இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தேசித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களை, 5 பகுதிகளாகப் பிரித்து முறையே சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய ஐந்து பகுதிகளின் ஆபரேட்டர்களைத் தேர்வு செய்யும் முகமையாக, சென்னை-35-ல் உள்ள எல்காட் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களால், 5 பகுதிகளின் பி.வி.சி. அடையாள அட்டை புதிய மற்றும் மாற்று வாக்காளர்களுக்கு அச்சிட்டு வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட முடிவின்படி, இனிமேல், புதிய வாக்காளர்களுக்கு வண்ண பி.வி.சி அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

V. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00 தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38.02 இல் இடம் பெற்றுள்ளது. 2014-2015 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 01-01-2015-ஐ

தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல், மக்களவை பொதுத் தேர்தல் 2014 மற்றும் தமிழக சட்டப் பேரவைக்கான இடைத் தேர்தல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக ரூ.255,53,88,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

102. தேர்தல் அதிகாரிகள்

எஸ். சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் முதலியோரின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லறை செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.13,10,62,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்

எஸ். சட்டப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிக பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும்

2014 ஆகஸ்ட் 12]

இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டப் பேரவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஒரு உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஆகியவை இத்துணை கணக்கு தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுதளத்தை பராமரித்தல், புவியியல் குறியீட்டு முறையிலான வாக்குச்சாவடிகள் சீரமைப்பு, தேசிய வாக்காளர் தின கொண்டாட்டங்கள், தேர்தல்களின்போது வாக்குச்சீட்டுகள் விநியோகம் செய்தல், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் அளிக்கும் விண்ணப்பதாரர்களுக்குத் தகவல் கடிதங்கள் அனுப்புவதற்கான அஞ்சல் கட்டணம் ஆகிய செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.78,52,02,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எ. மக்களவைக்கும், சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல்களுக்கு பயன்படுத்துவதற்காக புதிய மற்றும் பழைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும் விருதாச்சலம், விழுப்புரம், மதுராந்தகம், காஞ்சிபுரம் முதலிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கழக கிடங்குகளிலும் வாடகை அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனக் கிடங்குகள் மற்றும் தனியார் கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் குறித்த செலவினங்கள் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2,31,29,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

[2014 ஆகஸ்ட் 12

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எபி. மக்களவைக்குத் தேர்தல்

மக்களவைக்கு மட்டும் தனியாக பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 16-வது நாடாளுமன்ற பொதுத் தேர்தல் சமீபத்தில் 24-04-2014 அன்று நடைபெற்றது. தமிழகத்தில் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு/தற்காலிக பணியாளர்களுக்கான ஊதியம், படிகள், பயணப் படிகள் மற்றும் கடுமையான தேர்தல் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசி கட்டணங்கள், முக்கிய நிகழ்வுகளை காணொலிப் பதிவு செய்தல், தேர்தல் பார்வையாளருக்கான செலவினம், வாக்குச்சாவடிகளில் நிகழிட காணொலிப் பதிவு மற்றும் குறுந்தகவல் அடிப்படையிலான வாக்குப்பதிவு கண்காணிப்பு முறைகள், தேர்தல் மாதிரி நடத்தை விதிகளை தீவிரமாக அமல்படுத்துதல், பறக்கும் படை, வீடியோ கண்காணிப்புக் குழு, நிலை கண்காணிப்புக் குழு ஆகிய செலவின கண்காணிப்புக் குழுக்களுக்கான செலவினம், முக்கிய இதர சில்லறை செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டன. பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தத் தேர்தல் நாளன்று மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் வாக்களிப்பது குறித்த விளம்பரம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் நடுப்பு அரண் ஏற்படுத்துவது மற்றும் விளக்குகள் அமைத்தலுக்கான செலவினங்கள், எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரால் வழங்கப்பட்ட தேர்தல் பொருட்கள் மற்றும் எழுதுபொருட்கள், முறையாக வாக்காளருக்கு அறிவூட்டல் மற்றும் தேர்தல் பங்கேற்பு நடவடிக்கைகள் (SVEEP) ஆகியவற்றிற்கான பிரச்சாரச் செலவினம், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்கள், பாரத மின்னணு நிறுவனத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர், ஓய்வு பெற்ற காவலர்கள், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் செலவினம், அச்சுக் கட்டணங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் அனைத்தும் இத்தலைப்பின்கீழ்

2014 ஆகஸ்ட் 12]

மேற்கொள்ளப்பட்டன. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.152,78,11,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களையும் மத்திய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மத்திய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப் பெறப்படும்.

108. மாநில சட்டப் பேரவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஸ். மாநிலச் சட்டப் பேரவை

மாநில சட்டப் பேரவைக்கு நடைபெறும் பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத் தேர்தல்கள் தொடர்பான செலவினங்கள் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

28. ஆலந்தூர் சட்டப் பேரவை தொகுதிக்கான இடைத் தேர்தல் 24-04-2014 அன்று நடத்தப்பட்டது. இடைத் தேர்தலுக்கான அனைத்து செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டன. தற்போது, தமிழக சட்டப் பேரவையில் காலியிடம் ஏதுமில்லை. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.7,45,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின்னர் 28. ஆலந்தூர் சட்டப் பேரவை இடைத் தேர்தலுக்கான செலவினத் தொகையாக ரூ.40,00,000/-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

109. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஸ். வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு, வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு முதல் வாக்காளர்களுக்கு

வண்ண பிவிசி அடையாள அட்டைகளை கட்டம் கட்டமாக வழங்கும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.8,73,89,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் நிருவாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மிகப் பொறுப்பான குறிக்கோளை அடைவதற்கு தமிழக அரசு தேவையான முழு ஒத்துழைப்பினையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-III

(497 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 16 - நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

முகவுரை:

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏற்றமிகு தலைமையிலான இவ்வரசு, வருவாய் அளவை மதிப்பீடு செய்து, வகுலித்து, அவற்றைத் தமிழக மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திட ஒதுக்கீடு செய்து, எண்ணற்ற பல நல்வாழ்வுத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் உருவாக்கி அவற்றைச் செயல்படுத்திவருகிறது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு, 2011 ஆம் ஆண்டு மே திங்களில் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக, ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளது. 2014-2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் புதிய திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், இந்த அரசின் பல்வேறு சாதனைகளும் முனைப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டின் பொருளாதாரம், அனைத்து முக்கியத் துறைகளிலும் அதன் இலக்கினை எய்துவதற்காக, ரூபாய் பதினைந்து இலட்சம் கோடி மொத்த முதலீட்டு மதிப்பீட்டில், பல்வேறு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தெரிவு செய்து, அவற்றை நிறைவேற்றுவதற்காக துறைசார்ந்த குறிப்பிட்ட உத்தி அணுகுமுறை தொடர்பாக, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன், இரண்டாம் தொகுதியை, 17-02-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். 2014-2015 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.2000 கோடி,

[2014 ஆகஸ்ட் 12

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியானது, அரசு-தனியார் பங்கேற்புத் திட்டங்களுக்குத் தேவைப்படும் திட்ட சாத்தியக்கூறு உதவித் தொகை (Viability Gap Funding) உள்பட இத்திட்டங்களை செயல்படுத்த தேவைப்படும் நிதியை ஈடுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும்.

4. தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகிக்கிற பொறுப்பு, நிதித் துறையைச் சார்ந்ததாகும். ஒவ்வோர் ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலக் கருவூலத்தை நிருவகித்து வரும் நிதித் துறை, வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பு வகிப்பதோடு, கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகிக்கிறது. நிதித் துறை, பல்வேறு துறைகளின் செயற்குறிப்புகளை, அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, தேவை, செலவுச் சிக்கனம், வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறை முதலியவற்றிற்கேற்ப கூர்ந்தாய்வு செய்து மதிப்பிடுகிறது.

5. நிதித் துறையின் நிருவாகக் கூட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை - நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

6. தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப்

2014 ஆகஸ்ட் 12]

பயன்களும்'' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

கருவூலக் கணக்குத் துறை

7. கருவூலக் கணக்குத் துறை 01-04-1962 ஆம் நாளன்று உருவாக்கப்பட்டது. இத்துறை கருவூலக் கணக்கு இயக்குநர் அவர்களைத் துறைத் தலைவராகக் கொண்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 7 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 2 சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 முத்திரைத் தாள் வழங்கும் உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 229 சார் கருவூலங்கள் ஆகிய அலுவலகங்கள் கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மின்–ஆளுமை முயற்சிகள்

தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிப்பு முறை (ATBPS)

8. தற்போதைய கருவூலச் செயல்பாடுகளான மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்களின் அவ்வப்போதைய நிலையைக் கண்டறிதல் மற்றும் பட்டியல்கள் பரிசீலிக்கப்படுவதைக் கண்காணித்தல் போன்றவற்றில் உள்ள இடர்ப்பாடுகளைக் களையும்பொருட்டு தன்னியக்கக் கருவூல பட்டியல் ஏற்பளிப்புத் திட்டம், அனைத்து சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்ட கருவூலங்கள், சார் கருவூலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்மூலம் சிறந்த கண்காணிப்புகளை மேற்கொள்ள வசதியளிப்பதோடு, பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், வங்கிகள், மாநில கணக்காயர் ஆகியவர்களுக்கு தங்கள் பணியைச் சிறப்பாக செய்ய வழிவகை செய்யும். இதனை நடைமுறைப்படுத்தும்பொருட்டு, பணியாளர்களின் பணியிடச் சூழலை மேம்படுத்துதல், கணினி மற்றும் ஏனைய சாதனங்கள் வழங்குதல், உள் மற்றும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்து கருவூலங்களிலும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

9. கருவூலத்தின் வாயிலாக நடைபெறும் அரசின் வரவு மற்றும் செலவுத் தொடர்பான பணப் பரிமாற்றங்கள் மத்திய சேவைக்

[2014 ஆகஸ்ட் 12

கணினியில் (Central Server) பதிவு செய்யப்படுவதோடு பல்வேறு மேலாண்மை தகவல் திட்ட அறிக்கைகளான, கருவூலத்தில் பெறப்படும் பட்டியல்களின் எண்ணிக்கை, மின்னணுத் தீர்வை முறை மற்றும் மின்னணுத் தீர்வையற்ற முறைகள் மூலமாக வழங்கப்படும் பட்டியல்களின் வகைகள், அதாவது சம்பளம், ஓய்வூதியம் போன்ற பட்டியல்கள் பெறப்படும் விவரங்கள், நிலுவையிலுள்ள பட்டியல்களின் எண்ணிக்கை, வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் வழங்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட பட்டியல்கள் ஆகியவற்றையும் இதன் மூலமாகப் பெற முடியும்.

வலைத்தள பட்டியல் மென்பொருள் (Web Payroll)

10. வலைத்தள பட்டியல் மென்பொருள் 2013-14 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது கருவூலத் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் (சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள்) தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருமித்த தரவுத்தளம் (Centralised Employees' Database) ஏற்படுத்துவதன் மூலமாக, மேலாண்மைத் தகவல் முறையில் பணியாளர்களின் விவர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவர அறிக்கைகள் போன்றவற்றை இவ்வலைத்தள பட்டியல் மென்பொருள் வாயிலாக தயாரிக்க இயலும் என்பதால் இது மனித வள மேலாண்மைத் தொடர்பான திட்டமிடலுக்கு உகந்த கருவியாக அமையும். இத்திட்டத்தை, படிப்படியாக பிற துறைகளிலும் செயல்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின் ஓய்வூதியம் (e-Pension)

11. இத்திட்டம், தற்போது சென்னையில் உள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், உட்பட அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்களும் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்கள் ஆகியவை மின்னணுத் தீர்வை/மண்டல மின்னணுத் தீர்வை மூலம் (ECS/ RECS) அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகின்றன. இதன்மூலம் தங்களுடைய வங்கிக்

2014 ஆகஸ்ட் 12]

கணக்குகளில் கணினி வாயிலாக வரவு வைக்கப்படும் ஓய்வூதியப் பயன்கள் குறித்து அனைத்து ஓய்வூதியதாரர்களும் எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering of Pensioners)

12. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்திற் கொண்டு, ஓய்வூதியதாரர்களின் வருட நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக, ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகைப் பதிவு செய்யும் முறை, தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, 987 மின்னணு விரல் ரேகை பதிவுக் கருவிகள் மற்றும் 804 வலைத்தள புகைப்படக் கருவிகள் வாங்கப்பட்டு, சென்னை, ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திலும் அனைத்து மாவட்டக் கருவூலங்களிலும் பொருத்தப்பட்டு ஓய்வூதியதாரர்களின் விரல் ரேகையை 2014-2015-ஆம் ஆண்டுக்கான நேர்காணலின்போது பதிவு செய்ய ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஓய்வூதியச் சான்றிதழ்களை எண்மியமயமாக்கல் (Digitization)

13. தமிழ்நாடு மின்னணுக் கழகம் (ELCOT) மூலம் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்கள் ஆகியவற்றில் ஓய்வூதிய ஆவணங்களைக் எண்மியமயமாக்கும் முறை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதற்கென அரசு ரூ.126 கோடி நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணி முடிவுற்றவுடன், மின்னணு பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய ஆவணங்கள், சம்பந்தப்பட்ட ஓய்வூதியதாரர்களின் விவரங்கள் உள்ள மின்னணு ஓய்வூதிய மென்பொருளுடன் இணைக்கப்படும். இது, சான்றிதழ்கள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்க வகைசெய்வதுடன், ஓய்வூதிய ஆவணங்களை ஒரே நேரத்தில் பலரும் பார்வையிடவும் பயன்படுத்தவும் உதவுகிறது.

அரசின் பணப்பரிமாற்ற நடவடிக்கையில் மின்னணு முறை

14. தமிழ்நாடு அரசு, மின்னணு முறையில் வரவுகளைப் பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதல் முறையை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, 100 சதவீத வரவின மற்றும் செலவின பணப்பரிமாற்ற நடவடிக்கைகளை மின்னணு முறையில் மேற்கொள்வதற்கான முக்கியமான நடவடிக்கைகளை

மேற்கொண்டுள்ளது. இம்மின்னணு முறையில் வரவுகளைப் பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதல் வணிக வரித் துறையிலும், போக்குவரத்துத் துறையிலும் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது, அரசுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து வரிகளையும், இணையதள வாயிலாக தொகை செலுத்தும் முறையில், மின்னணுப் பதிவு மாற்றல்மூலம் செலுத்த வகை செய்கிறது. பதிவுத் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மற்ற இரண்டு வருவாய் வசூல் துறைகளைப் பொறுத்தமட்டில், மின்னணு முறையில் வரவுகளைப் பெறுகிற வசதிகளுக்காக தேசிய தகவல் மையம் உருவாக்கிய மென்பொருள் பயன்பாட்டுமுறை, சோதனை முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அரசின் அனைத்து பிற துறைகளிலும் இணையதள வாயிலாகவோ (online) அல்லது கணினி வாயிலாகவோ (offline), 100 சதவீத மின்னணு முறையில் வரவுகளைப் பெறுதல் மற்றும் தொகையினை வழங்குதலுக்கு வகை செய்வதற்கு அனைத்து துறைகளுக்கும் உதவும்வேபொருட்டு, பொதுவான கருவூல வலைத்தளம் (Common Treasury Portal) ஒன்றை தொடங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், மின்-செலுத்துச்சீட்டு வழங்குவதன்மூலம் நேரடியாகத் தொகை செலுத்துவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட வங்கி கிளைகள்மூலம் தொகை செலுத்துவதற்கும், இவை உதவும். இவை மக்கள் பயனடையும் வகையில் மின்-ரசீதுகளையும், மின்-ஒப்புகைகளையும் வழங்க வழிவகுக்கும். இது தொடர்பாக, புதிய நடைமுறையை செயல்படுத்துவதற்கு மாநிலத்தில் முதற்கட்டமாக எட்டு துறைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை மூலமாக, படிப்படியாக, மின்னணுப் பணப்பரிமாற்ற நடவடிக்கைகள் வாயிலாக, வரிகள், கட்டணங்கள் மற்றும் ஏனைய செலுத்துத் தொகை உட்பட அரசின் அனைத்து வரவினங்களையும் பதிவு செய்ய கருதப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு அரசு, அரசு ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் மின்னணு முறையில் தொகை வழங்கல் நடைமுறையை ஏற்கெனவே 100 சதவீதம் செயல்படுத்தியுள்ளது. ஒப்பந்ததாரர்களுக்குத் தொகை வழங்கல், வாடகை தொகைகள் முதலியவற்றில் மின்னணு முறையில் தொகை வழங்கும் முறை ஓரளவுக்கு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. ஏனைய இனங்களில் காசோலை வாயிலாக தொகை வழங்கும் நடைமுறை தொடர்கிறது. அரசு வழங்குகின்ற தொகைகள் அனைத்தையும், உரிய நடவடிக்கைகள் வாயிலாக மின்னணுத் தொகை மாற்றல்

2014 ஆகஸ்ட் 12]

முறைக்குக் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் தொடரப்பட்டு, இறுதியில் அரசால் தொடங்கப்படவிருக்கின்ற ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும்.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IF & HRMS)

16. அரசின் மனிதவளம் (பணியாளர்கள்), நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைத் திறம்பட்ட முறையிலும் பயன்தருகிற வகையிலும் பயன்படுத்துவதற்காக, நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த அரசு கருதியுள்ளது. இதற்கான ஆலோசனைகளை வழங்கிடவும், திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்யும்பொருட்டும் சென்னை, திருவாளர்கள் அசென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற ஒரு ஆலோசனை முகமை நியமிக்கப்பட்டு திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

17. இத்திட்ட செயல்பாட்டினை மேற்பார்வையிட ஓர் இணை இயக்குநர், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு தனிக் குழுவை அமைக்க (மின் ஆளுமைக் குழு) அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவால் இத்திட்டம் குறித்த செயல்பாடுகளின் முன்னேற்றம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனை முகமை, தனிக் குழுவின் வழிகாட்டுதல் பேரில், விவர அட்டவணையின்படி "தற்போதைய நடைமுறைகள்" (As-is) மற்றும் "நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகள்" (To-Be) குறித்த அறிக்கைகளை அளித்துள்ளது. திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்வதற்கான பணி நடந்தேறி வருகிறது.

18. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன்மூலம், மாநிலம் முழுவதும் உள்ள 20,000 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடியாக இணையத்தின்மூலம் பட்டியல்களை கருவூலத்தில் அளிக்க இயலும். இத்திட்டத்தில் பொதுவான பணம் செலுத்தும் சேவை (Common Payment Gate Way) முறையை பயன்படுத்துவதன் காரணமாக உடனடியாக வசூல் செய்யப்பட்டு வருவாய் கணக்கீடு செய்யப்படுவதால் அரசு பயன்பெற இயலும். மேலும், இதன்மூலம்

பொதுமக்களும் தடைகளற்ற உடனடி சேவைகளைப் பெற்று பயன்பெற இயலும்.

19. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு கணினிமயமாக்கப்பட்டு அவர்களது சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, பணி மாறுதல்கள், விடுப்பு மற்றும் ஏனைய விவரங்கள் அவ்வப்போது நிகழ்நேர அடிப்படையில் பதிவு செய்யப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம், எண்ணியல் ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல்ரேகைப் பதிவு முறை (Bio Metric) போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன்மூலம் மாநிலத்தின் நிகழ்நேர நிதிநிலை அரசுக்குத் தெரிய வருவதால், மாநில அரசின் வலுவான நிதி மற்றும் மனிதவள மேலாண்மைக்கு வகைசெய்யும்.

20. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, ஆலோசனை முகமை தயாரித்து அளித்த விரிவான திட்ட அறிக்கையின்படி ரூ.167.45 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக, திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தெரிவு செய்வதற்காக, ஆலோசனை முகமையால் தயாரித்து அளிக்கப்பட்ட செயற்குறிப்புக்கு (Request for proposal) அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திட்ட ஒருங்கிணைப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், திட்டச் செயலாக்கம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படும்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2012

21. 01-07-2012 முதல் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2012, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் அரசுத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டபூர்வ அமைப்புகள், மாநில பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் 12 இலட்சம் பணியாளர்கள் மற்றும் அவர்களது தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

22. 1-7-2012 ஆம் நாள் முதற்கொண்டு, இத்திட்டத்தில் மருத்துவக் காப்பீட்டு உதவித் தொகையானது, ரூபாய் இரண்டு

2014 ஆகஸ்ட் 12]

இலட்சத்திலிருந்து ரூபாய் நான்கு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.150/- வீதம் சந்தாத் தொகை சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு ஒரு நபருக்கு ரூ.2,090/- (சேவை வரி ரூ.290/- உள்பட) ஆண்டு சந்தாத் தொகையாக காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது. 113 வகையான மருத்துவ அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு இத்திட்டத்தின்கீழ் 635 மருத்துவமனைகள் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக இணைக்கப்பட்டுள்ளன.

23. இப்புதிய திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 01-07-2012 முதல் 30-06-2014 வரை 90,691 பயனாளிகள் ரூ.368.53 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ உதவியை பெற்றுள்ளனர். இது தொடர்பான விவரம் பின்வருமாறு:

தொடர் எண்	ஆண்டு	பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை	தீர்வு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
(i)	2012–2013 (ஜூலை–ஜூன்)	39307	168.36
(ii)	2013–2014 (30.06.2014 வரை)	51384	200.17
	மொத்தம்	90691	368.53

புதிய சார் கருவூலங்கள் தோற்றுவித்தல்

24. "ஒரு வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம்" என்கிற அரசின் கொள்கைக்கேற்ப, 9 புதிய சார் கருவூலங்கள் தோற்றுவிப்பதற்கு அரசால் 2013-2014 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழகத்தில் தற்போது வட்ட தலைமையிடங்களில்

செயல்படும் 215 சார் கருவூலங்கள் உட்பட மொத்தம் 229 சார் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன.

கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

25. அரசாணை (நிலை) எண் 403, நிதித் (க.க.-3) துறை, நாள் 05-11-2012 இன்படி, தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் 69 சார் கருவூலங்களில் 14 சார் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஒரு சார் கருவூலகத்திற்கு ரூ.55.00 இலட்சம் என்ற வீதத்தில் மொத்தம் ரூ.7.70 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், திருச்செங்கோடு, உடுமலைப்பேட்டை மற்றும் தரங்கம்பாடி ஆகிய மூன்று சார் கருவூலங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

26. ஒவ்வொரு சார் கருவூலத்திற்கும் ரூ.60.05 இலட்சம் என்ற வீதத்தில் 33 சார் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு 2013 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிருவாக ஒப்புதல் அளித்தது. மொத்தமுள்ள 33 சார் கருவூலங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரி, சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி மற்றும் கடலூர் மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில் ஆகியவற்றிலுள்ள 3 சார் கருவூலங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் சிவகிரி சார் கருவூல கட்டுமானப் பணி முடியும் தருவாயிலும் மற்ற இரு இடங்களில் கட்டுமான பணி தொடங்கிய நிலையிலும் உள்ளன.

ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

27. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள கருவூலக் கணக்கு இயக்குநரகம், சென்னை மண்டல கருவூலக் கணக்கு இணை இயக்குநர் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு), சென்னையிலுள்ள மாவட்டக் கருவூலம், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், உதவி கண்காணிப்பாளர் முத்திரைத்தாள் அலுவலகம், ஓய்வூதிய இயக்ககம், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகம், முதன்மை அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை அலுவலகம் மற்றும் கூட்டுறவு தணிக்கைத் துறை இயக்குநரகம் ஆகிய 10 அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு ரூ.21.60 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டதுடன், கட்டுமானப் பணியை தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

26. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டப்பூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களின், அவற்றிற்குரிய சட்ட விதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

29. தற்போது பின்வரும் நிறுவனங்கள், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன:

தொடர் எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
(i)	மாநகராட்சிகள்	12
(ii)	நகராட்சிகள்	124
(iii)	பேரூராட்சிகள்	528
(iv)	மாவட்ட ஊராட்சிகள்	31
(v)	ஊராட்சி ஒன்றியங்கள்	385
(vi)	பல்கலைக்கழகங்கள்	21
(vii)	உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள்	32
(viii)	மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	21
(ix)	தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம்	1
(x)	வேளாண்மை பொறியியல் பிரிவுகள்	2
(xi)	கோயம்பேடு விற்பனைக் குழு	1
(xii)	உள்ளூர் திட்டக் குழுமங்கள்	26
(xiii)	கிராம ஊராட்சிகள்(சோதனைத் தணிக்கை மட்டும்)	2506
(xiv)	ஏனைய நிறுவனங்கள்	9

உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை

30. உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் வரி வரவுகள், வழங்கப்படும் அரசு அல்லது ஏனைய அமைப்புகளின் நிதியுதவி ஆகியவற்றைப் பாதுகாத்து, அந்தத் தொகை எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு செலவிடப்படுகிறது என்பதை உறுதி செய்வதே உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கமாகும்.

31. உள்ளாட்சி நிதித் தணிக்கை, உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி வருமானம் மற்றும் செலவினம் குறித்த தனியுரிமை தணிக்கை (Proprietary Audit) மேற்கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் உண்மை நிலையை கணக்குகள் பிரதிபலிப்பதை உறுதி செய்யவேண்டும்.

கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கை

32. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், துறை வாரியிலான வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளப் பட்டுவருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 20 சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் 2,506 ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன்நிகழ் தணிக்கை (Concurrent Audit)

33. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 10 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் இத்துறையின் தணிக்கைக் குழுக்களால் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல் அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் உடன்நிகழ் தணிக்கை முறை

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஓர் உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறை அமல்படுத்துதல்

34. உடன்நிகழ் தணிக்கைப் பிரிவுகள் செயல்படுகின்ற 12 மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 10 நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கப்பட்டவுடன், செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

35. உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதிசெய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்துப் பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை

36. உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 114 நகராட்சிகள், 7 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள்,

விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலகக் குழுமங்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டு கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கை

37. உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூர் தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு 2012-2013 வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் வழக்கமாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

38. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வழக்கமாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual Based Accounting System) 1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

39. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்துகொள்ள உதவும் இருப்புநிலைக் குறிப்பினையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி கணக்குகளைத் தயாரித்து பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

40. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் உடமைகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில்

2014 ஆகஸ்ட் 12]

சேர்த்து அறிந்துகொள்ள முடியும். இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், அவற்றின் மூலதனத் திட்டங்கள் மற்றும் நலத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன்மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத் திட்டங்களுக்கு நிதி நிரட்டும் திறன் விரிவடைந்துள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்

41. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கை சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் அரசாணை (நிலை) எண் 93, நிதித் (நி.கு.IV) துறை, நாள் 28-03-2003 இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

42. கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள "தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மை, நீர்மைப்பு மீட்புப் பணி மற்றும் மேலாண்மைத் திட்டத்திற்கும்" (IAMWARM) இத்துறையினால் தணிக்கைச் சான்று அளிக்கப்படுகிறது.

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

43. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக் கையாடல், பொதுப் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள் மாதாந்திர காலமுறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள்மூலம் தேவையான தொடர் நடவடிக்கைக்காக

அரசுக்கும், நிருவாகத் துறைத் தலைமைக்கும் தெரிவிக்கப்படுகிறது.

44. வழக்கமாக தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, நியாயமான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்ட அமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படுகிறது.

45. தணிக்கையின்போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது. அரசாணை (நிலை) எண் 83, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01-06-2009-ல் இது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்களை அரசு வழங்கியுள்ளது.

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

46. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர் நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர் மட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாவட்ட அளவிலான 95 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1424 தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

47. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்களை அமைக்க அரசாணை (நிலை) எண் 1, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூராட்சிகள்-2) துறை, நாள் 04-01-2007-ல் ஆணையிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாவட்ட அளவிலான 29 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 3416 தணிக்கை மறுப்புரைகள்மீது

2014 ஆகஸ்ட் 12]

முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

48. அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகரைத் தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர் மட்டக் குழு நகராட்சி நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண் 55, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22-5-2007-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மாவட்ட அளவிலான 12 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1,136 தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிருவாகத் துறையும் மற்றும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்

49. கணக்குகள் மற்றும் தணிக்கைத் தொடர்பான பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே தீர்வுகாண ஏதுவாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊரக ஊராட்சி அமைப்புகள் தொடர்பான நிருவாக மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம் மாவட்ட/மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. இவ்வாறே இறுதி நிலை விவாதம் மற்றும் தணிக்கை அறிக்கை ஒப்புதல் ஆகியவற்றின்போது தொடர்புடைய அமைப்புகளின் செயல்நிலை அலுவலர்களோடு நிருவாகத்தின் உயர்நிலை அலுவலர்களும் பங்கு பெறுகின்றனர். இதனால் தணிக்கையின்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளை உடனுக்குடன் சரி செய்துகொள்ள ஏதுவாகிறது.

மாணியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் அளித்தல்

50. பல்கலைக்கழக மானியக் குழு, மாநில/மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநில/மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்களை பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்கள், இத்துறையால் வழங்கப்படுகின்றன. இதனால், திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்

பல்கலைக்கழகங்களால் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

சிறப்புப் பணிகள்

51. வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர, கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31-07-2014 அன்றைய நிலவரப்படி மொத்தம் 34,282 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் சம்மந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு விடுவிக்கப்படுகிறது.

(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கு தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத்தைத் திறம்பட, உரிய நேரத்தில் வழங்க ஏதுவாக மின்னணு முறையில் பட்டுவாடா செய்வதற்கான மென்பொருளை உருவாக்குவதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

அரசு ஓய்வூதியதாரர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஆகியன அரசாணை (நிலை) எண் 120,

2014 ஆகஸ்ட் 12]

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-05-1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 01-08-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் 2013-2014 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூலை மாதம் வரை கீழ்க்கண்டபடி கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் பின்வருமாறு:

நலத் திட்டம்		குடும்ப பாதுகாப்புத் திட்டம்	
கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)	கோரிக்கைகளின் எண்ணிக்கை	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
654	168.46	597	193.44

(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

அரசு ஓய்வூதியதாரர்களுக்குச் செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் ஓய்வூதிய நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் ஆகியன, அரசாணை (நிலை) எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை, நாள் 15-03-2013 இல் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(v) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.12 கோடி அளவிலான தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து

பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

(vi) அறக்கட்டளைகளின் நிருவாகம்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01-04-1952 அன்றிலிருந்து அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அரசு, அறக்கட்டளைகளை ஏற்று, ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை வெளியிடுகிறது.

(vii) இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 12.58 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அரசு அறக்கட்டளைகளும், 20.13 கோடி ரூபாய் மதிப்புள்ள 874 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2013-2014 ஆம் ஆண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூலை மாதம் வரை அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக 360 அறக்கட்டளைகளுக்கு 8.47 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

52. அரசு உத்தரவுகளின்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையையும் அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்படுவதையும் சரிபார்ப்பதற்காக ஒரு சிறப்புக் குழு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குனரால் ஏற்படுத்தப்பட்டது. 01-04-2003 முதல் 31-03-2013 வரையிலான பத்து ஆண்டுகளுக்கான மேற்காணும் விவரங்கள் அரசு நிர்ணயம் செய்த குறிப்பிட்ட காலத்திற்குள் திரட்டப்பட்டுள்ளது.

53. மேற்படியான காலங்களில் 125 நகராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 529 பேரூராட்சி பணியாளர்களின் பங்களிப்பான ரூ.36,81,26,196/- மற்றும் நிருவாகத்தினால் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட நிருவாகப் பங்குத் தொகையான ரூ.13,04,79,781/-ஐ உள்ளடக்கிய ரூ.49,86,05,977/-க்கான தொகை உரிய அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

நிருவாக சீர்திருத்தம்

54. இத்துறையின் நிருவாக திறனை வலுப்படுத்துவதற்கும் மற்றும் தணிக்கைத் திறனை மேம்படுத்துவதற்கும் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(i) *அரசாணை (நிலை) எண் 426, நிதித் (உள்ளாட்சி நிதி) துறை, நாள் 11-11-2013 இன்படி. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நிருவாகத்தினைப் புனரமைத்தல்/வலுப்படுத்துதல் தொடர்பாக உயர் நிலைக் குழு ஒன்று கீழ்க்கண்ட நோக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.*

- *உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனத் தணிக்கை துறை ஆகியவற்றின் பணியாளர்களின் எண்ணிக்கை, தேர்வு செய்யும் முறை மற்றும் நிருவாக அமைப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தல்.*
- *மனிதவள பற்றாக்குறையைக் கண்டறிதல் மற்றும் மனிதவள திறனை மேம்படுத்த ஆலோசனை வழங்குதல்.*
- *தற்போது தணிக்கை நடைமுறையிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து தணிக்கை முறை / தரத்தினை மேம்படுத்த விரிவான ஆய்வு செய்தல்.*
- *செயலாக்கத் தணிக்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்தல்.*

இக்குழுவின் அறிக்கை விரைவில் பெறப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) *அரசாணை (நிலை) எண் 188, நிதித் (உ.நி.) துறை, நாள் 06-06-2013 இல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலுள்ள ஆறு மண்டல துணை இயக்குநர் பணியிடங்களை இணை இயக்குநர் பணியிடங்களாக உயர்த்தியதுடன் அவ்வலுவலகங்களையும் இணை இயக்குநர் அலுவலகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.*

(iii) *ஒவ்வொரு மண்டல இணை இயக்குநரின் நிருவாக புவிப்பரப்பைக் கணக்கில்கொண்டு அனைத்து ஆறு மண்டல இணை இயக்குநர்களுக்கு ஓட்டுநர் பணியிடத்துடன்கூடிய வாகனங்கள் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.*

(iv) தணிக்கைக்காக, இத்துறையின் தணிக்கையாளர்கள் பயன்படுத்தும் தணிக்கை நடைமுறை நூல்களை நாளதுவரையிலாக்குதலையும், நாளதுவரையிலான நடைமுறைகள், சட்டம் மற்றும் விதிகள் ஆகியவை குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு நகர்பகுதி உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்காக தனியாக நடைமுறை நூல்களையும், பயிற்சி நடைமுறை நூல்களையும் தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது.

தணிக்கை நிலை

55. இத்துறையின் தணிக்கைக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களின் தணிக்கை 2011-2012 ஆம் நிதியாண்டுவரை முடிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை 31-08-2014-லிலும், 2012-2013 ஆம் ஆண்டிற்கான நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை 31-10-2014-லிலும் முடிக்கப்படும்.

தணிக்கைக் கட்டணம்

56. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் ஜூன் மாதம் வரை 9.52 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு தணிக்கைத் துறை

57. கூட்டுறவு நிறுவனங்களின் கணக்குகளை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தணிக்கை மேற்கொள்ள சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கூட்டுறவுத் துறையில் ஒரு பிரிவாகச் செயல்பட்டு வந்த தணிக்கைப் பணியினைத் தனியாகப் பிரித்து, கூட்டுறவு தணிக்கைத் துறை என்ற புதிய துறை 17-06-1981 முதல் தோற்றுவிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80-வது பிரிவின்படி, பன்மாநில

2014 ஆகஸ்ட் 12]

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை இத்துறை மேற்கொள்ள வேண்டும்.

58. கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்.

தொடர் எண்	நிருவாகப் பதிவாளரின் பெயர்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
(i)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	10,449
(ii)	கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர்	1,409
(iii)	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	345
(iv)	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்.	1,378
(v)	தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்	
(vi)	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	885
(vii)	மீன் வளத் துறை இயக்குநர்	1,300
(viii)	கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர்	242
(ix)	சர்க்கரைத் துறை ஆணையர்	17
(x)	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	143
(xi)	வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்	198
(xii)	பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர்	25
(xiii)	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்	120
(xiv)	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர்	43
	மொத்தம்	16,554

[2014 ஆகஸ்ட் 12

கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

59. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல் போன்றவை கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின் படி செயல்படுவதைக் கண்காணிக்க சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை முக்கிய கருவியாக உள்ளது. அரசின் நிதியுதவி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

60. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய மைய வங்கியின் பரிந்துரையின்படி ரூபாய் 25 கோடிக்கு மேல் வைப்பீட்டுத் தொகைகளை கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகள், பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சட்டபூர்வத் தணிக்கை

61. சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 3.30 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக

2014 ஆகஸ்ட் 12]

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படை விதி 127-ன்கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127-ன்கீழ், 2013-2014 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட பணியாளர்களின் செலவினத் தொகையாக 10.20 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அறிக்கைகள்

62. தணிக்கையின்போது, கடுங்குறைகள் கண்டறியப்படுமாயின் அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் 41.57 கோடி ரூபாய் தொடர்புடைய 242 சிறப்பு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

2013–2014 ஆம் ஆண்டு மீட்டுயிர்ப்பு, மறுசீரமைப்பு மற்றும் மறு கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், முதன்மை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்புத் தணிக்கை

63. மத்திய அரசு, நெசவுத் துறைக்கான மீட்டுயிர்ப்பு, மறு சீரமைப்பு மற்றும் மறு கட்டமைப்புத் தொகுப்பு திட்டத்தினை நபார்டு வங்கியின்மூலம் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தொகுப்பு நிதியுதவியை இறுதி செய்யும்பொருட்டு நபார்டு வங்கியால் அளிக்கப்பட்ட சிறப்புத் தணிக்கை நடைமுறை நூலின்படி, தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மாநில அளவிலும், 1,099 முதன்மை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அளவிலும், சிறப்புத் தணிக்கை மேற்கொள்ள கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரை நபார்டு வங்கி கேட்டுக்கொண்டது.

64. இந்த சிறப்புத் தணிக்கையை கூட்டுறவு தணிக்கைத் துறை மேற்கொண்டதால், மேற்கண்ட திட்டத்தின் நிதி தொகுப்பிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக 141.50 கோடி ரூபாய் பெற வகைசெய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி, இதற்கான தணிக்கை கட்டணமாக 23.40 இலட்சம் ரூபாய் அரசுக்கு கிடைத்துள்ளது.

தணிக்கையின் தரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி

65. தணிக்கையாளர்களிடையே, திறமையையும், தணிக்கையின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக, பல்வேறு வகையான பயிற்சித்

[2014 ஆகஸ்ட் 12

திட்டங்களை நடத்துவதுடன், பல்வேறு வகை கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை செய்யும்போது பின்பற்றக்கூடிய விதிகள், அடிப்படைக் கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய புத்தாக்கப் பயிற்சிகள் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் 8 பல்வேறு பயிற்சியின் மூலமாக 195 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

சிறு சேமிப்புத் துறை

66. மத்திய அரசின் நிதித் துறையினால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறு சேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 01-12-2011 முதல் மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் 50 சதவீதம் அந்தந்த மாநிலத்திற்கே 9.5 சதவீதம் வட்டி வீதத்தில் நீண்டகால கடனாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இச்சிறுசேமிப்புத் திட்டங்கள் பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிக வருவாய் தரும் முதலீட்டினை ஏற்படுத்துவதுடன், மாநில வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியினைத் திரட்டுவதற்கும் வழிவகை செய்கிறது.

சிறு சேமிப்புத் திட்டங்கள்

67. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்குத் தேவைக்கேற்ற வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 1-04-2014 முதல் மத்திய அரசு, சிறு சேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:

தொடர் எண்	திட்ட விவரம்	01-04-2012 முதலான வட்டி சதவீதம்	01-04-2013 முதலான வட்டி சதவீதம்	01-04-2014 முதலான வட்டி சதவீதம்
(i)	அஞ்சலகச் சேமிப்பு கணக்கு (POSA)	4.0	4.0	4.0
(ii)	**கால வைப்பீடு**			
	1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.2	8.2	8.4

2014 ஆகஸ்ட் 12]

தொடர் எண்	திட்ட விவரம்	01-04-2012 முதலான வட்டி சதவீதம்	01-04-2013 முதலான வட்டி சதவீதம்	01-04-2014 முதலான வட்டி சதவீதம்
(ii)	2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.3	8.2	8.4
	3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.4	8.3	8.4
	5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	8.5	8.4	8.5
(iii)	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD)	8.4	8.3	8.4
(iv)	5 ஆண்டு மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS)	9.3	9.2	9.2
(v)	அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS)	8.5 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை)	8.4 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை)	8.4 (5 வருடங்கள்) (போனஸ் இல்லை)
(vi)	தேசிய சேமிப்புப் பத்திரம் NSC- VIII-வது வெளியீடு	8.6 (5 வருடங்கள்)	8.5 (5 வருடங்கள்)	8.5 (5 வருடங்கள்)
(vii)	10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் NSC-IX-வது வெளியீடு	8.9	8.8	8.8
(viii)	15 ஆண்டு பொது சேமநல நிதித் திட்டம் (PPF)	8.8 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000)	8.7 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000)	8.7 (நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000)

சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

68. கடந்த ஒன்பது வருடங்களாக சிறு சேமிப்பில் தமிழகத்தில் திரட்டப்பட்ட வசூல் விவரங்கள் கீழ்கண்டவாறு:-

[2014 ஆகஸ்ட் 12

(ரூபாய் கோடியில்)

தொடர் எண்	ஆண்டு	நிகர இலக்கு	மொத்த வசூல்	நிகர வசூல்
(i)	2005–2006	5000.00	12455.75	5594.13
(ii)	2006–2007	5700.00	10158.54	2637.25
(iii)	2007–2008*	---	7791.11	–965.98
(iv)	2008–2009	---	8486.64	–1216.73
(v)	2009–2010	---	12113.39	1539.39
(vi)	2010–2011	---	13414.56	516.32
(vii)	2011–2012	---	10607.50	–2100.74
(viii)	2012–2013	---	9797.05	–1506.83
(ix)	2013–2014	---	9624.19	–730.78

* 2007–2008 முதல் சிறுசேமிப்பு வசூலுக்கு தமிழக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.

முகவர்களுக்கான தரகுத் தொகை மற்றும் ஊக்கத் தொகை

69. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுதற்கு மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 30,804 முகவர்கள் பணிபுரிகிறார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1-12-2011 முதல் தரகுத் தொகை விகிதங்களை மாற்றி அமைத்துள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

தொடர் எண்	முகவரமைப்பு வகை	சேமிப்புத் திட்டங்கள்	முகவர்களின் எண்ணிக்கை	மத்திய அரசின் தரகுத் தொகை (30–11–2011 வரை)	மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட தரகுத் தொகை (1–12–2011 முதல்)	மாநில அரசின் ஊக்கத் தொகை (31–3–2012 வரை)
அ	நிலைப்படுத்தப் பட்ட முகவரமைப்புத் திட்டம்	அஞ்சலக மாத வருவாய் திட்டம்/ தேசிய சேமிப்புப் பத்திரம்/ அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1,2,3,5 வருடங்கள்)	7378	1%	0.5%	0.5%
ஆ	மகளிர் முகவர் திட்டம்	அஞ்சலகப் தொடர் சேமிப்புத் திட்டம்	22881	4%	4%	2%
இ	பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம்	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்	545	1%	இல்லை	இல்லை
ஈ	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்)	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்.	-	0.5%	இல்லை	இல்லை
	மொத்தம்		30804			

70. 01-12-2011 முதல் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு மத்திய அரசு சில வரையறைகள் நிர்ணயித்திருந்தாலும், 31-03-2012 வரை ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த ஊக்கத் தொகையினை எவ்வித மாற்றமுமின்றி வழங்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

விழிப்புணர்வு முகாம்

71. பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அதிநவீன முறையில் சிறுசேமிப்பு விளம்பரங்களுடன்கூடிய குறும்படங்கள் அனைத்து மாவட்டங்களிலும் திரையிடப்படுகின்றன. பொது மக்கள் தானாக முன்வந்து சிறுசேமிப்பில் பங்கு பெற்று பயன் அடையும் வகையில் சாத்தியமான அனைத்து வழிகளின்மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

72. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும் மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செயலாக்க உபகரணங்கள்மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பாக வரவு செலவைத் திட்டமிடும் நோக்குடனும் 1971 ஆம் ஆண்டு மத்திய வரவு-செலவுத் திட்ட விவர தொகுப்பு மையம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மின்னணு தகவல் செயலாக்க உபகரணங்களைப் பயன்படுத்தி அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) அரசுத் தேர்வு இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்.

(ii) ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி.

(iii) ஆசிரியர்களின் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்.

(iv) தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்புநிதி.

2014 ஆகஸ்ட் 12]

தேர்வுப் பணிகள்

73. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் அரசாணை (1ப) எண் 324, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-10-2010-ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

74. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பலதரப்பட்ட தேர்வுகளின் முடிவுகளைத் தொகுக்கும் பணியினை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வியாண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகள் விவரம் பின்வருமாறு:-

தேர்வுப் பணிகள்	மார்ச் 2013	சிறப்புத் துணைத் தேர்வு 2013	அக்டோபர் 2013	மொத்தம்
மேல்நிலைப் பள்ளித் தேர்வு	8,54,105	83,494	41,445	9,79,044
பத்தாம் வகுப்புத் தேர்வு	11,19,478	92,748	48,010	12,60,236
எட்டாம் வகுப்புத் தேர்வு	13,747			13,747
ஊரக திறனாய்வுத் தேர்வு	41,048			41,048
ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்புத் தேர்வு	66,383			66,383
தேசிய வழி மற்றும் திறன்படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு	60,346			60,346
தொழில்நுட்பத் தேர்வு	15,983			15,983
மொத்தம்	21,71,090	1,76,242	89,455	24,36,787

முகப்புத்தாள்கள்

75. உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத்தாள்களை அச்சிடும் பணி அரசாணை (நிலை) எண் 4, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10-01-2014-ன்மூலம் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மார்ச்/ஏப்ரல் 2014 உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான 1.60 கோடி முகப்புத்தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக 79,21,780 ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

76. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/நகராட்சி பள்ளிகள்/அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள்/கல்லூரிகள்/அரசு நிதியுதவி பெறும் தொழிற்கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குத்தாள்களை கணினி வழி தொகுக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

77. 2007-2008 ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக் கணக்குத் தாள்கள் வழங்க அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டு வரையிலான கணக்குத்தாள்கள் வழங்கும் பணி அரசுத் துறை நிறுவனத் தணிக்கை துறையின்மூலம் நடைபெற்று வருகின்றது.

பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்

78. கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் புதிய குறியீட்டு எண்கள் வழங்கி, அதன் கணக்குகளைப் பராமரிக்கும் பணிகளையும் அரசு இந்நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது:

(i) ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்.

(ii) அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள்.

(iii) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்.

2014 ஆகஸ்ட் 12]

(iv) மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பணியாளர்கள்.

(v) பேரூராட்சிகளில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.

(vi) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்.

79. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், இதுவரையில் *1,04,686* பணியாளர்களுக்கு பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் புதிய குறியீட்டு எண்களை வழங்கியுள்ளது.

80. பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு *2009-2010* முதல் *2012-2013* வரையிலான கணக்குகள் கணினியில் தொகுக்கப்பட்டு, கணக்குத்தாள்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. உள்ளாட்சித் துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அத்துறையின் பங்குகளையும் சேர்த்து, தணிக்கை முடிக்கப்பட்டபின் கணக்குத்தாள்கள் வழங்கப்படும்.

81. தமிழ்நாடு மாநில கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத் துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகள் *2013-2014* ஆம் ஆண்டு முதல் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தற்போது *2,42,143* சந்தாதாரர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி

82. இத்துறைக்கு தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வைப்பு நிதி பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தற்போது *2,04,914* சந்தாதாரர்கள் உள்ளனர்.

83. புதிய கணக்கு எண்கள் கோரி விண்ணப்பங்கள் இணையதளம் வழியாக தேசிய தகவல் மைய உதவியுடன் பெறப்பட்டு வருகிறது. இதுவரை *1,82,843* விண்ணப்பங்களுக்கான தகவல் பதியும் பணிகள் முடிவடைந்துள்ளன. அவற்றுள் *94,704* சந்தாதாரர்களின் புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலரால் சரிபார்க்கப்பட்டுள்ளன.

[2014 ஆகஸ்ட் 12

அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

84. அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன் பல்வேறு சட்டபூர்வ வாரியங்கள் மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டபூர்வ நிறுவனங்களின் தணிக்கை

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு
(i)	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2012–2013
(ii)	தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்	2012–2013
(iii)	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	2012–2013
(iv)	சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	2012–2013
(v)	தமிழ்நாடு வக்ஃபு வாரியம்	2012–2013
(vi)	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்	2012–2013

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிசுழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகிறது.

சட்டவரையறைக்குட்படாத நிறுவனங்களின் தணிக்கை

85. கீழ்க்கண்ட சட்டவரையறைக்குட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை / நிறுவனங்கள்
•	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்.	94,605
•	வேளாண்மை விரிவாக்க மையங்கள்	874
•	எடையளவு நிறுவனங்கள்	313
•	ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள்	673

இத்துடன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியம், நாட்டுப்புற கலைஞர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் ஏனைய 16 நல வாரியங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தணிக்கைச் சான்று

86. மானிய உதவி பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கை சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

இதர பணிகள்

87. அரசின் குறிப்பான ஆணையின்படி 14 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கைத் தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

88. மேலும், கீழ்க்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது:

(i) நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகள் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அயல்நாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் 2010-இன்கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் விதிமீறல்களை கண்டறியும் வகையில் சிறப்பு தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்குகளை சரிபார்த்துச் சான்றளித்தல்.

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

89. தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அந்தந்தத் துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் திருத்த நடவடிக்கைக்காக மாதந்தோறும் தொகுத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

தணிக்கைக் கட்டணம்

90. சட்டப்பூர்வ வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கை பணியாளர்களின் சம்பளச் செலவினம் அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் 1.5 சதவீதமும் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

இணைப்பு-IV

(497ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மாணியக் கோரிக்கை எண் 36 — திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

"தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும்"

—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

முகவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்திற்காக "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"-ஐ உருவாக்கி அளித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பை கருத்தில்கொண்டு, 2023 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"-ன் இரண்டு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்கள். இந்த தொலைநோக்குத் திட்டம் 2023 அனைத்து முக்கிய துறைகளிலும் நாட்டிலேயே மிகச் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான வளர்ச்சியுடன், நீடித்து நிலைக்கத்தக்க, அனைவரும் பங்கேற்கக்கூடிய வளர்ச்சியைப்

[2014 ஆகஸ்ட் 12

பெற்றிடும் பொருளாதாரத்தை உருவாக்குவதே, இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்தின் ஆண்டு திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச் செலவினங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பொறுப்புகள் ஆகும். நிருவாகத் துறைகளால் சுற்றறுப்பப்படும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிருவாகத் துறை என்ற முறையில் மாநிலத் திட்டக் குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை, கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக் கொள்கிறது. இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்புமூலம் மின்-ஆளுமைத் திட்டம் (e-governance) மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/23-ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதுடன் மத்திய திட்டக் குழுவுடன் தொடர்புகொண்டு செயல்படுதல்;

2014 ஆகஸ்ட் 12]

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநிலத்தின் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர் பயன்பாடு உட்பட முக்கிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்துகின்ற திட்டங்களின்மீது மேற்பார்வை ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

iv. திட்டப் பணிகள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

v. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vi. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல். கடந்த காலங்களில் அரசு செயல்பாடுகளைக் கணினிமயமாக்குவதிலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் மற்றும் அதனால் மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்த மாநிலத்தின் அணுகுமுறையினை வகுப்பதிலும் துறை முக்கிய பங்கு வகித்தது;

vii. சீரான பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்;

viii. மாவட்ட திட்டக் குழுவின் ஓர் அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை தயாரித்தல்;

ix. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளி விவரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

x. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xi. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சிறப்புத் திட்டங்களை உருவாக்குதலும் செயல்படுத்துதலும் மற்றும் நக்சல் பாதிக்கக்கூடிய பகுதிகளில் சமூக-பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்;

xii. மாநிலத் திட்டக் குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xiii. சிறப்பு முயற்சிகள் பிரிவின்கீழ் 'மெட்ரோ இரயில்' போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும்கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. இவை ஒவ்வோர் ஐந்தாண்டுக்

2014 ஆகஸ்ட் 12]

காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

திட்டம்	ஆண்டுகள்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு	செலவினம்	விழுக்காடு
முதலாம் திட்டம்	1951–1956	86	80	93.0
இரண்டாவது திட்டம்	1956–1961	186	188	101.1
மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள்	1961–1969	608	613	100.8
நான்காவது திட்டம்	1969–1974	552	559	101.3
ஐந்தாவது திட்டம்	1974–1979	1,122	1,165	103.8
ஆறாவது திட்டம்	1980–1985	3,150	3,645	115.7
ஏழாவது திட்டம்	1985–1990	5,750	6,317	109.9
ஆண்டுத் திட்டம்	1990–1991	1,450	1,591	109.7
ஆண்டுத் திட்டம்	1991–1992	1,600	1,726	107.9
எட்டாவது திட்டம்	1992–1997	10,200	14,024	137.5
ஒன்பதாவது திட்டம்	1997–2002	25,000	25,036	100.1
பத்தாவது திட்டம்	2002–2007	40,000	43,568	108.9
பதினோராவது திட்டம்	2007–2012	85,344	92,656	108.6

2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

மார்ச் 2012-ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 113 சதவீதம் அதிகரித்து, 85,344 கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், 2007-2012 திட்டக் காலத்தில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

2.2.1 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும் ஆண்டுவாரியான ஒதுக்கீடு/செலவினம்

ஆரம்ப திட்ட ஒதுக்கீடு 85,344 கோடி ரூபாய்

(ரூபாய் கோடியில்)

ஆண்டுத் திட்ட வருடம்	ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு	செலவினம்
2007– 2008	14,000	14,224
2008–2009	16,000	16,275
2009–2010	17,500	17,834
2010–2011	20,068	20,465
2011–2012	23,535	23,858
மொத்தம்	**91,103**	**92,656**

துறைவாரியான ஒதுக்கீடு/செலவினம்

(ரூபாய் கோடியில்)

துறை	ஒதுக்கீடு	செலவினம்	விழுக்காடு
வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை	11,145	10,427	93.6
ஊரக வளர்ச்சி	10,241	11,262	110.0
எரிசக்தி	10,743	12,669	117.9
தொழில் மற்றும் கனிமங்கள்	3,716	2,607	70.2
போக்குவரத்து	11,647	11,009	94.5
சமூக சேவைகள்	35,827	42,302	118.1
ஏனையவை	2,025	2,380	117.5
மொத்தம்	**85,344**	**92,656**	**108.6**

2014 ஆகஸ்ட் 12]

பதினோராவது திட்டக் காலத்தில் செலவினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை விட அதிகரித்துள்ளது என்பதனை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனினும், முக்கிய துறைகளான தொழில் மற்றும் விவசாயத்தின் வளர்ச்சி குறைந்த போதிலும், சேவைத் துறையில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதால் 2007-2012 ஆம் ஆண்டுகளில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.58 சதவீதத்தை அடைவதற்கு வழியாக அமைந்தது.

2.2.2 2012–2013 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) முதல் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2012-2013, 29,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இறுதித் திட்டச் செலவினம் 28,528 கோடி ரூபாய் என்பதால் திட்ட ஒதுக்கீட்டை விட மகிழ்ச்சி அளிக்கும் வகையில் உயர்ந்துள்ளது.

2.2.3 2013–2014 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) இரண்டாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2013-2014, 37,128 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஒதுக்கீட்டைவிட திட்டச் செலவினம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.4 2014–2015 ஆம் ஆண்டுத் திட்டம்

ஆண்டுத் திட்டம் 2014-2015, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012-2017) மூன்றாம் ஆண்டாகும். ஆண்டுத் திட்டம் 2014-2015-ன் திட்ட ஒதுக்கீடானது, ஆண்டுத் திட்டம் 2013-14-ன் திட்ட ஒதுக்கீட்டினை விட 13.62% அதிகரிக்கப்பட்டு, 42,185 கோடி ரூபாயாக நிர்ணயிக்கக் கருதப்பட்டுள்ளது. சமீபத்தில், மத்திய திட்டக் குழு அனைத்து மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய திட்ட ஒதுக்கீட்டினை, மாநிலத் திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவியாக கருதவும், அதனை மாநிலத் திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகக் கருதவும் முடிவு செய்துள்ளது. இந்த நடைமுறையினால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து தமிழ்நாடு அரசு அச்சம் கொண்டுள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மாநிலத்தின் முன்னுரிமைகளைப் பிரதிபலித்தாலும் அல்லது இல்லாவிடினும், திட்டங்களின் வடிவமைப்பைப்பற்றி மாநில அரசு சொல்வதற்கு ஒன்றுமில்லை.

அல்லது திட்ட ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பகுதியினை நிர்வகிப்பதில் மாநில அரசிற்கு எந்த ஒரு அதிகாரமும் இல்லை. மத்திய ஒதுக்கீட்டினை குறைப்பது மற்றும் மத்திய நிதி உதவியினை விடுவிப்பதில் ஏற்படும் கால தாமதம் திட்டங்களின் செயல்பாட்டினை வெகுவாகப் பாதிக்கும். அதற்கான திட்டப் பணிகள், கூறுகள் மற்றும் திட்ட அளவு புது டெல்லியில், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் ஆகியோரிடையே வழக்கமாக நடைபெறும் கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.5 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, மொத்த ஒதுக்கீடு 2,11,250 கோடி ரூபாய் என்ற அளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017), விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் "தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023"-ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.3 திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்களின் செலவினங்கள் தலைமைச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட துறைகளால் தெரிவிக்கப்படுகிறது. திட்ட ஒதுக்கீடு முழுமையாக எய்தப்பட்டதை உறுதி செய்யும் பொருட்டு, தலைமைச் செயலாளர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.

2.3.1 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களையும் மத்திய மாநில அரசுகள் பங்கிட்டுக் கொள்ளும் திட்டங்களையும் ஆய்வு செய்தல்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மாநில அரசின் சொந்த நிதி அல்லது கடன் பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு

2014 ஆகஸ்ட் 12]

வருகிறது. தற்சமயம் மத்திய அரசு, மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களில் மைய அரசின் பங்கினை மாநில அரசின் திட்ட நிதி உதவியாகவும், இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டை மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாகக் கருதவும் திட்டமிட்டுள்ளபடியால் மைய அரசின் பங்கினை உரிய நேரத்தில் பெறுவதை உறுதி செய்வதற்கு இத்திட்டங்களைத் தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.3.2 இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்புத் திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டில் "இருபது அம்சத் திட்டம் 2006" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கிழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வருவாய் இழப்பினை ஈடுகட்டுதல், வேலைவாய்ப்பினைப் பெருக்குதல், கல்வி, வீட்டுவசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு, நலிந்த பிரிவினருக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்-2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகள்/நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு மாதமும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளி இயல் மற்றும் திட்டச்செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

2.4 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தைத் திட்டம்

மற்றும் வளர்ச்சித் துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவலர்கள் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது:

i) எரிசக்தி,

ii) தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பம்,

iii) நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,

iv) சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்

v) இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர்த் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவலர்கள் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக்கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

2.5 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வுச் செயல்பாடுகளை அனைத்து அரசு துறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 19, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள்: 15-02-1984-ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பத் துறை மாநிலத்தில் புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்புத் துறையாக நியமிக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களைப் பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்-ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவரத் தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

அரசுத் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மைச் செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின்கீழ் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு, பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வுத் திட்டங்களுக்கான கருத்துருக்கள்மீது முடிவுகள் மேற்கொள்ளுவதை மேற்பார்வையிட்டு வருகிறது.

2.6 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவற்றை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளி விவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளி விவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

2.7 பெருந் திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை உண்மையில் சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம்மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடன், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையில் உள்ள குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி இயக்குநரால் மேற்கொள்ளப்படும். இயக்குநர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மற்றும் பிற துறைகளுடன் மாநில

திட்டக் குழுவினையும் கலந்து மதிப்பீட்டிற்கான திட்டங்களைத் தேர்வு செய்கிறார். அத்துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறார். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும்; ஆராய்ச்சி உதவியாளர்களைப் பணியமர்த்திக் கொள்ளவும்; மதிப்பார்ந்த நிறுவனங்கள்மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் பகுதி-II திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை நடுப்பகுதியில் சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் www.tn.gov.in/dcar/index.htm என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

2.8 சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

1975 முதல் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிடையே மலைப்பாங்கான பெரிய வனப் பகுதிகளை எல்லைகளாகக் கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, மத்திய நிதியுதவிப் பெறும் திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக தனியே வகைப்படுத்தப்பட்டும், தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும் உள்ளது. இவ்விரு திட்டங்களின் நிதியுதவியினை புதுப்பிப்பது குறித்து பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி மேலும் தொடரவும் அரசு வலியுறுத்தியுள்ளது.

2.8.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக் குழுவின் 90 சதவிகித

2014 ஆகஸ்ட் 12]

நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மலைப்பகுதியின் உயிரினப் பன்மயத்தினை பேணுதல், பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணை அளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை மீளச்செய்வதும் ஆகும். உயிரினப் பன்மயத்தினை பேணவும், மலைவாழ் உயிரினச் சூழலுக்குப் புத்துயிர் ஊட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு அனைத்து வளர்ச்சிப் பணிகளும் திட்டமிடப்படுகின்றன. மத்திய திட்டக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஒருங்கிணைந்த நீர்பிடிப்புப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப் பகுதிகளாக பகுக்கப்பட்டு, இவற்றில் 37 முன்னுரிமை நீர்வடிப் பகுதிகள் தேர்வுசெய்யப்பட்டு பகுதி பகுதியாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த திட்டத்தில், வடிகால்களைச் சீர்செய்தல் மற்றும் விவசாயத்திற்கு உகந்த நிலத்தில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ற வேளாண் உற்பத்தி முறைகளைக் கையாண்டு மழை நீரைச் சேமிப்பதன் மூலமாக குறு நீர்வடிப் பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 33 பெரிய நீர்வடிப் பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக, சிறப்பு மத்திய நிதியுதவியின்கீழ் ஆண்டு ஒதுக்கீடாக 90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடனாகவும் மத்திய திட்டக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய நிதியுதவியின் மானியத் தொகையினை மட்டும் மத்திய அரசு விடுவித்து வருகிறது. கடன் பகுதி நிதிக்காக வெளிச்சந்தைமூலம் கடன் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. 2009-2010 ஆம் ஆண்டு முதல் 10 சதவிகிதம் கடன் பங்கு, மாநில அரசின் பங்காகக் கருதப்படுகிறது.

2.8.1.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

வணிகரீதியான வாய்ப்புகள் தோட்டக்கலை விவசாயிகளுக்கு அதிகமாக இருந்தாலும், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மிகவும் குறைந்த அளவிலான சந்தை வசதிகள் போன்றவை விற்றுமுதலை

[2014 ஆகஸ்ட் 12

வெகுவாகப் பாதிக்கிறது. சிறிய விளை நிலங்கள், வருவாயில் சரிவு மற்றும் உள்ளீடுகளின் அதிக விலை ஆகியன உற்பத்தித் திறன் மற்றும் இலாபம் ஆகியவற்றைக் குறைக்கிறது. 2002 ஆம் ஆண்டு அரசின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயம், தோட்டக்கலை, மரம் வளர்ப்பு ஆகிய துறைகளில் ஒன்றுடன் ஒன்றிணைந்த உழவர் குழுக்களை ஆரம்பித்து, பின்னர் அவைகள் தேசிய வாழ்வாதார இயக்கத்தில் இணைக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு.2) துறையின் 29-02-2012 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 51, 52 மற்றும் 53-ன்படி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் உள்ள மலைப் பகுதிகளில் உழவர் குழுக்கள் மற்றும் அதிகார அமைப்புகளை உருவாக்கும் வண்ணம் மாற்றி அமைக்கப்பட்டது. உள்ளீடுகளை இணைந்து வாங்கவும் பின்னர் சந்தைப்படுத்தும் முயற்சிகளில் இணைந்து செயல்படவும் அதன் வாயிலாக அவர்களுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்யவும் விவசாயிகள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். இதற்காக, அரசின் மற்ற திட்டங்களையும் ஒன்றிணைத்து செயல்படுத்தலாம். இந்த அணுகுமுறையானது பாரம்பரிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைக் காட்டிலும் நல்ல பலனைத் தர வாய்ப்பாக அமையும்.

இந்த வழிக்காட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 21 கிராமங்களில் உள்ள 5 பெரு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அமைந்த 19 குறுநீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள 527 விவசாயிகளுடைய 349.24 ஹெக்டேர் நிலப்பரப்பில் 25 உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

2.8.1.2 2013–2014 ஆம் ஆண்டின் செயல்பாடு

2013-2014 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு 47.34 கோடி ரூபாய். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், மண்வளப் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள், மற்றும் சுற்றுலா

2014 ஆகஸ்ட் 12]

ஆகிய துறைகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக பெருமளவுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

2.8.1.3 2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்டச் செயற்குறிப்பு

ஆண்டுத் திட்டம் 2014-15-க்கு 47.34 கோடி ரூபாய் மத்திய திட்டக் குழு ஒதுக்கீடு செய்துள்ளது. 2014-2015 ஆம் ஆண்டுக்கான வரைவு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

2.8.2 மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு மத்திய திட்டக் குழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்). ஆண்டுத் திட்டம் 2009-2010 முதல் 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் மாற்றப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 60 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் முழுமையாகப் பயனடைகின்றன. மீதமுள்ள 6 மாவட்டங்களில் சில பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்ட செயலாக்கத்துக்கென துறையில்லாத நிலையில் இத்திட்டம் ஒரு முன்னோட்ட அடிப்படையில் 2010-2011 ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையிடம் (TAWDEVA) செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டில்

கூடுதலாக விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இந்த முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை கூடுதல் கண்காணிப்புடன் செயல்படுத்த கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மீதமுள்ள மூன்று மாவட்டங்களிலும் இந்த முகமையின் மூலமாக செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:–

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையை பேணுதல்.

(ii) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்.

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரி செய்தல்.

(iv) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், சாலைகள், சுற்றுலா, கால்நடை பராமரிப்பு, கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மீன்வளம், சிறு பாசனம், பேரூராட்சிகள் மற்றும் பட்டு வளர்ப்பு ஆகிய துறைகளில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 2013-2014 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 64 நீர்வரத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

2.8.2.1 உழவர் தொகுதிகள் அமைத்தல்

அரசாணை (நிலை) எண் 51, 52 மற்றும் 53, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்: 29-02-2012-ல் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளில் "உழவர் தொகுதிகள்" மற்றும் "குழுக்கள்" அமைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளின் அடிப்படையில்

2014 ஆகஸ்ட் 12]

2013-2014 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் (கேரட்) பயிரிடுவதற்காக, 4 கிராமங்களில் உள்ள 2 பெரு நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்த 10 குறுநீர்பிடிப்புப் பகுதிகளில் உள்ள 310 விவசாயிகளுடைய 130 ஹெக்டேர் நிலப்பரப்பில் 4 உழவர் குழுக்கள் அமைக்கப்பட்டு பயனாளிகளின் ஆழ்ந்த ஈடுபாட்டினால் சிறந்த முன்னேற்றத்தில் உள்ளது.

2.8.2.2 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு

2013-2014 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய திட்டக் குழு 22.84 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்திருந்தது. மாநில அரசின் செயல்திறனின் அடிப்படையில் 2014-2015 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு 22.84 கோடி ரூபாய் மத்திய திட்டக் குழு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தில் முன்புள்ள முன்னுரிமைப் பணிகளோடு உழவர் தொகுதிகள் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்படும்.

2.9 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29-04-2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது இத்துறையின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் கண்டறியப்பட்டது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 02-11-2006 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146-இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை "சிறப்பு முயற்சி" திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களைத் திட்டம்,

வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டுவருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18-01-2007 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு
ii. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை
iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
iv. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிச் செயலாளரின் (சிறப்பு முயற்சிகள்) கீழ் உள்ள ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

3.1.1 மாநிலத் திட்டக் குழு

தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் மாநிலத் திட்டக் குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக் குழு அளித்து வருகிறது. 02-07-2011 அன்று ஒரு துணைத் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்டு இம்மாநிலத் திட்டக் குழு திருத்தி அமைக்கப்பட்டது. அரசு முதன்மைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு முதன்மைச் செயலர், நிதித் துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல் சார்

2014 ஆகஸ்ட் 12]

உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

3.1.2 மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள்

i. ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்.

ii. வரைவு ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்.

iii. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்.

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்.

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்.

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்.

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்.

ix. மாவட்டத் திட்டக் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்.

x. ஐந்தாண்டுத் திட்டம் / ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களைத் தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்.

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும்

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும்பொழுது அரசுக்கு அளித்தல்.

3.1.3 புதிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்தலின் ஒரு பகுதியாக, 2014-15 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களை மாநிலத் திட்டக் குழு மதிப்பீடு செய்தது. இந்த திட்டக் குழு பகுதி-II புதிய திட்டங்களை இரு பிரிவுகளாக பெற்றது - பிரிவு-I-ன்கீழ் வழக்கமான மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களை அனைத்துத் துறைச் செயலர்களிடமிருந்தும், பிரிவு-II-ன்கீழ், புதிய மற்றும் நூதனத் திட்டங்களை அனைத்துத் துறைச் செயலர்களிடமிருந்தும் மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்தும் பெறப்பட்டன. 2014 ஜனவரித் திங்களில், அரசுச் செயலர்களுடனும், துறைத் தலைவர்களுடனும், புதிய திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி, 150.01 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களைப் பரிந்துரை செய்தது. அவற்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

3.1.4 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண் 86, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 03-09-2013-ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு-செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம் 2014-15 தயாரிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட 10 துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா, அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள் சார்ந்த துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன.

மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கிட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டை குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராத்த் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன.

இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களைத் திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்குத் தீர்வு காணப்பட்டது. மேலும் மாநில அரசு, மைய அரசு மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

3.1.5 தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

"தமிழக அரசால் 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் தலைமையில், "தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்" என்ற

[2014 ஆகஸ்ட் 12

அமைப்பை மாநிலத் திட்டக் குழுவில் ஒரு நிரந்திர. அமைப்பாக செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம், நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நிர்வகிக்கவும், மேம்படுத்தவும், பல்வேறு அரசு துறைகள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / பங்குதாரர்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்க வழிவகை செய்கிறது. தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், கருத்தரங்கு மற்றும் ஆராய்ச்சிகள் / விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது.

3.1.6 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் 2013–14 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டிற்கு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிக்க ஒரு முன்னுரை கூட்டம் 28-01-2013 அன்று மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொடர்புடைய அரசு செயலர்கள் / துறைத் தலைவர்களை நியமித்து, நிலப்பயன்பாட்டு கொள்கை தயாரிப்பினை மேற்பார்வை செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது. வரைவு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிக்க தேவையான விவரங்கள் / பணிகள் மேற்கொள்ள பல்வேறு செயல்பாடு குழு அந்தந்த துறையில் அமைக்கப்படவுள்ளது.

மாநிலத் திட்டக் குழு, வரைவு நில பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பதற்கான அடிப்படை பணிகளில் ஈடுபட்டுள்ளது. அதன்பொருட்டு 2013-14 ஆம் ஆண்டில் நில பயன்பாடு மற்றும் நிலபரப்பு மாற்றங்கள் தொடர்பான 6 ஆராய்வுகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வாராய்வுகள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் மற்றும் தீர்வுகள் தமிழ்நாட்டின் நில பயன்பாடு மாற்றங்களைப் புரிந்து கொள்ள ஏதுவாக அமையும். மேலும், தமிழ்நாட்டின் நில பயன்பாட்டு மேலாண்மைக்காக, தேவையான நில அளவை மட்ட குறிகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள் உருவாக்கப்பட உள்ளது.

2013-14 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் இரண்டு கூட்டங்கள் நடைபெற்று உள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான வரைவு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தொடர்புடைய ஆறு ஆராய்வுகள் துவக்கப்பட்டுள்ளன. நீர் மேலாண்மைத் தொடர்புடைய ஒரு

2014 ஆகஸ்ட் 12]

ஆராய்வும் மற்றும் காலநிலை இடர் மேலாண்மைத் தொடர்புடைய திட்டமும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாராய்வுகளில் குறிப்பிடப்படும் பரிந்துரைகள், நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பு பணியினை மேற்கொள்ள உந்துதலாக அமையும். தற்சமயம், இவ்வாராய்வுகள் துவங்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணிகள் 30-9-2014-ல் முடிவுபெறவுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் வட்டார வாரியாக 2001-2002 முதல் 2011-2012 ஆம் ஆண்டு வரையிலான 10 வருடங்களுக்கு 9 வகையான நிலப்பயன்பாடு தொடர்பான புள்ளி விவரங்கள் பெறப்பட்டு வருகிறது. இவ்விவரங்கள் நிலப்பயன்பாட்டிற்கான மேலாண்மைத் தகவல் அமைப்பு ஏற்படுத்தி, அத்தகவல்களை தமிழ்நாடு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிக்கவும் உதவியாக அமையும்.

3.1.7 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

வருமானம், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின மேம்பாடு இவற்றில் மாவட்டங்களுக்கு இடையே மற்றும் மாவட்டத்திற்குள் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்க உருவாக்கப்பட்ட புதிய திட்டமே மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக 100 மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நான்கில் ஒரு பங்கான நகர பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், அனைத்து மாநகராட்சிகளின் வார்டுகளும் பயனடையும். மேற்சொன்ன சமூக பொருளாதாரக் காரணிகள் வாயிலாக பின்தங்கிய பகுதிகள் (ஊரக மற்றும் நகர) கண்டறியப்படுகின்றன. இந்த திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் 2014-15 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில திட்டக் குழுவின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

மாவட்ட அளவில் முன்மொழியப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் கண்காணிக்கவும் மாநில அளவில் ஒரு உயர் மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், தகுந்த திட்டங்களை உருவாக்குதல், திறனை மேம்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிருவாகத்திற்கு உதவிட, வள நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஜூன் 2013-ல் மாவட்ட திட்ட அலுவலர், நுட்ப உதவியாளர் அவர்களின் திறன் மேம்பாட்டை வளர்க்க ஒரு பயிலரங்கம் மற்றும் பயிற்சி

நடைபெற்றது. மாநிலத் திட்டக் குழு மூன்று வட்டாரங்களுக்கான மாதிரி தொலைநோக்குத் திட்டம் தயாரிப்புப் பணியை மேற்கொண்டுள்ளது. இந்த தொலைநோக்குத் திட்ட தயாரிப்புப் பணியில் மாவட்டத் திட்டக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இவ்வறிக்கை மாநில உயர் மட்டக் குழுவின் முன்னிலையில் வைக்கப்பட்டது.

2013-14 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக 17.85 கோடி ரூபாயில் பின் தங்கிய 15 மாவட்டங்களுக்கான 35 திட்டங்களுக்கு மாநிலத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. உயர் மட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள இவ்வனைத்து 35 திட்டங்களுக்கும் தேவையான நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக 82.06 கோடி ரூபாயில் பின் தங்கிய 22 மாவட்டங்களுக்கான 98 திட்டங்கள் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஆகியவற்றை பெருக்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3.1.8 மனித மேம்பாட்டு அறிக்கை தயாரித்தல்

மாநிலத் திட்டக் குழு 32 மாவட்டங்கள் மற்றும் மாநிலத்திற்கான மனித மேம்பாட்டு அறிக்கையை "மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளின் இடைவெளியை நீக்கும் திட்டத்தின்"கீழ் தயாரித்து வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 340 இலட்சம் ரூபாய், அதில் 240 இலட்சம் ரூபாய் மாநில அரசின் பங்கு, 100 இலட்சம் ரூபாய் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் பங்காகும். இத்திட்டத்தின் காலம் 2013-2016 ஆகும்.

மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கை மற்றும் மாநில மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிக்க வள நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதன் தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களுக்குத் திறன் மேம்பாடு பயிலரங்கங்கள் நடைபெற்றன. புள்ளிவிவர சேகரிப்பு, புள்ளிவிவர மதிப்பீடு மற்றும் குறியீடுக் கணக்கீடு ஆகியவை நிறைவு பெற்றுள்ளன. வரைவு அறிக்கைகள் தயாரிப்பும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

2014 ஆகஸ்ட் 12]

3.1.9 2014–15 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

மாநிலத் திட்டக் குழு, 2014-15 ஆம் ஆண்டில், அரசுத் திட்டங்கள் செயல்படுத்துவதில் முக்கிய பிரச்சினைகள், மாநிலத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டை பாதிக்கும் காரணிகளைக் கண்டறிய ஆராயச்சிகள்/பயிலரங்குகள் /கருத்தரங்குகள்/பயிற்சிகள் நடத்த உத்தேசித்துள்ளது. மேலும் மாநில திட்டக் குழுவின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் அலுவலக கணினிமயமாக்கலுக்கும் மொத்த ஒதுக்கீடாக 198.80 இலட்சம் ரூபாய் புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

3.1.10 பயிலரங்கங்கள்/கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல்

வளர்ச்சி குறித்த முக்கிய பிரச்சினைகள் மற்றும் வருங்காலத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டிய இலக்குகள் வல்லுநர்களோடு பயிலரங்கங்கள்/கருத்தரங்குகளை நடத்துவதன் வாயிலாக மாநிலத் திட்டக் குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக 2013-14 ஆம் ஆண்டில் 34 கருத்தரங்கங்கள் மற்றும் பயிலரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அக்கூட்டத்தின் பரிந்துரைகள் புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்டு அனைத்துத் துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும், 2013-14 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகள் தொடர்புடைய முக்கிய பிரச்சினைகள் குறித்து 20 ஆராய்வுகள் துறைசார்ந்த வல்லுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2014-15 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிலரங்கங்கள்/கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் துறைகளிடம் கோரப்பட்டுள்ளது.

3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

3.2.1 மாநில மற்றும் மைய அரசுகளின் திட்ட உருவாக்கத்திற்குத் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து உரிய நேரத்தில் வழங்குதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் நோக்கமாகும். மாநிலத்தின் புள்ளிஇயல் சேகரிப்பு பணியில் இத்துறை முகமை அமைப்பாக செயல்படுகிறது. முதன்மைத் துறை, தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகியவற்றிலிருந்து வேளாண்மை, தொழில், மாநில வருவாய், மாவட்ட வருவாய், விலைவாசி முதலிய விவரங்களைச் சேகரித்து, தொகுத்துத் தேவையானவர்களுக்கு வழங்கி வருகிறது. மேலும், மைய மற்றும்

மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் ஆய்வு மற்றும் அறிக்கைகளைத் தயாரித்து வழங்கி வருகிறது.

இத்துறைக்குக் கீழ் குறித்த திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா பணிகள் முன்னுரிமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3.2.2 திட்டம் சார் பணிகள்

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. ஒன்பதாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வேளாண்மைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பில் வேளாண்மைச் சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிப்பது முக்கியப் பணியாகும். நாட்டின் வேளாண்மை குறித்த புள்ளி விவரங்களைப் பெருமளவில் சேகரித்தலும், தொகுத்தலும் இத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். இக்கணக்கெடுப்பு கைப்பற்றுதாரர்களை முக்கிய அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். நிலப் பதிவேடுகளிலிருந்து நில சாகுபடியாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசனத் தன்மை, பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பயன், பூச்சிக் கொல்லி, உரப் பயன்பாடு ஆகிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

9-வது வேளாண்மைக் கணக்கெடுப்பு 2010-11 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முதற்கட்டப் பணியின் அறிக்கை மைய அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணிக்கான (எச்.1 படிவம் - சாகுபடி முறை, கைப்பற்றுதாரர்களின் சமுதாய நிலை, நிலப்பயன்பாடு, கால்நடை) அறிக்கையும் முடிவடைந்து மைய அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டப் பணியான இடுபொருள் ஆய்வு விவரங்கள் சேகரிக்கப்பட்டு தற்போது கணினியில் விவரங்கள் பதியப்பட்டு வருகிறது.

2. ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. நிறுவனங்களின் எண்ணிக்கையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் திரட்டி விரிவான புள்ளிவிவர கட்டமைப்பை உருவாக்குவதே

2014 ஆகஸ்ட் 12]

பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு அமைப்புசாராத் துறைக்கு தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல், வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான அடிப்படை விவரங்களை இக்கணக்கெடுப்பு வழங்குகிறது. இந்த பொருளாதாரக் கணக்கெடுப்பு மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

- 6-வது பொருளாதாரக் கணக்கெடுப்பிற்கான கணக்கெடுப்பு பணி தமிழ்நாடு முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- பொருளாதாரக் கணக்கெடுப்பு பணிகள் செவ்வனே நடைபெற தமிழ்நாடு அரசு ஆணை (நிலை) எண் 96, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 13-06-2011 க்கு இணங்க, மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்திய அரசின் மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மொத்த செலவாக 37.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அதில் முதல் தவணையாக 60.08 இலட்சம் ரூபாய் 2012-13 ஆம் ஆண்டிற்கு விடுவித்துள்ளது. மேலும், இரண்டாவது தவணையாக 28.39 கோடி ரூபாய் 2013-14 ஆம் ஆண்டிற்கு விடுவித்துள்ளது.
- ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கான பணியிடங்கள் உருவாக்கத்திற்கும் 30 மாதங்கள் செயல்பாட்டில் இருக்கவும் இந்திய அரசின் மத்திய புள்ளி இயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தனது இசைவை தெரிவித்துள்ளது.

3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு

பழம், காய்கறி மற்றும் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்களுக்கான விளைச்சல் விகிதத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள்மூலம் துல்லியமாக கண்டறிந்து அதன்மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் கணக்கிட இத்திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தோட்டக்கலைப் பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கான விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட 2013-14 ஆம் ஆண்டில் 616 கிராமங்களில் 1232 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. 2013-14 ஆம் ஆண்டில் சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர் திட்டத்தின்கீழ், மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களில் 647 கிராமங்களில் 1294 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

4. தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டம்

தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் உள்ள 1342 தொழிற்கல்வி நிறுவனங்களில் 575 பொறியியல் கல்லூரிகள், 464 பாலிடெக்னிக்குகள், 15 உணவக மேலாண்மை தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் உணவகத் தொழில்நுட்ப பயிலகங்கள், 64 மருந்தாளுநர் கல்லூரிகள் மற்றும் 224 மேலாண்மைக் கல்வி நிறுவனங்களிலிருந்தும் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தின் தொழில்நுட்ப மனிதவளத்தின் தேவை மற்றும் அளிப்பின் சமன்பாட்டினைக் கண்டறிய மேற்காணும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் விவரங்களை மத்திய அரசு சேகரித்து வருகிறது.

5. இந்திய புள்ளிஇயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டம் (India Statistical Strengthening Project) என்ற மைய அரசின் திட்டத்தின்கீழ் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, தமிழக அரசு மைய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 28-09-2011-ல் ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- மாநிலத்தில் புள்ளிஇயல் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதன் மேலாண்மையினை மேம்படுத்துதல்
- புள்ளிஇயல் மனித வளத்தினை மேம்படுத்துதல்

2014 ஆகஸ்ட் 12]

- உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- தகவல் தொழில்நுட்பவியலை உள்ளடக்கிய செயல் இலக்குடன் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் மற்றும்
- புள்ளி இயல் செயல்பாட்டினை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் கீழ்க் காணும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

- துறைத் தலைமையிடத்திற்கு 4.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டப்பட ஆணைப் பெறப்பட்டு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், 242 வட்டாரங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை மூலமாக வட்டாரப் புள்ளிஇயல் ஆய்வாளர்களுக்கென 6.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த கட்டடம் கட்ட ஆணை வழங்கப்பட்டு, இதுவரை 223 வட்டாரப் புள்ளி இயல் ஆய்வாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- 5 மண்டல புள்ளிஇயல் இணை இயக்குநர், 14 மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் மற்றும் 49 கோட்டப் புள்ளிஇயல் உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும்பாலான இடங்களில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
- புள்ளிஇயல் பணியாளர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தில், மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டு, 01-05-2012 முதல் துறைத் தலைமையிட கட்டிடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு கட்டிடம் கட்டப்பட தேவையான இடம் சென்னை மாவட்டம், மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், களிக்குன்றம் கிராமத்தில் கண்டறியப்பட்டு உயர் கல்வித் துறையினைக் கலந்து ஆலோசித்து கட்டடப் பணியினை விரைவில் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

[2014 ஆகஸ்ட் 12

வருகின்றன. இந்த பயிற்சி நிறுவனத்தின் மூலம் இதுவரையில் 908 நபர்களுக்கு பல்வேறு தலைப்பின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

6. மாநில மற்றும் மாவட்ட அளவில் 13–வது நிதிக் குழுவின் மானியத்தின்மூலம் புள்ளிஇயல் அமைப்பை வலுப்படுத்துதல்

தரமான புள்ளி விவரங்கள் அடிப்படையில் முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாகவும், மாநிலங்களின் புள்ளி விவரத் திறனை அதிகரிக்கவும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தேவைப்படும் புள்ளி விவரங்களை துல்லியமாக குறிப்பிட்ட காலத்திற்குள் அளிப்பதற்கு ஏதுவாகவும், இந்திய புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டத்தின்கீழ் கொணரப்படாத இனங்களில் 13-வது நிதிக் குழு ஒரு மாவட்டத்திற்கு 1 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 31 கோடி ரூபாய் நிதி நமது துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய நிதித் துறை இதற்கான வழிமுறைகளை 2010-11 முதல் 2014-15 ஆம் ஆண்டு வரை கீழ்க்குறித்த இனங்களில் மேற்கொள்ள சிறப்பு இலக்குகளைத் திட்டமிட்டுள்ளது.

1. வணிக நிறுவனப் பட்டியலை (Business Register) தயாரித்தலும் அதன் நிலையை உயர்த்துதல்.
2. உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு-செலவின அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
3. வேளாண்மைப் பணிகள் தொடர்பான புள்ளிஇயல் தரத்தினை மேம்படுத்துதல்.
4. மத்திய மாநில மாதிரிகளின் விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் புள்ளி விவரங்கள் தயாரித்தல்.
5. மாவட்ட அலுவலகங்களை மாநில தலைமையகத்துடன் இணையத்தள/உள்தள வலைய வசதியுடன் இணைத்தல்.

மேற்காணும் சிறப்பு இலக்குகள் அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானவையாக இருப்பதாலும் வரும் ஆண்டுகளில் 13-வது நிதிக் குழு மானியத்தின் மூலம் செயல்படுத்த உள்ளது.

2013-14 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஆய்வுகள் மற்றும் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன:

2014 ஆகஸ்ட் 12]

1. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்மூலம் பத்து முக்கியப் பயிர்களுக்கான சாகுபடி செலவீனம் குறித்த ஆய்வு மாவட்ட வாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

2. தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் மூலம் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு தேவையான திருத்திய வீதம் மற்றும் விகிதாச்சாரங்கள் கணக்கிடுதல்.

3. மீன் வளங்கள்மூலம் கிடைக்கும் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு தேவையான திருத்திய வீதம் மற்றும் விகிதாச்சாரங்கள் மீன்வளத் துறைமூலம் கணக்கிடுதல்.

4. அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் பரப்பு மற்றும் நில வகை பயன்பாடு புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

5. உற்பத்தி துறையில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனத்தின் பங்களிப்பினை மதிப்பீடு செய்தல் குறித்த ஆய்வு.

6. மாவட்ட மற்றும் மாநில அளவில் வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை பற்றி ஆள்திறன் மதிப்பீடு செய்தல்.

7. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு செய்வதற்கு உற்பத்தி துறையில் ஆண்டு தொழில் நிறுவனங்களுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்.

8. வணிக நிறுவனப் பட்டியல் தயாரித்தலை தொடர்தல்.

9. மைய மற்றும் மாநில அரசுகளின் மாதிரிகளை ஒருங்கிணைத்தல்.

10. பத்து முதன்மைப் பயிர்களுக்கான மாவட்ட அளவிலான உற்பத்தியைக் கணக்கிடுதல்.

7. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை உரிய காலத்தில் மதிப்பீடும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் மூன்று பருவத்திலும் (காரிப், ராபி, கோடை), பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு

செய்யப்படுகிறது. வருவாய்த் துறை, புள்ளிஇயல் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களால் ஒவ்வொரு கிராமங்களிலும் பயிர் பரப்பாய்வு ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

2013-14 ஆம் ஆண்டுக்கு 3485 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, காரிப் பருவத்திற்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு கூடுதல் புள்ளி இயல் ஆலோசகர், புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

8. பயிர் புள்ளி விவரங்கள் மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத் தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பணிகளானது மத்திய மற்றும் மாநில அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இத்திட்டமானது கிராம நிருவாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வுசெய்து, அவற்றைக் களைய தக்க வழி வகைகளை ஏற்படுத்தி புள்ளி விவரங்களின் தரத்தினை உயர்த்துவதாகும்.

இத்திட்டம் கீழ்க்குறித்த நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

• பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (ஏ.எஸ். 1.0 படிவம்)

2012-13 ஆம் ஆண்டு பயிர் பரப்பாய்வுப் பணிக்கான ஏ.எஸ். 1.0 படிவங்கள் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு (260 கிராமங்கள் வீதம்) I, II & III பருவங்களுக்கு அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ்.1.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் மூன்று பருவங்களுக்கும் 2011-12 ஆம் ஆண்டுக்கு

2014 ஆகஸ்ட் 12]

தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு (பரிதாபாத்) அனுப்பப்பட்டுள்ளன.

- **அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான கூட்டுத் தொகை (ஏ.எஸ். 1.1 படிவம்)**

2012-13 ஆம் ஆண்டுக்கு பயிர் பரப்பாய்வு பணிக்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின் அடங்கலில் பக்கவாரியான பயிர் பரப்பு விவரங்களின் கூட்டுத் தொகை சரிபார்த்தல் சம்பந்தமான ஏ.எஸ்.1.1 படிவங்கள் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு (260 கிராமங்கள் வீதம்) அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ். 1.1 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2011-12 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (ஏ.எஸ். 2.0 படிவம்)**

2012-13 ஆம் ஆண்டுக்கு பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வுக்கான ஏ.எஸ்.2.0 படிவங்கள் 780 பரிசோதனைகள் வீதம் மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஏ.எஸ்.2.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2011-12 ஆம் ஆண்டுக்கு நெல் (கார், சம்பா, நவரை) மற்றும் இதர பயிர்களுக்கு (சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கரும்பு, வேர்க்கடலை மற்றும் எள்) தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு (பரிதாபாத்) அனுப்பப்பட்டுள்ளன.

3.2.3. செயல்படுத்தப்படும் மற்றும் புள்ளிஇயல் திட்டங்களின் சுருக்க விவரம்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டம் சார் மற்றும் திட்டம் சாரா மற்ற திட்டப் பணிகள் மற்றும் அறிக்கைகளின் சுருக்க விவரம் பின்வருமாறு.

வேளாண் புள்ளிஇயல்

1.	பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு	ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், டிசம்பர், மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்மதிப்பீடு செய்யப்படுகின்றன.
2.	ஜமாபந்தி மூலம் இறுதி செய்யப்படும் கிராமவாரியான பரப்பு	ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம வாரியான பயிர் பரப்பு விவரங்கள் ஜமாபந்தியில் இறுதி செய்யப்பட்டு மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும் தொகுக்கப் படுகின்றன.
3.	பொது பயிர் மதிப்பீட்டாய்வு	சுமார் 8300 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு முக்கியமான 16 பயிர்களுக்கு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.
4.	பழங்கள், காய்கறிகள் ஆகியவை குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	மா, பலா, வாழை, அன்னாசி, கொய்யா, ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை ஆகிய 8 பழப்பயிர்களிலும், கத்தரி, தக்காளி, வெண்டை, முட்டைக்கோசு, சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களிலும் சுமார் 1232 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.
5.	சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	மஞ்சள், மிளகாய், மரவள்ளி, கொத்தமல்லி, இஞ்சி, வெங்காயம், உருளைக்கிழங்கு, முந்திரி ஆகிய 8 சிறிய அளவில் பயிரிடப்படும் பயிர்களில் சுமார் 1294 பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.

6.	தென்னை மற்றும் கழுகு குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு	சுமார் 380 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்னை பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும், சுமார் 76 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு கழுகு பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடும் செய்யப்படுகின்றன.
7.	தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்	2013–14 ஆம் ஆண்டில், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் பொருட்டு 21 பயிர்களின்கீழ் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரம் / குறுவட்டம் வாரியாக காரிப் பருவத்தில் சுமார் 44,626 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப் படுகின்றன.
8.	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்	இத்திட்டம், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. வட்டார / உள்வட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்துவதற்கு பதிலாக அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் அறுவடை பரிசோதனைகள் முன்னோடித் திட்டமாக நாமக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் 2013–14 ஆம் ஆண்டு காரிப் மற்றும் ராபி பருவங்களில் 12 பயிர்களுக்கு 17,692 பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.
9.	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டம்)	மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டம்) 2013–14 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் 12 பயிர்களுக்கு 21,090 பயிர் அறுவடை

10.	மழைப் புள்ளிஇயல்	சுமார் 628 சாதாரண மழைமானி நிலையங்களிலிருந்து மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப் படுகின்றன.
11.	நீர்ப்பாசன புள்ளிஇயல்	பாசன ஆதாரங்கள் வாரியாக முக்கிய பயிர்களின் பரப்பு, நீர்ப்பாசன வகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன.
12.	வேளாண்மைக் கூலிகளுக்கான குறியீட்டெண் மற்றும் தோட்டத் தொழிலாளர் விவரங்கள்	மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒவ்வொரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் விவசாய தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் மதிப்பிடப்படுகிறது.
13.	விற்பனை மிகுதி திட்டம்	நெல் உற்பத்தியில் வழங்கப்பட்ட கூலி, விதைப் பயன்பாடு, சொந்த உபயோகம் போன்றவை தவிர விற்பனைக்கு ஒதுக்கப்படும் நெல் அளவு குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது.
14.	பேரிடர் மேலாண்மை	எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு பயன்படும் வகையில் மாவட்ட வாரியாக ஏற்படும் இயற்கை பேரிடர் அழிவு மற்றும் மீட்பு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாநில அளவில் தொகுக்கப்படுகின்றன.
15.	சுற்றுச் சூழல் புள்ளிஇயல்	சுற்றுச்சூழல் தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை "சுற்றுச் சூழல் தொகுப்பாக" வெளியிடப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12]

சமூகப் புள்ளிஇயல்

16.	தேசிய மாதிரி ஆய்வு	தேசிய மாதிரி ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மக்களின் சமூக பொருளாதார நிலைமை குறித்து அறிவியல் ரீதியான மாதிரி முறையைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. நுகர்வோர் செலவின விவர ஆய்வின் முடிவுகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அறிய ஒரு கருவியாகவுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆய்வின் முடிவுகள் மக்களின் பல்வேறு வகையான வேலைவாய்ப்புத் தன்மைகளை அறிய உதவுகின்றன. இவ்விவரங்கள் திட்டக் குழுவின் திட்டமிடலுக்குப் பயன்படுகின்றன. தற்போது தேசிய மாதிரி ஆய்வு 71–வது சுற்றின் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இந்த சிறப்பு ஆய்வானது மக்களின் சுகாதாரம், நோயுள்ள விவரங்கள், கல்வி போன்றவைகள் குறித்த ஆய்வாகும்.
17.	வீட்டுவசதிப் புள்ளிஇயல்	பொது மற்றும் தனியார் துறைகளில் கட்டுமான விவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
18.	கட்டுமானச் செலவு குறித்த குறியீட்டெண்	சில முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களின் கூலி விவரங்கள் மாநிலத்தின் 16 மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.

19.	தேசிய தொழில்நுட்ப மனிதவள தகவல் திட்டம்	பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, மேலாண்மை, மருந்தியல் மற்றும் சமையல்கலைக் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் பட்டம் பெற்றோர் ஆகிய விவரங்கள் குறித்து ஆண்டறிக்கை வெளியிடப்படுகிறது.

தொழில் புள்ளி விவரங்கள்

20.	ஆண்டுத் தொழில் ஆய்வு	மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலைச் சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(i)ன்கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் மதிப்புக் கூடுதல், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, 13–வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் 2012–13–வது ஆண்டிற்கான ஆண்டு தொழில் ஆய்வு, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள அனைத்து பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
21.	தொழிற் உற்பத்திக் குறியீட்டெண்	தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் உள்ளடக்கி மூன்று தொழில் துறையிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்படுகிறது. கனிமம் தொகுப்பில் 14 வகையான விவரங்களும், 368 இனங்களில் உற்பத்தி தொகுப்பில் 1373 தொழிற் கூடங்களும் மற்றும் மின்சாரத் தொகுப்பில் ஒன்றுக்கும், அவை உற்பத்தி விவரங்கள் மாதந்தோறும் சேகரிக்கப்படுகிறது.

2014 ஆகஸ்ட் 12]

22.	கைத்தறிப் புள்ளி விவரம்	கைத்தறிப் பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்பட்டு மற்றும் நெசவாளர்களின் பொருளாதார நிலை குறித்த விவரங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொகுக்கப்படுகிறது. சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அமைந்துள்ள 195 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில வருவாய் புள்ளி விவரங்கள்

23.	மாநில வருவாய் மற்றும் மாவட்ட வருவாய் மதிப்பீடு	பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த/நிகர மாநில வருவாய் மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை கணிக்கப்படுகின்றன. மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் கணிக்கப் படுகின்றன.
24.	மாநிலக் கணக்குகள்	அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவரங்களும், 1,049 உள்ளாட்சி அமைப்பின் விவரங்களும் சேகரித்து தொகுக்கப்படுகின்றன.
25.	மூலதன ஆக்கம்	மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணிக்கப்படுகின்றன.

விலைவாசிப் புள்ளி விவரங்கள்

26.	அங்காடிப் புலனாய்வுத் திட்டம் மற்றும் விலைகள்	மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் விலைகள், வரத்து, இருப்பு, அனுப்புகை போன்ற அங்காடி நிலவரப் போக்கு ஆகிய விவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.
27.	மொத்த விலைக் குறியீட்டெண்	வேளாண்மை மற்றும் தொழில் சார்ந்த பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப் படுகின்றது.
28.	நுகர்வோர் விலைக் குறியீட்டெண்	நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க 6 மையங்களுக்கான விலைவாசிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு சிம்லா தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப் படுகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக மாதந்தோறும் கடலூர் மற்றும் நாகர்கோவில் மையத்திற்கு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப் படுகின்றன.

இதர இனம்

29.	வெளியீடுகள்	இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளிஇயல் கையேடு மற்றும் வட்டாரப் புள்ளிஇயல் கையேடு முதலிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

2014 ஆகஸ்ட் 12]

3.2.4 மாநில புள்ளியியல் குழு

புள்ளியியலின் இன்றியமையாத் தன்மையை உணர்ந்து, அரசு மாநில புள்ளியியல் குழுவினை அரசு ஆணை (நிலை) எண் 13, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (எஸ்டி.2 & இ) துறை, நாள் 03-03-2008 மூலம், புள்ளியியல் அமைப்பு செவ்வனே செயல்படவும், பிற துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தவும், பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறையின் சிறப்பு அம்சமாகக் கொண்டு புள்ளி விவரங்களை உருவாக்கும் அரசுத் துறைகளை நெறிமுறைப்படுத்தவும், முறையாக புள்ளி விவரங்களை சேகரிக்கவும், செயல்படுத்தவும், சேகரித்து வைக்கவும், மீளப்பெறவும், வெளிப்படுத்தவும், அரசுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் உதவும் வகையில் இக்குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

3.2.5 2014–2015 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

பகுதி-2 திட்டத்தின்கீழ் பொருள்இயல் மற்றும் புள்ளியியல் துறைக்கு 2014-2015 ஆம் ஆண்டிற்கு முன்மொழியப்பட்ட மொத்த தொகை 32.00 இலட்சம் ரூபாய். இவைகளில், மாநாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்காக 2.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திலும் மற்றும் ஒரு மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திலும் தனிநபர் தடுப்பறை (Cubicle/partition) ஏற்படுத்துவதற்காக 15.00 இலட்சம் ரூபாய் புதியதாக ஏழு கணினிகள் மற்றும் ஒரு நகல் மற்றும் அச்சுப் பிரதிகள் எடுக்கும் இயந்திரம் வாங்க 4.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாதில புள்ளியியல் பயிற்சி நிறுவனத்தின்மூலம் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், மாநாடுகள், கூட்டங்கள் நடத்துவதற்காகவும் சம்பந்தப்பட்ட பொருள் சார்ந்த வல்லுநர்களை அழைத்து நவீன உத்திகளை கையாளுவதற்காகவும் 10.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும்

[2014 ஆகஸ்ட் 12

இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது.

3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவனகே

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான 'தமிழ்நாடு - பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள் இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாசனபரப்பு மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மைத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வுச் செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.3.3 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv. திட்ட நோக்க நிறைவேற்றம்

v. திட்டப் பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்

2014 ஆகஸ்ட் 12]

ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை முறைப்படுத்தி நன்கு செயல்படுத்த உதவுகின்றன.

3.3.4. இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச் 2014 ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 724 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மதிப்பீட்டாய்வுகள் சமூக நலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து மற்றும் ஊரக வளர்ச்சி உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களைச் சார்ந்ததாகும்.

3.3.5 2014–15 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டம்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் தரமான தன்னிச்சையான நிறுவனங்களை நியமித்து மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 57.00 இலட்சம் ரூபாய் பகுதி-II திட்டத்தின்கீழ் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

1. இத்துறைக்கு மடிக்கணினி, கலர் ஜெராக்ஸ், பிரிண்டர் மற்றும் துணைப்பொருட்கள் வாங்குதல்;
2. ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குதல்;
3. இத்துறையின் தொழில்நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநில/தேசிய நிறுவனங்கள்மூலம் பயிற்சி அளித்தல்;
4. மதிப்பீட்டாய்வுகளை தரமான/தன்னிச்சையான நிறுவனங்கள்மூலம் மேற்கொள்ளல்.

3.3.6 2014–15 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்

2014-15 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த 33 ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப்பரப்பு வளர்ச்சித் திட்டம், பல்வேறு துறை சார்ந்த முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, தமிழ்நாடு - பொருளாதார ஆய்வறிக்கை தயாரித்து வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.4 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29-4-2003 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-இல் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்காக ஒரு பிரிவு ஏற்படுத்தலாம் என அரசு முடிவு செய்தது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கிய நோக்கம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகும். சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு ஏராளமான திட்டங்கள் கண்டறியப்பட்டன.

அதன் பின்னர் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அரசு அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் ஒருங்கியல் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன. இந்த அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3.4.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்துவருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இத்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தற்போதைய முதன்மை ஆலோசகர்) தயார்செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின்

2014 ஆகஸ்ட் 12]

அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.0 கி.மீ நீளத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வழித்தடங்களில் கீழ்க்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்-1: வண்ணாரப்பேட்டை - மண்ணடி - உயர்நீதி மன்றம் - சென்னை சென்ட்ரல் - அரசினர் தோட்டம் - எல்.ஐ.சி. - ஆயிரம் விளக்கு - ஏ.ஜி-டி.எம்.எஸ் - தேனாம்பேட்டை - நந்தனம் - சைதாப்பேட்டை - சின்னமலை - கிண்டி - ஆலந்தூர் - நங்கநல்லூர் சாலை - மீனம்பாக்கம் - சென்னை விமானநிலையம்; மற்றும்

வழித்தடம்-2: சென்னை சென்ட்ரல் - எழும்பூர் - நேரு பூங்கா - கீழ்ப்பாக்கம் - பச்சையப்பன் கல்லூரி - சென்னாய்நகர் - அண்ணாநகர் கிழக்கு - அண்ணாநகர் கோபுரம் - திருமங்கலம் - கோயம்பேடு - புறநகர் பேருந்து நிலையம் - அரும்பாக்கம் - வடபழனி - அசோக் நகர் - ஈக்காட்டுதாங்கல் - ஆலந்தூர் - பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம் 1-இல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம் 2-இல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிருவாக ஒப்புதலை பிப்ரவரி 2009 இல் வழங்கியுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கவும்

[2014 ஆகஸ்ட் 12

உத்தேசிக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசு இதுபோன்ற வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படும்.

தமிழ்நாடு அரசு 'சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்' என்ற நிறுவனம் 3-12-2007 அன்று கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக 4-6-2009 அன்று மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மத்திய அரசும், மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மாநில அரசும் நியமித்துள்ளன.

தமிழ்நாடு அரசு 2,216.74 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 844 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 31-3-2014 வரை 1,923.79 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 287.45 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 4,324.53 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனை நிறுவனத்திற்கு அனுப்பும் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்கள் அரசாணைகள்மூலம் பெறப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நேரடியாகப் பெற்றுள்ளது. தனியார் நிலங்களைப் பொறுத்தவரையில், நிலக் கையெடுப்புச் சட்டம் 1894-ன் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக

2014 ஆகஸ்ட் 12]

நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 80 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 80 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 50 சதவிகிதமும் 31-3-2014 வரை முடிவுற்றுள்ளன. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில், பெருந்திரள் இரயில் மற்றும் மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதிசெய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

3.4.2 கட்டம் I-ன் நீட்டிப்பு மற்றும் கட்டம்-II வழித்தடங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம் I-ன் தற்போதைய வடக்குமுனை நிலையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் மற்றும் விம்கோ நகர் வரை நீட்டிப்பதற்கான 3,253 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டக் கருத்துருவிற்கு விரைவில் ஒப்புதல் வழங்குமாறு இந்த அரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் கூடுதலாக 76 கி.மீ. நீளத்திலான புதிதாக கண்டறியப்பட்ட மூன்று வழித்தடங்களை செயல்படுத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உத்தேசித்துள்ளது. விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

இணைப்பு-V

(497-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 50 — ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு." (குறள் 544)

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் மேற்சொன்ன குறள் வரிகளை பின்பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறமையான தலைமையின்கீழ் இந்த அரசு, ஓய்வூதியதாரர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசு ஓய்வூதியம் பெறுவோர் நலன்கருதி எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளில் முக்கியமான ஒன்று அரசு அலுவலர்களுக்கு உள்ளது போலவே ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014-ஐ நடைமுறைபடுத்தியதாகும். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ன்கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ₹ 1.00 இலட்சத்திற்கு மாற்றாக தற்போது நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு ₹ 2.00 இலட்சம் வரை மருத்துவ நிதியுதவினை பெற முடியும்.

2. தமிழ்நாட்டில் 31-12-2013 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 7,09,977 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், ஓய்வூதியப் பலன்களை விரைவாக பெறுவதற்கும் அவர்களின் நலன்களை கவனிப்பதற்கும் 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

3. இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

2014 ஆகஸ்டு 12]

வ. எண்	விவரம்	கருவூலம் மூலம்	பொதுத் துறை வங்கிகள் மூலம்	மொத்தம்
1.	மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்	3,39,233	52,693	3,91,926
2.	ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள்	67,653	14,002	81,655
3.	மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள்	1,59,347	10,798	1,70,145
4.	ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள்	27,433	1,748	29,181
5.	ஏனைய வகை ஓய்வூதியதாரர்கள்	32,519	4,551	37,070
	மொத்தம்	6,26,185	83,792	7,09,977

4. இந்த மானியக் கோரிக்கையின்கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளது. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

5. இந்த மானியக் கோரிக்கையின்கீழ், 2014-2015 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு ₹ 17,203.88 கோடியும், பல்வகைப் பொதுவான பணிகளுக்காக ₹ 310.00 கோடியும், சமூக பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக ₹ 28.85 கோடியும், ஆக மொத்தம் ₹ 17,542.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. ஓய்வூதியம் (Pension)

(i) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 1-7-1996 முதல் 30 ஆண்டுகளாக குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) 1-1-2006 முதல், ஒரு ஓய்வூதியதாரர் குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ₹ 3,050/- பெறத் தகுதியுடையவராவார்.

7. பணிக்கொடை (Gratuity)

(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratutity)

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப்பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டுமொத்தத் தொகையாகும்.

(ii) இறப்புப் பணிக்கொடை (Death gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு

2014 ஆகஸ்ட் 12]

வ. எண்	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை உயரளவுத் தொகையாக ₹ 10 இலட்சமாக 1-1-2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

(iii) ஓய்வுக்காலப் பணிக்கொடை (Retirement Gratuity)

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-1-2006 முதல் ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உயரளவு உச்சவரம்புத் தொகை ₹ 10 இலட்சம் ஆகும். 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 1-1-2006 முதல் அடிப்படைச் சம்பளம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்.

8. குடும்ப ஓய்வூதியம் (Family Pension)

(i) *அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போது, அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய*

குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்துவிடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

(ii) விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத்திறனாளியாக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப

ஓய்வூதியம் அளிக்கப்படும். 28-11-2011 முதல் இம்மாநில ஓய்வூதியதாரர்களின் மணமாகாத/விவாகரத்து பெற்ற / விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்நாள் குடும்ப ஓய்வூதியமாக ₹3,050/- மருத்துவப் படியுடன் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(iii) 1-1-2006 முதல் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதம் ₹3,050/- ஆகும்.

9. கருணைத் தொகை (Ex-Gratia Payment)

வருங்கால வைப்பு நிதிக்கு பங்குத் தொகை செலுத்தி, இறந்துவிட்ட பணியாளர்/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற/பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-7-2013 முதல் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை 175 சதவீத அகவிலைப் படியுடன் ₹605/-லிருந்து ₹645/- ஆக உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

10. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியாக 33 1/3 விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்துமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ

ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

11. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவாக 240 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பை, ஒப்படைப்புச் செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்குப் ஒப்படைப்பு செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் தர ஊதியமும், அகவிலைப் படியும், வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

12. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்

(அ) அகவிலைப்படி

(i) ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதார்கள், மைய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) மருத்துவப் படி

(i) *1-6-2009* முதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்குத் திங்களொன்றுக்கு ₹100/- மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

(ii) தற்காலிக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப் படி மற்றும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ) பொங்கல் பரிசு

அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ₹500/- அரசு வழங்குகிறது.

(ஈ) பண்டிகை முன்பணம்

அரசு ஊழியர்களைப் போல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ₹1,000/-லிருந்து ₹2,000/- ஆக *14-3-2013* முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

13. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட)/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014

(i) *1995* ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்திற்கு மாற்றாக தமிழ்நாடு ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட) /குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் *2014* நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு *(1-7-2014* முதல் *30-6-2018* முடிய),

இரண்டு இலட்சம் ரூபாய் வரை பணச் செல்வின்றி மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் வகையில், 1-7-2014 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக ₹150/- பிடித்தம் செய்யப்படுகிறது.

(ii) தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைகளை வீட கூடுதலான மருத்துவச் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைகளை ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத்துணை உட்பட)/குடும்ப ஓய்வூதியதாரர்கள் பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டம் 1995-ன்கீழ் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்ட அதிகபட்ச மருத்துவ நிதியுதவியான ₹1.00 இலட்சத்திற்கு மாற்றாக தற்போது நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவிற்கு ₹2.00 இலட்சம் வரை பணச் செலவின்றி மருத்துவச் சிகிச்சை பெற முடியும்.

14. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு தற்போது ₹80/- பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு 7-6-2013 முதல் ₹50,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் 31-12-2013 வரை 1,32,838 குடும்பங்கள் பயனடைந்துள்ளன மற்றும் இறந்துபோன ஓய்வூதியதாரரின் குடும்பங்களுக்கு ₹342.38 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

15. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984

இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ₹20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய சந்தாத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ₹10,000/-மும் சேர்த்து கொடுக்கப்படுகிறது.

16. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000

(i) இத்திட்டம் 1-10-2000 முதல் துவக்கப்பட்டது.

(அ) 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசு அலுவலர்களும் விருப்பத்தின்பேரில் இத்திட்டத்தில் சேரலாம். இத்திட்டத்தில் ₹50/- வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(ஆ) இத்திட்டம் 1-10-2000 அன்றும், அதற்குப் பின்னும் பணியில் சேருபவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை ₹70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ₹10,000/-மும் பணியில் இருந்து ஓய்வுபெறும்போது வழங்கப்படுகிறது.

(ii) ஓய்வூதிய இயக்ககம், மேற்கண்ட திட்டங்களின் வரவு-செலவு மதிப்பீடு செய்து கண்காணித்து வருகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கும் தொகையை, ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள்/கல்லூரிகள்/தொழில்நுட்பக் கூடங்கள் தவிர) அந்தந்தத் துறைகள் மூலம் இறுதி முடிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

[2014 ஆகஸ்ட் 12

17. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

18. கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம்

மாநில அரசின் 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம்/அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக/கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

வ. எண்	ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு	கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்
1.	80 முதல் 84 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%.
2.	85 முதல் 89 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%.
3.	90 முதல் 94 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%.
4.	95 முதல் 99 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%.
5.	100 மற்றும் அதற்கு மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%.

2014 ஆகஸ்ட் 12]

19. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:–

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (₹ கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்.
2001-2002	3,050.48	16.07
2002-2003	3,488.20	16.86
2003-2004	3,279.96	13.84
2004-2005	3,921.05	13.78
2005-2006	4,488.83	13.22
2006-2007	5,461.68	13.35
2007-2008	6,038.96	12.71
2008-2009	7,776.21	14.13
2009-2010	8,439.24	15.11
2010-2011	11,855.27	16.89
2011-2012	12,687.97	14.89
2012-2013	13,248.08	13.41
2013-2014 (RE)	15,551.86	13.31
2014-2015 (BE)	17,542.73	13.77

20. பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003-க்குப் பின்னர் பணியில் புதியதாகப் பணியமர்த்தப்பட்ட அரசுப்

[2014 ஆகஸ்ட் 12

பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு சந்தாவாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. (திருத்திய ஊதிய விகிதங்கள், 2009-ன்படி ஊதியம் திருத்தி அமைக்கப்பட்ட பின்னர் அடிப்படை ஊதியம் என்பது தர ஊதியத்தையும் உள்ளடக்கியதாகும்). இத்திட்டத்தின்கீழ், அரசு அதற்கு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. மாநில கணக்காயர், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை நிருவகித்து வந்த நிலையில், அதனை தற்போது கருவூலக் கணக்கு இயக்குநருக்கு மாற்றப்பட்டு, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் வாயிலாக கணக்குகள் நிருவகிக்கப்படுகின்றன.

ஓய்வூதிய இயக்குநரகம்

21. தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதிகள் 1978-ன்படி ஓய்வூதியம் பெறுவதற்குரிய பணி புரிந்து, ஓய்வூதியம் பெற தகுதியுள்ள மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுபெற்றபின், ஓய்வுபெற்ற காலம் வரை நிருணயிக்கும் மற்றும் அவ்வப்போது அரசு அனுமதிக்கும் ஓய்வூதியப் பலன்களில் மறு நிர்ணயம் செய்யும் ஓய்வூதியம், ஒப்பளிப்பு வழங்கும் அலுவலரால் மாநில தலைமைக் கணக்காயர்மூலம் அனுமதிக்கப்பட்டு, விதித் தொகுப்பின்படி கருவூலம்/சார் கருவூலம்/ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் பெற்று வருகின்றனர். மேலும் பணி முடித்த ஓய்வூதியதாரர்களைத் தவிர, பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளர்கள் மற்றும் மறைந்த ஓய்வூதியதாரர்களின் மனைவி/கணவர் அல்லது தகுதியுள்ள மகள்/மகன் ஆகியவர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத் துறையை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை இணைச் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இயக்குநரைத் தவிர ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர், ஒரு கணக்கு அலுவலர், ஒரு உதவிக் கணக்கு அலுவலர், பிற அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்களின் துணையுடன் இயங்குகிறது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

2014 ஆகஸ்ட் 12]

(i) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ii) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்புமூலம் தீர்த்தல்.

(iii) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(iv) அரசுத் துறைகளின் தொழிற்சாலைப் பணியாளர்களின் சேம நல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(v) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995 நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(vi) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குத் தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(vii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு செய்தல் மற்றும் இத்திட்டத்தை கண்காணிக்கும் பணி.

(viii) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு செய்தல் மற்றும் இத்திட்டத்தைக் கண்காணிக்கும் பணி.

(ix) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநில கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(x) அமைப்புச் சாரா தினக்கூலியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிருவகித்து நிறைவேற்றுதல்.

[2014 ஆகஸ்ட் 12

ஒய்வூதியதாரர்கள் குறை தீர்வு

ஒய்வூதிய இயக்ககத்தின்மூலம் ஒய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

22. பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஒய்வூதியதாரர்/குடும்ப ஒய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகவும் பெறப்படும் மனுக்கள்மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஒய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாக தீர்வுக் காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப் பிரிவுமூலம் பெறப்பட்ட 711 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 1-1-2013 முதல் 31-12-2013 வரை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 676 மனுக்கள் பெறப்பட்டு, அனைத்து மனுக்களும் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 1,960 மனுக்கள் மற்றும் நடப்பாண்டில் 28-2-2014 முடிய பெறப்பட்ட 28 மனுக்கள் ஆக மொத்தம் 1,988 மனுக்களில் 1,983 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

23. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஒய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஒய்வூதியப் பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஒய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஒய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 ஆகஸ்ட் 12]

ஓய்வூதிய அதாலத்

24. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் 22-2-2002 முதல் செய்ல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள்மீது வழங்கப்படும் உத்தரவினை தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட, ஓய்வூதியத் துறை இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயர் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதியத் துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). மாதம் இரு முறை இந்த அதாலத் நடைபெறுகிறது. 1-1-2013 முதல் 31-12-2013 வரை 47 ஓய்வூதியதாரர் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 30 மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், தொடர்பு வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியச் சங்கங்கள் தொடர்பான கூட்டம்

25. ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் தொடர்பு வங்கி அலுவலர்களுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு வங்கிகள்மூலம், செயல்படுத்தப்படும் பொதுத் துறை வங்கித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னைமூலம் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டம் மூலமும், ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.

ஓய்வூதியர்களின் வழிகாட்டி

26. ஓய்வூதியப் பயன்கள், ஓய்வூதியப் பலன்கள் தொடர்பாக அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் முக்கியமான ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்துக் கொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (www.tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

ஓய்வூதியப் படிவங்கள் இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பெற்றுக் கொள்ளலாம். மின் அஞ்சல் மூலமாகவும் இத்துறையினைத் தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் குறியீடு dop@tn.nic.in.

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்

27. தேசியத் தகவல் மையம் உருவாக்கிய மென்பொருளைக் கொண்டு, மருத்துவ நல நிதித் திட்டம், மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, ஏற்கெனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள தொழிலாளர் சேம நல நிதித் திட்டமும் தேசியத் தகவல் மையத்தால் சிறு மாற்றங்களுடன் முழுமைப்படுத்தி கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்களின் நலத் திட்டங்களில் பெறும் உதவிப் பணத்தை மின்னணு பணப் பட்டுவாடா முறையில் (E.C.S.) ஓய்வூதிய இயக்கக வங்கிக் கணக்கு மூலமாக அவரவர் வங்கிக் கணக்குகளில், கணினிமூலம் நேரடியாக பணம் பட்டுவாடா செய்யும் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த தேசியத் தகவல் மையம் மற்றும் வங்கி அலுவலர்களோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினிமூலம் பணம் பட்டுவாடா செய்வதன்மூலம், காசோலைமூலம் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டு, உடனடியாக வங்கிகள்மூலம் அவரவர் வங்கி கணக்குகளில் பணம் வரவு செய்வது உறுதிபடுத்தப்படுகிறது.

மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

28. ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் தொகுத்து வலைதளம் மூலமாக மையப்படுத்தும் சோதனை முயற்சி ஏழு மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் *2014-2015* ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. மேலும், முதன்மை மாநிலக் கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன்மூலம்

2014 ஆகஸ்ட் 12]

ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைத்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering)

29. மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களை கருத்தில் கொண்டு, ஓய்வுதிய நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகைப் பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வருங்காலங்களில் இந்த வசதியினை வங்கிகளில் நடைமுறைப்படுத்துவதன்மூலம், ஓய்வூதியதாரர்கள் இணையதளம் வாயிலாக அருகிலுள்ள வங்கிகளிலேயே அடையாளம் காணும் மின்னணுப் பதிவு செய்தல் முறையினை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும்.

30. இது தவிர ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம்மூலம் ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்வித சிரமமுமின்றி மிக எளிமையான முறையில் பெற முடியும்.

ஓய்வூதிய சான்றிதழ்கள் மின்மயமாக்கல் (Digitalization)

31. ஓய்வூதியம் பெறும் ஆணைகளைக் கணினிமயமாக்கும் முயற்சி சோதனை முறையில் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணினிமயமாக்கப்பட்ட சான்றிதழ்கள் மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கப்படும். இச்செயலாக்கத்தின்மூலம் சான்றிதழ்கள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்க முடியும். ஒரே நேரத்தில் பதிவுகளை பலர் எல்லைகளைக் கடந்து பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுக்கும். கணினிமயமாக்குவதன் காரணமாக சான்றிதழ்களின் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்தியத் தேசிய இராணுவத்தினருக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்

32. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும் அவர்தம்

குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி அளித்தல், வீடுகள் ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் போன்ற பல திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

33. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், துப்பாக்கிச் சூடு அல்லது சுதந்திரப் போராட்டத்தின்போது காவலர் தடியடி ஆகியவற்றில் இறந்தவர்களோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்களோ விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இது தவிர, இந்தியத் தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்குக் கொண்டவர்களுக்கும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதைத் தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது 1-4-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-3-1983 முதல் நீக்கப்பட்டது.

34. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டுள்ளது. கடைசியாக உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் 1-8-2013 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அதன் விவரம் இணைப்பு-I ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

35. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும், தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்த குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு-II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

36. விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் ஆகியோருக்கு மாதம் ஒன்றிற்கு ₹2,000/-ஆக 14-3-2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 17 பேர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 5 பேர்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 72 பேர்களுக்கும் மற்றும் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பேரன் ஒருவருக்கும் உயர்த்தப்பட்ட சிறப்பு ஓய்வூதியம் ₹2,000/- மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பயனாளிகள் சிறப்பு ஓய்வூதியத்தை அவர்கள் வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள்.

37. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

(அ) மருத்துவ வசதிகள்:

மைய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/ விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப் படி வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது மாதமொன்றிற்கு ₹100/-லிருந்து மாதமொன்றிற்கு ₹500/- ஆக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவச் சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் உயர்தர சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

(ஆ) போக்குவரத்து வசதி:

மைய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீட்டு வசதி:

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/ மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில், ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

2014 ஆகஸ்ட் 12]

(உ) ஈமச் சடங்குச் செலவு:

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ₹2,000/-உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 27-5-2011 முதல் ₹5,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல்மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின் / மைய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

38. தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

வ. எண்	பல்வேறு வகையான ஓய்வூதியங்கள்	எண்ணிக்கை
1.	மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 9,000/- + ₹ 500 மருத்துவப்படி)	437
2.	மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 4,500/- + ₹ 500 மருத்துவப்படி)	1,518
3.	வீரபாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 2,000/- வீதம்)	5
4.	சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 2,000/- வீதம்)	117

வ. எண்	பல்வேறு வகையான ஓய்வூதியங்கள்	எண்ணிக்கை
5.	மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதம் ஒன்றுக்கு ₹ 2,000/- வீதம்)	72
6.	வ.உ. சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் (மாதம் ஒன்றுக்கு ₹ 2,000/- வீதம்)	1

39. மைய அரசின் ஓய்வூதியத் திட்டம்

15-8-1972 முதல் மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (Swatantrata Sainik Samman Pension) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(அ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ₹*6,330*/- ஓய்வூதியத்துடன் *1-8-2013* முதல் *193* சதவீதம் அகவிலைப் படியும் சேர்த்து மொத்தம் ₹*18,547*/- வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மைய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை *1,790* ஆகும்.

(ஆ) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / மைய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ₹*500*/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

40. மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக *2014-2015* ஆம் ஆண்டிற்கு ₹*17,68,71,000*/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 12]

இணைப்பு-I

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

வ. எண்	கால அளவு	ஓய்வூதியத் தொகை (₹)
1.	01-10-1966 முதல்	50
2.	15-08-1972 முதல்	75
3.	01-04-1979 முதல்	100
4.	25-01-1981 முதல்	150
5.	10-06-1986 முதல்	250
6.	01-08-1989 முதல்	350
7.	01-01-1991 முதல்	400
8.	01-08-1992 முதல்	1,000
9.	01-09-1995 முதல்	1,500
10.	15-08-1997 முதல்	3,000
11.	01-05-2007 முதல்	4,000
12.	01-09-2009 முதல்	5,000
13.	15-08-2012 முதல்	7,000
14.	01-08-2013 முதல்	9,000

[2014 ஆகஸ்ட் 12

இணைப்பு-II

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்

வ. எண்	கால அளவு	ஓய்வூதியத் தொகை (₹)
1.	01-10-1966 முதல்	50
2.	15-08-1972 முதல்	75
3.	01-04-1979 முதல்	100
4.	25-01-1981 முதல்	150
5.	10-06-1986 முதல்	250
6.	01-08-1989 முதல்	350
7.	01-01-1991 முதல்	400
8.	01-08-1992 முதல்	500
9.	01-09-1995 முதல்	750
10.	15-08-1997 முதல்	1,500
11.	01-05-2007 முதல்	2,000
12.	01-09-2009 முதல்	2,500
13.	15-08-2012 முதல்	3,500
14.	01-08-2013 முதல்	4,500

* * *

இணைப்பு VI

(607ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

முக்கிய சட்டமுன்வடிவுகள் குறித்த விவரங்கள்

சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு ஆகியவை இக்கூட்டத் தொடரின் முதல் இரண்டு கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகளில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

இந்த மூன்றாவது கூட்டத்தில், 16-7-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழர்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடையான வேட்டி அல்லது இந்திய பாரம்பரிய உடைகளை அணிந்து வருவோருக்கு மனமகிழ் மன்றங்கள், உணவகங்கள், அறக்கட்டளைகள் உள்ளிட்ட இடங்களில் நுழைவதற்கு சிலர் தடை விதிப்பதைத் தடுப்பதற்கென சிறப்பாக ஒரு சட்டமுன்வடிவு இக்கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மாறாகச் செயல்படும் அமைப்புகளின் உரிமம் இரத்துச் செய்யப்படுவதற்கும், ஓராண்டு வரை சிறைத் தண்டனையும், ரூ.25,000 வரை தண்டத் தொகை விதிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. கொடுத்த வாக்கை உடனே நிறைவேற்றி தமிழர்களின் கலாசாரப் பெருமைக்கும், தன்மானத்திற்கும் சிறிதளவும் பங்கம் வராமல் பாதுகாத்த தமிழர்களின் அன்னைக்கு அவையின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைந்த செலவில் தரமான சட்டக் கல்வியை மக்களுக்கு வழங்க அரசின் சார்பில் சட்டக் கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுவதைத் தடை செய்வதற்கான சட்டமுன்வடிவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

[2014 ஆகஸ்ட் 12

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் செயல்படவும், அத்துறையின் செயலாளர் அப்பல்கலைக் கழகத்தின் நிதிக் குழு உறுப்பினராகச் செயல்படவும் வகைசெய்யும் சட்டமுன்வடிவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கும்போது அதில் ஒரு சதவிகிதத் தொகையை உடலுழைப்புத் தொழிலாளர்களின் நலனுக்காக வழங்க வகை செய்யும் சட்டத்தினை, தமிழகத்தில் கட்டப்படும் மத்திய அரசுக் கட்டடங்களுக்கும் நீட்டித்து தொழிலாளர் வாழ்வில் ஏற்றம் காண உதவும் சட்டமுன்வடிவும் இக்கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது.

மாநிலச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நீக்குவதற்கான வகைமுறையை வகுக்கவும், அப்பல்கலைக்கழகங்களின் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தமிழ்நாடு குடியியல் பணிகள் ஒழுங்குமுறை விதிகள் போன்ற பணியமைப்பு விதிகளைப் பொருந்தச் செய்யவும், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கானச் சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டமுன்வடிவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின்பால் எப்போதுமே மாறாப் பற்றும் அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், பெண்களையும் குழந்தைகளையும் நீங்கின்றிக் காப்பதற்காக, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள், தங்கும் விடுதிகள் காப்பகங்கள் போன்ற நிறுவனங்களை முறைப்படுத்தும் வகைமுறைகளைக் கொண்ட விரிவான சட்டமுன்வடிவையும் இத்தக் கூட்டத் தொடரில் சட்டமன்றத்தின்முன் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்துள்ளார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் நிலையில் கணினிக் குற்றங்கள் அதிகரிப்பதால், அத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோரையும், பாலியல் குற்றவாளிகளையும் குண்டர்

2014 ஆகஸ்ட் 12]

சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவந்து தடுப்புக் காவலில் வைக்க வகைசெய்யும் திருத்தச் சட்டமுன்வடிவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பாதுகாப்பற்ற ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளுக்குள் சிறு குழந்தைகள் விழுந்து உயிரிழக்கும் விபத்துகளை அறவே தவிர்ப்பதற்காக அக்கிணறுகளைத் தோண்டுவதற்கான உரிமம் பெறும் வழிமுறைகளை முறைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான சட்டங்களிலும் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கான திருத்தச் சட்டமுன்வடிவுகள் ஆகியவையும் இக்கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

விதி 110-ன்கீழ் வெளிக்கப்பட்ட அறிக்கைகளில் முக்கியமான அறிவிப்புகள்

மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த திரு. இராஜிவ் காந்தி கொலை வழக்கில் மூவருக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து 18-2-2014 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்திற்கிணங்க, 23 ஆண்டுகளாகச் சிறையிலிருக்கும் இருவாளர்கள் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன் மற்றும் பேரறிவாளன் என்கிற அறிவு, திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரையும் குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 432-ல் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் விடுதலை செய்ய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு குறித்து 19-2-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களது பெயரில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் இரு அதிநவீன குளிரூட்டப்பட்ட படப்பிடிப்புத் தளங்கள் அமைத்தல், தீ விபத்தில் சேதமடைந்த அரசு மைய அச்சகத்திற்காக ரூபாய் 22.64 கோடி புனரமைப்பு நிதியுடன் நவீன புத்தகம் கட்டும் பிரிவு நிறுவுதல் மற்றும் ரூ.21.59

[2014 ஆகஸ்ட் 12

கோடி செலவில் புதிய கட்டடம் கட்டுதல் குறித்த இரண்டு அறிவிப்புகளை 14-7-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

திருச்சி மாவட்டம், நாவல்பட்டில் ரூ.20.53 கோடி செலவில் 1,360 புதிய வீட்டு மனைகள் அமைத்தல், மத்திய அரசின் பங்களிப்போடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் 825 கோடி ரூபாய் செலவில் பத்தாயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல், நொச்சிக்குப்பம் பகுதியில் 534 குடியிருப்புகள் கட்டுதல், புராதன நகரங்களுக்கு மொத்தம் 10 கோடி ரூபாய் மானியம் வழங்குதல், மறைமலைநகர் அருகில் கடம்பூரில் உள்கட்டமைப்புகளுடன் கூடிய புதிய குடியிருப்புப் பகுதி அமைத்தல், கோயம்பேட்டில் ரூ.63.25 கோடி செலவில் பல்லடுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல், சென்னையில் 23 கோடி ரூபாய் செலவில் ஏழு சுரங்க நடைபாதைகள் அமைத்தல், வேளச்சேரி பறக்கும் இரயில் நிலையத்தின்மேல் அலுவலக வளாகம் அமைத்தல் குறித்த அறிவிப்புகளை 15-7-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி அணிந்து வருவதற்குத் தடை விதித்த தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்திற்கு விளக்கம் கேட்டு தமிழ்நாடு அரசின் சங்கங்கள் பதிவாளரிடமிருந்து கடிதம் அனுப்ப தான் ஆணையிட்டுள்ளது பற்றி அறிவித்து, வருங்காலத்தில் தமிழர் கலாசாரத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடும் மன்றங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி இரத்துச் செய்யப்படும் என்றும் அறிவித்ததோடு, இத்தகைய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் உரிய சட்டமுன்வடிவு நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும் என்று 16-7-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அவருக்கே உரிய பாணியில், ஆணித்தரமாக அவையில் அறிவித்ததோடு, உடனடியாகத் தொடர் நடவடிக்கை எடுத்து, அதற்கான சட்டமுன்வடிவையும் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்து, தான் சொன்னதைச் சொன்னவாறு செய்துகாட்டும் ஒரே தலைவர் என்பதை உலகத்திற்கு மீண்டும் உணர்த்தினார்கள்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி, தமிழகத்தின் பாசன வசதியை மேம்படுத்துவதற்கு 37 ஆண்டுகளாக நடந்து வந்த போராட்டத்தில் தமிழகத்தின் நியாயமான

2014 ஆகஸ்ட் 12]

நிலைப்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது அரசு உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று வலிமையான வாதங்களை முன்வைத்து உரிய உண்மை விவரங்களை விளக்கியதன் பயனாக 17-7-2014 அன்று முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு மேற்பார்வைக் குழு எடுத்த முடிவினையடுத்து, அணையின் ஷட்டர்கள் இறக்கப்பட்டது குறித்த உவப்பளிக்கும் உண்மைச் செய்தியினை மாண்புமிகு அம்மா அவர்கள் 18-7-2014 அன்று வெளியிட்ட அறிக்கையின் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவித்தார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வெற்றியையும், நீதியையும் பெற்றுக்கொடுத்த இச்சாதனை தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்வாகும்.

நடப்பாண்டில் ஐந்து புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குதல், நாமக்கல் மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூபாய் 2.50 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டுதல், ரூபாய் 8.25 கோடி செலவில் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குதல்-புதுப்பித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள நவீன Web Portal அமைத்தல், அத்துறைக்கு வலைதளம் உருவாக்குதல், நடப்பாண்டில் 6 இடங்களில் புதிதாகத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்குதல் மற்றும் பணியிடங்கள் உருவாக்குதல் குறித்த இரண்டு அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 23-7-2014 அன்று வெளியிட்டார்கள்.

தொழில் பட்டயப் படிப்பு படித்து வேலையின்றி வாடும் இளைஞர்களுக்கு மாதம் ரூ.5,000 உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு பெற உதவும் திட்டம், ஒரு இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையிலான முதலீட்டில் தொழில் நிறுவனங்களை அமைக்க முன்வருவோருக்கு வழங்கப்பட்டு வரும் அரசு மானியத்தை 25 விழுக்காடு அதிகரித்தல், சிட்கோ நிறுவனம்மூலம் இவ்வாண்டு மூன்று தொழிற்பேட்டைகள் தொடங்குதல், சிட்கோமூலம் 5 மகளிர் தொழிற்பூங்காக்களில் முழு அரசு மானியத்துடன் உலகத் தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையம் அமைத்தல், இண்டி அரசு

[2014 ஆகஸ்ட் 12

தொழில்நுட்பப் பயிற்சி மையத்திற்கு ரூ.9 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டுதல், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் டான்சி நிறுவனத்தின்கீழ் ஒரு புதிய நவீன மர அறைகலன் தொழிற்சாலை அமைத்தல் குறித்த அறிவிப்புகளை 24-7-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

மேலும், கோயம்புத்தூரில் மூன்றாவது டைசல் பயோ பார்க் அமைத்தல், செங்கல்பட்டு அருகில் 130 கோடி ரூபாய் செலவில் டிட்கோமூலம் மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிக்கும் பூங்கா அமைத்தல், தொழிலில் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் சுமார் 6,525 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் அமைக்க நடவடிக்கை, அம்மாவட்டத்திலுள்ள வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் ரூ.1,500 கோடி முதலீட்டில் உப்பு உற்பத்தி மட்டுமல்லாது, மின் உற்பத்தியுடன் கூடிய கடல் நீரைச் சுத்திகரிக்கும் திட்டம் செயல்படுத்துதல், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 920 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 40,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின்னணுவியல் உற்பத்தி வளாகம் அமைத்தல், சுமார் 190 கோடி ரூபாய் செலவில் சிப்காட் நிறுவன தொழில் வளாகங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், சிப்காட் தொழிற்பூங்காக்களில் கழிவுநீர்த் தொட்டிகள் அமைப்பதோடு, ரூ.5 கோடி செலவில் மரங்கள் நட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்மூலம் நடத்தப்படும் இமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் மாயனூரில் புதிய அலகு நிறுவுதல், பல கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதோடு, நவீன சுத்திகரிப்பு அமைப்புகள் நிறுவி மாசுக் கட்டுப்பாட்டை மேம்படுத்துதல், டாமின் நிறுவனத்திற்காக 16 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தமாகக் கனரக வாகனங்கள் வாங்குதல் உள்ளிட்ட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய விரிவான அறிக்கைகளையும் 24-7-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

மேலும், இளம் சிறாரின் நலம் பேண, அங்கன்வாடி மையங்களை எழுச்சிமிகு முன்பருவ குழந்தை வளர்ச்சி மற்றும் கற்றல் மையங்களாக மேம்படுத்தி அனைத்து நவீன வசதிகளும் வழங்குதல், அவர்களது உடல்நலத்தைப் பேண உதவிடும் வகையில் ரூபாய் 2.5 கோடி செலவில் முதலுதவிப் பெட்டிகள் வழங்குதல்,

2014 ஆகஸ்ட் 12]

பணிக்குச் செல்லும் தாய்மார்களின் சுமையைக் குறைக்க அங்கன்வாடிகளை ரூ.2.31 கோடி செலவில் சத்துணவுடன் கூடிய மழலையர் பராமரிப்பகங்களாகத் தரம் உயர்த்துதல், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டப் பயன்களைப் பெற ஒரே சீரான வருமான உச்சவரம்பை நிர்ணயித்தல் தொடர்பான அறிவிப்புகளையும் 24-7-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில், சென்னை மட்டுமல்லாமல் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில் 2,325 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் தொடர்பான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 25-7-2014 அன்று அறிவித்து மக்களைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

மேலும், 11 மாவட்டங்களில் மன வளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்கள் அமைத்தல், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்துதல் குறித்த அறிக்கையினையும் அதே நாளன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

தமிழ் மொழியிலும், தமிழர் நலனிலும் முழு அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழில் காப்பியம் படைப்போருக்கு இளங்கோவடிகள் பெயரில் ஒரு விருதும், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவோருக்கு தமிழ்ச் செம்மல் விருதும் வழங்குவது பற்றியும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுதல், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூபாய் 2.50 கோடி செலவில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் அமைத்தல் குறித்த அறிக்கையினையும் 25-7-2014 அன்று அளித்தார்கள்.

ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் அதிகமுள்ள 128 குடியிருப்புப் பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், 42 தொடக்கப் பள்ளிகளையும், 50 நடுநிலைப் பள்ளிகளையும், 100 உயர்நிலைப் பள்ளிகளையும் தரம் உயர்த்துவதற்கான சீரிய திட்டங்களை அறிவித்தார்கள்.

[2014 ஆகஸ்ட் 12

அதோடு, வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகையை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 75 ஆயிரத்திற்கு உயர்த்துதல், பள்ளிகளின் சுகாதாரத்தை மேம்படுத்தி கழிவறைகளைப் பராமரிப்பதற்காக ரூ.160.77 கோடி ஒதுக்கீடு, பள்ளிக் குழந்தைகளுக்கு அவர்களது வகுப்புகளுக்கு ஏற்ப கையெழுத்துப் பயிற்சி ஏடுகள், ஓவியப் பயிற்சி ஏடுகள், அறிவியல் செய்முறைப் பயிற்சி ஏடுகளை விலையின்றி வழங்குதல், மலைப் பகுதிகளில் 5 உண்டி உறைவிடப் பள்ளிகள் அமைத்தல், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 1,175 வகுப்பறைகளும், பெண் குழந்தைகளுக்குத் தனியே 270 கழிப்பறைகளும் கட்டுதல், பள்ளி செல்லாத குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து சிறப்புப் பயிற்சி அளித்தல், சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குப் பிரத்யேக உபகரணங்கள் வழங்குதல், அரசு மற்றும் உதவிப் பெறும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு முதல்முறையாக பள்ளி நாட்காட்டியுடன் இணைந்த குறிப்பேடுகள் வழங்குதல் உள்ளிட்ட கல்விப் புரட்சியை உருவாக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் 30-7-2014 அன்று அறிவித்தார்கள்.

மேலும், மாவட்ட விளையாட்டு வளாகங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கீடு, மாவட்ட நீச்சல் குளங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த ரூபாய் 3 கோடி நிதி, சமுதாய வளர்ச்சிக்குச் சேவையாற்றும் இளைஞர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது, விளையாட்டு மற்றும் உடற்கல்விப் பல்கலைக்கழகத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் அளித்தல், மாநில இளைஞர் கொள்கை வகுத்தல் குறித்த அறிவிப்பினையும் அதே நாளன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டார்கள்.

பள்ளிக் கல்வியில் புரட்சியை உருவாக்குவது மட்டுமின்றி உயர் கல்வியிலும் தமிழ்நாடு தழைத்தோங்கிட 95 கோடி ரூபாய் செலவில் காரப்பாக்கத்தில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு வளாகம் அமைத்தல், மயிலாடுதுறையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல், ரூ.30.70 கோடி செலவில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் அமைப்புகளுக்கு விடுதிக் கட்டட வசதி, அரசுக் கல்லூரிகளில் 1,112 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப

2014 ஆகஸ்ட் 12]

நடவடிக்கை, புதிய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்கள் தொடங்குதல் மற்றும் கூட்டட வசதி, உயர் கல்வி பயிலும் மாணவர்கள் இணையம்மூலம் மின் தொடர்பு நூலகக் களஞ்சியங்களைப் பயன்படுத்தும் வசதி, அரசுக் கல்லூரிகளில் 163 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் செய்தல் குறித்த ஓர் அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1-8-2014 அன்று அறிவித்தார்கள்.

கூட்டுறவுத் துறை பணியாளர்கள் 60,000 பேருக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகம், 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நவீனப்படுத்த நிதி, 18 மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்குக் கூட்டடங்கள், 21 புதிய கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவக்குதல், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மொபைல் வங்கி வசதி, மலைவாழ் பழங்குடியினருக்கான 3 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் குறித்து அதே நாளன்று மற்றோர் அறிக்கையையும் அளித்தார்கள்.

நகரம்தோறும் மலிவு விலையில் அம்மா உணவகங்களை அமைத்து அன்னபூரணியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், 37 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 300 'அம்மா அமுதம் பல்பொருள் அங்காடிகள்' தமிழகமெங்கும் துவங்கப்படும் எனவும் 1-8-2014 அன்று அறிவித்தார்கள்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் ரூ.112.57 கோடி மதிப்பில் 39 புதிய கிடங்குகள் அமைத்தல், வேளாண் பகுதிகளுக்கு அருகில் அனைத்து வசதிகளுடன் கூடிய 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுதல், கிடங்கில் இருப்பு வைக்கும் விளைபொருட்களைப் பரிசோதிக்க நவீன பரிசோதனைக் கூடங்கள் அமைத்தல், மத்திய அரசு உதவியுடன் நுகர்வோர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஆய்வக மற்றும் பயிற்சி மைய வசதி அளித்தல் குறித்த மற்றோர் அறிக்கையினையும் 1-8-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

தமிழகம் உணவு உற்பத்தியில் முதல் நிலை பெறுவதில், பாசனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ரூபாய் 400 கோடி செலவில் கொள்ளிடம் ஆற்றில் கதவணை அமைத்தல் உட்பட, மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் அணைகள் கட்டுதல்,

[2014 ஆகஸ்ட் 12

புனரமைத்தல் மற்றும் வாய்க்கால்களைத் தூர் வாருதல் உள்ளிட்ட பணிகளுக்காக ஒரே நாளில் ரூபாய் 670 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான பாசன மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 4-8-2014 அன்று அறிவித்து, வேளாண் பெருங்குடி மக்களின் வயிற்றில் பாலை வார்த்தார்கள்.

விவசாயப் பெருமக்களின் உபதொழிலான பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், 46 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பால் பண்ணைகளின் கட்டமைப்பை மேம்படுத்தி, கால்நடை தீவனப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் 4-8-2014 அன்று முன்வைத்தார்கள்.

திரைகடலோடி உயிர் வளர்க்கும் மீனவர்கள் தமது வாழ்வில் வளம் பெற, அவர்களுக்கு மீன்பிடி குறைவுக் காலங்களில் வழங்கப்படும் நிவாரணத் தொகையில் மாநில அரசின் பங்கை 900 ரூபாயாக உயர்த்துதல், கடல் மீனவ மகளிருக்கான உதவித் தொகையில் மாநில அரசின் பங்கினை ரூபாய் 1,800 ஆக உயர்த்துதல், ரூபாய் 17.15 கோடி செலவில் 3 புதிய மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், 4 இடங்களில் ரூபாய் 17.55 கோடி செலவில் அரசு மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை மேம்படுத்துதல், மீன் வளத் துறைக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் தொடர்பான அறிவிப்பினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று சேர்த்து அறிவித்தார்கள்.

சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, 15-8-2014 முதல் பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் 7-8-2014 அன்று வெளியிட்டார்கள். எனினும், அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர்களை அங்கே அனுப்பி ஐந்து நாட்களுக்கு முன்னதாகவே, அதாவது 10-8-2014 அன்றே அணை மதகுகளைத் திறந்து டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றினார்கள்.

மேலும், சென்னை நகரில் ரூ.60 கோடி செலவில் இரண்டு வணிக வரி அலுவலகங்கள் கட்டுதல், ஓசூரில் வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் இதர துறைகளுடன்

2014 ஆகஸ்ட் 12]

இணைந்து 120 கோடி ரூபாய் செலவில் அனைத்துத் துறைகளுக்கான ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி நிறுவுதல், சென்னை வணிக வரி ஆணையர் அலுவலகத்தை 138 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துதல், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் மற்றும் 25 சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த அறிக்கையினையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அதே நாளன்று அளித்தார்கள்.

மேலும், உலகத்திற்கு அச்சாணியாகத் திகழும் ஏர்த்தொழில் ஏற்றம் பெற்றிட 13 திட்டங்களையும் அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள். ரூபாய் 113.26 கோடி செலவில் "அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம்" செயல்படுத்துதல், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை அமைத்து தரமான, சான்று பெற்ற "AMMA SEEDS" விவசாயிகளுக்கு வழங்குதல், ரூபாய் 150 கோடி செலவில் மூன்று வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்தல், விவசாய உற்பத்தியாளர் அமைப்பு ஏற்படுத்தி, சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்குதல், வேளாண் துறைக்குப் புதிய வாகனங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகள், 126 கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரச் சேவை மையங்கள் நிறுவுதல், 25 கோடி ரூபாய் முதலீட்டில் மாதிரி வேளாண் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்தல், பல்வேறு பயிர்களுக்கு விஞ்ஞான ரீதியான மகத்துவ மையங்கள் அமைத்தல், 150 சுற்றுச்சூழலுக்குகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரிக் கிராமங்கள் அமைத்தல், இளைஞர்களுக்கு வேளாண் பயிற்சியளிக்க திறன் மேம்பாட்டு மையம் நிறுவுதல், 3 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் அமைத்தல், சூரிய கூடார உலர்த்திகள் வழங்குதல் ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

அரசுத் துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு, மாநில திட்டக் குழுவில் "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற அமைப்பை நிறுவி, அதற்கான நிதியத்தை உருவாக்கி சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு விருது வழங்குதல், அரசுத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, மதிப்பீடு செய்து, மேம்படுத்த அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஜமீல்-வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளுதல், மாநிலத்தின் பல்வேறு

[2014 ஆகஸ்ட் 12

பகுதிகளில் வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவிக்கும் திட்டம் ஆகியவை குறித்த அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 8-8-2014 அன்று அளித்தார்கள்.

தேனி, சிவகங்கை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், ஈரோடு, விருதுநகர் மாவட்டங்களில் நகராட்சி மற்றும் ஒன்றியப் பகுதிகளில் வாழும் மக்கள் பயனடையும் வகையில் சுமார் 1,672 கோடி ரூபாய் மதிப்பில் ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.53.62 கோடி செலவில் 5 குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிக்கு ரூ.451.66 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விநியோகத் திட்டம், சென்னை கொடுங்கையூரில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அந்நீரைத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துதல், விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிக்கு ரூ.4,034 கோடி மதிப்பீட்டில் மாபெரும் மழைநீர் வடிகால் திட்டம், குறிப்பிட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் சுமார் ரூ.631 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மைத் திட்டம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் மக்களின் விண்ணப்பங்களின்மீது துரித நடவடிக்கை எடுக்க "அம்மா மக்கள் சேவை மையங்கள்" அமைத்து, முன்னேற்றத்தை வலைதளம்மூலம் கண்காணித்தல் உள்ளிட்ட திட்டங்களையும் அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

மேலும், ஊரகப் பகுதிகளில் பல நூறு கோடி ரூபாய் செலவில் நீர்வழங்கு அமைப்புகளைப் புனரமைத்தல், 12,524 கிராம ஊராட்சிகளுக்கும், குப்பைகளை எடுத்துச் செல்வதற்காக 17,638 மூன்று சக்கர மிதிவண்டிகள் வழங்குதல், 60 கோடி ரூபாயில் புதிய அலுவலகக் கட்டடங்கள், ரூபாய் 300 கோடி செலவில் பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மேம்பாடு, 3,000 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், ஊரகச் சொத்துகளை ரூபாய் 200 கோடி செலவில் புனரமைத்தல், இவ்வாண்டு 175 கோடி ரூபாய் மதிப்பில் 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைத்தல், சுமார் 649 கோடி ரூபாய் செலவில் 4,460 கிராம ஊராட்சி சேவை மையங்கள் கட்டுதல், சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 6,000 கோடி அளவுக்கு வங்கிக் கடன் பெற உதவி, 2,000 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம், கிராம வறுமை ஒழிப்புச்

2014 ஆகஸ்ட் 12]

சங்கங்களுக்கு 349.10 கோடி ரூபாய் நிதியுதவி, ஊரகப் பகுதிகளில் சிறிய அளவு விவசாய நிலங்கள் உள்ளவர்களுக்கு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைமூலம் உதவி, 385 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் என ஊரக மக்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களையும் மேம்படுத்தும் பல்வேறு திட்டங்களையும் 8-8-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

இதுவரை சட்டமன்ற விதியின் கீழ் இல்லாத அளவுக்கு ஒரே நாளில் விதி 110-ன்கீழ் 6 அறிக்கைகளை 11-8-2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அளித்துச் சாதனை படைத்துள்ளார்கள்.

வேலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல், தேனியில் பார்ஸ்டல் பள்ளியை உள்ளடக்கிய மாவட்டச் சிறை அமைத்தல், சிறைக் களப் பணியாளர்களுக்கு சிறை வளாகத்தில் 100 குடியிருப்புகள் கட்டுதல், தமிழ்நாடு மாநில தரவு மையத்தினை மேம்படுத்துதல், பேரிடர் தரவு மீட்பு மையம் மற்றும் மின்னஞ்சல் தொகுப்பு நிறுவுதல், இளைஞர்களுக்கு மேகக் கணினி சார்ந்த சேவைகள் வழங்குதல், தமிழிற்கு இணையவழிக் களஞ்சியம் அமைத்தல், அரசு கேபிள் டி.வி. நிறுவனம்மூலம் அகண்ட அலைவரிசை மற்றும் இணையதளச் சேவைகள் வழங்குதல், 15 புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வனத் துறைமூலம் உயிர்ப் பன்மைப் பாதுகாப்புக்கு சுமார் 110 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, காடு வளர்ப்புக்கு ரூபாய் 35.62 கோடி நிதி ஒதுக்கீடு, வனத் துறையின் மிகைப் பணியிடக் காவலர்களுக்கும் இடர்ப் படி நீட்டிப்பு, திருநெல்வேலியில் வன உயிரினச் சரணாலயமும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு பறவைகள் சரணாலயமும் அமைத்தல், வனத் துறை அலுவலர்களுக்கான பயிற்சி மையத்தைத் தரம் உயர்த்துதல் மற்றும் 650 காலிப் பணியிடங்களை நிரப்புதல், சாய மற்றும் சலவைத் தொழிலை ஒருமுகப்படுத்த ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிக் குழுமம் அமைத்தல் உள்ளிட்ட பொருள்கள் குறித்து 6 அறிக்கைகளை அளித்தார்கள்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்கள் பணியிடங்களில் ஏற்படும் விபத்தில் இறந்தால்

[2014 ஆகஸ்ட் 12

வழங்கப்படும் குடும்ப உதவித் தொகையை 5 மடங்கு உயர்த்தி ரூபாய் 5 இலட்சமாக வழங்குதல், வெளி மாநிலத் தொழிலாளர்களையும் வாரியத்தில் உறுப்பினர்களாக்குதல், அவர்களுக்கான 50 நகரும் மருத்துவமனைகள் அமைத்தல், அவர்களது குழந்தைகள் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் கல்வி கற்க வாகன வசதி, கட்டுமானம் அதிகம் நடைபெறும் 50 இடங்களில் சத்துணவு, மருத்துவம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய அங்கன்வாடி மையங்கள் அமைத்தல், மாநிலத்தில் 9 இடங்களில் 105 கோடி ரூபாய் செலவில் 7,000 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கும் அளவில் தூங்கும் அறைகள் கட்டுதல் குறித்த அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12-8-2014 அன்று அளித்தார்கள்.

பட்டுக்கோட்டை நகராட்சியின் பொன் விழாவினையொட்டி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 25 கோடி ரூபாய் சிறப்பு உதவித் தொகை வழங்குதல் குறித்த மற்றோர் அறிக்கையையும் அதே நாளன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், திருப்புரைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் கோபுரத்திலுள்ள பழமையான சுவரோவியங்களை ரூபாய் 1.42 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல், நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை மேலும் 106 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்துதல், நடப்பாண்டில் 1,006 திருக்கோயில்களுக்குத் திருப்பணி மற்றும் குடமுழுக்கு நடத்துதல், ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள 1,006 திருக்கோயில்கள் மற்றும் 1,006 கிராமப்புறக் கோயில்களுக்கு நடப்பாண்டில் திருப்பணி செய்ய நிதி ஒதுக்கீடு. 16 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் கட்டுதல், 10,000 சிறு, சிறு திருக்கோயில்களுக்குப் பூஜை சாமான்கள் வழங்குதல், முக்கியத் திருக்கோயில்களுக்குத் தங்கும் விடுதிகள் கட்டுதல், கும்பகோணத்திலுள்ள 69 திருக்கோயில்களைச் செப்பனிடுதல், தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் பல்வேறு திருக்கோயில்களில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களுக்கு அந்தந்தத் திருக்கோயில்களுக்குரிய சம்பள

2014 ஆகஸ்ட் 12]

விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்து, பணி வரன்முறை செய்தல் குறித்த விரிவான அறிக்கையையும் 12-8-2014 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள்.

ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் 3 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் தாய்-சேய் நலப் பிரிவுகளை மேன்மைமிகு மையங்களாக்குதல், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆயிரம் ரூபாய் மதிப்புடைய "அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம்" வழங்குதல், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் டயாலிசிஸ், டயாக்னோசிஸ், டயாபிடிஸ் மையங்களும், எம்.ஆர்.ஐ. மற்றும் சிடி ஸ்கேன்களும் நிறுவுதல், சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு ரூ.50 கோடி செலவில் அடுக்குமாடிக் கட்டடம், 10 ஆரம்ப சுகாதார நிலையங்களை நடப்பாண்டில் வட்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல், 12 மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி, கரூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குதல், 315 அரசு மருத்துவமனைகளுக்குச் சுத்தமான குடிநீர் வழங்க ஆர்.ஓ. பிளான்ட் நிறுவுதல், அரசு மருத்துவமனைகளுக்கு டிஜிட்டல் எக்ஸ்-ரே உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், 8 ஆரம்ப சுகாதார நிலையங்களை நடப்பாண்டில் மேம்படுத்துதல், புதிதாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துதல், சென்னை மருத்துவக் கல்லூரிக்கு ரூபாய் 6 கோடி மதிப்பில் புதிய விடுதிகள், சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி, பயிற்சி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கால உதவித் தொகைகளை உயர்த்துதல் உள்ளிட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புகளை வழங்கி மருத்துவத் துறையில் புரட்சியைச் செய்து, இந்தியாவிலேயே மருத்துவத் துறையில் முதல் நிலையில் விளங்க அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS